வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27°c 26°c

பக்கம் 56 ■ சுடர்: 28 ■ கதிர்: 306 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 13, ஞாயிறு 29.09.2013

## வட மாகாணசபைக்கான நிதி உரியவாறு ஒதுக்கப்படுமா?

### மஹிந்தவிடம் நேரில் கேட்டார் பான் கீ – மூன்

கொழும்பு, செப். 29
புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண சபைக்கு உரிய முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் வினவியுள்ளார் என்று அரச உயர் மட்ட வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.
ஐக்கிய நாடுகள் சபையின் 68 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரச தூதுக்குழுவினருடன், கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா. தலைமையகத்தில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பின் போதே பான் கீ-மூன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.
ஐ.நா. செயலாளரின் கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, போர் முடிவடைந்த 4 வருட காலப்பகுதிக்குள் வட மாகாண அபிவிருத்திக்காக 300 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் அறிய முடிகின்றது.
இதற்கமைய எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதைப் போன்றே வடக்கு மாகாணத்துக்கும் ஒதுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.
இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் தான், அனைத்து மாகாண சபைகளுக்கும் சம அளவிலான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் ஐ.நா. செயலாளர் பான் கீ-மூனிடம், ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது. (கு-சி)

## வடக்கு அமைச்சர்கள் குறித்து இன்று முடிவு

யாழ்ப்பாணம், செப்.29
வடக்கு மாகாண சபையின் அமைச்சுப் பதவிகள் வழங்குவது தொடர்பிலும், போனஸ் ஆசனம் தொடர்பிலும் இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் எனத் தெரியவருகின்றது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள் போனஸாகக் கிடைத்தன. இதில் ஒரு ஆசனத்தை மன் னாரில் முஸ்லிம் பிரதிநிதிக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
எஞ்சிய ஒரு ஆசனத்தை வழங்குவது தொடர்பில் இறுதித் தீர்மானம் இன்று மேற் கொள்ளப்படவுள்ளது.
அதேபோன்று மாகாண சபையின் 4 அமைச்சுப் பதவிகளையும் யாருக்கு வழங்குவது என்பது தொடர்பிலும் இன்று தீர்மானிக்கப்படவுள்ளது.
முக்கிய இரு முடிவுகளையும் எடுப்பதற்காக யாழ்ப்பா

23

# நவிப்பிள்ளையின் அறிக்கைக்கு ஆதாரம் கேட்கின்றார் மஹிந்த

## வடக்கில் இராணுவத்தை நிலை நிறுத்தும் உரிமை தனக்கு உள்ளது என்றும் நியூயோர்க்கில் சீற்றம்

நியூயோர்க், செப்.29
"ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, பேரவையில் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கவலைகள் குறித்து விசாரணை நடத்துவதானால் அதற்கு ஆதாரங்கள் தேவை" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இடைக்கால (வாய்மூல) அறிக்கையில் நவநீதம்பிள்ளை எழுப்பியுள்ள பல கவலைகள் குறித்து இலங்கையில் தன்னைச் சந்தித்தபோது அவர் எதுவும் கூறவில்லை என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.
இலங்கையைச் சில நாடுகள் கொடுமைப்படுத்துகின்றன. இது உடனடியாக நிறுத்தப் பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
ஐ.நாவின் 68 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு அல் - ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
'வடக்குப் பகுதியில் இராணு



வத்தை நிலை நிறுத்தும் உரிமை அரசுக்குள்ளது. அந்தப் பகுதியில் உள்ள துருப்புக்கள் தொடர்பில் சில குழுக்கள் வெளியிடும் எண்ணிக்கை தான் பிரச்சினையாக உள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த வேளை, அமைச்சர்கள் சிலர் அவரது பயணம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன் வைத்திருந்தனர். நவநீதம்பிள்ளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இது தொடர்பில் கவலை வெளியிட்ட போது அதற்கு ஜனாதிபதி மன்னிப்புக் கோரி இருந்தார்.
தற்போது நியூயோர்க்கில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனநாயக நடைமுறையில் எவரும் எதையும் கூறும் உரிமை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.
'இலங்கையைக் கொடுமைப்படுத்துவதை சில நாடுகள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

23

## சர்வதேசச் சட்டங்களை மதிக்காவிடில் பேராபத்து

### அரசை எச்சரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, செப். 29
"சர்வதேசச் சட்டங்களுக்கமைய இலங்கை அரசு செயற்படாவிட்டால் நாட்டுக்குப் பேராபத்து காத்திருக்கிறது" என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்தது.
ஐக்கிய நாடுகள் சபையின் 29 ஆவது கூட்டத்தொடரில் தமது இலங்கைப் பயணம் குறித்த இடைக் கால அறிக்கையை சமர்ப்பித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை நம்பத்தகுந்த உள்ளக விசாரணையை மேற்கொள்ளாவிட்டால் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தார்.
இந்நிலையில், அவரின் அறிக்கைக்குப் பதிலளித்து உரையாற்றிய ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, இலங்கை மீது சர்வதேச விசாரணையை நடத்தும் உரிமை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கிடையாது எனத் தெரிவித்திருந்தார்.
அரசின் இந்தச் செயற்பாடு குறித்து வினவியபோது ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்ததாவது -
ஐ.நாவில் அங்கத்துவம் வகிக்கும் நாடு என்ற வகையில் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து செயற்படுவோம் எனச் சர்வதேச உடன்படிக்கைகளில் நாம் கைச்சாத்திட்டுள்ளோம். எனவே, அந்த சர்வதேச சட்டத்தை மீறி எம்மால் செயற்படமுடியாது. அதற்கமையதான் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படாவிட்டால் நாட்டுக்குத்தான் ஆபத்து ஏற்படும். இதனைக் கருத்திற்கொண்டு அரசு செயற்படவேண்டும்" என்றும் தெரிவித்தார். (கு-சி)

## தீவகம் சென்ற கஜதீபன் மீது இனந்தெரியாதோர் தாக்கு

### அவர் பயணித்த வாகனம் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், செப்.29
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி தலைவருமான பா.கஜதீபன் மீது தீவகத்தில் வைத்து நேற்று மாலை இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் தீவுப் பகுதி மக்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அங்கு பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திப்பதற்காகவும் வாக்க

23

## வெடி விபத்தில் சிறுவன் படுகாயம்

வவுனியா, செப். 29
வீட்டில் வைக்கப்பட்டிருந்த வெங்காய வெடியை எடுத்து விளையாடிய சிறுவன் அது வெடித்ததினால் தனது கைவிரல்களை இழந்துள்ளான்.
இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை வவுனியா தேக்கவத்தை பகுதியில் இடம்பெற்றுள்

23

## ஐ.தே.கவின் தலைமை சர்ச்சை 7 ஆம் திகதி முக்கிய தீர்மானம்

கொழும்பு, செப்.29
மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடைந்ததையடுத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றுவது தொடர்பில் பரவலான கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், அடுத்த மாதம் 7ஆம் திகதி இடம் பெறவுள்ள கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இது தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.
ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தால் கட்சி சந்தித்துவரும் தொடர் தோல்விகளால் அதிருப்தி அடைந்துள்ள கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்கள், செயற்

23

## அகதிகளின் படகு மூழ்கியது 20 பேர் சாவு

கான்பரா, செப் 29
புகலிடக் கோரிக்கையாளர்களுடன் ஆஸ்திரேலியாவை நோக்கிப் பயணித்த படகு ஒன்று ஜாவா தீவுகளுக்கு தெற்கேயுள்ள கடற்பரப்பில் மூழ்கியுள்ளது.
இந்தப் படகில் பயணித்த சுமார் 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 25 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ரொனி அபர்ட் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜாவாத் தீவுகளுக்குச் செல்வதற்குச் சில தினங்கள் எஞ்சியிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
எவ்வாறாயினும் விபத்தில் உயிரிழந்தவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை என பி.பி.சி. செய்தி வெளி

23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சட்டக்கல்லூரி போட்டிப் பரீட்சை 6ஆம் திகதி

கொழும்பு, செப். 29
சட்டக் கல்லூரியில் 2014 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இப்பரீட்சைக்காக 8250 பேர் விண்ணப்பித்துள்ளனர் என பரீட்சைத் திணைக்களம் தெரிவிக்கிறது. (ஐ)

# காணாமற்போனோர் தொடர்பில் ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு

### நவம்பரில் வருகிறது வடக்கு, கிழக்குக்கு

யாழ்ப்பாணம், செப்.29
காணாமற்போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகப் பயணம் செய்து தகவல்களைத் திரட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் காணாமற் போனவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.
காணாமற் போனவர்கள் தொடர்பான தகவல்களை அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்த ஆணைக்குழுவின் செயலாளருக்கு தமிழ் மொழியில் அனுப்பி வைக்கமுடியும்.
இதன் பின்னர் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நேரடியாகச் சென்று முறைப்பாடுகளை ஆராய்வார்கள் - என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை முறைப்பாடுகளை உரிய காலத்தில் ஆணைக்குழுவுக்கு அனுப்பாதவர்களும் ஆணைக்குழுவினர் விசாரணைக்கு வரும்போது தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## அதிபரின் வீட்டில் பகலில் திருட்டு முயற்சி



யாழ்ப்பாணம், செப்.29
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பட்டப்பகலில் வதிரியில் அதிபர் ஒருவரின் வீட்டில் திருட்டு முயற்சி இடம்பெற்றது.
வீட்டின் பின்புறமாகவுள்ள காணி வழியாக வந்த திருடன் அங்கிருந்த கொக்கைத் தடியைப் பயன்படுத்தி திறந்திருந்த ஜன்னல் வழியாக பின்பக்க கதவின் உட்புறமாகவிருந்த திறப்பை மெதுவாக எடுத்து அதைத் திறந்து வீடு புகுந்து பொருள்களைச் சுருட்டிக் கொண்டு செல்ல முற்பட்டான்.
அவ்வேளை வீட்டு உரிமையாளரான அதிபர் சுகவீனம் காரணமாக பாடசாலையை விட்டு லீவில் வீட்டுக்கு வந்தார்.
முன்பக்க கேற் றைத் திறக்கும் சத்தம் கேட்டு திருடன் பயத்தினால் பொருள்களை விட்டு விட்டு பின்பக்கமாக ஓட்டம் பிடித்தான்.
கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவரும் பாடசாலைக்கு சென்றிருந்ததால் வீட்டில் எவரும் இருக்கவில்லை. (ஓ-14-35)

## சமூக விரோதக் குற்றவாளிகளுக்கு இராணுவமும், பொலிஸும் உதவி

### கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல்

போதைப் பொருள் கடத்துபவர்கள் மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் உதவி செய்வதாக இராணுவப் புலனாய்வுத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக 'சிலோன் ருடே' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
தலைநகர் கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் போதைப் பொருள் கடத்துபவர்கள், சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு இராணுவ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் ஆதரவு வழங்குகின்றனர்.
இதன் காரணமாக குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் பொலிஸ் உயர் அதிகாரிகள் பலரும் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளனர்.
இந்தத் தகவலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)



ஐக்கிய நாடுகள் சபையின் 68ஆவது அமர்வில் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பிற்பகல் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரொஹானியை சந்தித்து சினேகபூர்வ நட்புறவுகள் குறித்து கலந்துரையாடினர்.

## மாத்தறை - கிளிநொச்சிக்கு மற்றுமொரு ரயில் சேவை

கொழும்பு, செப்.29
மாத்தறையில் இருந்து கிளிநொச்சிக்கு புதிய ரயில் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.
மாத்தறையில் இருந்து அனுராதபுரம் வரை வார இறுதி நாள்களில் சேவையில் ஈடுபட்டுவந்த ரயில்சேவையே கிளிநொச்சி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
இதன்படி நேற்றுச் சனிக்கிழமை காலை 7 மணிக்கு மாத்தறையிலிருந்து புறப்பட்ட ரயில் காலை 9.50க்கு கோட்டை புகையிரத நிலையத்தை அடைந்து அங்கிருந்து புறப்பட்டு பிற்பகல் 3.50க்கு கிளிநொச்சி ரயில் நிலையத்தை அடைந்ததாகத் தெவிக்கப்பட்டுள்ளது.
குறித்த ரயில் மீண்டும் இன்று கிளிநொச்சியில் இருந்து முற்பகல் 11 மணிக்கு புறப்பட்டு மாலை 5.15க்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை அடையும். தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு மாத்தறை ரயில் நிலையத்தையடையும்.
வடக்கு தெற்கு உறவு பாலமாக இந்த போக்குவரத்து சேவை வார இறுதிநாள்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நவிப்பிள்ளையின் அறிக்கையை ஐ.நா.சபை ஏற்றாக வேண்டும்

### இந்திய முன்னாள் அமைச்சர் அன்புமணி பேட்டி

சென்னை, செப்.29
இலங்கை நிலவரம் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்துள்ள அறிக்கையை ஏற்று அதற்கு தகுந்த வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை ராணுவத்தின் அத்துமீறல்கள், தமிழர்கள் தாக்கப்படுவது, பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமை, தமிழர் பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றம் என்பன குறித்த நேரடி அறிக்கை அது என இந்திய முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.
ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைய கூட்டத்தில் பசுமை தாயகம் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டார். இதனை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய அவர்




விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது,
ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைய கூட்டத்தில் இந்தியாவில் இருந்து பசுமை தாயகம் சார்பில் கலந்து கொண்டு நான் உரையாற்றினேன். இதன் போது இலங்கையில் நடந்தது போர் அல்ல, தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை என்பதை விளக்கினேன்.
இந்த இனப்படுகொலைக்கு காரணமான அனைவரையும் தண்டிக்க வேண்டும். சுதந்திரமான பன்னாட்டு விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினேன்.
ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்த்து தாக்கல் செய்துள்ள அறிக்கையை நாங்கள் வரவேற்கிறோம்.
அந்த அறிக்கையில் இலங்கை ராணுவத்தின் அத்துமீறல்கள், தமிழர் தாக்கப்படுவது, பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமை, தமிழர்கள் பகுதியில் சிங்களர்கள் குடியேற்றம் என்பன சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அந்த அறிக்கையின் படி ஐ.நா. சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இலங்கை பிரச்சினையை தீர்ப்பதில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உண்டு என்பதை பா.ம.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதையே புலம்பெயர்ந்த தமிழர்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்தியா அழுத்தம் கொடுக்காதுவிட்டால் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளால் நமது நாட்டுக்கு பாதகம் ஏற்படும் -என்றார். (ஐ)

## இலங்கை பிரஜைகள் நால்வர் கைது

கொழும்பு, செப்.29
பண மோசடி செய்த குற்றச் சாட்டில் இலங்கை பிரஜைகள் நால்வர் பிரித்தானியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பிரித்தானியாவின் க்ளொவ்ஸ்டர் செயர் பிரதேசத்தில் தொடர்ச்சியாக தன்னியக்க கருவியில் பண மோசடி செய்துள்ளதாக இவர்கள்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.
இலங்கையைச் சேர்ந்த பஸீர் முஸ்தபா, அசோக் பாலசுப்பிரமணியம், தங்கவேல் வேலாயுதம், குசலகுமார் சிதம்பரப்பிள்ளை ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் கடந்த 23ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## இலங்கையின் மூத்தபிரஜைக்கு நிதி அன்பளிப்பு



இலங்கையில் சிரேஷ்ட பிரஜையான அப்புலன்லே உக்கு என்ற 116வயதுடைய பெண்ணுக்கு சமூக சேவைகள் அமைச்சு நிதி வழங்கி கௌரவித்துள்ளது.
1897.10.22ஆம் திகதி மாவனல்லை, பலத்கமவில் பிறந்த இவர் 116 வயதுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் வயது முதிர்ந்த பெண்ணாவார். இவரே இலங்கையில் ஆகக்கூடிய வயதுடையவர் என நம்பப்படுகிறார்.
இவரது இல்லத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சுகம் விசாரித்ததுடன் அவரது தேவைகளுக்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கினார்.
சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார், சமூக சேவைகள் பணிப்பாளர் அனுஷா கோகுல மற்றும் மாவனல்லை பிரதேச செயலாளர் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

## இலங்கை விவகாரத்தை மறந்த பொதுநலவாய அமைச்சு கூட்டம்

பொதுநலவாய அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கை மனிதஉரிமை விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று அனைத்துலக மனித உரிமைகள் அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அந்தக் கூட்டத்தில் இது குறித்து எந்த விவாதமும் நடத்தப்படவில்லை என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன.
பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டம், பங்களாதேஸ் வெளிவிவகார அமைச்சர் திப்புமுனி தலைமையில் நேற்றுமுன்தினம் நியு [illegible] இலங்கையின் மனிதஉரிமைகள் நிலை குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று அனைத்துலக மன்னிப்புச்சபை, மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்தன.
எனினும், இந்தக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து விவாதிக்கப்படவில்லை.
பிஜி விவகாரம் குறித்தே முக்கியமாக இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. மாலைதீவு குறித்து ஒரு கூட்டறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.
இந்தக் கூட்டத்தில் ஆஸ்திரேலியா, கனடா, ஜமைக்கா, மாலைதீவு, சியரலியோன், தன்சானியா, [illegible], வனாட்டு [illegible] நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## முறையற்ற இடமாற்றத்துக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், செப்.29
வட மாகாண சபைக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அதிபர், ஆசிரியர்கள், இடமாற்ற சபையின் பரிந்துரை இன்றியும் தேசிய இடமாற்றக் கொள்கையை மீறியும் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:
வட மாகாணத்தில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அதிபர், ஆசிரியர்களை உள்ளக, வெளியக இடமாற்றம் செய்வதாயின் 2007/20 தேசிய இடமாற்றக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும். தற்போது இதனை மீறி இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன. இதனை நாம் கண்டிக்கின்றோம்.
மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இதனைத் தமது கவனத்துக் குக் கொண்டுவர வேண்டும். இடமாற்ற சபையின் அனுமதியுடனேயே இடமாற்றங்களை செய்ய வேண்டும். அதுவே சிறந்தது. இதனை மீறி கல்வி அதிகாரிகள் இடமாற்றம் செய்வார்களாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர எல்லைக்குள் சிசு இறப்பு வீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சிசு இறப்பு, பிரசவத் தாய் இறப்பு, டெங்கு, தொற்றுநோய் ஆகியவை பெருகி வருவதாக ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.

மாநகரசபைகள், நகர சபைகள் ஆகியவற்றின் எல்லைப் பரப்பில் வாழும் மக்களின் சுகாதார நலன்களைக் கவனிப்பதற்கென உரிய உத்தியோகத்தர்களை நியமித்து கவனம் செலுத்தப்படுகின்றது.

மாநகர சபைகளைப் பொறுத்தவரை சுகாதார வைத்திய அதிகாரி தொடக்கம் அனைத்துச் சுகாதார உத்தியோகத்தர்களை யும் நியமித்து மக்களின் சுகாதார நலன்கள் கவனிக்கப்படுகின்றன.

யாழ்.மாநகர சபையும் இவ்வாறான உத்தியோகத்தர்களை நியமித்துச் சேவைகளை வழங்கிவருகின்ற போதிலும், அண்மைக்காலமாக யாழ். மாநகர எல்லைக்குள் சிசு இறப்பு, பிரசவத் தாய்மார் இறப்பு, டெங்கு, தொற்று நோய் கள் போன்றவை அதிகரித்து வரும் நிலை காணப்படுகிறது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைப் பிரிவுக்குள் யாழ்.மாநகர சபை எல்லைப் பகுதிகள் அடங்காததால் இவர்கள் பொதுமக் களின் பாதிப்புக்களைக் கவனிப்பதாகத் தெரியவில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறது. அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் யாழ். பிராந்தியத்தில் யாழ். மாநகர சபை எல்லைகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சிசு இறப்பு, பிரசவத் தாய் இறப்பு, டெங்கு, தொற்று நோய் ஆகியவற்றின் வீதம் குறைவாகக் காணப்படுவதாகத் தெரிய வருகிறது. (கு-9)



# வைத்தியர்கள் இல்லாமல் நோயாளிகள் சிரமம்

தென்மராட்சி, செப். 29

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய இரு வைத்திய அதிகாரிகள் திடீரென மேற்படிப்புக்காக கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்றதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களிடம் விசேட பயிற்சியைப் பெற்று சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு வரும் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கிய இந்த வைத்திய அதிகாரிகள் திடீரென மேற்படிப்புக்காகச் சென்றமை நோயாளர்களுககு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வைத்திய அதிகாரிகளின் இடமாற்றலுக்கு பதிலீடு கிடைக்காததால் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் ஆகியவற்றுக்கு வரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிய வருகின்றது.

20 வைத்திய அதிகாரிகள் பணியாற்ற வேண்டிய ஆதார வைத்தியசாலையில் குறைந்த அளவு வைத்திய அதிகாரிகளுடன் சிறந்த சேவையை வழங்கி வந்ததாகவும் பதிலீடு வழங்காமல் வைத்திய அதிகாரிகள் இடமாற்றல் செய்யப்பட்டமை கவலைதரும் விடயம் எனவும் தெரிவித்த நோயாளர்கள் விரைவில் பதிலீடாக வைத்திய அதிகாரிகளை நியமித்து நோயாளர்களுக்கு கிடைக்கும் சேவைகள் தொடர வழி செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். (கு-9)

# குற்றச் செயல்களுடன் தொடர்புடையோர் கைது

வலி.வடக்கு, செப். 29

சுன்னாகம் பொலிஸாரினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நள்ளிரவு வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளின்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டதுடன் பலர் மீது வழக்குகளும் தாக்கல் செய்யப்படவுள்ளன.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எல்.துஸ்மிந்தா தலைமையில் பொலிஸார் தமது பிரிவுக்கு உட்பட்ட பல இடங்களிலும் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

வீதிச் சோதனை நடவடிக்கைகளின் போது வீதி நடை முறைகளைப் பின்பற்றாமல் வாகனங்களைச் செலுத்திய 25 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய இரண்டு பேரும் பிடிக்கப்பட்டதுடன் அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



பொது இடங்களில் வைத்து மதுபாவனையில் ஈடுபட்டு பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த நான்கு பேர் கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேசத்தில் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ஒருவரும், உடுவில் குப்பிளான் பகுதிகளில் இருந்து பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-86)

# எழுதுமட்டுவாழ் தெற்கில்புழுதி விதைப்புகள் ஆரம்பம்

தென்மராட்சி, செப்.29

எழுதுமட்டுவாழ் தெள்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட ஒட்டுவெளி வயல் காணிகளில் காலபோக நெற்செய்கைக்கான புழுதி விதைப்புகள் நெற் செய்கையாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நான்கு மாத நெல் இனங்கள் இவ்வாறு விதைக்கப்பட்டு வருவதாக அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

தாழ்வான பகுதியைக் கொண்ட வயல்களிலேயே புழுதி விதைப்பு இடம்பெறுவதாகவும், ஏனைய நெற் செய்கையாளர்களும் தமது வயல்களில் காலபோக நெற் செய்கைக்கான ஆரம்பப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

12 வருடங்களின் பின்னர் கடந்த வருடம் இந்த வயல்களில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை பெரு விளைச்சலைக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (கு-9)

# ஒக்.7 முதல் 13 வரை டெங்கு ஒழிப்பு வாரம்

தென்மராட்சி, செப்.29

சுகாதார அமைச்சினால் எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்குமாறு அறிவிக் கப்பட் டுள்ளதால், தென்மராட்சிப் பிரதேச குடியிருப்பாளர்களை தமது குடியிருப்புக்கள் மற்றும் வளவுகளை துப்பு ரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

குடியிருப்பின் சுற்றாடல் மற்றும் வளவுகளை துப்புரவாக் வைத்திருக்கு மாறும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பாவனை யற்ற கொள் கலன்கள் மற்றும் பொருள்களை அப்புறப்படுத்துமாறும் அறிவித்துள்ளனர்.

டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரத்தில் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத் தர்களுடன் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர்கள், பொலிஸார், பொருளா தார அமைச்சின் உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ள தாகவும், டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையிலும் சுகாதாரமற்ற நிலையிலும் கொள் கலன்கள் உட்பட பொருள்கள் காணப்பட்டால் குடியிருப் பாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டது. (கு-9)



" வளவுகளை துப்புரவாக வைத்திருக்குமாறும் டெங்கு நுளம்பு உற்பாத்தியகக் கூடிய பாவனையற்ற கொள்கலன் கள் மற்றும் பொருள்களை அப்புறப்படுத்துமாறும் அறிவித்துள்ளனர்.

# தென்மராட்சி மாணவர்களின் பெறுபேற்றை அதிகரிக்கத் திட்டம்

தென்மராட்சி, செப்.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்கத்துடன் புதிய செயற்றிட்டம் வலயக் கல்வி அலுவலகத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

புதிய செயற்றிட்டத்தின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெற்றோருக்கு பாடசாலை பாட ஆசிரியர்கள் மாணவர்கள் கடந்த தவணைப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகள் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்பட்டு பாடத்தின் அடைவுகள் பற்றி விளக்கமாகக் கூறப்படும்.

இதன்போது மாணவர்கள், பாடசாலை அதிபர், வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடங்களின் முதன்மை ஆசிரியர்கள் ஆகியோர் முன்னிலையில் பெற்றோருடன் கலந்துரையாடல் நடத்தப்படும். மாணவர்களின் பாட அடைவு மட்டம் தொடர்பான கருத்துக்கள் கேட்கப்படும்.

இந்தச் செயற்றிட்டம் வலயத்தைச் சேர்ந்த 31 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தத்திட்டமிட்டு கடந்த 12ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது பெற்றோரிடையே நல்லதொரு வரவேற்பினைப் பெற்றுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் ஒக்ரோபர் மாதம் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

ஒக்ரோபர் முதலாம் திகதி-உசன் இராமநாதன் ம.வி., மூன்றாம் திகதி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நான்காம் திகதி- மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், ஏழாம் திகதி- கொடிகாமம் அ.த.க. பாடசாலை, எட்டாம் திகதி- வரணி ம.வி., 10ஆம் திகதி- மறவன்புலோ சகலாகலாவல்லி வித்தி., 11ஆம் திகதி-மிருசுவில் அ.த.க.பாடசாலை, 15ஆம் திகதி-அல்லாரை அ.த.க.பாடசாலை, 17ஆம் திகதி-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., 21ஆம் திகதி-கச்சாய் அ.த.க.பாடசாலை, 22ஆம் திகதி-மீசாலை விக்னேஸ்வரா ம.வி., 24ஆம் திகதி- கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, 25ஆம் திகதி-மந்துவில் றோ.க.த.க.பாடசாலை, 28ஆம் திகதி-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, 29ஆம் திகதி-மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், 31ஆம் திகதி-கைதடி-நாவற்குழி அ.த.க.பாடசாலை.

கலந்துரையாடல் பி.ப.2.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை நடத்தப்படவுள்ளது.

செயற்றிட்டம் கடந்த 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இந்தசச் செயற்றிட்டம் செப்ரெம்பர் மாதத்தில் ஒன்பது பாடசாலைகளிலும் ஒக்ரோபர் மாதத்தில் 16 பாடசாலைகளிலும் நவம்பர் மாதத்தில் ஆறு பாடசாலைகளிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கு-9)

# இளவாலை செல்லும் வீதி பொலிஸாரால் சிரமதானம்

வலி.வடக்கு, செப். 29

காங்கேசன்துறை பொலிஸாரால் நகு லேஸ்வரத்தில் இருந்து இளவாலைக்குச் செல்லும் வீதி இயந்திரத்தின் உதவியுடன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபைக்கும் , வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கும் சொந்தமான இந்தப் பகுதியில் உள்ள குறிப் பிட்ட வீதி பற்றைகள் நிறைந்து காணப்பட்டது. இதனால் போக்கு வரத்துச் செய்வதில் பொது மக்கள் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர். இதனையடுத்து காங்கேசன் துறைப் பொலிஸார் சிரமதானம் மூலம் குறிப் பிட்ட வீதியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையை மேற் கொண்டார்கள்.

வீதியோரத்தில் இருந்த பற் றைகள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த மரங்கள் என்பன துப்புரவு செய்யப்பட்டு பொது மக்களின் போக்குவரத்து சுலப மாக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.குணரத்தினா தெரிவித்துள் ளார். (கு-86)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுச்சபை மூலம் நியமிக்கப்படாத உறுப்பினர்கள் நிர்வாகத்தில்

### நல்லூர் ப.நோ.கூ.ச. அங்கத்தவர்கள் அதிருப்தி

நான்கு வருடங்களுக்கு மேலாகியும் நல்லூர் ப.நோ.கூ.சங்கம் பொதுச் சபைக் கூட்டத்தை கூட்டி இயக்குநர் சபையைத் தெரிவு செய்யாமல், கூட்டுறவு திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இது குறித்து அதிருப்தியடைந்துள்ள சங்க அங்கத்தவர்கள் ஏனைய சங்கங்கள் போல இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய் வதற்கு வசதியாக பொதுச் சபைக் கூட்டத்தைக் கூட்டு வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரி யுள்ளனர்.

குறித்த சங்கத்தில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோசடியைத் தொடர்ந்து பதவியிலிருந்த இயக்குநர் சபை உறுப்பினர் கள் நீக்கப்பட்டு கூட்டுறவுத் திணைக்களத்தினால் அரச உத்தி யோகத்தர்கள் மூவர் நியமிக்கப்பட்டனர்.

நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களில் இரு உறுப்பினர்கள் விலகியதையடுத்து பல மாதங்களுக்குப் பின் இரு அரச உத்தியோகத்தர்கள் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டனர். குடாநாட்டிலுள்ள பெரும்பாலான சங்கங்கள் கிளைக் குழுக் கூட்டங் களை யும், பொதுச் சபைக் கூட்டங் களையும் நடத்தி இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்து அவர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம், கிளைக் குழுக் கூட்டம் என்பன நான்கு வருடங்களுக்கு மேலாக இடம் பெறாததால் இது குறித்து விரக்தியடைந்த சங்க அங்கத்தவர்கள் பொதுச் சபையைக் கூட்டி இயக்குநர் சபையைத் தெரிவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி களைக் கோரியுள்ளனர். (வ-115)

# 23, 500 வாக்காளர் அட்டைகள் யாழ். பிரதம தபாலகத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், செப். 29

வடமாகாண சபைத் தேர்தலுக்காக யாழ். தபாலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளில் 23 ஆயிரத்து 500 வாக்காளர் அட்டைகள் விநியோகிக்க முடியாத நிலையில் எஞ்சியுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் :

வடக்குத் தேர்தலின் போது இம்முறை 94 வீதமான வாக்காளர் அட்டைகள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.குறிப்பாக 3 லட்சத்து 98 ஆயிரம் வாக்களார் அட்டைகள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட் டன. 23 ஆயிரத்து 500 வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்ய முடியாது தேங்கியுள்ளன. இவ்வாறு தேங்கிய வாக்காளர் அட்டைகளை அடுத்த வாரத்தில் மீண்டும் தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-17)

### ஏ.எஸ்.பி.ஜெயரட்ணத்தின் சடலத்தை எரித்து அழித்த குற்றச்சாட்டு:

# வவுனியா இளைஞருக்கு விடுதலை

வவுனியா, செப். 29

விடுதலைப்புலிகளால் கொலை செய்யப்பட்ட இரகசிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயரட்ணத்தின் சடலத்தை எரித்து அழித்ததன் மூலம் குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டி சாட்சியங்களை அழித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரியான குறித்த நபர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த 32 வயதுடைய தேவசகாயம் உதயகுமார் அல்லது மாதவரசன் என்பவர் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக் களத்தால் மேற்படி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் நடைபெற்று வந்தது.

பயங்கரவாத சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞன் ஒரு வர் கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றின் அடிப்படையிலேயே எதிரியான தேவசகாயம் உதயகுமார் மீது இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் அல்பா-5 முகாமில் இயக்க உறுப்பினராகச் சேர்ந்திருந்த மேற்படி தேவசகாயம் உதய குமார் கொலை செய்யப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயரட்ணத்தின் சடலத்தை எரித்ததாகவும்-

இதன்மூலம் கொலை செய்துள்ளார்களெனத் தெரிந்து கொண்டும் கொலை செய்த குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டி சாட்சியங்களை அழித்தமையானது தண்டிக்கப்பட வேண்டிய குற்றமெனவும் வழக்கில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

அதேவேளை குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு பயங்கரவாத சந்தேக நபரான இளைஞன் ஒருவர் கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டும் தான் வழக்குத் தொடுநரான சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதி மன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது . பயங்கரவாத சந்தேகநபரான இளைஞன் சுயமாக விருப்புடன் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்கவில்லை என்பது நிரூபணமானதால் எதிரி தேவசகாயம் உதயகுமார் மீதான குற்றச்சாட்டை நீதிமன்றம் நிராகரிப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த நிலை வேறு சாட்சியங்கள் வழக்குத் தொடுநரால் முன் வைக்கப்படாததால் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் எதிரியான தேவசகாயம் உதயகுமாரை குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பதாகத் தீர்ப்பு வழங்கினார்.

2005 ஜூன் மாதத்துக்கும் 2006 மே மாத காலப் பகுதிக்குள் சம்பவம் இடம்பெற்றதாக வழக்கில் தெரிவிக் கப்பட்டிருந்தது. (ஓ-30)

கட்டடம் வாடகைக்குண்டு

பிரதான வீதி சங்கானையில் அமைந்துள்ள கட்டடத் தொகுதி 20'X50' (HNB அருகாமையில்) வாடகைக்குண்டு. தனியார் வர்த்தக நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

லக்சுமி பிளாசா
பிரதான வீதி, சங்கானை
Hotline 077 2 90 87 87

பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் மொத்த விற்பனை நிலையத்திற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை. தகுதியானவர்கள் எதிர்வரும் 05.10.2013 இற்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு தங்களது சுய விவரக்கோவையை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1) பண வசூலிப்பாளர்கள் (Cash Collectors)
2) விநியோக பையன்கள் (Delivery Boys)

முகவரி: DSI மொத்த விற்பனை நிலையம்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32046) (6.3.11)




சகல விதமான சுவிற் வகை,திருமணம், பூப்புனித நீராட்டு வைபவஙட்களுக்கு உரிய இடத்தில் கொண்டுவந்து தரப்படும்.

ஐஸ்கிறீம், றோல், கட்லட் போடும் அனுபவம் உள்ளவர்கள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

No: 605-A, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 3525

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28.11.1989

மறைவு
29.09.2011

அமரர்
நவரத்தினம் அனோஜன்
(அப்பன்)

வருடங்கள் ஓடி மறைந்தாலும்
நீ எங்களை விட்டு மறைந்தாலும்
எங்கள் இதயங்களில் என்றும்
உன் நினைவுதான்
உன் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

கபாஸ் மின் ஒப்பந்தகாரரும்
சக ஊழியர்களும்.

(…34)(10.14)

# சர்வதேச உளநல சுகாதார தினம்

வடமராட்சி, செப்.29

சர்வதேச உளநல சுகாதார தினம் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக் கிழமை நாடளாவிய ரீதியில் சுகாதார அமைச்சின் உளநலப் பிரிவால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இம்முறை இத்தினத்தை "உளநல சுகாதாரமும் முதியோரும்" என்னும் தொனிப்பொருளில் கொண்டாட அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தினத்தை ஒட்டி நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்தினை விருத்தி செய்வதற்காக "முதியோர்களின் உளநல சுகா தாரத்தை மேம்படுத்தல்" போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியானது முதியோர் சமுகத் துக்கு கொடுக்கக்கூடிய அர்த்தமுள்ள ஒரு செய்தி அமைப்பு அறிக்கை, கவிதை, கேள்வி பதில் என்பனவற் றில் ஏதாவது ஒன்றாக 20 அல்லது 25 சொற்களில் அமைய வேண்டும். தரம் 6 தொடக்கம் 9 வரையான மாண வர்களுக்கு கனிஷ்ட பிரிவாகவும், தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு சிரேஷ்ட பிரிவாகவும் இப்போட்டி இடம்பெறும். (ஓ-8)

## முதியோர் சங்கங்களின் பேரவைக்கு நிர்வாகிகள் தெரிவு

அச்சுவேலி, செப்.29

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலக முதியோர் சங்கங்களின் பேரவைக்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

போஷகர் வலி. கிழக் குப் பிரதேச செயலர், எம் பிரதீபன் தலை வராக இ.மயில்வாகனமும், உபதலைவராக தா.சிவலிங்கமும், செயலாளராக ந.கன கலிங்கமும், உபசெயலாளராக சி.குணராசாவும், பொருளாளராக த.கனகலிங்கமும், கணக்குப் பரிசோதகராக சமூக சேவை அலுவலர் திருமதி மு.விஜயகுமாரியும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். 11 பேரா கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ந-11)

விற்பனைக்கு

றெஸ்ரோரன்ட் கவுண்டர் மேசை மற்றும் நிறு வனம்ஒன்றில் பாவிக்கப்பட்ட CCTV கமராக்கள் SEVER உடன் விற்பனைக்கு

தொடர்பு- 077 0090425

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிலூர்த்தம்மா இராசையா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோயில் விதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிலூர்த்தம்மா இராசையா நேற்று (28.09.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை-திரேசம்மா தம்பதியரின் இளையமகளும், காலஞ்சென்றவர்காளான சீமாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, சுவாம்பிள்ளை, மரியம்மா, அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருட்தந்தை S.J.இம்மனுவேல் அடிகளாரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(29.09.2013) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: அருமைநாயகம்
(ஓய்வுபெற்ற உதவிப்போது முகாமையாளர், இலங்கை வங்கி)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
03-02-1961

ஆண்டவன் அடியில்
13-08-2013

திருமதி
கனகசபாபதி
மனோரஞ்சனா (ரஞ்சனா)

(TD Water House, 3500, Steels Ave,
யாழ். போதனா மருத்துவமனை,
முன்னாள் எழுதுவினைஞர்)

கண்ணீருக்கு தடை போட்டாலும் - உன்
நினைவுகளுக்குத் தடை போட முடியாது
நினைவுகளை நிழல்களாக விட்டு
நிதர்சனமாய் சென்றீரே!

"சோதி மாளிகை"
நீலிப்பந்தனை, காரைநகர்.

(32140-23-14)

என்றும் உங்கள் நினைவுடன்
சோதி அண்ணர் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோர் சங்கங்களின் பேரவைக்கு நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.29

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலக முதியோர் சங்கங்களின் பேரவைக்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:

போஷகர் வலி.கிழக்குப் பிரதேச செயலர், எம் பிரதீபன் தலைவராக இ.மயில்வாகனமும், உபதலைவராக தா.சிவலிங்கமும், செயலாளராக ந.கன கலிங்கமும், உபசெயலாளராக சி.குண ராசாவும், பொருளாளராக த.கனகலிங்கமும், கணக்குப் பரிசோதகராக சமூக சேவை அலுவலர் திருமதி மு.விஜயகுமாரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 11 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ந-11)


O/L மட்டும் போதும், IELTS தேவையில்லை,

**1 இலட்சம் கையில்**

**ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க உழைக்க அரிய வாய்ப்பு.**

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



**கார் விற்பனைக்கு**

HB-xxxx இலக்கமுடைய மிற்சுபிசி லான்சர் ஜப்பான் கார் சில்வர் கலர் உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 516 2879 (32138) (10.14)

**வாகனம் விற்பனைக்கு**

MAHINDRA MAXIMO PS xxxx (Fullbody)
BAJAJ PULSAR 220 CC, WB. xxxx
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 844 8696 (32144) (10.14)

3 மாத கால பயிற்சி நெறி **அக்ஷயா** பயிற்சிக் கட்டணம் 20000/= மட்டுமே

பேசியல், பெக்கப், கொண்டைல், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி கட்டுதல், போன்ற பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. ★ ஒட்டியாணங்கள் வங்களை நுண்டுக் கள் வங்களாக மற்றும் தூரிகை, ★ உடல் எடை கூட்டும் தூரிகை, ★ உடல் எடை குறைக்கும் பல்வேறு தூரிகை, கோப்பி, எல்பவ ★ கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடிகொட்டுதல் அனைத்துக்குமான தூரிகை ★ தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய், ★ முகத்தில் உள்ள கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நன்பட்ட வடுக்கள், பருக்கள், காயங்கள், மஞ்சள், வெள்ளைப் புள்ளிகள் அனைத்தையும் மற்றும் ஒறிஜினல் வைத்திங் கிறீம், விற்பனைக்கு உண்டு. சுரிகை வைத்திங் பேசியல் செய்து கொள்ளலாம், பெக்கப் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ★ கருத்து கறுப்பு அகற்றும் கிறீம் பெற்றுக்கொள்ளலாம். தலைமுடி கட்டுதல், அயன்பண்ணுதல், டேவிங்செய்து கொள்ளலாம்.

பதிவு இல. 16168 அக்ஷயா=> நாவலர் வீதி, (பிறவுன் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில்) யாழ்ப்பாணம். (31816.17.16)
077 2106155

**NALTC**
**Australian Tamil Management Services**

- 6- 12 வயதுடைய சிறுவர்களுக்கான செயற்பாடுகளுடன் சுமுக ஆங்கில கற்கைநெறி
- தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்

**பதிவுகளுக்கு முந்துங்கள்**

- Spoken English For Every one

இலகுமுறை ஆங்கிலப் பேச்சு பயிற்சி (2-6 மாத காலம்)
Students - பாடசாலை மாணவர்கள்.
School Levers - பாடசாலை விட்டு விலகியோர்.
Employees - வேலை புரிவோர்.
பயிற்சி கால முடிவில் Australian சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: இல. 499/1, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
11G, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே. இல.: 0770166746, 0770569642

**LEADS** வேலைவாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வு

கடந்த 30 வருடங்களாக இலங்கையில் சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மேற்கொண்டுவரும் எமது நிறுவனம் ஆளணியை விரிவுபடுத்தும் பொருட்டு கீழ்வரும் பதவிகளுக்குத் தன்னம்பிக்கையும் சமூக அக்கறை மற்றும் சேவை மனப்பாங்குமுடைய தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

பதவி- 1 *வாழ்வாதாரச் செயற்றிட்ட இணைப்பாளர்- கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு.*

எதிர்பார்க்கப்படும் தகைமைகளும் அனுபவங்களும்

1. விவசாய டிப்ளோமா (EFF) அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு தகைமைகளுடன் உள்ளூர் அல்லது சர்வதேச நிறுவனங்களுடன் பணியாற்றிய அனுபவம்.
2. கிராமிய மட்டத்தில் நிகழ்வுகளை வடிவமைப்பதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் அனுபவம்.
3. அரசாங்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கான திறன்.
4. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான வழிகாட்டிகள் மற்றும் ஸ்பெயார் நியமங்கள் முதலான சர்வதேச மனிதாபிமான நியமங்கள் பற்றிய அறிவு.
5. முரண்பாடுகளுடன் பாதிக்கப்பட்ட மக்களுடனும் உரிமை சார்ந்த செயற்றிட்டங்களுடன் பணியாற்றிய அனுபவம்.
6. ஆங்கில மற்றும் உள்ளூர் மொழிகளில் பரிச்சயமும் அத்துடன் கணினி சார் தொழில்நுட்ப அறிவும்.

பதவி- 2 *பால்நிலை செயற்றிட்ட உத்தியோகத்தர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு*

எதிர்பார்க்கப்படும் தகைமைகளும் அனுபவங்களும்

1. பால்நிலை பற்றிய ஆய்வு மற்றும் அறிவும் அது தொடர்பான அடிப்படைப் பயிற்சிகளை ஒழுங்கமைத்தல், களநிலைப் பணியாளர்களுக்கும் சமூகத்துக்கும் பால்நிலை தொடர்பான செயற்றிட்டங்களுக்கு உதவிபுரியும் திறன்.
2. முரண்பாடுகளுடன் பாதிக்கப்பட்ட மக்களுடனும் உரிமை சார்ந்த செயற்றிட்டங்களுடன் பணியாற்றிய அனுபவம்.
3. கிராமிய மட்ட சமூகங்களுடனும் ஒழுங்கமைப்புகளுடனும் பணியாற்றிய அனுபவம்.
4. ஆங்கில மற்றும் உள்ளூர் மொழிகளில் பரிச்சயமும் அத்துடன் கணினி சார் தொழில்நுட்ப அறிவும்.
5. சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் பணியாற்றிய அனுபவம் மேலதிக தகமையாகக் கொள்ளப்படும்.
6. இதே துறையில் 3-5 வருடங்கள் வரை பணியாற்றிய அனுபவம்.

மேற்படி தகைமைகளை நீங்கள் கொண்டிருப்பீர்களேயாயின் எதிர்வரும் 08.10.2013 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் 4 மணிவரை எமது மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளுங்கள்.

மாவட்ட அலுவலக முகவரி: (சி12200-23-14)
59/7, 7ஆம் ஒழுங்கை,
பாடசாலை வீதி, கனகபுரம், கிளிநொச்சி.
021 321 1350 - 0773187930

மாவட்ட அதிகாரி,
LEADS,
Kilinochchi, Mullaitivu.

**Sunjeys Tourism இன்**

**Your October Holyday Planning**

Oct 11 முதல் 13 வரை கண்டி மாத்தளை (பின்னவல உட்பட) நுவரெலியாவில் உள்ள முக்கிய இடங்கள் சென்று வர, ஒருவருக்கு ரூபா 8900/= மட்டுமே.




வவுனியாவுக்கு அப்பாலுள்ள கோயில்களும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும். 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை. கட்டணம் ரூபா 14900/= மட்டுமே. போகும் இடங்கள் : மடு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், கண்டி, மாத்தளை, நுவரெலியா உட்பட.



முதலாம் யாத்திரையில் கலந்து கொண்டவர்கள்.

குறிப்பு:
உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட) தொலைக்காட்சி, அஜஸ்ரபிள் சீற் போன்ற சகல வசதிகளுடனும் கற்றிப்பார்ப்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
ஆசனப் பதிவு முன் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆசனப் பதிவுகளுக்கு: **Sunjeys Tourism**
713, Hospital Road, Jaffna.
077 747 4111
021 222 7070

**வரணி ஆசனப்பதிவு நிலையம்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/12193)(10.14)

**தவறிவிட்டது**

யாழ். சிவன் பண்ணைக்கும் ஓட்டுமடம் சந்திக்கும் இடையில் கடந்த 22.09.2013 அன்று கா. இராசலிங்கம் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் அகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்புகொண்டு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
தொடர்பு: 077 4613952 (32137) (10.14)

**காணிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி மற்றும் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் 11 அறைகளைக் கொண்ட மாடி வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை
தொடர்பு: 077 0090425 (32141) (10.14)

DHL EXPRESS வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

**விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை**

- 11kg மேற்பட்ட பொதிகளுக்கு விஷேட கட்டணச் சலுகை.
- சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

மீண்டும் மிகக் குறைந்த கட்டணத்தில் மிகத் துரித சேவை

3 தொடக்கம் 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோன்ற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
(கனகபுரம் பஸ்தரிப்பிடத்தில் இருந்து 100 மீற்றர் இடைவெளியில்)
TCN Express
இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

DHL EXPRESS

இல. 5, திருநகர் வீதி, கிளிநொச்சியில் இருந்து தற்பொழுது இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது (திருமுருகன் கொம் நெற் இன் சகல சேவைகளும் புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது)

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெறுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
46, Adiyapathum Veethy,
Thirunalvely.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுத்தமானதும், தூயதுமான நீரை பெறுவதற்கான ஒரே சாதனம்




தொடர்பு:
021 222 5390

வட மாகாண ஏக முகவர்:
நாராயணா ஹார்ட்வெயார்ஸ் ரேடர்
இல: 92C, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.



### வீடு விற்பனைக்கு

மட்டக்களப்பில் Bar Road, இலக்கம் 189, 24p காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.
தொடர்பு: 077 136 3482 (சி/12341) (6.4.3)



### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரில் வங்கி, பஸ் தரிப்பு நிலையம் பொதுச்சந்தை என்பவற்றுக்கு அருகில் A9 வீதியில் இருந்து 50m தூரத்தில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 140 2226 (சி/12323) (6.4.3)



**சேவை** UK, Canada, USA, Australia, New Zealand, France, German, Swiss போன்ற நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் Bank Blance வசதி செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 363 7864 (சி/12344) (6.4.3)



### வீடு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு பிரதேச செயலகத்திற்கு அண்மையில், 4 பரப்புக் காணியுடன் 3 அறை வீடு விற்பனைக்குண்டு. பருத்தித்துறை ரோட்டில் இருந்து 40m தூரத்தில். (சி/12337) (7.6.3)
தொடர்பு: 077 952 7569



### மணமகள் தேவை

மானிப்பாய் இந்து கௌரவ குடும்பம், 1976, ரோகிணி BSc, UK Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
Profile Number : 15631
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2520619 (சி/12327) (7.6.3)



### மணமகள் தேவை

வடமராட்சி இந்து கௌரவ குடும்பம், 1983, திருவாதிரை MSc, Norway Citizen அழகான மணமகனுக்கு மணமகள் தேவை.
Profile Number : 18967
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2523127 (சி/12325) (7.6.3)



### காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு

உடுவில் விவசாய திணைக்களத்துக்கு அருகில் உள்ள 2½ பரப்புக் காணியும் கிணறுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 015 2593, 077 346 0027 (32097)(6.3.11)



### மணமகள் தேவை

சண்டிலிப்பாய் இந்து கௌரவ குடும்பம், 1980, பரணி Dentist, Canada Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. செவ்வாய் குற்றம் இல்லை.
Profile Number : 19043
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2523127 (சி/12328) (7.6.3)



## குழாய்க்கிணறு தோண்டுவதற்கான சகல உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு

1. மினரல் றில்லிங் ரிக் (P.R.D.) PRD 450 & PRD 500



PRD 450



PRD 500

2. எயார் கொம்பிரஸர்



DENYO 600 CFM



AIRMAN 530 PDSF

3. பிட்ஸ் & ஹமர் (Hammars & Bits)

சகல உபகரணங்களும் நியாயமான விலையில் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**AMERASIAN (PVT) LTD,**
61/09, Dharmapala Mawatha,
Colombo-03.
T.P: 071 870 1040 - Arul
011-2336128 - Jaya
E-mail : arul@amerasiancorp.com


## செய்ந்நன்றி மறவாது பணிசெய்து கிடப்பேன்



தங்களின் பெறுமதியான வாக்குகளை அளித்து என்னை வெற்றிபெறச் செய்த என் இனிய தமிழ் உறவுகளுக்கும்,

சுட்டெரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கால்கடுக்க வீடுவீடாகச் சென்று எனக்காகப் பரப்புரை செய்த எனது பழைய மாணவச் செல்வங்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்,

என் கருத்துரைகளைச் செய்திகளாக்கிய ஊடக வியலாளர்களுக்கும்

### என் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி

எமது மக்களின் வாழ்வாதாரங்களுக்காகவும், வாழ்வுரிமைகளுக்காகவும் அயராது உழைப்பதுவுமே அனைவருக்கும் நான் செய்யும் கைம்மாறு என்பதை நன்கு உணர்வேன்.

அந்தப் பணிகளில் என் சக்திக்கும் மேலாக இதய சுத்தியுடன் உழைப்பேன் என உறுதி கூறுகிறேன்.

**பொ.ஐங்கரநேசன்** M.Sc,PGDJMC

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**


**Save the Children** | பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி | நிகழ்ச்சித் திட்டஉதவியாளர் |
| இடம் | முல்லைத்தீவு–வடமாகாணம் |
| ஊதியம் | மாதந்தமொத்தசம்பளம் ரூபா27,772/- |
| ஒப்பந்தகாலம் | ஒரு வருடம் |
| **Reference #** | **2013/N-Mu/35** |

மாவட்ட திட்ட அமுலாக்கல் பிரிவின் ஒரு அங்கத்தவராக நிகழ்ச்சித் திட்டஉதவியாளர், திட்ட இணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலருடன் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்பாகின்றார். இதற்காக இவர் அரசாங்க திணைக்களங்களுடனும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் மற்றைய பங்குதாருடனும் இணைந்து செயற்படவேண்டும்.

இப்பதவிக்கு இத்திறனில் குறிப்பிடத்தக்க அனுபவம் தேவைப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு இணைக்கப்பட்ட வேலை சுயவிவரத்தைப் பார்க்கவும். இப்பதவிக்கான தகுதிகளுடைய விண்ணப்பத்தாரிகள் மட்டுமே விண்ணப்பம் செய்யமுடியும். தெரிவு செய்யப்படுபவர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவார்கள். தொலைபேசி தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவு திகதி | **04th October 2013, 5.00pm** |

**இலங்கை குடியுரிமையுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்**

- வயதெல்லை 60 ஆண்டுகள்
- எந்நேரத்திலும் தேவையடிப்படையில் சேவ் த சில்ரன் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படலாம்.
- நாட்டின் எப்பகுதிக்கும் பயணிப்பதற்கான விருப்பமும் இயலுமையும்.
- சேவ் த சில்ரன் நிறுவனமானது ஊழியர் தெரிவின்போது பால், இன, சாதி, மதம், மொழி அடிப்படையில் பாகுபாடு காட்டுவதில்லை.
- விண்ணப்பிக்கும்போது விண்ணப்பப் படிவத்தின் மேலே அல்லது மின்னஞ்சலில் **Ref # 2013/N-Mu/35** குறிப்பிட்டு அனுப்பவும்.
- உறவுமுறையல்லாத இருவரின் பெயர், தொடர்புகொள்ளவேண்டிய விவரங்களைத் குறிப்பிடவும்.
- சிறந்த விண்ணப்பத்தாரர் ஒரு வலுவான அர்ப்பணிப்பு உள்ளவராகவும் சிறுவர் பாதுகாப்புபற்றி தெளிந்த அறிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- இப்பதவியின் தேவைகளுக்கு எப்படி உமது முந்தைய தொழில் அனுபவங்கள் முழுமையாக உதவும் என்பதை 300 சொற்களில் எழுதி உங்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**Save the Children International**
**12, Amarasekara Mawatha, Colombo 5**
**E-mail: slhr@savethechildren.org**
Only applicants selected for the interview will be contacted.
No telephone enquiries please

Save the Children International - Sri Lanka country office is part of the world's largest independent movement for children working in 120 countries. Save the Children International is a non-religious, nonpolitical, independent international organization working for the protection and the full realization of child rights. The four thematic areas of the Save the Children International programme are: (a) **Child Protection** (b) **Education** (c) **Nutrition** (d) **Child Rights Governance**. Responding to emergencies also remains a priority. Our projects, both self-implemented and in partnership with local organizations are carried out in over 8 locations throughout the country.

**ALL RIGHTS FOR ALL CHILDREN IN ALL SITUATIONS**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### மணமகள் தேவை

கொக்குவில்- நல்லூர், இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1982, பூராடம் Electric and Electronic Engineer,USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. செவ்வாய் தோஷம் இல்லை.
profile Number 18991
www.thaalee.com (திருமணசேவை)
Tel:2523127



### மணமகள் தேவை

உரும்பிராய், இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த, 1975, சுவாதி, Finance Coordinator, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 1இல் செவ்வாய், பொருத்தம் கிரக பாவம் - 35. (சி/12330) (7.6.3)
Profile Number : 19035
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2523127



### Sun Tours and Travels

Car, Van, Bike திருமண மற்றும் விசேட தேவைகளுக்கு நீண்ட குறுகிய நாள் வாடகைக்கும் விமான நிலைய போக்கு வரத்து சேவை சகலவிதமான வாகனமும் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம். கோயில் வீதி, புகை பரிசோதனை நிலையம் முன்பாக (32125) (7.6.3)
தொடர்பு: 077 225 9030, 021 790 3634



### மணமகன் தேவை

KKS, இந்து கௌரவ குடும்பம், 1969, கேட்டை, A/L, UK Citizen பெண்ணுக்கு மணமகன் தேவை. செவ்வாய் குற்றம் இல்லை.
Profile Number : 18533
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2520619 (சி/12332) (7.6.3)



### மணமகள் தேவை

வசாவிளான்-கோப்பாய் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1980, திருவோணம் Double Degree Production Manager, Canada Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை.
Profile Number : 19029
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2520619 (சி/12329) (7.6.3)



### உடனடியாகத் தேவை

வவுனியாவில் உள்ள எமது நிறுவனத்திற்கு "சிங்கள மொழி" பேசக்கூடிய தமிழ்ப்பெண் தேவை. வயது 20-28 வயது சம்பளம் 12000/= பயிற்சிகள் 21 நாள்கள் வழங்கப்படும். (விசேடமாக வவுனியாவை அண்மித்தவர்கள் O/L,A/L முடிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 556 1883 (32534) (6.3.11)

# STUDY IN CANADA

ENGLISH PROGRAMME
NO NEED IELTS

O/L MUST
AGE LIMIT 16-30
O/L ONLY - ENGLISH COURSE
A/L WITH IELTS - DEGREE PROGRAMME

Canada

Total COST 390,000/=
(Reg fee + College Admi + Visa Fee +Consult fee + Air ticket)



*Super Markets
*Restaurants
*Petrol Sheds
*Electrical Shops

PART TIME JOB COULD BE ARRANGED
SALARY - 165,000/=

SPONSOR
BANK BALANCE

O/L மற்று IELTS இல்லாத மாணவ மாணவிகளுக்கு நற்செய்தி CANADA நாட்டிற்கு ஆங்கிலக் கல்வியுடன் பட்டப்படிப்பை தொடர

INTERNATIONAL CITY COLLEGE
NO:07, 2nd FLOOR, W.A.SILVA MAWATTA, WELLAWATHA, COLOMBO-06
TEL: 0114 594 104 - 077 12 50 789
www.icclanka.com ISO CERTIFIED INSTITUTION

# BANK BALANCE

(3 Months valid)
(6 Months valid)
(9 Months valid)

Student Bank loan

Tourist-Visit-Student VISAS
UK- USA- CANADA
AUSTRALIA- EUROPE

(c/12346)
(6.3)

City Air Travels
Registered Company
163/7, Galle Road, Wellawatte, Colombo-06.
(opposite HNB Bank)
Hot Line- 0771615010 www.cityairlanka.com

## தையல் பயிற்சி வகுப்பு

கொழும்பில் பயிற்றுவிக்கும் தையல் ஆசிரியையினால் 5ஆவது Batch சாறிபிளவுஸ், சல்வார் இலகுவான முறையில் சிறந்த விளக்கத்துடன் வெட்டித் தைக்கும் முறை பயிற்றுவிக்கப்படும். ஆரம்பம் 09.10.2013 காலை 9.30 -1.30, 7ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

0779 297474, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

## விற்பனை -பொருள்கள்

- ஆடை துவைக்கும் இயந்திரம் (Washing Machine)
- மீன் தொட்டிகள்
  90"-22"
  48"-18"
- சீனக் கலைப் பொருள்கள்
- Scooter மோட்டார் பைக்

10/2, பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை
(BCAS கல்வி நிறுவனத்துக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(32131)
(6.4.3)
077 301 3700

## Toner Refilling
## ரோனர் ரீபில்லிங்

மிகத் தரமான வகையில்
அனைத்து லேசர்
ரோனர்களும் Refill
செய்து தரப்படும்.
விலை 1600/=
தொடர்பு: 077 251 0466

## குறுகிய கால வாடகைக்கு

வெள்ளவத்தை 45, நெல்சன் வீதியில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும் வெளி மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வருபவர்களுக்கும், திருமண வைபவங்களுக்கும் சகல தளபாடங்களுடனும் அறைகளாகவும், 2,3 அறைகள் கொண்ட வீடுகளாகவும் வசதிக்கேற்ப மாத, கிழமை, நாள் வாடகைக்குண்டு. குடும்பமாக வந்து தங்குவதற்கும் பொருத்தமானது. (A/C, Hot Water உட்பட)

011 2502412 / 011 2360544
Hot : 077 3038063 / 071 8054332
வாகனத் தரிப்பிட வசதி உண்டு. (சி/12343) (10,8,3)

## வாடகைக்கு

வெள்ளவத்தை ஸ்ரேசன் றோட், இல. 8இல் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் அமைந்த அறைகளும், சாதாரண அறைகளும், நாள், கிழமை, அடிப்படையில் குறைந்த விலையில் வாடகைக்குண்டு.

தொடர்பு: (சி/12340) (10,8,3)
011 2504281, 0771 832404

## விநியோகஸ்தர் தேவை

MA'S (Pvt) Ltd- கிளிநொச்சி பால் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தியாக்கப்படும் சுவையூட் டப்பட்ட பால் போத்தல்களை விநியோகிப்பதற்கு யாழ்ப் பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களுக்கு விநியோ கஸ்தர் தேவை. ஏற்கனவே வேறு பொருள்கள் விநியோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப் பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: புதிய ஆரம்பம் உற்பத்தி நிலையம்,
7 ஆம் குறுக்குத் தெரு, பாடசாலை வீதி,
கனகபுரம், கிளிநொச்சி.
T.P - 072 233 2450, 077 949 1015 (37538) (6.3.11)

# Drive your Vehicle

நாங்கள் தருகிறோம் நீங்களே ஓட்டிச் செல்லுங்கள்

கார்கள்
கப்கள்
வான்கள்
பஸ்
லொறி



(32129)
(6.3)

PEAKING RENT A CAR
அழையுங்கள் 0777484820
No 01, Market lane, Raja veethy, Nallur

# SB TRAVELS & TOURS

SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 15,900/- | LONDON | 99,000/- |
| TRICHI | 16,800/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 14,300/- | PARIS | 80,500/- |
| BOMBAY | 25,900/- | TORONTO | 127,000/- |
| BENGALURU | 17,800/- | NEW YORK | 118,500/- |
| KOCHI | 17,500/- | MELBOURNE | 97,000/- |
| DELHI | 39,700/- | PERTH | 94,800/- |
| MALAYSIA | 30,700/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 26,300/- | NARITA | 81,000/- |
| BANGKOK | 29,400/- | AUCKLAND | 123,900/- |
| SYDNEY | 89,500/- | | |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 18,400/-, DUBAI -23,800/-, DOHA - 25,900/-

விரும்பும் நாட்டுக்கு விமான டிக்கட் செய்து தரப்படும். டோகா கடார், துபாய்க்கு பியுரோ அரேஞ்மெண்ட் செய்து தரப்படும்.

E mail: sbtravels99@yahoo.com
Hotline: 077 1083481
No: 132 Sri Kathiresan Street, Colomb13.
Tel: 011 2333322, 2540111, 2334470, 2540280 Fax: 011 2334460

# LINK

THE LINK TO CONSTRUCTION EXCELLENCE



S.Thumilan
ACA, ACMA, ACCA, CGMA, MCSI(UK), CPA(AUS), FMAAT(SL), ACS
Group Chairman



1995
KANDALAMA HERITAGE HOTEL



2013
NEW COURTS COMPLEX IN CHAVAKACHCHERI



2003
20MW DIESEL POWER PLANT IN MATARA



1998
ROTUNDA TOWER IN COLOMBO 03 ( NEXT TO TEMPLE TREES )



2003
WATER SUPPLY SCHEME IN AMPARA AND POLONNARUWA

Truly Architecture Designed Individual Houses & Commercial Building Constructions

Architectural & Structural Designs

Preparation of Building Cost Estimations (BOQ)

Suppliers of Building Materials Such As

Sanitary Ware, Tiles & Light Fittings
www.blueoceanglobals.com

A/C, Washing Machines & Kitchen Appliances
www.blueoceanappliance.com

Lifts, Generators & Survey Equipments
www.blueoceanengineer.com

OUR ACHIEVEMENTS AND AFFILIATES

The National Chamber, CCI, ACCA, CIMA TRAINING PARTNER, BOI SRI LANKA, ICTAD

Link Engineering (Pvt) Ltd.
A fully owned Subsidiary of
Blue Ocean GROUP OF COMPANIES

#32, 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka
Tel : 0112 722 217 Fax: 0112 722 204
Web : www.blueocean.lk | www.link.lk
0777 729 555 | 0777 546 546
(52043)(6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு** மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:A.ஞானேந்திரா 021 225 6070,
R. பத்மநாதன் 024-222 4808

15 வருடம் அனுபவம் வாய்ந்த நிபுணரின் பயிற்சி!
உங்கள் கம்பியூட்டரை நீங்களே திருத்துங்கள். !1+2 Months

**கணினி பழுது பார்த்தல் பயிற்சி நெறி**

Learn only in 1 Month at :
**KU Education.**
Creating Employable Graduates
பயிற்சி நெறிக்கையேட்டிற்கும் விபரங்களுக்கும் நேரில் வரவும்.



0777-302882 | More on :http://edu.kugroup.info
இல 75,கோவில் வீதி(லாலா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2014 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
|---|---|
| அன்பொளி கல்வியகம் யாழ்.இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். | அன்பொளிகல்வி நிலையம் தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி |

அனுமதிகளை 28.09.2013 சனிக்கிழமையிலிருந்து 01.10.2013 செவ்வாய்க்கிழமை வரை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடன் ஊட்டிடுவோம்.
இயக்குநர்கள்.

## சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் கொழும்பில்

யாழ்ப்பாணம்,செப்.29
சமூக சேவைகள் அமைச்சின் சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவும் சிறப்பு விருந்தினராக பிரதி அமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சியும் கலந்து கொள்வர். (ஓ-9)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

மட்டுவில் வடக்கு J/313இற்குட்பட்ட பிரதேசத்து விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க (32x64500=2064000/=) நிதி உதவியில் 32 விவசாயக் கிணறுகளைப் புனரமைத்து 20 இற்கு மேற்பட்ட விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்றிய **"வேல்ட் விசன் லங்கா"** திட்ட முகாமையாளர் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும், இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்கிய பிரதி ஆணையாளர் கமநலத் திணைக்களம் யாழ்ப்பாணம், பெரும்பாக உத்தியோகத்தர் கமநல சேவைத் திணைக்களம் சாவகச்சேரி அவர்களுக்கும் J/313 பிரதேச கிராம உத்தியோகத்தர் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
விவசாய சம்மேளனம்,
மட்டுவில் வடக்கு,
விவசாயப் பெருமக்கள்,
நீர் பயனாளிகள், பங்காளிகள்.

**விற்பனைக்கு**
ELF 350 Isuzu வாகனம் NPR மொடல். அலுமினியம் பொடி அடித்தது, ஒரே கைப் பாவனையிலுள்ளது. விற்பனைக்குண்டு.
தொடர்பு: KRS Food Product's
K.K.S வீதி, கோண்டாவில் மேற்கு.
தொடர்பு: 077 622 6156

**விற்பனைக்கு**
TOYOTA CARINA-15 xxxx
இலக்க கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 953 4638

**விசாலமான வீடு வாடகைக்கு**
அரச/தனியார் திணைக்களங்களின் பாவனைக்கு உகந்த விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.
49/7, Temple Road, Jaffna
T.P: 077 938 2868

**பிரத்தியேக வகுப்புகள்**
SCIENCE PAPER CLASS
O/L-2013
ஆரம்பம்-29.09.2013
Sat, Sun - 4.00 p.m
116/2, Rasavinthodda Veethy, Nallur.
T.P: 077 932 4094

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கன்னாதிட்டி ஒழுங்கையில் ஒரு பரப்புக் காணியில் கார் தரிப்பிட வசதியுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 199 2180

**விரைவான வேலைவாய்ப்பு**
கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் தொழிற்சாலைகளில் ஜாம்/கோடியல்/பென்சில்/கோழி இறைச்சி/காமண்ட்/PVC/ கிளவுஸ்/ சொக்லேட் போன்ற வற்றுக்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல் பிரிவுக்கு 18-50 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வித் தகைமைகள் அவசியமில்லை. சம்பளம் 18000/=, 25000/=, 30000/= வரை, உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். வருகை தரும் நாளிலேயே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
தொடர்பு: 077 556 1883
வவுனியாக்காரியாலயம்.

**வேலைவாய்ப்பு**
உங்கள் எதிர்கால வாழ்கை சிறப்பாக அமைய நிரந்தர தொழில் கொழும்பு துறைமுகம் (தனியார்) நவீன கப்பல் புனர்நிர்மாண வேலைகளான சாதாரண ஊழியர்கள்/வெல்டர்/பெயின்டர்/தச்சர் விமான நிலையத்தில் (தனியார்) கிளினிங்/ கேட்ரீங்/லொன்றி போன்ற பிரிவுகளுக்கு 18-50 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை. தொழிலுக்கு ஏற்ப சம்பளம் 18000/= -40,000/= வரை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் உண்டு.
தொடர்பு: 077 556 1883

**Sakthi Home Science Academy**
Regd. No. VE/ BR/ REV/520



மகளிருக்கான குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாக இருக்கின்றன.
கேக் ஐசிங், மாச்சினி மலர்கள், Fondant ஐசிங், Varieties of Cakes, Glass Painting, Crystal Work, Knitting, Ect.
இப் பயிற்சிகளை பயில விரும்பும் மாணவிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
Main Street, Atchuvely | T.P No : 021 - 300 8487 | பிரதான வீதி, அச்சுவேலி

**RADIANT MARKETING (PVT) LTD**
50, UDAYA MAWATHA, SAPUGASKANDA
TEL:- +94-11-2241713/41 FAX:-+94- 11-2401555
INFO@RADIANT.LK

## விநியோகஸ்தர்கள் தேவை

நாம் தரமான உணவுப் பொருள்கள் மற்றும் பேனாக்கள் உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும். எமது விநியோக வலயத்தை விஸ்தரிப்பதற்கு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் ஆர்வமுள்ள விநியோகஸ்தர்கள் தேவை.

தகைமைகள் :
- குறைந்த பட்சம் 15 இலட்சம் வங்கி உத்தரவாதம்
- குறைந்தது 300 சதுர அடி களஞ்சிய வசதி
- விநியோகத்திற்கான வாகன வசதி
- விநியோகத்துறையில் முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : விற்பனை முகாமையாளர்
**RADIANT MARKETING (pvt) LTD**
**No 50, UDAYA MAWATHA,**
**SAPUGASKANDA.**
TEL : 011 2 401 713, 011 2 401 721
FAX : 011 2 401 555
EMAIL : sales@radiant.lk

Radiant Twinky Magna

**Save the Children**

## கேள்வி விலைமனுக்கோரல்

பாவனைக்கு உகந்த மற்றும் பகுதியளவில் சேதமடைந்த தகவல் தொழில் நுட்ப உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், குளிரூட்டிகள், சூரியமின்கலங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள், அலுவலகத் தளபாடங்கள், வீட்டுத் தளபாடங்கள், ரயர்கள் மற்றும் பாவனைக்குட்படுத்த முடியாத மரம் மற்றும் இரும்புக் கழிவுகளை விற்று அகற்றுவதற்கான விலை மனுக்கள் எமது நிறுவனத்தால் கோரப்படுகின்றன.
கணினிகள், கணினி உதிரிப்பாகங்கள் (UPS,CPU,Scanner),பிரிண்டர்கள் (Printer),போட்டோகொப்பி இயந்திரங்கள் (Photo Copier), மின்பிறப்பாக்கிகள், குளிர்சாதனப்பெட்டிகள், குளிரூட்டிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், வீட்டுத் தளபாடங்கள், சூரியமின்கலங்கள், ரயர்கள் மற்றும் ஏனைய பொருள்கள் தொகுதி விற்பனைக்காக (Bulk Disposal) கீழ்வரும் முகவரியில் 30.09.2013 முதல் 04.10.2013 வரை காட்சிப்படுத்தப்பட உள்ளது.
கொள்வனவு செய்ய விரும்புவோர் மேற்குறிப்பிட்ட திகதியில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை பார்வையிடுவதுடன் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.
பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 07.10.2013 மதியம் 12.00 மணிக்கு முன்னராக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விகோரலில் இருந்து விலகவோ அல்லது இரத்துச் செய்யவோ Save the Children இற்கு பூரண உரிமையும் அதிகாரமும் உண்டு. மேலும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொடர்பு கொள்ளப்படுவர்.

**மேலதிக தொடர்புகளுக்கு: நிர்வாக அலுவலர்,**
**சேவ் த சில்ரன்(Save the Children),**
**1138, திருநகர் தெற்கு,திருநகர்,கிளிநொச்சி.**
**021 739 1000, 021 222 5675**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 135

# வாழைப்பழமும் மனித வாழ்வும்

உலகில் எல்லாப் பாகங்களிலும், எல்லா நேரங்களிலும், விலை குறைந்த எல்லா சத்துக்களும் நிறைந்த பழம் வாழைப் பழமாகத்தான் இருக்கும். எமது சமூகத்தில் குழந்தைகளுக்கு முதல் ஊட் டும் பழம் அதிகமாக வாழைப்பழமாகத்தான் இருக்கிறது. எனவே சிறி யோர் முதல் பெரியோர் வரை பயன் படுத்தக்கூடிய இலகுவில் ஜீரணிக்கக் கூடிய கட்டமைப்பைக் கொண்டுள்ள பழம் வாழைப்பழமாகும்.

வாழை ஒரு மரவகையைச் சேர்ந்ததல்ல. அது தாவர வகையைச் சேர்ந்தது. பூண்டுத் தாவரங்கள் சேர்ந்த பேரினம். உலகிலேயே பெரிய தாவரம். வெப்பம் மிகுந்த ஈரலிப்பான கால நிலையிலேயே இது வளருகிறது.

உலகில் எல்லாப் பாகங்களிலும், எல்லா நேரங்களிலும், விலை குறைவான, அதேவேளை எல்லாச் சத்துக்களும் நிறைந்த பழம் வாழைப் பழமாகத் தான் இருக்கும். எமது சமூகத்தில் குழந்தைகளுக்கு முதல் ஊட் டும் பழம் அதிகமாக வாழைப்பழ மாகத்தான் இருக்கிறது. எனவே சிறியோர் முதல் பெரியோர் வரை பயன் படுத்தக்கூடிய. இலகுவில் ஜீரணிக்கக்கூடிய கட்டமைப்பைக் கொண்டுள்ள பழம் வாழைப்பழமாகும். இதில்காணப்படும் ஃப்ருக்டோசும், குளுக்கோசும் உடலுக்கு உடனடியாகவே ஆற்றலையும், சக்தியையும் கொடுக்க வல்லவை. வாழைப்பழத்தைப் பற்றிய சில தகவல்கள்.





1. வாழைப்பழம் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் ஊட்டச்சத்து மட்டுமல்ல, நோய்கள் வராமல் தடுக்கக்கூடிய நோய்த்தடுப்பு நாசினியும் கூட. இன்றைய விஞ்ஞானிகளும் சத்துணவு நிபுணர்களும் உலகில் தரமான உணவு வாழைப்பழம் என பரிந்துரை செய்கிறார்கள்.

2. நமது மூளை அமைதியடைய செராடோனின் எனும் கூட்டும் பொருள் தேவை. இந்த செராடோனின் உற்பத்தியாவதற்குக் காரணமாக ட்ரைப்டோபான் (Triptoptan) என்கின்ற அமினோ அமிலம் உள்ளது. இந்த Triptoptan வாழைப்பழத்தில் ஏராளம் உள்ளது.

3. வாழைப்பழம் உலர்ந்த சருமத்துக்கு மிகுந்த ஈரப்பதனை அளிக்கக் கூடியது. இதில் காணப்படும் பொட்டாசியம் மூளையின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கச் செய்கிறது.

4. எல்லாக் காலநிலைகளிலும் கிடைக்கும் பழம் வாழைப்பழம். இதர ஏனைய பழங்களைப் போல் இது வாழை மரத்திலேயே சரிவரக் கனிவதில்லை. அவை காயாகவே இருக்கும்போது குலை வெட்டப்படுகிறது. பழுக்க வைக்கப்படுகின்றன. இதன் காரணமாக வாழைப் பழத்தை வெகு தூரமான இடங்களுக்கு அனுப்புவது சாத்தியமாகிறது.

5. வாழைப்பழத்தில் பல ஊட்டச்சத்துக்கள் பரவலாக அடங்கி இருந்தாலும், பொட்டாசியத்தைத் தவிர்ந்த வேறு எந்த தனிப்பட்ட சத்தும் மிகுந்த அளவில் இல்லை. இந்தத் தாது உப்பு. மற்றத் தாது உப்புக்களைப் போல் உடல் நலத்துக்கு மிகவும் இன்றியமையாதது. வாழைப் பழத்தில் சோடியம் சத்து மிகவும் குறைவு. சோடியம் அற்ற உணவாகவும் உப்பு, கொழுப்பு அற்ற உணவாகவும் (கொலஸ்ரோல் இல்லை) வாழைப்பழம் காணப்படுகிறது. இதனுடைய மென்மையான கட்டமைப்புக் காரணமாக இருதய நோயாளிகள், உயர்குருதி அழுக்கம், வயிற்றுப்புண் (அல்சர்) மற்றும் மலச்சிக்கல் போன்ற நோயாளிகளுக்கு இது சிறப்பான உணவாகும்.

6. வாழைப்பழத்தில் மிதமான கலோரியே அடங்கியிருப்பதால் உடல் எடை குறைப்பு உணவிலும் இது இடம்பெறுகிறது. அத்துடன் இதனை உண்பவருக்கு சிறந்த திருப்தியை அளிக்கிறது.

7. பழுக்காத வாழைக்காயில் கார்போவைதரேட், மாப்பொருள் வடிவில் உள்ளது. நன்கு பழுக்க வைக்கும்போது, இந்த மாப்பொருள், சுக்குரோஸ், குளுக்கோஸ், ஃபரக்ரோஸ் போன்ற வெல்லங்களாக மாற்றம் அடைகின்றது. நன்கு பழுத்த வாழைப்பழத்தைச் சாப்பிடும்போது இந்த வெல்லங்களின் ஒரு பகுதி எமது உடலால் உட்கவரப்பட்டு (அடுத்த 15 நிமிடங்களிலேயே) குருதியில் வெல்ல மட்டம் அதிகரிப்பதை அவதானிக்கலாம். மீதி உணவுப் பகுதி சற்று மெதுவாக உடலால் உட்கவரப்படுகிறது. இது சற்று நீண்ட நேரத்துக்கு உடலுக்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கிறது. எனவே களைப்பான நேரங்களில் வாழைப்பழங்களை உண்பதால் உடலும், மனமும் சுறுசுறுப்பாக இயங்குகின்றன.

எஸ். சுதாகர்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# யாழில் 5,000 ஜம்பு மரக் கன்றுகள் விநியோகம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவும், யாழ்.பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து 5,000 ஜம்பு மரக் கன்றுகளை இலவசமாக 1 ஆம் கட்ட நடவடிக்கையாக இன்று விநியோகிக்கவுள்ளன. இந்த விநியோகமானது 16 பாடசாலைகளுக்கும், 55 வைத்தியசாலைகளுக்கும், முதியோர், சிறுவர் இல்லங்கள் உட்பட 13 சமூக அமைப்புக்களுக்கும், பொது நூலகங்கள், நீதிமன்றம் மற்றும் வங்கிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைகிறது. இந்த நிகழ்வானது நாட்டில் ஜம்பு மர நடுகைக்கான திறவுகோலாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஜம்புப் பழங்களின் சாற்றை நீண்ட காலம் பேணுவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



இந்த விநியோகமானது 16 பாடசாலைகள், 55 வைத்தியசாலைகள், முதியோர், சிறுவர் இல்லங்கள் உட்பட 13 சமூக அமைப்புக்கள் மற்றும் பொது நூலகங்கள், நீதிமன்றம் மற்றும் வங்கிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



அன்னை மடியில்
02.02.1934

இறைவன் அடியில்
29.08.2013

லண்டனில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் தம்பு செல்வராசா**

(வேளி புடையைகம், சாவகச்சேரி)
(திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சபை உறுப்பினர்)

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு இன்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லமான மீசாலை வடக்கு, மீசாலையில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்பிராய் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

(C/12185) (7.6.3)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
28.04.1988

விண்ணில்
29.09.2008

**ஜீவானந்தன் பிரகாஷ்**

ஆண்டுகள் ஐந்து சென்றதையா – எம் இதயத்தில்
என்றென்றும் வீற்றிருக்கும் தெய்வமே
என்றும் உம் நினைவோடு வாழும்

20A(54), செட்டித்தெரு லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அம்மம்மா
M. சறோஜினிதேவி

(32086) (7.6.3)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



இம்மையில்
01.02.1946

மறுமையில்
14.08.2013

திருமதி
**அக்னஸ் புளோரன்ஸ் சொலமன் (வயலட்)**

யாழ்.வேலணை மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரியும் திருமதி சுஜித்தா ரவிலிங்கன் அவர்களது அன்பு மாமியார் திருமதி அக்னஸ் புளோரன்ஸ் சொலமன் (14.08.2013) கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/ வேலணை மத்திய கல்லூரி. வேலணை.

(32077)(6.3.11)

# ஐம்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தெய்வானைப்பிள்ளை தம்பிஐயா**

மலர்வு
05.08.1929

உதிர்வு
17.09.1963

அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட எங்கள்
அன்புத் தெய்வமே! நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து
ஐம்பது ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் அழியாத
நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத
தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் என்றென்றும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

கைதடி வடக்கு,
கைதடி.

நீங்கா நினைவுகளுடன்
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

(32090) (7.6.3)

# தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு நிகழ்வு இன்று கோப்பாயில்

கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனம் நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிறுவன பிரதான மண்டபத்தில் இயக்குநர் எஸ்.சிவரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரையை கொழும்புத்துறை புனித வளனார் குருமடத்தின் முதல்வர் அருட்பணி செ.அன்புராசா அடிகளார் நிகழ்த்துவார். யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி கு.திருக்குமரன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை, பொறியியலாளர்களான கே.ஜங்கரன், பா.ஜீவராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தோல் கிளினிக் வேறிடத்தில்

தென்மராட்சி, செப்.29

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் 26ஆம் இலக்க அறையில் நடத்தப்பட்டு வந்த தோல் கிளினிக் நோயாளர்களின் நலன்கருதி வைத்தியசாலை கிளினிக் மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிளினிக்குக்கு வாராந்தம் வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் ஏற்படும் இடநெருக்கடியை தவிர்ப்பதற்காகவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தோல் கிளினிக்கில் சிகிச்சை பெறுவதற்கு வன்னிப் பிரதேசம் மற்றும் வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச மக்களும் கலந்து கொள்வதால் இடநெருக்கடி ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# உள்ளூராட்சி பற்றிய 7 நூல்கள் வெளியீடும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், செப். 29

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை பி.ப 2 மணி முதல் 6 மணி வரை நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலையக் கேட்போர் கூடத்தில் உள்ளூராட்சி தொடர்பான ஏழு நூல்களின் வெளியீடும் கருத்துப் பகிர்வும் இடம்பெறவுள்ளன.

உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் ஆற்றல்களை வளர்த்தெடுத்தல், அச்சபைகளைத் திறம்பட நடத்துவதற்குரிய வருமான அதிகரிப்பு மற்றும் மக்கள் பணிகளை முன்னெடுத்தல் போன்ற வழிகாட்டலில் மேற்படி நிறுவனம் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றது. அதன் ஒரு செயற்றிட்டமே இந்த நூல் வெளியீடும், அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள கருத்தமர்வுமாகும். இந்த விழாவில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இயக்குநர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படும் இந்த நூல்கள் உள்ளூராட்சி சபைகளுக்கு இலவசமாக வழங்கப் படும் என்று சிந்தனைக் கூட வெளியீட்டாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் தெரிவித்தார். (ஓ-50)

# கண்ணீர் அஞ்சலி



**கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்**

எமது அச்சுவேலி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்ப கால நியமனத் தலைவரும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், திறைசேரியின் முன்னாள் பிரதிச் செயலாளருமாகிய அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட க.சண்முகலிங்கம் அவர்களின் பிரிவால் துயர் கொள்ளும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

(சி/12182) (7.6.3)

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை அமலதாஸ்

(குணசிங்கம்-தேநீர்க்கடை)



குருநகர், சவக்காலைச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அமலதாஸ்-குணசிங்கம் நேற்று (28.09.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40A, கடற்கரை வீதி,
குருநகர்,யாழ்ப்பாணம்.

(32119)(6.3.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## சந்தியா அன்ரனி (தங்கக்குமார்)

(யாழ். மாநகரசபை மின்சார நிலைய ஓய்வுபெற்ற ஊழியரும், நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவரும், சிறந்த விளையாட்டு வீரரும்)



நாவாந்துறை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாஅன்ரனி (தங்கக்குமார்) 27.09.2013 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந் தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (30.09.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.30 மணிக்கு அஞ்சலிக்காக பூதவுடல் சென்மேரிஸ் சனசமூகநிலையத்தில் வைக்கப்பட்டு பின்னர் நாவாந்துறை தூய பரலோக அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் நாவாந்துறை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11/5, சென்மேரிஸ் வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

(32121)(4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நடராசா ஜெயராசா**
(விஜயகுமார்)

மண்ணில்
23.11.1950

விண்ணில்
29.09.2012

விஞ்சுபுகழ் சிறப்போடு வாழ்ந்திருந்த அப்பாவே!
தஞ்சமென்று உம் நிழலில் குடியிருந்த உறவுகளின்
நெஞ்சமது கனலாக சடுதியாக சரிந்துவிட்ட
நினைவகலா முதலாண்டில் நீள்துயரில் மிதக்கின்றோம்
பாசமிகு அரவணைப்பைப் பாரினிலே நாமிழந்தோம்
நேசமிகு அறிவுரைகள் எம் காதில் கேட்பதெப்போ
ஆசையுடன் அமைத்தவற்றில் உம் வதனம் காணுகிறோம்
தோஷமது நீங்கி நீரும் இளைப்பாற்றி பெற்றிடவே
யேசுபரன் பதம் தொழுது அனுதினமும் வேண்டுகின்றோம்.

சென்மேரிஸ், முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.

(32115) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாகண்டல் பகுதியில் திடீரென முளைத்த விகாரை

## கூட்டுறவுக் கடை இருந்த இடத்தில்

புதுக்குடியிருப்பு,செப்.29

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள மன்னாகண்டல் பகுதியில் பௌத்த விகாரையொன்று அமைக்கப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

போரின்போது இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். இராணுவத்தினர் இங்கு காவலரண்களை அமைத்திருந்தனர். இந்த நிலையில் இங்குள்ள காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டன. அத்துடன் கட்டடங்களும் அமைக்கப்பட்டன. மேலும் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் அவர்கள் வசித்த இடங்கள் காடுகளாக மாறிக் காணப்படுகின்றன. இந்தக் காடுகளுக்கு இடையே பெரியதொருபௌத்தவிகாரை அமைக்கப்பட்டமை தற்போது தெரிய வந்துள்ளது. இந்த விகாரையைச் சூழவுள்ள காடுகள் அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டதால் விகாரையைப் பார்க்கக் கூடியதாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் அவர்கள் வசித்த இடங்கள் காடுகளாக மாறிக் காணப்படுகின்றன.

இந்த விகாரை அமைந்துள்ள இடத்தில் முன்னர் மன்னாகண்டல் கூட்டுறவுக் கடை அமைந்திருந்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த இடத்தில் இராணுவ தளமொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

## தவணைக் கட்டண தளபாடங்கள்; ஏமாற்றப்படும் வவுனியா மக்கள்

வவுனியா.செப்.29

தவணைக் கட்டண முறையில் தளபாடங்களை விற்பனை செய்யும் முகவர்களால் பல்வேறு ஏமாற்று வேலைகள் இடம்பெற்று வருவதாக வவுனியா மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவின் கிராமப் புறங்கள் மற்றும் வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்படும் இடங்களில் கனரக வாகனங்கள், சிறிய வாகனங்கள் என்பனவற்றில் வீட்டுத் தள பாடங்களான அலுமாரி, கட்டில், மேசை, கதிரை, மெத்தைகள் உட்படப் பல பொருள்களை மிகக் குறைந்த ஆரம்ப கட்டணத்துடன் தவணை முறையில் விநியோகிக்கும் பதிவு செய்யாத வியாபார நிறுவன முகவர்கள் சிலர் சில தவணைக் கட்டணங்களின் பின்பு குறிப்பிட்ட பொதுமக்கள் பணம் செலுத்தவில்லையென அச்சுறுத்திவிட்டு வழங்கப்பட்ட பொருள்களைப் பறித்துச் செல்கின்றனர்.

உரிய தவணைக் கட்டணங்களை ஒழுங்காகச் செலுத்தியவர்களின் பொருள்களும் பறிக்கப்படுவதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவித்த போதிலும் நடவடிக்கை எதுவும் அவர்கள் எடுப்பதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-402)

## பாடசாலையில் தேநீர்சாலை

வவுனியா.செப்.29

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தேநீர் சாலையொன்று திறந்து வைக்கப்படவுள்ளது. பாடசாலையின் பழைய மாண வர்களால் இந்த தேநீர்ச்சாலை திறந்து வைக்கப்படவுள்ளதாக பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியும், சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டும் இந்தத் தேநீர் சாலை திறந்து வைக்கப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அண்மையில் இடம்பெற்ற வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினரான மருத்துவர் ப.சத்தியலிங்கம் இதனைத் திறந்து வைக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க)

# புதுக்குடியிருப்புக் காட்டில் இரகசிய மர வியாபாரம்

## சுற்றிவளைப்பில் பெரும் தொகை தீராந்திகள் மீட்பு

முல்லைத்தீவு. செப்.29

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வல்லிபுனம் அரச வனங்களில் பெரிய அளவில் கடத்திச் செல்லப்பட்டுள்ள சட்டவிரோத மர வியாபார மோசடியொன்றை முல்லைத்தீவு விசேட பொலிஸ் செயலணிப் படையினர் மற்றும் முல்லைத்தீவு வன பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வல்லிபுனம் அரச வனத்தில் மிக இரகசியமாக நடைபெற்று வந்த இந்த சட்டவிரோத மர வியாபார மோசடி சம்பந்த மாக முல்லைத்தீவு விசேட பொலிஸ் செயலணிப்படை முகா முக்கும் மற்றும் முல்லைத்தீவு வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் கிடைத்திருந்த இரகசிய உளவுத் தகவலொன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையொன்றின் போது எடுத்துச் செல்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான அரிந்த முதிரைத் தீராந்திகள், முதிரை மரக் குற்றிகள் மற்றும் பாலை மரக் குற்றிகள் கைப்பற்றப் பட்டுள்ளதோடு, இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போது சந்தேகநபர்கள் எவரும் அங்கிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-22)

முல்லைத்தீவு வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் கிடைத்திருந்த இரகசிய உளவுத் தகவலொன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட் டுள்ள நடவடிக்கையொன்றின் போது.

## மணல் அனுமதி இடைநிறுத்தம் தடைப்பட்டன வீட்டு வேலைகள்

ஒட்டுசுட்டான்,செப்.29

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மணலை ஏற்றுவதற்கான அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டதால் வீட்டு வேலைகள் தடைப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

தற்போது இங்கு மீள்குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. இவை முழுமை பெறவேண்டுமாயின் மணல் அவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆனால் இதனை எடுப்பதற்கான அனுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மழை காலம் ஆரம்பிக்கவுள்ளதால் அதற்கு முன்னர் வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு எண்ணியிருந்த வீட்டுப் பயனாளிகள் இந்த நடவடிக்கை காரணமாக செய்வதறியாத நிலையிலுள்ளனர்.

மேலும் தூர இடங்களிலிருந்து இங்கு வந்து வீட்டு வேலைகளில் ஈடுபட்ட தொழிலாளர்கள் இனிமேல் திரும்பி வரமாட்டார்கள் என்பதால் மணலுக்கான அனுமதி கிடைத்து வேலைகளை ஆரம்பிப்பதற்கு தொழிலாளர்கள் கிடைக்க மாட்டார்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே தமது மணல் அனுமதி தொடர்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென வீட்டுப் பயனாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)



## போக்குவரத்து நெருக்கடி இயங்கராவூர் மக்களுக்கு

வவுனியா.செப்.29

வவுனியா இயங்கராவூர் கிராமத்துக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படாததால் அங்குள்ள மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த பகுதியில் 80க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். மேலும் இந்தக் கிராமம் ஒரு பழைய கிராமமாகும். இங்குள்ள வீதிகள் உரிய வகையில் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

மேலும் ஓட்டோ தனியார், அரச பஸ்ஸும் சேவையில் ஈடுபடாமையினால் சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று மன்னார் வீதியை அடைந்து பஸ்ஸில் ஏறிப் பயணிக்க வேண்டிய நிலையில் இந்தக் குடும்பங்கள் உள்ளன.

பாடசாலை மாணவர்களும் இவ்வாறு போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் தூர இடங்களில் இருந்து வரும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு நடையில் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. விரைவில் இந்த பகுதியில் போக்குவரத்து வசதிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென இங்குள்ள மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)



நெடுங்கேணி வடக்கிலுள்ள வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படாத நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது. (க-402)

## வாழைக் குலைகளை விட்டு வைக்காத திருடர்

வவுனியாவின் பல்வேறு இடங்களிலும் வாழைக் குலைகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

சாம்பல்தோட்டம், சிவபுரம், நெளுக்குளம், ஓமந்தை, வேப்பங்குளம், பூந்தோட்டம், கோவில்குளம் பகுதிகளில் வாழைக் குலைகள் இரவு வேளைகளில் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. தென்னிலங்கையில் இருந்து வந்து சந்தேகத்திற்கிடமான வகையில் வாகனங்களுடன் நடமாடுவோரால் இந்தத் திருட்டுக்கள் இடம்பெற்றிருக்கலாமென மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (க-402)

## வெளியீட்டு விழா

ஐக்கிய நாடுகள் உதவித் திட்டத்தின் கீழ் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனமான பொஸ்டோ அமைப்பின் இணையத்தளம் மற்றும் கையேடு வெளியீட்டு விழா வவுனியா நகரில் அதன் திட்டமிடல் முகாமையாளர் பி.செந்தில்கு மாரன் தலைமையில் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகள் உதவித்திட்ட பிரதம அதிகாரி கிறிஸ்ரி மாட்டின்ஸ் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் எப்.கே.பந்துல ஹரிச்சந்திர கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, செட்டிகுளம் பிரதேச செயலர்களும், பொஸ்டோ அமைப்பின் தலைவரான ரி.நாகேந்திரராசாவும் கலந்துகொண்டனர். (க-402)

# ஒட்டுசுட்டானில் தேங்காய்க்கு தட்டுப்பாடு; விலையும் உச்சம்

முல்லைத்தீவு,செப்.29

ஒட்டுசுட்டானில் தேங்காய்க்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன் விலையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களாகவே இந்த நிலை காணப்படுகின்றது. மேலும் தட்டுப்பாடு காரணமாக ஒட்டுசுட்டான் சந்தையில் ஒரு குடும்பத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் தேங்காய் விற்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் தேங்காயொன்று சராசரியாக 60 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த காலப் போரின் போது ஏராளமான தென்னை மரங்கள் அழிந்தன. மேலும் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் பராமரிப்பின்றியும் தென்னைகள் அழிவடைந்தன. எஞ்சிய ஓரளவு வளர்ந்த தென்னைகளை யானைகள் விட்டுவைக்காது நாசம் செய்துள்ளன. மேலும் இங்கு மீள்குடியமர்ந்த மக்கள் புதிதாக நடுகை செய்த தென்னைகளும் யானைகளால் அழிக்கப்பட்டன.



இந்த நிலையில் வறட்சியும் சேர்ந்து கொண்டதால் தென்னைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தப் பகுதிகளில் தேங்காய்க்கு நிலவும் தட்டுப்பாடும், விலையதிகரிப்பும் தொடருமென மக்கள் மேலும் தெரிவித்தனர். (க-500)

## அரச அதிபர் விடுதியில் குளவிகள் அழிப்பு

### ஆசிரியரின் சாவை அடுத்து

வவுனியா.செப்.29

வவுனியா அரச அதிபர் விடுதியில் குளவிகளை அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

அண்மையில் வவுனியாவில் பாடசாலையொன்றில் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் ஒருவர் பலியானதுடன் வேறு இருவர் படுகாயமுற்றனர். இதனையடுத்து பாடசாலைகள் அரச அலுவலகங்கள் என்பனவற்றில் குளவிகளை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக அரச அதிபர் விடுதியில் விவசாயத் திணைக்களத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அங்கு புகையூட்டப்பட்டு குளவிகளைக் கொல்லும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் வீடுகள், அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், பொது இடங் கள் ஆகியவற்றில் குளவிகள் காணப்பட்டால் உடன் அறியத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதை இங்கு அவதானிக்க முடிந்தது. (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாதிப்புக்களை ஈடு செய்வதற்கு மனம் கொள்வது எப்போது....?

இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே-என்று பேச்சு வழக்கில் ஒரு வாசகம் உண்டு. தனியார் துறையில் பணி செய்வதைவிட, "கொர்ணமேந்தில்" அரசாங்கப் பிரிவுகளில் 'உத்தியோகம்' பார்ப்பது மேலானது என்பதனைச் சுட்டுவதற்கும் மேற்சொன்ன வாசகம் பொருந்தும்.

இற்றைக்குச் சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னரெல்லாம் மேற்கூறிய வாசகம் மிகமிகப் பொருத்தமாக இருந்தது. தனியார் துறையின் விரைவு வளர்ச்சியால் இப்போது அந்த நிலை இல்லை; குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றம் கண்டு விட்டது. அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப் பாறிய பின்னர் மாதாந்தம் ஓய்வூதியம் பெறலாம் என்பதனைவிட, வேறு சலுகைகள் இல்லை. ஆனால் தனியார் துறையில் பணி செய்யும் போது அதிக வருவாயும் மேலதிக பயன்களும் கிடைக்கின்றன.

போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்தேகிவிட்ட நிலையிலும், அதன் போது இறந்த, காணாமற்போன அரச சேவையாளர்களின் விவரங்கள் திணைக்கள ரீதியில் திரட்டப்படவில்லை; இப்போதில்லை. அதனால் பாதிப்புற் றோரின் சட்ட பூர்வ உரித்தாளர்களுக்கு, மிகப் பெரும் எண் ணிக்கையானோருக்கு, ஓய்வூதியம் மற்றும் நட்டஈடு போன்றவை வழங்கப்பட்வில்லை.

போரால் இறந்த, போரால் வேலை இழந்த, அரச ஊழி யர்களின் விவரம் அரசினால் அக்கறையுடன் இதுவரை திரட்டப்படாமையினாலேயே இந்த அவலநிலை தோன்றி உள்ளதாக, தமிழ்க்கல்வியியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகர் சுட்டிக்காட்டி உள்ளார்.

அதற்குப் பிரதான காரணம், மேலே குறிப்பிட்ட வகையினருக்கு நட்டஈடு, ஓய்வூதியம் அல்லது தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு வகை செய்த 2006 ஆம் ஆண்டின், பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை காலாவதியாகியமையே என்று சுட்டிக்காட்டப்படுகிறது. சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையை மீள நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் அக்கறை கொள்ளாதிருப்பது, தமிழர்களுக்கான நலன்களில் அரசுக்கு எத்தகைய, எந்தளவு கரிசனை உண்டு என்பதனை எடுத்துச் சொல்கிறது.

2006 ஆம் ஆண்டில் போர் முடிவுற்றுவிட்டதால், பெரும்பான்மை இனத்தவர்கள் இறந்திருக்கவோ அல்லது மரண முற்றிருக்கவே வாய்ப்பில்லை என்று எண்ணினரோ என்னவோ தெரியாது!..... யார் அறிவார்....!

பாதிப்புற்ற தமிழ் அரச சேவையாளரின் பரிதாபமான நிலையை உய்த்து உணர முடியாதவாறு, ஒரு வகையான உள்நோக்கம் அரச உயர் அதிகாரிகளின் மனதில் குடிகொண்டு விட்டதோ என்னவோ....!

எனினும், போரால் இறந்து அல்லது காணாமற்போன அரச பணியாளர்களின் உறவுகளின் நலன்கள் கவனிக்கப்பட வேண்டியது என்றும், அது நியாயமானது என்றும் பொது நிர்வாக அமைச்சு அதிகாரிகளும், அரச திறைசேரி அதிகாரிகளும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

போரின் போது இறந்த அல்லது காணாமற்போன அரச பணியாளர்களின் நிலைமை திணைக்கள ரீதியான உறுதிப்படுத்தல் இல்லாமையால், சம்பந்தப்பட்டவர்களின் உரித்தாளிகள், வங்கி நிதி வைப்புகளை மாற்ற இயலாமலும், காப்புறுதிக் கொடுப்பனவுகளைப் பெற முடியாமலும் கஷ்டமுறுகிறார்கள். பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்ற அனாதரவான நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளார்கள்.

இது மனிதநேயம் சார்ந்த பிரச்சினை -இல்லை இல்லை- விவகாரமே என்பது அரசுக்கும், அதன் அதிகாரிகளுக்கும் இனி எப்போது தான் புலப்படப்போகிறது? மனிதநேயம் சிறிதளவு இருந்தாலும் பளிச்சென்று புலப்படும். தனிப்பட்ட ரீதியிலாவது அந்த உள்ளுணர்வு உண்டாகும் என நம்புவோமாக.

எனினும், போர் வேளையில் இறந்த அல்லது காணாமற்போன அரச அலுவலர்கள் குறித்த உண்மையான எண்ணிக்கையை வெளியிட்டால், அரச சார்பில் இதுவரை தெரிவிக்கப்பட்ட தகவல் பிழையாகி விடும் என்ற அச்சமும் அரசுக்கு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அல்லவா?

அத்தகைய நிலையில், உள்ளார்ந்த நோக்கத்துடன் அரசு செயற்படுமாயின்-

காணாமற் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவேனும் பாதிப்புற்ற-காணாமற்போனவர்களின், இறந்து போனவர்களின்- உறவுகளுக்கு உதவுமா என்ற வினா அவர்களிடம் எழும்.

இது விவகாரம் குறித்து மட்டுமன்றி, தமிழ் மக்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட மற்றும் மன ரீதியான பாதிப்புகளை அகற்றவும், ஈடு செய்யவும், அரசு உதவும் என்று எத்தனை காலத்துக்குக் காத்திருப்பது....?

# உலக நாடுகளின் விழிகளை அகலத் திறக்க வைத்த தீர்ப்பு

## இதனை பொது வாக்கெடுப்பாகவும் கொள்ளலாம்

பழ.நெடுமாறன்



இலங்கையின் வடக்கு மாநிலத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் சிங்களக் கட்சிகளை அடியோடு புறந்தள்ளியுள்ளார்கள். மாகாணசபையில் உள்ள 36 இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 28 பேர் பெரு வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதன் காரணமாக மேலும் இருவரை உறுப்பினர்களாக நியமனம் செய்து கொள்ளும் உரிமையும் கிடைத்தி ருக்கிறது. ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு ஏழு இடங்களும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸுக்கு ஓர் இடமும் கிடைத்திருக்கின்றன.

இலங்கையில் தமிழர் பகுதிகளில் ஏற்கெனவே குடியேற்றப்பட்ட சிங்களவரைத் தவிர, கடந்த நான்கு ஆண்டு காலத்தில் மேலும் ஏராளமான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். சொந்த வீடுகளில் இருந்தும் ஊர்களில் இருந்தும் தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். ஏராளமானவர்கள் நாட்டை விட்டே வெளியேறி விட்டனர்.

தமிழர் பகுதிகள் முழுவதிலும் சிங்கள இராணுவ முகாம்கள் மக்களை அச்சுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. வந்தேறிகளான சிங்களக் காடையர் இராணுவ பக்க பலத்துடன் தமிழர்களைத் தாக்கியும் மிரட்டியும் வந்தனர். குறிப்பாக போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டனர். தேர்தலுக்கு முதல் நாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அனந்தி சசிதரன் என்னும் வேட்பாளரின் வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மட்டுமல்ல, இலங்கை சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து தமிழர் பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் சிங்களக் கட்சிகள் போட்டியிட்டது இல்லை. அவர்களின் எடுபிடிகளான தமிழர்களையே தங்களின் வேட்பாளர்களாக சில தொகுதிகளில் நிறுத்தி படுதோல்வியைச் சந்தித்தார்கள். ஆனால் இம்முறை வடக்கு மாகாண சபை தொகுதிகள் அனைத்திலும் ராஜபக்ஷ தனது வேட்பாளர்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி என்ற பெயரில் நிறுத்தினார். எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் பல இடங்களில் போட்டியிட்டது. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதற்குக் காரணமான முன்னாள் இராணுவ தலைமைத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும் போட்டியிட்டது.

மொத்தம் பதிவான 4,50,574 வாக்குகளில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3,53,595 வாக்குகளைப் பெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 82,838 வாக்குகளையும், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் 6,761 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 3,062 வாக்குகளையும் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி 170 வாக்குகளையும் பெற்றன.

பதிவான வாக்குகளில் தமிழ்த் தேசியக் கூட்டணி 78.48 சதவீத வாக்குகளையும், முஸ்லிம் காங்கிரசு 1.5 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன. ராஜபக்ஷவின் கூட்டணி உட்பட அனைத்து சிங்களக் கட்சிகளும் இணைந்து 20.02 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளன. தமிழர் [illegible] சிங்களக் கட்சிகளை வாக்குரிமை என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் விரட்டியடித்துள்ளனர்.

> தமிழ் மக்கள் அளித்த இந்தத் தெளிவான தீர்ப்பு ராஜபக்ஷக்கு எதிரானது மட்டுமல்ல. இந்திய அரசுக்கும் உலக நாடுகளுக்கும் ஓர் உண்மையான செய்தியைத் தெரிவித்துள்ளது.

உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக, வடக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடத்த ராஜபக்ஷ முன்வந்தார். இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள், வாக்குச் சாவடிகளுக்கு வருவதற்கே அஞ்சுவார்கள். எனவே தனது வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள். அதைக் காட்டி உலக நாடுகளைத் திசை திருப்பலாமென ராஜபக்ஷ திட்டமிட்டார்.

திட்டமிட்டு இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட தமிழர்களின் அரசியல் உரிமைகள், அவர்களது பிரதேச ஒரு மைப்பாடு, மனித உரிமைகள் பறிப்பு, போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையை நடத்துதல் ஆகிய வற்றைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அவர்க ளுக்கு ஜனநாயக உரிமைகள் அளிக்கப்பட்டு விட்டதாக தம்பட்டம் அடிக்க ராஜபக்ஷ திட்டமிட்டார். குறிப்பாக இந்தத் தேர்தலில் தன்னுடைய சிங்களக் கூட்டணி வெற்றி பெறுமானால் அதைக் காட்டி தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உருவாகியுள்ள எழுச்சியை யும் அதற்கு மதிப்பளிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் இந்திய அரசின் சூழ்நிலையையும் மாற்றி விடலாம் என அவர் கருதினார்.

ஆனால் அவரது நோக்கங்கள் யாவற்றையும் தமிழ் மக்கள் தங்களின் தீர்ப்பின் மூலம் முறியடித்துள்ளனர். ராஜபக்ஷவுடன் எல்லா வகையிலும் இணக்கமுடன் அரசியல் நடத்தியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அடியோடு தகர்க்கப்பட்டு அவருக்கு எதிரான அரசியல் முன்னிறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் அளித்த இந்தத் தெளிவான தீர்ப்பு ராஜபக்ஷவுக்கு எதிரானது மட்டுமல்ல, இந்திய அரசுக்கும் உலக நாடுகளுக்கும் ஓர் உண்மையான செய்தியைத் தெரிவித்துள்ளது. கடந்த நான்காண்டு காலத்தில் தமிழ் மக்கள் சந்தித்த இனப்படுகொலை, மனித உரிமைகள் பறிப்பு, பாரம்பரிய நிலங்கள் இழப்பு, சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்ட அவலம், அடிமைகளாக வாழ வேண்டிய பரிதாபம் போன்ற கொடுமைகளிலிருந்து அந்த மக்களை விடுவிக்க வேண்டிய ஐ.நா. அமைப்போ அல்லது சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ எதுவும் செய்ய முன்வராமல் கைகளைப் பிசைந்துக் கொண்டு நின்றன.

பாஞ்சாலியின் கூந்தலைப் பிடித்து இழுத்து அவளை அரச அவைக்கு துச்சாதனன் கொண்டு வரும் வழி நெடுக நின்ற மக்கள் எப்படியிருந்தார்கள் என்பதை பாரதி தனது பாஞ்சாலி சபதத்தில் பின் வருமாறு பாடுகிறான்.

என்ன கொடுமை ஊரவர்தங் கீழ்மை உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இள வரசன் தன்னை மிதைத்துத் தராத லத்திற் போக்கியே,
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல், நெட்டை மரங்களென நின்று புலம்பினார்,
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணை யாமோ?

சபை நடுவே தான் துகிலுரியப்பட்டபோது அதைத் தடுத்து நிறுத்தித் தன்மானத்தைக் காக்க யாரும் முன்வராத நிலையில் பாஞ்சாலி, சபதம் ஒன்றை மேற்கொண்டாள். துச்சாதனன் மற்றும் துரியோதனன் ஆகிய இருவரின் இரத் தத்தைக் கலந்து பூசி அதன் பின்பே தனது கூந்தலை முடிக்கப் போவதாக சூளுரைத்தாள். பாரதப் போரின் முடிவில் அதை நிறை வேற்றினாள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

அதைப்போல நவீன துச்சாதனனான ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளையும் அட்டூழியங்களையும் தடுத்து நிறுத்தவோ, கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ முன் வராமல் உலக சமுதாயம் வேடிக்கை பார்த்து நின்ற போது, ஈழத் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு மாகாண சபைத் தேர்தலில் அளித்த தீர்ப்பு ராஜபக்ஷவுக்கு எதிரானது மட்டுமல்ல, உலக நாடுகளின் விழிகளைத் திறக்க வைத்த தீர்ப்புமாகும். இது வெறும் மாகாண சபைத் தேர்தல் முடிவல்ல. அந்த மக்களிடையே நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பின் தீர்ப்பாகவும் இது கருதப்பட வேண்டும்.

காஷ்மீர் தனக்கே உரியது என பாகிஸ்தான் உரிமை கொண்டாடியபோது அன்றைக்கு பிரதமராக இருந்த நேரு காஷ்மீரில் பொது வாக்கெடுப்பு நடத்தி முடிவு காணலாம் என ஐ.நா. பேரவை யில் உறுதி கூறினார். ஆனால் காஷ்மீர் சட்டமன்றத்திற்கு நடத்தப்பட்ட தேர்தலில் ஷேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி பெருவெற்றி பெற்றது. காஷ்மீரிகள் அளித்த அந்தத் தீர்ப்பையே பொது வாக்கெடுப்பின் தீர்ப்பாகக் கருத வேண்டுமென நேரு உலக நாடுகளுக்குக் கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தான் என்றழைக்கப்பட்ட கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தான் இராணுவ கெடுபிடிகளுக்கு இடையே நடத்தப்பட்ட சட்டமன்றத் தேர்தலில் முஜிபுர் ரகுமானின் அவாமி லீக் மாபெரும் வெற்றி பெற் றது. அந்தத் தீர்ப்பை வங்க மக்களிடம் நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பாகக் கருத வேண்டுமென அன்றைய பிரதமர் இந்திரா காந்தி சர்வதேச நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதை ஏற்றுக் கொண்டு செயல்பட சர்வதேச சமுதாயம் தவறிய சூழ் நிலையில், இந்திய இராணுவத்தை அனுப்பி அந்த மக்களின் விடுதலைக்குத் துணைபுரிந்தார்.

1977-ஆம் ஆண்டில் இருந்து இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடத்தப்பட்ட அனைத்துத் தேர்தல்களிலும் தமிழர்கள் தங்களின் விருப்பம் என்ன என்பதைத் தெளிவாக அறிவித்துள்ளனர். இந்த மாகாணசபைத் தேர்தலிலும் அதே தீர்ப்பை அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

உலக சமுதாயம் இனிமேலாவது உண்மையை உணர்ந்து அவர்களின் வாழ்வுரிமையை மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் முன் வர வேண்டும். இதுவே இத் தேர்தலில் ஈழத் தமிழ் மக்கள் உலகுக்கு அளித்திருக்கும் செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொபிடெல் Cash Bonanza 2013 ஆம் ஆண்டை வெற்றி நிறைந்த ஆண்டாக மாற்றியுள்ளது

♦ மொபிடெல் Cash Bonanza முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களில் 2315 வெற்றியாளர்கள் , மூன்றாம் கட்டமான இறுதிக் கட்டத்தில் 374 வெற்றியாளர்கள் .

♦ மொபிடெல் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு. இரண்டாம் கட்ட இறுதியில் ரூபா 20 மில்லியன் பணப் பரிசுகள்.

♦ வருட இறுதிச் சீட்டிழுப்பில் ரூபா 2 மில்லியன் பெறுமதியான வெற்றியாளர்.

தேசிய கையடக்கத் தொலைபேசி வலையமைப்பான ஸ்ரீலங்கா ரெலிகொம் மொபிடெல் நிறுவனம், இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நடத்திய Cash Bonanza சீட்டிழுப்பை இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை நீடித்துள்ளது. அந்த ஊக்குவிப்பு வேலைத் திட்டத்துக்குக் கிடைத்த வரவேற்பைக் கருத்திற் கொண்டு அதனை 2013 டிசெம்பர் மாதம் வரை நீடிக்க மொபிடெல் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு ஆரம்பிக்கப்படும் மூன்றாம் கட்டத்தில் Cash Bonanza சீட்டிழுப்பு டிசெம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. இந்தச் சீட்டிழுப்பின் இறுதியில் ரூபா 2 மில்லியன் வெற்றியாளர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க மொபிடெல் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. ரூபா 2 மில்லியன் பணப் பரிசை வெற்றி பெற, வாரந்தோறும் சீட்டிழுப்பில் கலந்துகொண்ட அனைத்து மொபிடெல் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் வாய்ப்புக் கிடைப்பது மற்றுமொரு விசேட அம்சமாகும்.

இந்த 2 மில்லியன் ரூபா பணம் உட்பட, Cash Bonanza மூன்றாம் கட்டத்தின் இறுதியில் மொத்த வருடத்துக்குள் மொபிடெல் Cash Bonanza சீட்டிழுப்பின் மூலம் ரூபா 62 மில்லியன் பணப் பரிசு மக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட இருக்கின்றது. ஒரு வருடம் போன்ற குறுகிய காலத்தில், இவ்வளவு பெரிய பணப் பரிசைத் தனது முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு வழங்க மொபிடெல் நிறுவனம் நடவடிக்கை எடுத்தமை , தேசிய கையடக்கத் தொலைபேசி வலையமைப்பு என்ற வகையில், மொபிடெல் நிறுவனம் இந்தநாட்டு மக்களின் வளர்ச்சிக்காக ஈடுபாட்டுடன் செயற்படுகிறது என்பதை வெளிப்படுத்துவதற்குச் சிறந்ததொரு உதாரணமாகும்.

தற்போது இடம்பெற்று வரும் Cash Bonanza இரண்டாம் கட்டத்தின் 9 ஆவது வாரத்துக்கென மேற்கொள்ளப்பட்ட சீட்டிழுப்பில் கம்புறுப்பிட்டியைச் சேர்ந்த எம்.ஏ.கசுன் சம்பத் ரூபா 350, 000 பணப் பரிசை வென்றுள்ளார். இதற்கு மேலதிகமாக கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த எச்.ஏ.சஞ்ஜீவனி




லோகஸ் இரண்டாவது பெரிய பணப் பரிசான இரண்டு லட்சம் ரூபாவை வென்றெடுத்துள்ளார். அத்துடன் 10 வெற்றியாளர்கள் ரூபா 20,000 பெறுமதியான பணப் பரிசுகளை வெற்றி பெற்றதுடன், 25 வெற்றியாளர்கள் 10,000 ரூபா பணப்பரிசுகளை வென்றுள்ளார்கள். இந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட Cash Bonanza சீட்டிழுப்பில் மாத்திரம் 37 வெற்றியாளர்களிடையே ஒரு மில்லியனுக்கும் அதிகமான பணப் பரிசுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மேலும், Cash Bonanza இரண்டாவது கட்டத்தின் 10 ஆவது வாரத்துக்கென நடைபெற்ற சீட்டிழுப்பில் றாகம, எலபிட்டிவெல பிரதேசத்தைச் சேர்ந்த ஜே.ஏ.டி.தனுஷ்க சஞ்ஜீவ ஜயசூரிய அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு ரூபா 500,000/- பணப்பரிசு வழங்கப்பட்டது. அத்துடன் 250,000/-ரூபா பெறுமதியான பணப்பரிசை அலவ்வ பிரதேசத் தைச் சேர்ந்த செல்வி எச்.ஏ.டி.ஹப்பு ஆராய்ச்சி சுவீகரித்துக் கொண்டார். மேலும், ரூபா 25,000 /- பெறுமதியான 10 பணப் பரிசுகளும், 15,000/-ரூபா பெறுமதியான 25 பணப் பரிசுகளும் மொபிடெல் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு வழங் கப்பட்டமை விசேட அம்சமாகும். அந்த வாரத்தில் நடைபெற்ற Cash Bonanza சீட்டிழுப்பில் மாத்திரம் 37 வெற்றி யாளர்களிடையே 1,375 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முன்னர் இடம்பெற்ற Cash Bonanza சீட்டிழுப்புக்காக பின்பற்றிய செயற்பாடுகளுக்குச் சமமான வகையில் இந்த இரண்டாம் கட்ட Cash Bonanza சீட்டிழுப்பு திட்டமிடப் பட்டுள்ளது. தனது கணக்குக்கு பணத்தை றீலோட் அல்லது றீ-சார்ஜ் அட்டைகள் மூலம் பெற்றுக்கொள்ளும் மொபிடெல் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு இந்தச் சீட்டிழுப்பில் கலந்துகொண்டு பணப் பரிசுகளை வெல்லும் வாய்ப்புக் கிடைக் கிறது. இந்த இரண்டாம் கட்ட Cash Bonanza சீட்டிழுப்பின் கீழ் நீங்கள் உங்களது மொபிடெல் முற்கொடுப்பனவுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு ரூபா 50/- க்கும் ஒரு வெற்றி வாய்ப்பு வீதம் கிடைப்பதுடன், அதிகமாக றீ-லோட் அல்லது றீ-சார்ஜ் செய்வதன் மூலம் வெற்றி வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளும் சந்தர்ப்பமும் உங்களுக்குக் கிடைக் கிறது. ஒவ்வொரு வாரமும் சீட்டிழுப்பு நடைபெறுவதுடன், உரிய வாரத்துக்கான பரிசு பற்றிய விவரங்களை இலக்கம் #151# இனை அழைப் பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். உரிய சீட்டிழுப்புப் பற்றிய தகவல்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

மொபிடெல் வாடிக்கையாளர் சேவை இலக்கமான 071 27 55 777 இன் மூலம் மாத்திரம் வெற்றியாளர்களுக்கு அவர்களின் வெற்றி பற்றி அறிவிக்கப்படுவதுடன் , தபால் மூலம் அதனை உறுதிப்படுத்தவும் மொபிடெல் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தச் சீட்டிழுப்புக்கள் மூலம் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுகளுக்கு மொபிடெல் நிறுவனம் எந்தவொரு மேலதிக கட்டணத்தையும் அறவிடமாட்டாது.

## கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் வைப்புத் தளத்தில் 90வீத வளர்ச்சி

கொமர்ஷல் கிரெடிட்

இலங்கையில் நிதியியல் சேவை வழங்கும் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்கின்ற கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. ஆனது, 2013 மார்ச் 31ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியாண்டு காலப்பகுதியில் தனது வைப்புத் தளத்தில் 90வீத அதிகரிப்படைந்துள்ளதாக அறிவித்துள்ளது.

எமது மொத்த வட்டி வருமானம் ரூபா 4.0 பில்லியனாக 62.37 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இருந்தபோதும், இவ்வருட காலப் பகுதியில் வட்டிச் செலவுகள் அதிகரித்தமையினால் தேறிய வட்டி வருமானமானது ரூபா 2.4 பில்லியனாக 38.27 வீதத்தினாலேயே அதிகரித்தது என்று கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஷான் எகொடகே கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் இணைந்ததாக நிறுவனத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட ஆண்ட றிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2012/13 நிதியாண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் 2013 ஆகஸ்ட் 30ஆம் திகதி நடைபெற்றது. அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நிறுவனத்தின் தேறிய இலாபம் (வரிக்குப் பின்னரான இலாபம்) கடந்த நிதியாண்டில் காணப்பட்டதை விடவும் 3.67 வீதத்தினால் அதிகரித்து ரூபா 679.4 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டது. இந்தப் புள்ளிவிபரங்களின் பின்னணியில் நோக்குகையில், 2010/11 நிதியாண்டுக்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 60.1 மில்லியனாக காணப்பட்ட அதேநேரம் 2009/10 நிதியாண்டின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 45.2 மில்லியான பதிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் வருடங்களில் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் இலாபத் தன்மைக்கு அனைத்து இடங்களிலுள்ள அதனது சேவை மையங்களும் சாதகமான பங்களிப்புக்களை வழங்கும் என்பதில் நாம் நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் சென்றடையும் விதத்தில் நிறுவனமானது தனது சேவை வலையமைப்பை கணிசமான அளவுக்கு விஸ்தரித்துள்ளது என்று கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் தலைவர் சிசில் பெரேரா அறிவித்தார்.

கொமர்ஷல் கிரெடிட் நிறுவனமானது, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால் (SLIM) ஆண்டின் மிகச் சிறந்த சேவை வர்த்தகக் குறியீடு - 2012' எனும் (தங்க) விருது வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. SLIM விருது வழங்கலின் வரலாற்றிலேயே நிதிக் கம்பனியொன்று வர்த்தக குறியீட்டின் சிறப்புத்துவத்திற்காக இந்த அளவுக்கு விருது வழங்கி அங்கீகாரம் அளிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். அதேபோன்று, ஆண்டின் மிகச் சிறந்த உள்நாட்டு வர்த்தக குறியீடு' பிரிவில் வெண்கல விருதையும் கொமர்ஷல் கிரெடிட் பெற்றுக் கொண்டது.




## SLIM NASCO விருது விழாவில் CBL நிறுவனத்திற்கு பல விருதுகள்

இலங்கையின் உணவுத் துறையில் முன்னணி பெருநிறுவனங்களில் ஒன்றான சிலோன் பிஸ்கட் லிமிடெட் நிறுவனமானது, அண்மையில் நடைபெற்ற இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) வழங்கும் தேசிய விற்பனை காங்கிரஸ் விருது (NASCO) வழங்கும் நிகழ்வில் 5 விருதுகளை வென்று குவித்துள்ளது.

துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் நுகர்வுப்பொருட்கள் (FMCG) பிரிவின் கீழ், ஸீபஸி ஆனது விண்ணப்பித்த மூன்று துணை பிரிவுகளின் கீழும் விருதுகளை வென்றுள்ளது. சிறப்பான விற்பனை செயற்பாடு மற்றும் விற்பனை நிபுணர்களை ஊக்குவித்து வெகுமதிகளை வழங்கும் வகையில் அண்மையில் ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இரு தங்க விருதுகள், ஒரு வெள்ளி விருது, இரு வெண்கல விருதுகளை CBL குழுவினர் வென்றெடுத்தனர்.

இந் நிகழ்வில் FMCG பிரிவில், ஆண்டின் மிகச்சிறந்த FrontdLiner க்கான தங்க விருதினை மொஹம்மட் ரமிஸ் வென்றார். அவர் றிட்ஸ்பரி மற்றும் டியாரா தயாரிப்புகள் அடங்கிய ஸீபஸி இன் A பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தார். பிராந்திய முகாமையாளர் பட்டத்தைப் பெற்று இரண்டாவது தங்க விருதினை தம்மிக்க பெரேரா தட்டிச் சென்றார். லங்காசோய் மற்றும் சமபோஷ உள்ளடங்கிய C பிரிவில் மிகச்சிறந்த விற்பனைப் பிரதிநிதி மற்றும் மேற்பார்வையாளர் பட்டத்திற்கான வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளை முறை யே அசங்க ஹலங்கொட மற்றும் லங்கா ரஜீவ ஆகியோர் வென்றனர்.

மேலும் மஞ்சி தயாரிப்புகளின் B பிரிவில் கீழ், மிகச்சிறந்த பிராந்திய முகாமையாளருக்கான வெண்கல விருதினை ஜானக கொடகெதர வென்றெடுத்தார். CBL குழுவினரின் சிறப்பான செயற்பாடு குறித்து நிறுவனத்தின் குழுமத்தின் விற்பனை பொது முகாமையாளர் ஐ.எம்.கார்ன் கருத்துத் தெரிவிக்கையில், இந் நிகழ்வில் விருதுகளை வென்றவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், இந்தச் சாதனையை நிதர்சனமாக்கிக் கொள்வதற்கு எமக்கு ஆதரவு மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்கிய அனைவருக்கும் நாம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

உணவுத் துறையின் முன்னோடியாக CBL நிறுவனம் திகழ்வதற்கு நாடு முழுவதும் எமது வர்த்தகநாமத்தைக் கொண்டு சென்ற விற்பனை குழுவினரே பிரதான காரணமாகும். CBL ஆனது தொடர்ச்சியாக முன்னெடுத்த பயிற்சித் திட்டங்கள் மற்றும் [illegible]ன் பிரதிபலனாக, சுமார் ஒரு வருடத்திற்குள் எமது விற்பனைக் குழுவினர் [illegible]ம்பட நிறைவேற்றியிருந்தனர் எனத் தெரிவித்தார்.

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் உள்ள முன்னோடிகளை அடையாளப்படுத்தி வெகுமதிகளை வழங்குவதன் ஊடாக நாட்டில் விற்பனை தொழில்முறையின் தரத்தை உயர்த்துவதே NASCO வின் குறிக்கோளாகும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாவடியூர் மு.நித்தியின் "பல் தேர்வு வினாக்கள்" எனும் நூல் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. நூலை பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் ச.நவநீதன் வெளியீட்டு வைக்க எஸ். சரவணபவன் தம்பதியினர் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டனர். (ஒ-14)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அண்மையில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றன. அவற்றில் இரு காட்சிகள். (ஒ-14)




கரவெட்டி ஆங்கில மொழி கல்வி நிறுவனத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் முன் ஆயத்தமில்லாத பேச்சும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கண் சிகிச்சை நிபுணர் மலரவன் தம்பதியரை மாணவர்கள் வரவேற்பதையும் நிர்வாகி ப.ஈஸ்வரநாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் காணலாம். (ஒ-8)



19 வருடங்கள் பழைமை வாய்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நிறுவுநரும் முன்னாள் அதிபருமாகிய அருட் தந்தை ஜேம்ஸ் லின்ஸ் அவர்களின் திருவுருவச் சிலை கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்துக்கு முன்னால் அண்மையில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பழைய மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஒ)



உடுவிலூர் கலா எழுதிய "பெண்மையின் பக்கங்கள்" நூல் வெளியீடு அண்மையில் இளைய தம்பி வளாகத்தில் இடம்பெற்றது. வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களும், நூலாசிரியர்களும். (ஒ-14)




அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையால் ஒலிபெருக்கிச் சாதனங்கள் வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களில் ஒரு தொகுதியினர் அந்தச் சாதனங்களுடன் காணப்படுகின்றனர். (க-18)



கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலய மாணவர்கள் ஆக்கத்திறன் செயற்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (க-18)



கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் சிலரால் சிறப்பு கற்றல் கூடம் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் ஆரம்ப நிகழ்வு அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

சிறுப்பிட்டி யாழ். பிரதான வீதியில் கிணறு, தென்னை மரங்களுடனான 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 051 7801 (31983) (3.11)

## விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் அல்சேசன் நாய் வயது 1½ இரும்புக் கூட்டுடன், 3 சோடி வாங்கு, மேசை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 470 2219 (32097) (6.3.11)

## பணிப்பெண் தேவை

80 வயதான தாயாரைப் பராமரிக்கவும் சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்யக் கூடிய 35 வயதிற்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்புகளற்ற பெண், வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்குத் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.(சி/12322) (7.6.3)

தொடர்பு: 075 761 6515

## வீடு வாடகைக்கு உண்டு

நுணாவில் சேச்சுக்கும், பொலிஸ் நிலையத்திற்குமிடையில் A9 வீதியருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (29535) (7.6.3)

தொடர்பு: 077 469 4229

## கடை விற்பனைக்கு

யாழ் நகரின் மத்தியில் KKS வீதியில் பெரிய களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 074 2792

(கிழமை நாள்களில் பிற்பகல் 2 மணி - 6 மணி வரை) (32089) (7.6.3)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் நற் குணம் உள்ள மணமகனுக்கு அவரது தாயார் மெல்லிய அழகான 41 வயதிற்கு உட்பட்ட நற் குணம் உள்ள மணமகளைத் தேடுகின்றார். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. விவாகரத்துப் பெற்ற பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 078 951 6249, 066 129 746 1707 (32092) (4.6.3)

## விற்பனைக்கு

பாவித்த ஜெனரேற்றர், பிறிஜ், கூலர்,ஐஸ்கிறீம் மெசின், எயார் கொண்டிசனர்கள் A.C, சாப்பாட்டு மேசை என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 3721, 077 899 8145 (32041)(6.4.3)

## கட்டடம் வாடகைக்கு

சுன்னாகம் கே.கே.எஸ் வீதியில் Cargills Super Market இற்கு முன்பாக உள்ள இரண்டு கடையுடன் கூடிய மேல்மாடி வீடு (2200 சதுர அடி) வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள்/அலுவலகங்கள் விரும் பத்தக்கது. (31976) (6.4.3)

தொடர்பு: 077 724 5485, 077 669 1268

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ். பிறஸ் வீதியில் ஆயர் இல்லத்துக்கு பின்புறமாக மூன்று அறைகள் உள்ள எல்லா வசதியும் உள்ள வீடு ஐப்பசி 25ஆம் திகதியில் இருந்து வாடகைக்கு விடப்படும். அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 898 1296 (37536) (7.6.3)


## குறைந்த விலையில் சொகுசான பயணம்

கொழும்பு - சென்னை - கொழும்பு சேவை Rs. 13,600/-
கொழும்பு - சென்னை Rs. 7,450/- upwards



திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்

- Baggage allowance 37 kgs.
- Complementary Meals provided
- Groups fares offer only over 10 passengers.

AIR-INDIA express www.airindiaexpress.in

Contact for further information:
World of Hayleys
47, Stanley road, Jaffna.
Ph: 021 2221878, 0777730818
or nearest Travel agents


## நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

பொமனேறியன் கறுப்பு பூச்சி நீக்கிய நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

51, விநாயகர் வீதி, சுண்டுக்குளி. (32094) (7.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் 2¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 712 0968 (32010) (4.6.3)

## Car வாடகைக்கு

யாழ்.நகரில் Nissan Car (GY XXXX) A/C மாத வாடகைக்கு நல்ல பதவியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும். மற்றும் திருமண, சுப விழாக்களுக்கும்....

தொடர்பு:077 833 1989 (31996) (3.11)

## வீடு வாடகைக்குத் தேவை

கச்சேரிக்கும் அரியாலைக்கும் இடையில் கண்டி றோட்டிற்கு அண்மித்ததாக 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (32023) (3.11.6)

தொடர்பு:071 860 9232, 077 269 0177

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுன்னாகம் (கே.கே.எஸ் றோட்) பழைய பொலிஸ் நிலைய வீதி, கச்ச நாவலடியில் சுற்று மதில் வீடு என்பவற்றுடன் கூடிய ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தூய உறுதி உடையது. விலை பேசித் தீர்மானிக்கலாம். (32526) (4.6.3)

தொடர்பு: 077 956 5436

## அலுவலக இணைப்பாளர் தேவை

அலுவலகம் ஒன்றுக்கு சிங்களம் நன்கு பேசக்கூடிய ஆங்கில அறிவு ஓரளவுள்ள பெண் ஒருவர் தேவை. (32032) (5.3)

தொடர்பு:
071 598 0980,071 872 2353

## HOUSE FOR RENT

இல.35, மருதடி வீதி, நல்லூரிலுள்ள 5 Room வீடு (உதவி இந்திய தூதரகத்திற்குச் சமீபமாக) சகல வசதிகளுடன் நிறுவனங்களுக்கு/ குடும்பத்திற்கு உடன் வாடகைக்கு உண்டு.

0712446926 (32106)(6.3)

## சொகுசு Car கள் வாடகைக்கு உண்டு

திருமண நிகழ்வுகள் மற்றும் சுற்றுலா தேவைகளுக்கு ஏற்ற அதி சொகுசுக் Car களை எம்மிடம்பெற்றுக் கொள்ளலாம். 4500/= (32108)(6.3.11)

தொடர்பு:077 876 1705, 077 513 5315

## வீடு வளவு விற்பனைக்கு

இலக்கம் 79, 81 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணதில் 1½,2½ பரப்பு வீடு வளவுகள் விற்பனைக்குண்டு.

(32100) (6.4.3) தொடர்பு: 077 125 5476

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 76 இல் பிறந்த பாவம் 20, உயரம் 5 அடி 3 அங்குலம் பொறியியலாளராக கொழும்பில் தொழில் புரியும் சைவபோசன மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு: 077 788 3831 (32016) (4.6.3)

## காணி விற்பனைக்கு

அல்வாய் தெற்கு, வதிரி தேவரையாளி பாடசாலைக்கு அருகில் பனை மரங்கள் உள்ள 2½ பரப்புக் காணியும், அல்வாய் தெற்கு மனோகரா வீதி முணலாவத்தையில் 2½ பரப்புக் காணியும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:021 321 5589 (32003) (3.11.6)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் நல்ல பதவி வகிக்கும் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அவரது தாயார் நற்குணம், நற்பண்பு, நல்லறிவு உடைய மெல்லிய மணமகளைத் தேடுகின்றார். 45 வயதிற்கு உட்பட்ட பெண்கள், விதவைகளும் விண்ணப்பிக்கலாம். சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.

(32093) (4.6.3) தொடர்பு: 078 951 6249

## ஏல விற்பனை அறிவித்தல்
## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்**

கடன் தொடர்பு இல.71834485 & 72349235

சாவகச்சேரி, நுணாவில், A9 பாதை என்னும் முகவரியைச் சேர்ந்த சீவரட்ணம் கோபிதாசன் மற்றும் திருமதி ரஞ்சிதமலர் கோபிதாசன் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 30.08.2013 ஆம் திகதி 1826 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 21.08.2013 ஆம் திகதி தினமின, தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.692, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் K.P.பாலகிருஸ்ணன் அவர்கள் 30.10.2013 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

வடமாகாணம் யாழ் மாவட்டம் தென்மராட்சிப் பிரிவில் நாவற்குழிப் பகுதியில் கைதடி நுணாவிலில் அமைந்த **மருதையினார் சட்டியும்** ஏனைய பகுதிகளும் என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.கமலசேகரம் தயாரித்த 2010.09.26 திகதியிட்ட **அண்மைய அளவை வரைபடம் இல.4304 இல் துண்டு 1 என** விபரித்த 33 **லாச்சம்**V.C மற்றும் 06 குழிகள் விஸ்தீரணமுடைய எனினும் தற்சமயம் 32 **லாச்சம்** V.C யும் 14.30 குழிகளும் விஸ்தீரணமுடைய காணியின் தற்சமய எல்லைகளாவன: **கிழக்கில்** தாமோதரம்பிள்ளை பொன்னையா மற்றும் சின்னதம்பி அருளையா மற்றும் பங்குரிமையாளர்களின் ஆதனங்களும் **வடக்கில்** கண்டி றோட்டும் **மேற்கில்** ஒழுங்கையும் **தெற்கில்** சுப்பிரமணியத்தின் மனைவி பராசக்தியினதும் சின்னதம்பி அருளையாவினதும் ஆதனங்களும் ஆகும். இவையாவும் F810/227 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி

இலங்கை வங்கி,
மானிப்பாய் மேற்தரக்கிளை.
திகதி: 13.09.2013

தேசுதேவன்
கிளை முகாமையாளர்.

(சி/12137)(4.6.3)

## அன்பான யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு....

வடக்கு மாகாண சபைத் தேர்தலில்
தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அமோக
ஆதர வளித்து வரலாற்று வெற்றியடையச்
செய்த தன் மூலம் நாம் அனைவருமாகச் சேர்ந்து
எமது வரலாற்றுக் கடமையை நிறை
வேற்றியுள்ளோம். தேசிய விடுதலைக்கான
பயணத்தில், நாம் இன்னொரு கட்டத்தைக்
கடந்துள்ளோம் என்ற பெருமையோடு
நிற்கின் றோம்.

எனக்குத் தங்களது விருப்பு வாக்கினை
அளிந்த மக்களினை மனதில் இருத்தி,
அவர்கள் என்மீது வைத்துள்ள அன்புக்கும்
நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருக்கின்ற
அதேவேளையில் அவர்களுடையது மட்டுமன்றி,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு
வாக்களித்த மக்களினது
மட்டுமன்றி – ஒட்டுமொத்தமான

தமிழ் பேசும் மக்களது
அபிலாசைகளை ஈடேற்ற,
தொடர்ந்தும் நான்
உழைப்பேன் என்று
நன்றியுடன்
தெரிவித்துக்கொள்கிறேன்.



தர்மலிங்கம் சித்தார்த்தன்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

(20237) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். அரச காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும்.

**இடபம்:** இன்றையதினம் வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு. கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்க முடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும்.

**மிதுனம்:** முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது. உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம்.

**கடகம்:** ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உடல் நலம் பாதிக்கும். தாழ்வு மனப்பான்மை வந்து நீங்கும். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வரவுகளை நயமாகப் பேசிப் பெறப்பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**சிங்கம்:** மனதில் பட்டதைப் பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். ஆடம்பரச்செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பொருள்களை புது யுக்தியால் விற்றுத் தீர்ப்பீர்கள்.

**கன்னி:** குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராக இருக்கும். காசுபணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**நாளை**

புரட்டாதி-14 திங்கட்கிழமை 30.09.2013
திதி: ஏகாதசி பி.இ. 04.38 வரை
நட்சத்திரம்: பூசம் மு.ப.11.22 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32 - 09.02 வரை

**துலாம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவீர்கள்.

**விருச்சிகம்:** யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். பழைய கடன் பிரச்சனை அவ்வப்போது மனதை வாட்டும். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மன உளைச்சலை ஏற்படுத்துவார்கள்.

**தனுசு:** உங்களது குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துக்கொள்விர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்புக் கிட்டும்.

**மகரம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களை தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கும்பம்:** அதிகாரபூர்வமாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மீனம்:** கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். வருங்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிட்டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 2 | 1 | | | | | 8 |
| 1 | 3 | | 8 | | | | | |
| | 4 | 5 | | | 6 | | 9 | |
| | | | | 6 | 2 | | 7 | 3 |
| 9 | | | | | | | | 2 |
| 4 | 2 | | 3 | 1 | | | | |
| | 5 | | 7 | | | 8 | 3 | |
| | | | | | 1 | | 2 | 5 |
| 2 | | | | | 3 | 7 | 4 | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 2 | 7 | 3 | 6 | 1 | 4 | 9 |
| 4 | 6 | 1 | 5 | 9 | 2 | 3 | 8 | 7 |
| 3 | 9 | 7 | 8 | 4 | 1 | 5 | 6 | 2 |
| 5 | 2 | 9 | 3 | 6 | 7 | 8 | 1 | 4 |
| 6 | 7 | 4 | 1 | 5 | 8 | 2 | 9 | 3 |
| 1 | 8 | 3 | 9 | 2 | 4 | 7 | 5 | 6 |
| 9 | 1 | 8 | 6 | 7 | 3 | 4 | 2 | 5 |
| 7 | 4 | 5 | 2 | 1 | 9 | 6 | 3 | 8 |
| 2 | 3 | 6 | 4 | 8 | 5 | 9 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நாட்டின் முன்னணி நிறுவனத்துடன் வர்த்தகத்தில் இணைவதற்கு அரியவாய்ப்பு!
ELEPHANT HOUSE ICECREAM
நடமாடும் ஊர்தி (MOBILE PARLOUR)
முகவர்கள் தேவை!




நாட்டின் முன்னணி ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்களான
ELEPHANT HOUSE
நிறுவனத்தின் ஐஸ்கிறீம் வகைகளை நடமாடும் ஊர்திகள் மூலம் விநியோகிப்பதற்கு பின்வரும் பிரதேசங்களுக்கு விநியோக முகவர்கள் தேவைப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - வவுனியா - முல்லைத்தீவு - மன்னார்

விண்ணப்பதாரிகளின் பங்களிப்பு:
- சிறிய ரக வாகனம் - புதிய அல்லது நல்ல நிலையில் உள்ள வாகனம் ஏற்றது (DIMO BATTA, MAHINDRA MAXIMO போன்றவை)
- அதிகுளிரூட்டி (DEEP FREEZER) - 1
- சிறிய ரக மின் பிறப்பாக்கி (GENERATOR)- 1

நீங்கள் வியாபாரத்தின் மூலம் ஈட்டும் இலாபத்திற்கு மேலதிகமாக பின்வருவன நிறுவனத்தால் வழங்கப்படும்.
- வாகனத்தின் வர்ணமூட்டல் (BRANDING)
- விற்பனையாளர் சீருடை
- விநியோகக் கொடுப்பனவு (RE DISTRIBUTION ALLOWANCE)
- விற்பனை இலக்கிற்கான ஊக்குவிப்புத் தொகை (INCENTIVE)

(32064)(45.6.3)

உங்கள் விவரங்களடங்கிய விண்ணப்பங்களைப் பதிவுத்தபால் மூலம் OCTOBER 20 ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

MOBILE CHANNEL MANAGER
CEYLON COLD STORES PLC, 148, VAUXHALL STREET, COLOMBO - 02
மேலதிக தொடர்புகளுக்கு - 077 305 2571

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணையில் இன்று லயன்ஸ் சேவைத் திட்டம்

யாழ்ப்பாணம், செப்.29

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சேவைத்திட்டம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதியோரைக் கௌரவித்து புதிய உடைகள் வழங்குதல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவு வழங்குதல், மரம் நடுகையும் மரம் வழங்கலும், மாணவர்களுக்கு பற்பசை மற்றும் தூரிகை வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (ஓ-14)



வடமாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தின் போட்டியிட்டு வெற்றி பெற்ற எச்.எம்.றயீஸ் மற்றும் கட்சி உறுப்பினர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், செயலாளர் உட்பட உயர் மட்ட குழுவினர் இதில் கலந்து கொண்டனர். (ஓ-10)

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி பரஞ்சோதி (சோதி)



புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், விசுவ மடு தொட்டியடி, புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரஞ்சோதி (சோதி) நேற்று (28.09.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி காலஞ்சென்ற அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மோகனாம்பாளின் அன்புக் கணவரும், நிஷாந்தினி, நிரூபன், காலஞ்சென்ற பிரபு ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமாரின் அன்பு மாமனும், மகாலிங்கம், விசய லட்சுமி மகாதேவன், காலஞ்சென்ற குணசுந்தரி மற்றும் சூரியகலா,சந்திரகலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திரபூபதி, வரதராசா, மலர்விழி, காலஞ்சென்ற சிவஞானச் செல்வம் மற்றும் பத்மநாதன், பாலசிங்கம், தேவாம்பாள், யோகாம்பாள், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் கீதாம்பாள், கிரிசாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயகாந்தன், சந்திரன், றூப காந்தி, இராசேந்திரன், வசந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நு.ப. 12.00 மணியளவில் புளியங்கூடல், சுருவில் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(32049)(10,6)

### சின்னத்துரை ரவீந்திரன்
(சோதி R.V.G. பீடிக் கம்பனி)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் துரை ரவீந்திரன் 23.09.2013 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், அமிர்தநாதன் -காணிக்கைமேரி தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தசாந்தியின் அன்புக் கணவரும், சர்மிளா(கனடா), பிறேமிலா (கிராம அபிவிருத்தித் திணைக்களம்), கோமிலா (முன்பள்ளி ஆசிரியை, ஐக்கிய சனசமூக நிலையம்), கனிஸ்ரன் (R.G TRADERS), கிளின்ரன் (TOPOAZ), கிறிஸ்ரலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞான பொபி (கனடா), றமேஸ்(தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை), ஜெஸ்வந்சிங் (R.V.G) ஆகியோரின் அன்பு மாமனும், அபிசாந் (கனடா), அனுஷ்கா (கனடா), றம்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும், வவா (பிரான்ஸ்), லீலாவதி (டென்மார்க்), காலஞ்சென்ற மங்களேஸ்வரன் (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அமிர்தசுரபி, அமிர்தறமணி, அமிர்தராசா(ஜேர்மனி), காலஞ்சென்ற அமிர்த சுபசிறீ, அமிர்த புவீந்திரன், காலஞ்சென்ற அமிர்தகுமாரி, அமிர்தராணி(லண்டன்), அமிர்தவதனி (ஜேர்மனி), காணிக்கைநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (30.09.2013) திங்கட் கிழமை பி.ப 3 மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(32126)(8.3.11)

# சிறுவர் தினம்

கோப்பாய், செப். 29

கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூக விஞ்ஞான மன்றம் நடத்தும் சிறுவர் தினம் நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

மன்றத் தலைவர் த.சற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறுவர் மகிழ்வரங்கில், சிறப்புரை என்பன இடம்பெற வுள்ளன. (ஓ-14)

# அரச இலக்கிய விருது வழங்கல் நாளை

இந்த ஆண்டுக்கான அரச இலக்கிய விருது வழங்கல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை, பிற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கலந்து கொள் வார்.

இலக்கியக் குழுத் தலைவர் ஜயசுமன திச நாயக் காவினால் வாழ்த்துரையும், விருது பெறுநர் பட்டியல் கையளிப்பும் நிகழ்த்தப்படும்.

இலக்கியவாதிகளுக்கான வாழ்த்துரையை கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் செய லாளர் வசந்த ஏக்கநாயக்க நிகழ்த்துவார், விருதுகளை சபாநாயகர் வழங்குவார். நடன, நாடக நிகழ்வுகளும் விழாவில் நடைபெறும். (அ)

# விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 25 பேர் கைது

யாழ்ப்பாணம், செப்.29

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் போக்குவரத்து விதிமுறைகளை மீறியும் உரிய ஆவணங்கள் இன்றியும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் 25 பேரைக் கைது செய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் பல பகுதிகளிலும் பொலிஸார் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

அதன்போது நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இரண்டு பேரை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

அதைவிட மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 2 பேரும் பொது இடத்தில் மது போதையில் இடையூறு விளைவித்த குற்றச் சாட்டில் 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ-4)

# ஒரே வளாகத்தில் இரண்டு பாடசாலை இயங்குவதால் குழப்ப நிலை

முல்லைத்தீவு, செப்.29

பிரிந்து இயங்கி வந்த உடையார்கட்டு மகாவித்தியாலயமும், உடையார்கட்டு ஆரம்ப வித்தியாலயமும் மீண்டும் ஒரே வளாகத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமை தொடர்பாக பெற்றோர் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வரு கின்றது.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உடையார் கட்டு மகா வித்தியாலயம் உள்வாங்கப்பட்டதால் அதன் ஆரம்பப் பிரிவு தனியாகப் பிரிந்து சென்று அருகிலுள்ள காணி யொன்றில் இயங்கி வந்தது.

இந்த நிலையில் கடந்த புதன் கிழமை தொடக்கம் ஆரம்ப வித்தியாலயம் மகா வித்தியாலயம் அமைந்துள்ள வளாகத்தில் அமைந்துள்ள கட்டடமொன்றில் இயங்க ஆரம்பித்தது. ஆனால் இங்குள்ள பெற்றோர் இவ்விரு பாடசாலைகளும் தனியே இயங்குவதையே விரும்புவதாகத் தெரிய வருகின்றது.

இந்த நிலையில் உடையார்கட்டு மகா வித்தியாலய அதிபருக்கு முல்லை கல்விப் பணிப்பாளரால் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அவர் புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்கும் அவரது இடத்துக்கு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு இருட்டுமடு பாடசாலை அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதேவேளை மாகாணக் கல்விப் பணிப்பாளரான செல்வராசா இங்கு வந்து நிலைமையை ஆராய்ந்து சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-555)

## 41ஆம் நாள் நினைவு தினம்

அமரர்

### இருதயராசன் நிமால் (உப்பாலி)



(வைத்தியசாலை ஊழியர், வட்டக்கச்சி)

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றுகைக்காக இன்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.92,கட்சன் றோட்,
வட்டக்கச்சி.

குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ.

## 21ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
22.11.1921

மறைவு
10.09.2013

### அமரர் இராமுப்பிள்ளை கார்த்திகேசு
(ஆசாரியார்)
(திதி: பூர்வபக்க பஞ்சமி)

கடந்த 10.09.2013 செவ்வாய்க்கிழமை காலமான எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியையில் நேரில் பங்குபற்றிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் நாளை (30.09.2013) திங்கட்கிமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் குடும்ப சமேதரராக சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அன்னாரது 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் (10.10.2013) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

கலைமகள் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

(32124)(10,6,3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோர் சங்க ஆண்டு விழா

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.
சங்கத்தின் தலைவர் பொன். இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் ஆண்டு விழா நிகழ்வுகளில் வலி.கிழக்கு பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதமவிருந்தினராக கலந்துகொள்கிறார். (ஓ-11)

**காணி விற்பனைக்கு**

கரணவாய் தெற்கில் மூத்த விநாயகர் கோவிலில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தில் 5½ பரப்பு வீடு கட்டக் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்புகளுக்கு.

**0771 749 369**

**கறையான்களை முற்றாக அழித்தல்**

வீடுகள், வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள், பொது அரச கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து முழுமையான தீர்வினைப் பெற.

புதிய கட்டடங்களை அமைக்கும் போது கறையான்களை உத்தரவாதத்துடன் முழுமையாக கட்டுப்படுத்தி உங்கள் செலவை குறைத்துக் கொள்ளுங்கள்.

குறைந்த செலவு நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு 100 சதவீத பலனைப் பெற்றிடுங்கள்.

**எமது சேவைகள்**

இலவச ஆலோசனை - இத்துறையில் சிறந்த அனுபவம் வாய்ந்தவரால் ஆலோசனை வழங்கப்படும்

3 - 10 வருடங்கள் வரையிலான உத்தரவாதம் வழங்கப்படும்

CONTACT
N.Rubakanth 0771515897 K.Kirushanthan - 0771588022
"ALL OUT" Pest Control
140/12, 4th cross street, Jaffna. Tel : 0214993200

**பணியாளர்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கி வரும் மொத்த வியாபார நிலையத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. (DSR) தகுதியுடையோர் எதிர்வரும் 05.10.2013 இற்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு தங்களது சுயவிவரக் கோவையை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**DSI மொத்த விற்பனை நிலையம்**
**154, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(32047)
(7.6.3)

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

**வங்கியில் பணவைப்பு**

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

**Saving Book - FD - Statement**

For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas

**077 4789289**

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

No.52, Davidson Road, Colombo -04.
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.

**விற்பனைக்கு**

15 Sri -xxxx தொடரிலக்கமுடைய Toyota Chorena vegan model கார் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 181 8786 (32048) (7.6.3)

**காணி விற்பனைக்கு** சண்டுக்குளி மகளிர் பாடசாலையில் இருந்து கொழும்புத்துறை வீதிப்பக்கமாக 100m தூரத்தில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 078 647 5419

**சேவை** Student Visa, UK, New Zealand, Canada, Europ, Greece போன்ற நாடுகளுக்கு O/L மாத்திரம் IELTS தேவையில்லை. கட்டணம் வீசா கிடைத்த பிறகே செலுத்த வேண்டும். Sun Visa Education Consultant
385, 2/2, Galle Road Wellawate, Colombo-6
077 363 7864

**உடன் விற்பனைக்கு**

XR-xxxx தொடரிலக்கமுடைய JAPAN-HONDA-LA CUSTOM 250 CC மோட்டார் சைக்கிள் விலை 200,000/=
தொடர்பு:
**077 270 2072**
(32130) (7.6.3)

**தேவை**

கட்டட நிர்மாணத்துறையில் நீங்கள் தேர்ச்சி பெற்றவராயின் கொழும்பு/யாழ்/விசுவமடு/கம்பஹா போன்ற இடங்களில் (கட்டடங்கள்/வாய்க்கால்/வாவி) போன்ற தொழில்களுக்கு மேசன்/கை உதவியாளர்/தச்சர்/பெயின்டர்/செடலின்பாஸ் தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம் 25000/=, 45000/= உணவு, தங்குமிடம் உண்டு.
தொடர்பு: 077 556 1883 (32533) (7.6.3)

**வீடு விற்பனைக்கு**



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் சகல வசதிகளையும் கொண்ட 6 பரப்புடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 0750 736 183**

**கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

| Job Category | Qty | Salary QR | Salary RS |
|---|---|---|---|
| தோட்ட வேலை செய்பவர் (Gardener) | 100 | 1100 | 40,000/= |

1 QR = Rs. 36.00

நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம் • விமானச்சீட்டு வழங்கப்படும்.
- வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம், கிழமைக்கு 6 நாள்
- ஏனைய நிபந்தனைகளும், விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது

4 நாட்களில் விசா பெற்றுக்கொடுக்கப்படும்

முன் அனுபவம் தேவையில்லை

வீசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் 45000 அறவிடப்படும்.

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY LL.No. : 2427
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06. (மயூரா அம்மன் கோயில் எதிராக)
Tel : 0112552598 | 0773074744 | 0718126094 | 0771798192

max adz

**விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்**

UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway Switzerland, Sweden etc... மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் புதிய நிபந்தனைகளும், விதிமுறைக்கமைய விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.



**Student Visa**

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சென்று படிப்பதற்கும் பகுதி நேர வேலைவாய்ப்பு மற்றும் அந்த நாட்டில் Settle ஆக விரும்புகின்றவர்களுக்காக:

- படிப்பதற்கு வயது எல்லை இல்லை. சரியான காரணமே போதுமானது.
- Minimum Qualification O/L மற்றும் ஏதாவது பாடநெறி படித்திருந்தால் நன்று இடைவெளி இருந்தால் கவலைப்பட தேவையில்லை.
- IELTS தகைமை தேவையில்லை, இருந்தால் மிக நன்று
- உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப மிகக் குறைவான செலவில் TOP University, A Grade College செல்வதற்கான வாயப்பு.
- உங்களுடன் உங்கள் உதவிக்கு யாராவது உறவினர்களை அழைத்து செல்ல விரும்புகின்றீர்களாயின் அதற்கான வசதிகள் செய்து தரப்படும்
- உங்கள் கல்வி செலவுக்கு போதுமான பணத்தை அரசவங்கியினூடாக கடனாகப் பெற்றுத்தரப்படும்.
- வங்கியில் பணவைப்பு, Airport Pickup, Accommodation, மற்றும் உங்கள் ஏனைய குறைபாடுகள், தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்.



**Visit Visa**

சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

தாமதமாகிய விசாக்கள் - திரும்பிய விசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?

*Refused? Rejected?*
- ✔ உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்பிக்கத் தவறி விட்டீர்களா?
- ✔ உங்கள் வீசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- ✔ உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- ✔ உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் இது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.



- ✔ விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- ✔ வீசா விண்ணப்படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- ✔ Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- ✔ Ticket, Hotel Booking, Travels Insurance செய்து தரப்படும்.
- ✔ வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- ✔ வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.



**வங்கியில் பணவைப்பு**

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின் ) பணவைப்பு

Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals / New Applications etc...

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

FLEX Graphic

ஐரோப்பிய 25 நாடுகளில் (SENAGON COUNTRY) 5 வருட அல்லது 2வருடத்திற்கான வதிவிட விசா (RESIDENT VISA) தனியாக அல்லது முழுக்குடும்பத்துடன் குறுகிய காலத்திற்குள் செல்வதற்கு விசா பெற்றுக்கொள்வதற்கான உதவிகள் செய்து தரப்படும்.

SKYWALK Visa Solutions

ஸ்கை[illegible] சொலூஷன் **07777 11905**

No.65, 1[illegible]lle Road, Dehiwala. (Food City - 1st Floor)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் பொருள்களை பெறுவது குற்றமல்ல




பரிசுப் பொருள்களைப் பெறுவது குற்றமல்ல எனப் பாகிஸ்தானிய நடுவரான அசத் ரௌப் குறிப்பிட்டுள்ளார். சூதாட்டக்காரர்களிடமிருந்து பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு போட்டி நிர்ணயத்தில் பங்குவகித்தார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளில் ஒரு பகுதியாக, அத்தொடரில் நடுவராகப் பங்குபற்றிய அசத் ரௌப், பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு ஸ்பொட் பிக்சிங் அல்லது வேறு வகையான முறைகேடு ஒன்றில் ஈடுபட்டிருக்கலாம் என இந்தியச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனைத் தொடர்ந்து அசத் ரௌப் மீது விசாரணைகள் இடம்பெறுவதாகத் தகவல்கள் வெளியாகியதை அடுத்து, இங்கிலாந்தில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளின் நடுவர் பணியிலிருந்து அசத் ரௌப்பை நீக்குவதாக சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

அதன் பின்னர் அசத் ரௌப் உடனடியாக பாகிஸ்தானுக்குத் திரும்பியிருந்தார்.

இந்நிலையில் தற்போது கருத்துத் தெரிவித்துள்ள அசத் ரௌப், தான் பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டது உண்மை எனவும், பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வது குற்றமல்ல எனவும் தெரிவித்துள்ளார். பரிசுப் பொருள்களைக் கொடுப்பதும், பெறுவதும் பண்பாடு எனக் குறிப்பிட்ட அவர், அது ஆசியக் கலாசாரத்தின் ஒரு பகுதி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விலையுயர்ந்த நகைகளையும், உடைகளையும் பெற்றுக் கொண்டதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், அந்தச் செய்திகளை மறுத்துள்ள அசத் ரௌப், தனக்கான பரிசுப் பொருள்களில் எந்தவிதமான விலையுயர்ந்த நகைகளும் காணப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். மாறாக, தனக்கான பரிசுப் பொருள்களாக பல்வேறு புனிதமான இடங்களிலிருந்து பெறப்பட்ட விரிப்புகளே வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (கு)



“ டுவைன் ஸ்மித் 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல்63 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 20 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக சொஹைல் தன்விர், இம்ரான் தாஹிர், டுவைன் பிறீற்றோறியஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக்கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக டுவைன் ஸ்மித் தெரிவானார்.

# லயன்ஸை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் 11ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. ஹைவெல்ட் லயன்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஜெய்ப்பூர் சவாய் மன்சிங் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைவெல்ட் லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத்திலிருந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய லயன்ஸ் அணி, 13.2 ஓவர்களின் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் 6ஆவது விக்கெட்டுக்காகப் பிரிக்கப்படாத 59 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

துடுப்பாட்டத்தில் லயன்ஸ் அணி சார்பாக அல்விரோ பீற்றர்சன் 27 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், டுவைன் பிறீற்றோறியஸ் 21 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக பிரக்ஜான் ஓஜா 2 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஜோன்சன், றிஷி தவான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

141 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 18.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

15 ஓட்டங்களுக்கே முதலாவது விக்கெட்டை இழந்த மும்பை இந்தியன்ஸ் அணி, 2ஆவது விக்கெட்டை 47 ஓட்டங்களுக்கு இழந்திருந்தது. எனினும், தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, மும்பை இந்தியன்ஸ் அணிக்கு வெற்றி கிடைத்தது. துடுப்பாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக டுவைன் ஸ்மித் 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 20 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக சொஹைல் தன்விர், இம்ரான் தாஹிர், டுவைன் பிறீற்றோறியஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக டுவைன் ஸ்மித் தெரிவானார். (கு)

# அதிரடி காட்டினார் வீனஸ் வில்லியம்ஸ்



ஜப்பானில் நடந்து வரும் பான் பசிபிக் ஓபன் ரென்னிஸ் போட்டியில் அதிவேகமாக சேவீஸ் போட்டு அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளார் வீனஸ் வில்லியம்ஸ்.

ஜப்பானின் டோக்கியோவில் பான் பசிபிக் ஓபன் ரென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் கலந்து கொண்டு விளையாடி வரும் வீனஸ் வில்லியம்ஸ், காலிறுதிச் சுற்றில் கனடாவின் ஈசின் போச்சார்டைச் சந்தித்தார்.

இந்த போட்டியிலேயே அதிவேகமான சேவீசை போட்டுள்ளார் வீனஸ்.இந்த சேவீஸ் மணிக்கு 209 கிலோமீற்றர் என்ற வேகத்தில் அதிரடியாக இருந்தது.இந்த ரொக்கெட் சேவீஸ், உலகின் அதி வேக சேவீஸாகவும் கருதப்பட்டது.

ஆனால் அதை மகளிர் ரென்னிஸ் சங்க நிர்வாகிகள் சாதனையாக அங்கீகரிக்க மறுத்து விட்டனர்.இது குறித்து அவர்கள் கூறுகையில், டோக்கியோ தொடரில் சேவீஸ்களின் வேகத்தைக் கணக்கிடும் உரிய கருவி வைக்கப்படவில்லை. அங்கிருந்தவை நம்பகத்தன்மை இல்லாதவை. எனவே இந்த சேவீஸின் கணக்கை வைத்து அதி வேக சேவீஸ் என்ற முடிவுக்கு வருவது கடினம்.எனவே வீனஸின் சேவீஸ் வேகம் சாதனையாகக் கருதப்பட முடியாது என்று கூறி விட்டனர்.

இருப்பினும் வீனஸ் ஏற்கனவே சேவீஸில் உலக சாதனை படைத்தவர் தான்.

கடந்த 2007 ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டியில் அவர் மணிக்கு 207.6 கிலோமீற்றர் என்ற வேகத்தில் சேவீஸ் போட்டுச் சாதனை படைத்தவர்.

அதேபோல 2008ஆம் ஆண்டிலும் இதே வேகத்தில் சேவீஸ் போட்டுள்ளார்.

இது குறித்து நான் வேகமாக சேவீஸ் போடுவதாக உணர்ந்தேன். ஆனால் இந்த வேகத்தில் அது இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை, என்னாலேயே நம்ப முடியவில்லை. நான் மீண்டும் நல்ல நிலையில் இருப்பதாகவும் உணர்கிறேன்.நல்ல ஆரோக்கியத்துடனும், உடல் பலத்துடனும் இருக்கும் வரை ஆட [illegible] என்று வீனஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது 63ஆவது தரவரிசையில் இருக்கும் வீனஸ், 7 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# பாகிஸ்தான் தலைவராக மிஸ்பா உல் ஹக் நீடிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு மிஸ்பா உல் ஹக் தொடர்ந்து அணித் தலைவராக நீடிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி அடுத்து தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டிகளில் விளையாட உள்ளது.

இந்தத் தொடருக்கும் அணித்தலைவராக மிஸ்பா உல் ஹக் நீடிக்கப்பட்டுள்ளார்.

சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட்டில் பாகிஸ்தான் தோற்றதால் மிஸ்பா கடும் விமர்சனத்துக்கு உள்ளானார்.

அணித் தலைவர் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் வலியுறுத்தினர்.

ஆனாலும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவர் மீது நம்பிக்கை வைத்துத் தொடர்ந்து வாய்ப்பு அளித்து வருகிறது.

இவ்விரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் டுபாயில் வருகிற ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி தொடங்குகிறது. (கு)



# நிரூபித்தார் யுவராஜ்




யுவராஜ் அதிரடி ஆட்டத்தால் இந்தியா ரெட் அணியை 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா புளூ அணி சேலஞ்சர்ஸ் கிண்ணப் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

என்கேபி சேலஞ்சர் கிண்ணத் தொடர் இந்தூரில் நடைபெற்று வருகிறது. இதில் யூசுப் பதான் தலைமையிலான இந்தியா ரெட் அணியும், யுவராஜ் தலைமையிலான இந்தியா புளூ அணியும் வெள்ளிக்கிழமை மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ரெட் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இந்தியா புளூ அணியின் பாண்டே 70 ஓட்டங்களும், அபிஷேக் 75 ஓட்டங்களும் எடுத்தனர்.

தொடக்க ஆட்டக்காரர் அக்ஷத் மற்றும் யுவராஜ் தலா 84 ஓட்டங்களை எடுத்து அணியின் ஓட்டங்களை உயர்த்தினர்.

குறிப்பாக, யுவராஜின் ஆட்டத்தில் அனல் பறந்தது. அவர் 53 பந்துகளில் 84 ஓட்டங்களை எடுத்தார். இதில் 5 சிக்ஸர்களும், 6 பவுண்டரிகளும் அடங்கும். 50 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 345 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா புளூ அணி அடுத்து களமிறங்கிய இந்தியா ரெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் அபினவ் முகுந்த் 83 ஓட்டங்களும், சமித் பட்டேல் 68 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால் வெற்றிக்கான இலக்கை அந்த அணியால் அடைய முடியவில்லை. இதனால், அந்த அணி 49.5 ஓவர்களில் 334 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்த வெற்றி மூலம் இந்தியா புளூ அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இந்தியா ரெட் மற்றும் டில்லி அணிகள் இடையே இன்று நடைபெற உள்ள போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக்கான உதவி

யாழ்ப்பாணம், செப். 29

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் " கல்விக்கான உதவித்திட்ட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

அமைப்பின் தலைவர் செ. ஜெகபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க. தேவராசாவும், சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் மற்றும் நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் க. கனகராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் 15 வறிய மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் 1000 ரூபா வழங்கப்படவுள்ளதுடன் 10 மாண வர்களுக்கு காலணிகளும், 40 மாணவர்க ளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (ஐ-400)

## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை சிவராசா



பாடசாலை வீதி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை சிவராசா நேற்று (28.09.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - பர்வதம் தம்பதியரின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் அருள்மோகன், கௌரி, சசித ரன், றஜினி, றேனுகா, வாஜினி, றமேஸ் ஆகி யோரின் தகப்பானரும், கல்யாணி, விஜேந் திரன், அமுதா, ரவிச்சந்திரன், பூபாலசிங்கம், பரந்தாமன், தீபா ஆகியோரின் மாமனும் நிவேதன், நவீனன், அஜந்தன், சயந்தன், சயந்தினி, கஜந்தினி, சாரீரன், அட்ஷயா, சாருகா, துசிக்கா, நிஷாந்தினி, நிதுஷன், நிலாஜினி, அகல்ஜன், அனித்தா, அனந்திக்கா, றுக்ஷா, விதுஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கத்துக்காக நாவற்குழி பினமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**பாடசாலை வீதி,**
**நாவற்குழி.**

(சி-23332)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை மாட்டின்

**(ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர் கூட்டுறவுத் திணைக்களம்)**



மாதகல் புனித அந்தோனியார் வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மருதடி வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மாட்டின் நேற்றுமுன்தினம் (27.09.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப் பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான S.P. முத்தையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும் மேரிஸ்ரெலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சிங்கராசா, மேரி ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற எமில் மனோ கரன் மற்றும் எமா மனோகரி, சந்திரா ஞானேஸ்வரி, ஞானச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜசிந்தா பத்மினி, காலஞ்சென்ற ஜோசப் பீற்றர் போல் மற்றும் ஹென்றி சிமான் பிள்ளை, மதி ஆகி யோரின் அன்பு மாமனும், மைதிலி, செல்வி, செல்வன், டென்சில், பிரின்ஸ்லி, றமேஸ், பிரகாஸ், டயானா, சுருதி, பிறவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் சலீனா, ஜமிலா, மொறீன், ஷானா, ஆரோன், நபியா, எலனா, ஜஸ்ரின், லியோன், கிளாரா, லியோனி, ஜனுஸ்கா, ஜெரோன் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.09.2013) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு காலை 9 மணிக்கு புனித அடைக்கலமாதா ஆலயத்தில் (O.L.R) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்ல டக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனோகரி (மகள்)**
**சந்திரன் (மகன்)**
0776176 856, 0770716326
mgchandran@gmail.com

***இல.4, மருதடி வீதி,***
***யாழ்ப்பாணம்.***

# கண்ணீர் அஞ்சலி



உறங்காத உன் விழிகள்
இன்று உறங்கியது ஏனோ!
ஓயாத உன் சமூக சேவை அலைகள்
இன்று ஓய்ந்தது ஏனோ
கணீர் என ஒலிக்கும் உன் மணிக்குரல்
இன்று மௌனித்தது ஏனோ
ஒன்றுமே புரியாது தவிக்கின்றோம்
எங்கள் நண்பா!

## முருகுப்பிள்ளை நிர்மலன்

**(முள்ளியவளை)**

தோற்றம்
28.02.1964

மறைவு
26.09.2013

**உன் பிரிவால் துயருற்றிருக்கும்**
**ஆருயிர் நண்பர்கள்**
**ஸ்ரீ (பிரான்ஸ்), ஞானன் (லண்டன்), அருண், கமல்**
**(முள்ளியவளை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அதிகாரம் குறித்து கிலேசம் ஏதும் வேண்டாம்

## மாகாண சபைக்கு அரச காணியை பயன்படுத்த சட்டத்தில் இடம் உண்டு



இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து தொடர்ந்து சர்ச்சை நிலவிவருகின்றது. இவ்வாறான தொரு நிலையில் முதன்முறையாக நடத்தப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பெரு வெற்றியை ஈட்டியுள்ளது.
இந்த வெற்றி பெறப்பட்ட 5 தினங்களில் உயர் நீதிமன்றம் காணி அதிகாரம் மத்திய அரசுக்குரியது என்ற ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இது மக்கள் இடையே கிலேசத்தை-அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.
குறித்த தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது என்ன? மாகாண சபைச் சட்டம் என்ன கூறுகிறது? என்பது தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சி.வி.விவேகானந்தன் விரிவான விளக்கத்தை வழங்கியுள்ளார். அவருடனான நேர் காணல் இங்கே தரப்படுகிறது.

**அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றையடுத்து மாகாணசபைக்கு காணி அதிகாரங்கள் இல்லாமல் போய் விடும் என்ற அச்சம் எழுந்துள்ளது. இந்த அச்சம் நியாயமானதா ?**

உயர் நீதிமன்றத் தீர்ப்பில் மாகாண சபையின் காணி அதிகாரங்கள் தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மத்திய அரசுக்கு அரச காணி இருக்கின்றதா இல்லையா என்பது தொடர்பில்தான் தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிமன்ற நடைமுறை என்பது கேட்பது தொடர்பில் நீதி வழங்குவது மட்டும்தான். தொடர்புடைய ஏனைய விடயங்களுக்கு அல்ல.

உதாரணத்திற்கு, உறுதி எழுதப்பட்ட முறை தவறு. அந்த உறுதியை வெற்றும் வெறிதுமாக்க வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தால். நீதிமன்றம் உறுதியை வெற்று வெறிதாக்கி தீர்ப்பளிக்கும் அல்லது தள்ளுபடி செய்யுமே தவிர, அந்தக் காணியில் யார் இருந்தார்கள், அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமா என்பதைப் பற்றிக் குறிப்பிடாது.

இந்த வழக்கில் மாகாணசபைச் சட்டத்தின் பிரகாரம் காணி கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை நீதிமன்றம் அலசவே இல்லை.

வடமாகாண சபைத் தேர்தல் நடந்த உடனே - கூட்டமைப்பு வெற்றி பெற்ற நிலையில் இவ்வாறு தீர்ப்பு வந்திருப்பதால் இந்த விடயம் பலருக்கும் கிலேசத்தை ஏற்படுத்தி விட்டது. மாகாண சபையின் காணி அதிகாரங்கள் பறிபோய்விட்டதோ என்று அச்சப்படுகின்றனர்.

தீர்ப்புக் குறித்துக் கிலேசப்படவேண்டியதில்லை. இதைப் போல பல தீர்ப்புக்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே பயப்படுவதற்கு எதுவுமில்லை.

இலங்கை அரசமைப்புச் சட்டம் 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. 1987ஆம் ஆண்டுதான் மாகாண சபைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதி எழுதப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் மாகாணசபைச் சட்டமும், அரசமைப்பின் 13ஆவது திருத்தமும்.

இதன் பிரகாரமே மாகாணத்துக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதன் மூலமே மாகாணத்துக்கு காணி அதிகாரமும் வழங்கப்பட்டது.

அதற்கு முன்னரே அரசமைப்பின் 33 ஆவது உறுப்புரை 'டி' பிரகாரம் முழு அரச காணிகளும் அரசுக்குத்தான் சொந்தம். அரசுக்கு சொந்தமான காணியை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குத்தான் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் பின்னர் கொண்டு வரப்பட்ட மாகாண சபைச் சட்டத்தின்படி அரச காணியை மாகாண சபை அனுபவிக்கலாம், கட்டிக்காக்கலாம், நிர்வாகம் செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. மாகாண சபைக்கு அரச காணிகள் சொந்தமாக இருக்க முடியாது ஆனால் அதை அனுபவிக்கலாம்.

அரசமைப்பின் 33ஆவது உறுப்புரைக்கும் 13ஆவது திருத்தத்துக்கும் இடையில் முரண்பாடு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இதுவரைக்கும் யாரும் அதனைப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவில்லை. உயர் நீதிமன்றமும் இந்த விடயத்தை தனது தீர்ப்பின்போது ஆராயவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி மாகாண சபை காணிகளின் அதிகாரத்தை அனுபவிப்பதற்கு அதற்கு அரச காணிகள் வழங்கப்பட வேண்டும். காணிகளை யார் மாகாண சபைக்குக் கொடுக்க முடியும்? ஜனாதிபதி மட்டும்தான்.

உதாரணமாக மாகாண சபை ஒரு பிரஜைக்கோ அல்லது திணைக்களத்துக்கோ காணி தேவையென்றால் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் முன்வைக்கலாம். அவ்வாறு மாகாண சபை கேட்டால் அதன் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதி அந்தக் காணியை வழங்கியாக வேண்டும் என்று 13 ஆவது திருத்தம் மிகத் தெளிவாகத் - திட்டவட்டமாக - கூறுகிறது.

13ஆவது திருத்தத்திலே மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள், மத்திய - மாகாண அரசுகளுக்குரிய அதிகாரங்கள், மாகாணத்துக்குரிய அதிகாரங்கள் என்று மூன்று வகையான அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் மாகாண சபைக்குரிய அதிகாரங்களின் கீழ்தான் அது அரச காணிகளை நிர்வகிக்கலாம், அனுபவிக்கலாம், கட்டுப்படுத்தலாம் என கூறப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மாகாண அரசுக்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் இதுவரையில் இவ்வாறான பிரச்சினைகள் எழவில்லை. ஏனெனில் மத்திய அரசை ஆட்சி செய்பவர்களே, மாகாண அரசுகளையும் ஆட்சி செய்தார்கள்; செய்கிறார்கள். இப்போதுதான் இது தொடர்பில் பிரச்சினைகள் எழக்கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

வடமாகாண சபை தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட சபையாக இருக்கின்றது. தமிழர்களுக்குத் தேவையான அதிகாரங்களை, அவர்கள் கேட்கின்ற அதிகாரங்களை மாகாண சபை ஊடாக பெற்றுக் கொள்ளுங்கள் என்று சர்வதேசம் சொல்கின்றது. இந்தியாகூட வலியுறுத்துகின்றது. எனவேதான் காணி அதிகாரங்கள் தொடர்பில் மத்திய அரசுக்கும் வடக்கு மாகாண அரசுக்கும் இடையில் முரண்பாடுகள் எழக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அடிப்படையில்தான் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பு பெரும் கவனத்தைப் பெற்றது.

இந்தத் தீர்ப்பால் பாதகம் ஏதும் ஏற்படப் போவதில்லை. இதற்கு மற்றொரு உதாரணத்தையும் நாம் பார்க்கலாம். தற்போது வடக்கு மாகாண சபை இயங்கக் கட்டடமே இல்லை. எனவே சபைக்குக் கட்டம் ஒன்று அமைப்பதற்காக 5 ஏக்கர் அரச காணியைத் தருமாறு வடமாகாண சபை ஜனாதிபதியிடம் கேட்கலாம். அதற்கு அவர் மறுத்தால் அதன் பின்னரே மாகாண சபையின் காணி அதிகாரங்கள் குறித்த பிரச்சினை நீதிமன்றத்தை அடையும். அதன் பின்னரே நீதிமன்றம் குறித்த காணி விடயம் தொடர்பில் பரந்துபட்ட வியாக்கியானத்தைக் கொடுக்கும். அந்தப் பிரச்சினை வரும்போது அதனைப் பார்த்துக் கொள்ளலாம். இப்போது பயப்படத் தேவையில்லை.

***வடக்கு மாகாண சபை வந்ததும் காணி அதிகாரங்களைக் கேட்பார்கள் என்று நினைக்கிறீர்களா?***

தமக்குக் காணி அதிகாரத் தருமாறு தமிழ் மக்கள், இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்தே கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதற்குப் பல சாட்சியங்கள் உள்ளன.

1957 பண்டா-செல்வா ஒப்பந்தத்திலும் காணி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேச சபைகளுக்கு அதன் எல்லைக்குள் இருக்கும் முழுக் காணியும் சொந்தம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் பின்னர் கிழித்தெறியப்பட்டது. 1965 டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும் அது சொல்லப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் எப்படிக் காணிகளைப் பங்கிடுவது என்பது தொடர்பில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் காணி இல்லாதவர்களுக்கு முன்னுரிமை. அதன் பின்னர் அங்குள்ள தமிழ் மக்களுக்கு கொடுக்க வேண்டும். அதன் பின்னர் வெளிமாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் பின்னரே வேறு எவருக்காவது கொடுக்கலாம் என்று டட்லி - செல்வா ஒப்பந்தம் கூறுகின்றது. மகாவலி, கல்லோயாக் குடியேற்றத் திட்டங்களில் தமிழ் மக்களுக்கு எவ்வளவு காணி கொடுக்க வேண்டும் என்பதுகூட அப்போது வரைய[illegible]. 1985இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக இலங்கை அரசு, தான் மேற்கொள்ள உள்ள அரசமைப்புத் திருத்தம் தொடர்பிலான வரைவு ஒன்றை இந்தியாவுக்குக் கொடுத்தனர். அதில் காணி, பொலிஸ் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. காணி தொடர்பான அதிகாரங்கள் குறித்து அராய்ந்து நடவடிக்கையாக தேசிய காணி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்று அந்த வரைவில் இலங்கை அரசு உறுதியளித்திருந்தது. எனவே காணி அதிகாரத்தை தரமாட்டோம் என்றோ, அது மாகாண சபைக்குரியதல்ல என்றோ மத்திய அரசு சொல்ல முடியாது. அந்த அதிகாரங்களை மாவட்ட சபைகளுக்கு வழங் குவதற்கு அவர்கள் ஏற்கனவே உறு தியளித்திருந்தார்கள்.

அதன் பின்னர் 1986ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி இலங்கை அரசு இந்திய அரசுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில். தேசிய காணி ஆணைக்குழு நியமித்து மத்திய அரசுக்கு எந்தெந்தக் காணி, மாகாண அரசுக்கு எந்தெந்தக் காணி என்று பரிந்துரைக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நாம் செயற்படுவோம் என்றும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு 12 ஆயிரம் காணித்துண்டுகள் ஒவ்வொன்றும் 5 ஏக்கர் பிரகாரம் வழங்கப்படும் என்றும் எழுத்து மூலம் இந்தியாவுக்கு இலங்கை தெரிவித்திருந்தது. ஆனால் அவையெல்லாம் நடக்கவில்லை என்பது வேறுவிடயம்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புடன் எல்லாம் முடிந்து விட்டது என்று நாங்கள் எண்ணக்கூடாது. அப்படி ஒரு நிலைமை வந்தால்கூட அதனை எதிர்த்துப் போராடவேண்டும். அதற்காகத் துணிந்து களமிறங்கிக் குரல் கொடுக்க வேண்டும்.

**மாகாணசபை காணி அதிகாரத்தைக் கேட்டு அதனை அரசு வழங்க மறுத்தால் வடக்கு மாகாண சபை அரசுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்கலாம் என நினைக்கிறீர்கள்?**

நீதிமன்றம் சென்று சட்டரீதியாக அணுகுவதற்கு முதலில், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். 13ஆவது திருத்தத்திற்கு உத்தரவாதமளித்த இந்தியா கட்டாயம் இதனைச் செய்வித்தே ஆகவேண்டும்.

அதேவேளை, 38 ஆசனங்களில் 30 ஆசனங்களைக் கொண்ட மாகாண சபை அரசமைப்பின் அடிப்படையில் தனக்கு காணி அதிகாரம் வேண்டும் என்று கேட்கும் போது யாரும் மறுக்க முடியாது. மறுத்தால் பிரச்சினை வரும்.

சர்வதேச நாடுகள் எல்லாம் என்ன சொல்கின்றன? வடக்கு மாகாண சபையுடன் ஒத்துழையுங்கள் என்றே கூறுகின்றன. எனவே எப்படியாயினும் இலங்கை அரசு இந்த வல்லரசு நாடுகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தேயாகும். அப்படியே இலங்கை அரசு காணி அதிகாரங்களைத் தர மறுத்தால் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். ஒரு வழி அடைபட்டால் உடனே சோர்ந்து அமர்ந்துவிடக் கூடாது. முயற்சித்தால் ஓராயிரம் வழிகளைக் கண்டறிய முயற்சிக்கலாம்.

மாகாண சபை கேட்ட காணியை அரசு வழங்கவில்லை என்றால் ஒரு பிரஜை வழக்குத் தொடுக்கலாம். அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கலாம். அல்லாவிட்டால் மேன் முறையீட்டு நீதிமன்றம். மேல் நீதிமன்றம் என்பவற்றில் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியும். உயர் நீதிமன்றம் அந்த வழக்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குப் பாரப்படுத்தலாம். மாகாண சபையின் பரிந்துரையை மத்திய அரசு செயற்படுத்த மறுத்தால் பாதிக்கப்பட்டவர்கள் - 500 பேர் வரையிலானோர்கூட - மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சென்றால் அது சர்வதேசப் பிரச்சினையாகி விடும். அப்போது இலங்கை அரசு பதில் சொல்லியே ஆகவேண்டி ஏற்படும். அதனூடாக நிச்சயம் தீர்வு கிடைக்கும்.

மக்கள் எழுச்சியாகச் செயற்பட வேண்டும். மக்கள் நியாயமான நீதியான போராடங்கள் ஊடாகத் தங்களுடைய தங்களது இனத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எமது உரிமைகள் மறுக்கப்படும்போது நாம் வாய்மூடி மௌனிகளாக இருக்கக் கூடாது. அதனை எதிர்த்துப் போராட வேண்டும்.

இதனை அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள் ஒழுங்கமைக்க வேண்டும். இதன் போதுதான் சரியான தீர்வு எட்டப்படும்.

**மாகாணசபை சட்டத்தின் கீழ் மாகாணத்தில் உள்ள காணிகளை நாங்கள் நிர்வாகம் செய்யப் போகிறோம் என்று சட்டம் இயற்றலாமா ?**

மாகாண சபைக்கு பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த அதிகாரத்துக்கு உட்பட்டு சட்டம் இயற்றலாம். ஒவ்வொரு சட்டமும் கொண்டு வரப்படும் பொழுது அது எதற்காக கொண்டு வரப்படுகின்றது என்று வியாக்கியானம் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக இந்தியாவில், அடிப்படை உரிமைகள் என்று கூறப்படுபவற்றில் உயிர் வாழ்வதற்கான உரிமை இருக்கின்றது. அத்துடன்

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தோனியார் கல்லூரி இறுதிப் போட்டிக்கு தகுதி

வலி. வடக்கு. செப். 29
நவ மகாஜனன் சிற்பி முன்னாள் அதிபர் அமரர் தெ.து. ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் மோதிக் கொண்டன.
இரு அணிகளும் பலம்மிக்க அணிகளாகக் காணப்பட்டமையால் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது.
போட்டி தொடங்கிய சில நிமிட நேரத்தில் புனித அந்தோனியார் கல்லூரி முன்னணி வீரன் கி.அன்பரசன் ஒரு கோலைப் போட்டார். இந்நிலையில் முதல் பாதி ஆட்டத்தில் அந்தோனியார் கல்லூரி முன்னிலை வகித்தது.
இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது முழுப் பலத்தையும், யுக்திகளையும் பயன்படுத்தி மோதிக் கொண்டன. இதனால் போட்டி மிக விறுவிறுப்பாக அமைந்தது.
இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடாத நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.
ஆட்டம் நிறைவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வென்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

## வென்றது யாழ்.மத்தி

வலி.வடக்கு. செப்.29
இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.
இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்டமையால் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது.
போட்டி தொடங்கிய சில நிமிட நேரத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்னணி வீரன் எஸ்.தனுஜன் ஒரு கோலைப் போட மத்திய கல்லூரி முன்நிலையில் காணப்பட்டது. இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவடைந்தது.
இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தி மோதிக் கொண்டன. ஆரம்பம் முதலே மகாஜனக் கல்லூரிக்கு கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் அதனை அது உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை.
இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடாத நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1:0 என்ற கோல்கணக்கில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை வென்று தேசிய மட்டத்திலான போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

## காலிறுதிப் போட்டிக்கு உடுவில் மகளிர் கல்லூரி

வலி. வடக்கு. செப். 29
இலங்கை காப்றன் கூடைப் பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி காலிறுதி ஆட்டம் வரை முன்னேறியுள்ளது.



கொழும்பு பொலிஸ் பாக் மைதானத்தில் இடம்பெறும் இந்தப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி தான் முதல் சுற்றில் விளையாடிய நான்கு போட்டிகளில் மூன்றில் வெற்றி பெற்றதுடன் ஒன்றில் தோல்வி அடைந்து உள்ளது.
முதலில் உடுவில் மகளிர் கல்லூரி கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மகளிர் வித்தியாலயத்துடன் மோதி 8:3 கூடைகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.
இரண்டர்வதாக உடுவில் மகளிர் கல்லூரி கொழும்பு அனுலா பெண்கள் வித்தியாலயத்துடன் மோதி 7:1 கூடைகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.
மூன்றாவதாக உடுவில் மகளிர் கல்லூரி கண்டி ஆதி மரியன்னை சர்வதேச பாடசாலையுடன் மோதிக்கொண்ட போதிலும் இதில் 3:8 கூடைகள் என்ற அடிப்படையில் தோல்வியைத் தழுவிக்கொண்டது.
நான்காவதாக இடம்பெற்ற போட்டியில் கொழும்பு லைசியம் சர்வதேசப் பாடசாலையுடன் மோதிக்கொண்டதில் 10:3 கூடைகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)



தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திலிருந்து தேசிய மட்டத் தடகளப் போட்டிக்கு இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேசிய மட்டப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் கல்லூரி அதிபர் பொறுப்பாசிரியர் ஆகியோருடன் காணப்படுகின்றனர். (த-400)

## ஆட்டம் சமநிலையில்

பருத்தித்துறை. செப்.29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவ சக்தி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் உதைபந் தாட்டத்தில் நேற்று நடைபெற்ற போட்டி சமநிலையில் முடிவடைந்தது.
இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனீஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கியதிலிருந்து இரு அணிகளும் மிகவும் பலம் பொருந்தியதாக தமது விளையாட்டை வெளிப்படுத்தினர்.
இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் இடைவேளைக்கு முன்னர் சமநிலையில் இருந்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோதும் இரு அணிகளும் பலமாக மோதின. இருந்தபோதும் சென்.மேரிஸ் அணி வீரர் சுதர்சன் 33ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டார். இவர்களின் மகிழ்ச்சியை சென்.அன்ரனீஸ் வீரர்கள் நீடிக்க விடவில்லை. இதனால் 34ஆவது நிமிடத்திலேயே அந்த அணி வீரர் மேரிதாசன் ஒரு கோலைப் போட்டு கோலின் எண்ணிக்கையை சமநிலைப் படுத்தினார்.
இதனால் இரு அணிகளும் பலமாகவும் வேகமாகவும் மோதியபோதும் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் இறுதியில் 1:1 என்ற கோல்கணக்கில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.
சுழற்சி முறைப் போட்டியாகையால் இரு அணிகளுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப் பட்டன. (த-422)



# மகாஜனவின் உதைபந்தாட்டம்; வெற்றி பெற்ற பாடசாலைகள்

வலி. வடக்கு. செப். 29
நவ மகாஜனன் சிற்பி முன்னாள் அதிபர் அமரர் தெ.து. ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கு இடையே தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:
கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கும் புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலயத்துக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் தேவரையாளி இந்துக் கல்லூரி புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயத்தை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் ஹென்றியரசர் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வென்றது.
ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சமநிலையில் காணப்பட்டன. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப் பட்ட சமநிலை தவிர்ப்பு உதை களைத் தொடர்ந்து புனித அந் தோனியார் கல்லூரி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

## திருமலை கோணேஸ்வராவில் ஹொக்கி விளையாட்டு அறிமுகம்

யாழ் மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக திருகோணமலை கேணேஸ்வரா இந்துக் கல்லூரியில் ஹொக்கி விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஹொக்கிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளில் ஹொக்கி விளையாட்டு ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உதவிகள் வழங்கப் படுகின்றன. இந்த நிலையில் திருகோணாமலை மாவட்டத்திலும் முதல் தடவையாக யாழ். மாவட்ட ஹொக்கி சங்கம் மேற் கொண்ட முயற்சிகள் காரணமாக திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் அதிபரின் ஊக்கத்துடன் ஹொக்கி ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அகில இலங்கைப் பாட சாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஹொக்கிப் போட்டி யில் முதல் தடவையாகத் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# சென்.சேவியர் 'ஏ' அணி அபார வெற்றி

பருத்தித்துறை. செப்.29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவ சக்தி விளையாட்டுக் கழகம் தமது 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் சக்கோட்டை சென்.சேவியர் 'ஏ' அணி அபார வெற்றியீட்டியுள்ளது.
இதில் சென்.சேவியர் 'ஏ' அணியை எதிர்த்து பொற்பதி 'ஏ' அணி மோதியது. சென். சேவியர் அணி வீரர்களான நிசாந்தன் 11ஆவது நிமிடத்திலும், நெல்சன் 22ஆவது நிமிடத்திலும் கோல்களைப் போட இடை வேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது 31ஆவது நிமிடத்தில் மீண்டும் சென்.சேவியர் அணி வீரர் கனியூட் அணிக்கான கோலைப் போட்டு கோலின் எண்ணிக்கையை உயர்த்தினார். அதற்குப் போட்டியாக 33ஆவது நிமிடத்தில் பொற்பதி 'ஏ' அணி வீரர் சிறீதரன் ஒரு கோலைப் போட ஆட்டம் விறுவிறுப் படையும் என எதிர்பார்த்த இரசிகர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.
இ[illegible] சென்.சேவியர் அணி வீரர்கள். 37ஆவது, 40 ஆவது நிமிடங்களில் கனியூட் இரு கோல் களையும், 55ஆவது நிமிடத்தில் நெல்சனும், 56ஆவது நிமிடத்தில் யோகரட்ணமும், 57 ஆவது நிமிடத்தில் நெல்சனும் என மாறி மாறி கோல்களைப் போட்டு தமது அணிக்கான கோலின் எண்ணிக்கையை உயர்த்த இறுதியில் 8:1 என்ற கோல்கணக்கில் சக்கோட்டை சென். சேவியர் 'ஏ' அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (த-422)



## இன்றைய ஆட்டங்கள்

மாங்குளம், செப்.29
பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்ட தொடர் வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.
இன்று மாலை 4 மணிக்கு அல்வாய்மனோகரா அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (த-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகள் இலங்கை வர அச்சம்

## செலவுகள் அதிகமாம்

உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் சுற்றுலாப் பயணிகளுக்கான செலவுகள் அதிகம் என புதிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றில் தெரியவந்துள்ளது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு அதிகமான செலவு கொண்ட இடமாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த இடமாக முன்னிலையில் இருந்த இலங்கை அந்த இடத்தில் இருந்து கீழ் மட்டத்திற்கு சென்றுள்ளதுடன் இந்தோனேசியாவின் பாலி தீவு முன்னிலைக்கு வந்துள்ளது என டெய்லி மெயில் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா, வியட்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ள நிலையில் இலங்கை 5 ஆம் இடத்திற்கு சரிந்துள்ளது.

இந்த நாடுகளின் விடுமுறை விடுதிகளுக்கான செலவுகள் குறைவாக இருக்கின்ற போதும், இலங்கையில் அதற்கு 45 வீதம் அதிகமாகும். விடுமுறை விடுதிகளுக்கான கட்டணம் குறைவாக உள்ள இடங்களில் இந்தோனேசியாவின் பாலி தீவு முதலிடத்தில் உள்ளது.

**இந்த நாடுகளின் விடுமுறை விடுதிகளுக்கான செலவுகள் குறைவாக இருக்கின்ற போதும், இலங்கையில் அதற்கு 45 வீதம் அதிகமாகும்**

இரண்டாவது இடத்தில் தென்னாபிரிக்கா உள்ளது.

இலங்கையின் தலைநகர் கொழும்பில் சூரிய கிரீம், கிருமிநாசனி மற்றும் மூன்று வேளை உணவு மற்றும் வைன் போன்றவற்றுக்காக மாத்திரம் 54.45 பவுண்கள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கப் கோபி சராசரி விலை 26 பென்ஸ், பாலி தீவுடன் ஒப்பிடும் போது இலங்கையில் செலவுகள் 24 வீதம் அதிகமாகும் என மதிப்பீடுகளில் தெரியவந்துள்ளது. இந்த பட்டியலில் மூன்றாம், நான்காம் இடங்களில் வியட்நாம், தாய்லாந்து நாடுகள் உள்ளன என்றும் டெய்லி மெயில் தெரிவித்துள்ளது.

(த-சி)

# வாக்குச்சீட்டு தொடர்பில் விசேட குழு விசாரணை

கொழும்பு, செப்.29

புத்தளம் சென். அன்ருஸ் கல்லூரியில் கண்டுபிடிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் குறித்து தேர்தல்கள் திணைக்களம் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஐவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு, நேற்றுமுன்தினம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை புத்தளம் சென். அன்ருஸ் கல்லூரியில் கண்டுபிடிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் இதுவரை 10 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளதாகவும் குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# தனிச் சிங்களச் சட்டம் முற்றிலும் சரியானதே

## சுயரூபத்தைக் காட்டினார் சந்திரிகா

கொழும்பு, செப்.29

"முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவால் 1956ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் இனவாதம் அல்ல. அது சரியானதுதான். சிங்கள மக்களின் உரிமைகளை முன்னிலைப் படுத்தவே அது கொண்டுவரப்பட்டது" என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது இனவாத, மதவாத கொள்கையுடைய கட்சி அல்ல. தமது வாக்கு வங்கியைத் தக்கவைத்துக்கொள்ள கட்சியிலுள்ள சிலர் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் 54ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு அத்தனகலயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உரு வாக்கினார். எனினும் தற்போது அந் தக் கட்சிக்கு வேறு சிலர் உரிமை கோருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது இனவாத, மதவாத கொள்கையுடைய கட்சி அல்ல. நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே எமது கட்சியின் நோக்கமாகும்.

இருப்பினும், நாட்டிலுள்ள பெரும் பான்மை இனமான சிங்களவர்களின் உரிமைகள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். அதற்காக எமது மொழிக்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டே தனிச் சிங்கள மொழிச் சட்டம் 1956ஆம் நாட்டின் பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் கொண்டுவரப்பட்டது.

இது இனவாதம் அல்ல. சரியானது தான். ஆனால் இதனை சரியாகப் புரிந்துகொள்ளாத சிலர் தவறான முறையில் அர்த்தப்படுத் துகின்றனர்" என்று தெரிவித்துள்ளார். (த-சி)

# வடக்குத் தேர்தல் தோல்வியால் சம்பிக்கவுக்கு உளவியல் பாதிப்பு

## இனவாதம் பேசி தமிழர்களை இனியும் ஏமாற்ற முடியாது என்கிறார் சிறிதுங்க

கொழும்பு, செப்.29

"சிங்களக் கடும்போக்கு இனவாதிகள், எப்படியான இனவாதக் கருத்துகளை விதைத்தாலும் தமிழர்களை ஒருபோதும் ஏமாற்றவே முடியாது" என அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்துக்கு பதிலடி கொடுத்தார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய.

"தனிஈழப் போராட்டத்தை தென்னிலங்கை வரை விஸ்தரித்து வெள்ளவத்தை, மட்டக்குளியையும் நந்திக்கடலாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்துக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த சிறிதுங்க ஜயசூரிய, "இவர்கள் தான் மறுபடியும் இனவாதத்தை மக்கள் மனங்களில் விதைத்து அவர்களை அபாயகரமான நிலைக்கு தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்" என தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அபிவிருத்திகளை செய் வதனூடாக வடக்கு மாகாணத்தில் இலகுவாக வெற்றியடைய முடியும் என அரசு மனக்கோட்டை கட்டியது. ஆனால், இறுதியில் அங்குள்ள தமிழர்களோ அவர்களது உரிமைகளை சரிவர அறிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து வெற்றியும் பெற்றுவிட்டார்கள்.

இதனால், படுதோல்வியைத் தழுவிய அரசு கூட்டமைப்பை விமர்சிப்பதும், தமிழர்களைக் குறைகூறுவது மாகவே உள்ளது. இந்தத் தோல்வியால் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் சம்பிக்க ரணவக்க போன்றோரும் பாரிய அளவில் உளவியல் ரீதியாக பாதிப்படைந்துள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இவர்களின் கருத்துகள் தற்போது அரசுக்குள் செல்லுபடியற்று விட்டன. உண்மையில் சொல்லப்போனால் அரசுக்குள் இருக்கின்ற கோமாளிகளாகவே இவர்கள் இன்று காணப்படுகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெள்ளவத்தை, மட்டக்குளியையும் நந்திக்கடலாக உருவாக்க முயல்வதாக சம்பிக்க தெரிவித்துள்ளார். இதுமிகவும் மோசமானதொரு கருத்தாகும். இது போன்றவர்கள் தான் மக்கள் மனங்களில் இனவாதத்தை மறுபடியும் விதைத்து அவர்களை அபாயகரமான நிலைக்குத் தள்ளிக் கொண்டிருக்கி றார்கள். இதை மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் - என்றார்.

# மன்னாரில் கசிப்பு கட்டுப்பாட்டில்

பேசாலை,செப்.29

மன்னார் மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டத்துக்கான மதுவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியான எம். நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்;

மன்னார் மாவட்டம் காட்டுப் பிரதே சங்கள் அதிகமாகவுள்ள நிலையில் இருந்ததால் கடந்த காலங்களில் கசிப்பு உற்பத்தி அமோகமாக இடம்பெற்று வந்தது. இதனால் குற்றச் செயல்களும் அதிகமாகக் காணப்பட்டன. இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மதுவரித் திணைக்களமும், பொலிஸாரும் இணைந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டதுடன் மதரீதியான விழிப்பு ணர்வுச் செயற்பாடுகளும் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக கசிப்பு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர். (க-14)

# காணி அதிகாரம் குறித்து

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் நலன் சார்ந்த விடயத்தில் யார் வேண்டுமானாலும் நீதிமன்றத்தில் வழக்குப் போடலாம் என்றுள்ளது. இந்த இரண்டு சட்டங்களும் இலங்கை அரசமைப்பில் வெளிப்படையான சட்டங்களாக இல்லை.

ஆனால் அரசமைப்பின் 11ஆவது உறுப்புரையின் துன்புறுத்தல் தொடர்பாக வியாக்கியானம் செய்த உயர் நீதிமன்றம் அந்தச் சட்டத்திற்குள் வாழ்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது. அதைப் போன்றே பொதுமக்கள் நலன் சார்ந்த விடயத்தில் யார் வேண்டுமானாலும் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்று வியாக்கியானம் கொடுத்துள்ளது. வெளிப்படையான சட்டங்களாக அரசமைப்பில் இவை கூறப்படாதபோதும், உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் மூலம் இவையும் சட்டங்களாகவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன,

இலங்கை நாட்டில் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்படும் சட்டங்கள், உயர் நீதிமன்ற வியாக்கியானங்களுக்கு ஊடாக வரும் சட்டங்கள் என்ற இரு வகையிலான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

எனவே மாகாண சபைக்குரிய காணி அதிகாரங்கள் குறித்து அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கும் 33ஆவது உறுப்புரையின் டி பிரிவுக்கும் உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கும் நிலைமை ஒன்று ஏற்படும்போதே அது தொடர்பிலான தெளிவான முடிவு ஒன்று எட்டப்படும். இப்போது அந்த விடயங்கள் குறித்து உயர் நீதிமன்றம் அறவே தொடவில்லை.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஐ.தே.கவின்

குழுக் கூட்டத்தில் தமது கடும் எதிர்ப்பை வெளியிடுவார்கள் என்றும் தெரியவருகின்றது.

கட்சித் தலைமைத்துவ மாற்றம் உள்ளிட்ட கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான முக்கிய தீர்மானமொன்றையும் நிறைவேற்ற கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என அறிய முடிகின்றது.

மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் இடம்பெறும் முதலாவது செயற்குழுக் கூட்டம் என்பதால், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இக்கூட்டத்தில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அடுத்து இடம்பெறவுள்ள மேல், தென், ஊவா மாகாணசபைத் தேர்தல்களில் மக்களின் பிரதிபலிப்புகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பது தொடர்பில் ஆராய்ந்து, மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய நடவடிக்கைகள் குறித்தும் விசேடமாக ஆராயப்படவுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

கட்சியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள நிலையில், கட்சித் தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும் என கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி கட்சியால் எடுக்கப்படுகின்ற ஏகமனதான தீர்மானத்துக்கமைய தனக்கு பொறுப்பளிக்கப்படுமாயின், கட்சியை வெற்றிபெற வைக்கத் தான் தயார் என்று கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எனினும், தலைமைத்துவ மாற்றம் தொடர்பிலான கருத்துகள் கட்சிக்குள் மேலோங்கி வருவதால் அடுத்த 7ஆம் திகதி இடம்பெறவிருக்கும் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைமை உள்ளிட்ட பல தரப்பினருக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துவதாகவே அமையும் என கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

### வடக்கு

ணத்தில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இன்று கூடவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமைக்கு முன்னர், போனஸ் ஆசனங்களுக்கு உரியவர்களின் பெயர்களை அனுப்புமாறு தேர்தல்கள் ஆணையாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

### வெடி விபத்தில்

எது. இதில் எஸ்.தர்சன் (வயது-4) என்ற சிறுவனே மணிக்கட்டுடன் கைவிரல்களை இழந்துள்ளான்.

வெடி விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் சிகிச்சைக்காக வவுனியா போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.

விவசாய நிலங்களை சேதப்படுத்தும் விலங்குகளை அழிப்பதற்காக [illegible] கப்பட்ட வெங்காய வெடியைச் சிறுவன் விளையாட்டுப் பொருள் என எண்ணி விளையாடிய போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(த-400-402-421)

### தீவகம்

ளித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டும் கஜதீபன் தலைமையிலான இளைஞர்கள் நேற்று தீவகத்துக்குச் சென்றனர்.

அனலைதீவுக்கு முதலில் சென்ற இவர்கள், அங்குள்ள மக்களைச் சந்தித்துவிட்டு, ஊர்காவற்றுறைக்கு திரும்ப முற்பட்டுள்ளனர்.

இதற்காகக் கண்ணகை அம்மன் இறங்கு துறைக்கு சென்ற போது இடையில் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது.

இனந்தெரியாத 15 பேர் கொண்ட கும்பல் ஒன்று பயணம் செய்த வாகனத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனால் வாகனம் பலத்த சேதம் [illegible] இருப்பி [illegible] மாக யாருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாகவே ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈ.பி.டி.பியின் கோட்டையாக இருந்த தீவுப் பகுதியில் இந்தமுறை தேர்தலின்போது அந்தக் கட்சி படுதோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-17-86)

### அகதிகளின்

யிட்டுள்ளது.

புகலிடம் கோருவதற்காக அண்மைக் காலமாகப் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இருந்து இந்தோனேஷியா ஊடாக ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சென்றிருந்தனர்.

இவர்களில் பலர் அங்கிருந்து திருப்பியனுப்பப்பட்டதுடன் மேலும் சிலர் வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.

ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க வேண்டாம் என அந்த நாடு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(த)

### நவிப்பிள்ளையின்

ஏனென்றால் இது மிகச் சிறிய நாடு. ஒரு சம்பவம் நடந்தால் இலங்கை அரசின் மீது விரல்கள் நீட்டப்படுகின்றன. ஆனால், அதேபோன்ற சம்பவம் மேற்கு நாடுகளில் நடந்தால், அது கவனிக்கப்படுவதில்லை' என்றும் அவர் தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனீவாவில் சமர்ப்பித்த வாய்மூல அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த மஹிந்த, நவிப்பிள்ளை எப்போதும் தங்கள் மீது வருத்தத்துடன் இருப்பவர் என்றும் கூறியுள்ளார்.

நவநீதம்பிள்ளை தனது வாய்மூல அறிக்கையில் எழுப்பியுள்ள பல கவலைகள் குறித்து, இலங்கையில் தன்னுடன் கலந்துரையாடியபோது தெரிவிக்கவில்லை என்றும், எந்தக் கவலை குறித்த விசாரணை நடத்துவதானாலும் அதற்கு ஆதாரங் கள் தேவை என்றும் மஹிந்த மேலும் கூறியுள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Designer தேவை

கொழும்பில் உள்ள பிரபல்யமான Studio ஒன்றுக்கு நன்கு அனுபவமுள்ள Video Editor மற்றும் Digital Album Designer தேவை. திறைமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

(சி12334-23-14) தொடர்பு:0775002035, 0112330002

## CD200 விற்பனைக்கு

XB XXXX என்னும் இலக்க முடைய CD 200 (எலக்ரோனிக் மொடல்) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0777 222121, 077 4080181.

## Personal Class

கணிதம் & விஞ்ஞானம் தரம் 9, 10, G.C.E. O/L மாணவர்களுக்கு

தொடர்பு:0772119034

## Wanted Qualified English Lecturer

Apply on before 6th of october

Directors:

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

No 15, Sirambiyady lane, Off Stanley Road, Jaffna.

Contact: 0777730074
0212224550

(சி12187-23-14)

## விஷேட ஆங்கில வகுப்புக்கள்

29.09.2013 காலை 10.00 மணி

நடைமுறை வாழ்விற்கு அவசியமான ஆங்கில பேச்சுப் பயிற்சிகள் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்

குறுகிய காலத்தில் மிகக்குறைந்த கட்டணத்துடன் உங்கள் ஆங்கில பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

மேலதிக விபரங்களுக்கு :-021 4 922 741

IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## விரும்பிய நாட்டிற்கு விருப்பம் போல் சென்றுவர Visit Visa

★இலங்கையிலேயே நவீனமயப்படுத்தப்பட்ட விசா ஆலோசனை நிறுவனம்.
★இதன் வெற்றி வரலாறுகள் சொல்லிலடங்கா...
★தொழில்முறைசார் விசா ஆலோசனை நிறுவனம்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (32132-23-14)
021 221 9016, 021 568 9090

## S.J. CONTRACTORS JAFFNA

### வாடகைக்கு



10 தொன் றோளர் (10 ton Roller)
ஜே.சி.பி (JCB)
தண்ணீர் பௌசர்-11000ltr (Water Bowser)
போன்றவற்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

T.P: 077 909 2932

54, Martin Road, Jaffna
108, Station Road, Jaffna

## யாழ் நகரில் கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் அடுக்கு மாடிக் கடையும், அதனுடன் சேர்ந்த களஞ்சியமும் (வாகனத் தரிப்பிட வசதி உள்ளது) 2¾ பரப்புக் காணி யில் அமைந்துள்ளது. 0773876615

077 772 5258, 077 559 0069 (C/11705) (7.6.3)

## வேலைக்கு ஆட்கள் தேவை

**வெதுப்பக உற்பத்தியாளர் (பஸ்)**

மாதாந்த சம்பளம்-40000/- கொடுக்கப்படும். தங்குமிட வசதிகளும் உண்டு.

தீன் சுவை வெதுப்பகம் முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. (சி12186-23-14)

தொடர்பு:0217904760

## மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம் நீடிக் காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றது.

★Airport Cleaning
★Toyoto Company
★Pampas Company (வீட்டுப்பணிப்பெண் ஒருவர் ஒருவர்)

(சி12626-23-14) இரண்டே வாரத்தில் பயணம்

தொடர்புகளுக்கு: LANKA VOICE 0750650084

## வீடு வாடகைக்கு உண்டு

உரும்பிராய் சந்தியில் 100 மீற்றர் தூரத்தில் மருதனார்மடம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு:0714933276

## சங்கென் ஸ்தாபனத்தின் வடக்கு கிளைக்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தகுதியானவர்கள் சுயவிவரக் கோவையை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*கணக்கியல் எழுதுவினைஞர் (Accounts Clerk) (ஆண்கள் விரும்பத்தக்கது)

*எலக்றிக்கல் சுப்பவைசர் (Electrical Supervisor)

*எலக்றீசியன்ஸ் (Electricians)

Jayanthi @ Sankenconstruction.lk

(சி/12174) (6.4.3)

## IELTS A1 B1 B2 KU Education

■IELTS Coaching Class — Call: 0777302882
■English for IELTS — நிலைத்திருக்கும்
■KU's i-Spoken — i-Spoken கல்வித்தரம்.
■ESOL Courses — Authorized IELTS Centre

Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

K.U Education,No 75,Temple Road,Jaffna. 021-3208342

## German Language Academy

ஜேர்மன் டொச் மொழிகள் இலகுவான வழியில் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தும் பரீட்சைக்கு ஏற்றவாறு Mr.S. கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது. தொலைபேசியில் தொடர்பு கொண்டு முன் பதிவுகளை மேற்கொண்ட பின் நேரில் வரவும். (7.6)

ஆசிரியர் : கோணேஸ்வரன்

தொடர்பு : 077 970 7322

## தேவை

யாழ்ப்பாணம் அரியாலையில் தண்ணீர் வசதியுடன் கூடிய நிலப்பரப்பு ஒன்று தேவை.

தொடர்பு: 077 381 8799 (32526) (7.6.3)

## Study in UK

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

GCE (O/L) தகமை போதுமானது

October/ December நிகான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

**COLLEGES**
- Yearly Payment £3500
- IELTS overall: 4.5 or B1

**UNIVERSITIES**
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5

011 7 555511 /14/18
021 7538395 / 021 2227230

**நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்திருப்பதால்
- 4 வருட visa உத்தரவாதம்
- இலவச IELTS மற்றும் City & Guilds வகுப்புக்கள்
- முதல்தர வரிசையில் உள்ள 50 இற்கு மேற்பட்ட கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுக்கான ஆலோசனை
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் visa தேவைகள் பூர்த்தி செய்யபடுகின்றன.
- உரிய ஆவணங்கள் இருப்பின் இரு மாதத்தில் பயணம்



UK கல்விவாய்ப்பு தொடர்பாக Exponet மிகத் தெளிவான விளக்கங்களைத் தருவதுடன் நண்பனைப்போல் செயற்பட்டு VISA கிடைக்கும் வரை என்னுடன் உறுதுணையாக இருந்து என் வாழ்க்கைப் பாதையை மாற்றித்தந்துள்ளது.
GNANARASA AMALAJELAN (JAFFNA)



Exponet ஐ நான் யாருக்கும் பரிந்துரை செய்வேன். ஏனெனில் ஏனிதாக Exponet மூலம் மிக குறுகிய காலத்தில் வெற்றிகரமாக மாணவர் விசா பெற்றுக்கொள்ள முடியும். Exponet நேர்த்தியான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.
THILLAINATHAN SUTHAKAN (JAFFNA)

EXPONET
379 - 1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

### After A/L What Next?

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 30.09.2013 | 05.10.2013 | 07.10.2013 | 12.10.2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hotlines:0777585913,0777222422,0714299935,0777730074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.





என்னாச்சு இவர்களுக்கு?

பக்கம் 24

யார் முதல் பதவி ஏற்பார்கள்?

பக்கம் 6


# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பிதழ் 29.09.2013




ஸ்ரோர்களை நிரப்புமா

பக்கம் 9

யாழ். ஸ்ரோபரி



கோபப்பட வைத்த சிரிப்புப் படம்

பக்கம் 22



# ஏன்?

## பெண்கள் கைவிடப்பட்டனர்

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்தவர்களில் 50 விழுக்காட்டினர் வரையில் பெண்களாக இருந்தபோதும் சபையில் அவர்களது பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை. கட்சிகளின் சார்பில் குறைந்தளவு வேட்பாளர்களே களத்தில் நிறுத்தப்பட்டபோதும் அவர்களுக்கும் மக்கள் வாக்களிக்காமல் விட்டிருந்தனர். இது பெண்களே பெண்களைப் புறக்கணிக்கிறார்களா என்று கேள்வியை எழுப்பியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நிராகரிப்பு

## பெண்ணே பெண்ணுக்கு எதிரியா?

தட்சா. ஜோ

நடந்து முடிந்த வட மாகாண சபைத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட 719, 477 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தார்கள். இவர்களில் 485, 811 வாக்காளர்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தார்கள். இவர்களில் குறைந்தது 50 வீதமானவர்கள் பெண்கள் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையில் 53 சதவீதமானவர்கள் பெண்களாக இருக்கின்ற நிலையில் வாக்களித்தவர்களில் குறைந்தபட்சம் 50 வீதத்தினர் பெண்களாகவே இருந்திருப்பார்கள். ஆனால் இந்தத் தேர்தலில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டதா? இல்லை என்ற பதிலை எந்தவித முன்யோசனையும் இன்றித் தெரிவித்துவிடலாம்.

**பெண் பிரதிநிதித்துவம் குறைவு**

தேர்தலில் போட்டியிட்ட முக்கிய கட்சிகளின் சார்பில் பெண் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டமை மிக மிகக் குறைவு என்பது கண்கூடு. இது கொடுமை என்றால், நிறுத்தப்பட்ட அந்தப் பெண்களைக்கூட தமது பிரதிநிதிகளாக மக்கள் தெரிவுசெய்யவில்லை என்பது அதைவிடக் கொடுமை. வாக்களித்த பெண்களில் பாதிப்பேர் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களுக்கு வாக்களித்திருந்தால்கூட, குறைந்தது 4 பெண் உறுப்பினர்கள் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள். ஆனால் அது நடக்க வில்லை. சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரே பெண்மணியான அனந்தி சசிதரன்கூட பெண் வேட்பாளர் என்பதற்காகத்தான் தெரிவு செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறார். போரால் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிக்கானதாகவே தனக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைக் கருத்தில் எடுக்க வேண்டும் என்கிறார் அவர்.

அப்படியானால் இந்தச் சமூகம் தன்னுடைய பிரதிநிதியாக ஒரேயொரு பெண்ணைக்கூடத் தெரிவு செய்வதற்கு மறுத்துவிட்டது என்றே அர்த்தமாகிறது. அதாவது சரிபாதிக்கும் அதிகமான எண்ணிக்கையில் உள்ளவர்கள் தாமும் தமது பிரதிநிதியாக ஒரு பெண்ணைத் தெரிவு செய்யவில்லை, மறுபாதியினரான ஆண்களும் அதனை நினைத்துப் பார்க்கவில்லை என்ற கசப்பான உண்மை சகிக்க முடியாததாக இருக்கின்றது.

பெண்களைத் தாயாகவும் மனைவியாகவும் மகளாகவும் அதற்கு மேலே கடவுளாகவும்கூடப் பார்க்கும் இந்தச் சமூகத்தினர் அவர்களை அரசியல் பிரதிநிதிகளாகப் பார்க்க மறுப்பது 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் அபத்தமாகத் தெரிகிறது. உலக நாடுகளில் பெண்கள் தடம் பதிக்காத துறைகளே இல்லை என்று பெருமை கொள்ளும் இன்றைய நிலையில் வடக்கில் ஒரேயொரு பெண்ணைக்கூடத் தங்கள் அரசியல் பிரதிநிதியாக ஏற்க தமிழ்ச் சமூகம் தயங்கி நின்றிருக்கின்றது.



**சாதகமற்ற சூழல்**

இதற்குக் காரணம், இலங்கை அரசியலில் பெண்கள் போதுமான பங்களிப்பைச் செய்வதற்கான சுழல் இன்னமும் ஏற்படவில்லை என்கிறார் இலங்கை எழுத்தாளரும், பெண்ணியச் செயற்பாட்டாளருமான காயத்திரி நளினகாந்தன்.

"உலகுக்கு முதலாவது பெண் பிரதமரைத் தந்த நாடாக இலங்கை இருந்த போதிலும் இங்கு இன்னமும் அரசியலில் பெண்களின் பங்களிப்பு சரிபாதியாக அல்ல, கணிசமான அளவுக்குக்கூட இல்லை. அரசியல் கட்டமைப்பு என்பது இலங்கையில் இன்னமும் ஆணாதிக்கத்தால் சூழப்பட்ட ஒன்றாக இருப்பதும், இலங்கைக் குடும்பங்கள் இன்னமும் பெண்களை வீட்டை நிர்வகிக்கும் தலைவியாக மட்டுமே பார்க்கின்றன. கடந்த 30 வருடகாலப் போரும் பெண்கள் அரசியலுக்கு வருவதற்கான கணிசமான சுழலை ஏற்படுத்தவில்லை" என்ற கருத்து பொதுவாக எல்லாப் பெண்ணிய ஆர்வலர்களாலும் தெரிவிக்கப்படுகின்றது.

30 வருடகாலப் போரிலே பெண்கள் நினைத்துப் பார்க்க முடியாத போர்ச் சாகசங்களை நிகழ்த்தினார்கள் என்று போற்றும் இந்தச் சமூகத்திற்கு அதே பெண்ணை அரசியல் தலைவியாகப் பார்க்க முடியாதிருப்பது வியப்பளிக்கிறது. அதிலும் மோசமாக போருக்கு முன்னைய காலத்தில் பெண்களின் அரசியல் பங்களிப்பு அளவுக்குக்கூட இப்போதைய நிலை இல்லை என்பது எதிர்காலம் குறித்து அச்சமூட்டுகிறது.

**சாதனைப் பெண்கள்**

"தமிழரசுக் கட்சியில் பெண்கள் அரசியிலில் ஈடுபட்ட காலமொன்று இருந்தது. அது பொற்காலம். மங்கையற்கரசி அமிர்தலிங்கம், அன்னபூபதி அருணாச்சலம், கோமதி வன்னியசிங்கம், பத்மாவதி வேலுப்பிள்ளை போன்றவர்கள் முன்னணி பெண் அரசியல்வாதிகளாக இயங்கியவர்கள். இலங்கை தமிழரசுக் கட்சியில் மாதர் சங்கம் உருவாக்கி இயங்கிவந்தது. அந்தளவுக்கு பெண்கள் அரசியலில் ஈடுபட்டிருந்தனர். இப்போது இந்த நிலை மாறிவிட்டது" என்கிறார் போராசிரியர் சிற்றம்பலம். தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான இவர்தான் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்குழுவின் முக்கிய பிரதிநிதியாகவும் இருந்தவர். தேர்தலில் போட்டியிட பெண்கள் முன்வராத காரணத்தால் தமிழரசுக் கட்சி சார்பில் அவர்களுக்கு அதிக ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை என்கிறார் அவர். "இப்போது பெண்கள் தமது அரசியல் ஈடுபாட்டை குறைத்துக் கொண்டுவிட்டனர். இந்த நிலையால்தான் அவர்களுக்குப் போதிய இடங்கள் வழங்கப்படவில்லை" என்றார் பேராசிரியர் சிற்றம்பலம்.

பெண்கள் அரசியலில் ஈடுபாடு காட்டாமைதான் அவர்களுக்கான இடங்கள் வழங்கப்படாமைக்கான காரணம் என்று கூட்டமைப்புக்கு எதிர்த் தரப்பிலே போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அங்கஜன் ராமநாதனும் கூறுகின்றார்.

"பெண்களின் அரசியல் பங்களிப்பு குறைந்துவிட்டது. இந்நிலை மாற வேண்டும் என்றே எதிர்பார்க்கிறேன். அண்மைக் காலமாகத்தான் அரசியலிலேயே பெண்களின் ஈடுபாடு அதிகமாகியிருப்பதைக் காண முடிகிறது. ஈடுபாடு கடந்த ஆதிக்கத்தையே நாம் எதிர்பார்க்கின்றோம். போட்டியிடுவதற்குப் பெண்கள் தயாராக இருந்திருந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக அவர்களுக்கு நிச்சயம் போதிய இடங்கள் வழங்கப்பட்டிருக்கும்" என்றார் அவர். பெண்கள் யாரும் போட்டியிட முன்வராத நிலையில்தான் ஒரேயொரு பெண் வேட்பாளரைத் தாம் களமிறக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இனிவரும் தேர்தல்களிலும் அரசியல் நடவடிக்கைகளிலும் தமது கட்சி ஊடாக பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும்

"உலகுக்கு முதலாவது பெண் பிரதமரைத் தந்த நாடாக இலங்கை இருந்த போதிலும் இங்கு இன்னமும் அரசியலில் பெண்களின் பங்களிப்பு சரிபாதியாக அல்ல, கணிசமான அளவுக்குக்கூட இல்லை. அரசியல் கட்டமைப்பு என்பது இலங்கையில் இன்னமும் ஆணாதிக்கத்தால் சூழப்பட்ட ஒன்றாக இருப்பதும், இலங்கைக் குடும்பங்கள் இன்னமும் பெண்களை வீட்டை நிர்வகிக்கும் தலைவியாக மட்டுமே பார்க்கின்றன. கடந்த 30 வருடகாலப் போரும் பெண்கள் அரசியலுக்கு வருவதற்கான கணிசமான சுழலை ஏற்படுத்தவில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றும் அவர் உறுதியளித்தார்.
"பெண்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதை ஒருபோதும் எதிர்க்கவில்லை" எதிர்க்கவில்லை என்று கூறும் ஐக்கிய தேசியக் கட்சியும் பெண்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட முன்வராதமைதான் தமது கட்சி சார்பில் பெண் வேட்பாளர்கள் நிறுத்தப்படாமைக்கான காரணம் என்று கூறுகின்றது.

**உரிமைகளை யாரிடமும் கேட்டுப் பெறுவதில்லை. நாமாகவே எடுத்துக் கொள்வதுதான். என்னைப் பொறுத்தளவில் பெண்களின் அரசியல் பங்களிப்பு இன்னும் அதிக மாக வேண்டும்" என்கிறார் அனந்தி சசிதரன்.**

**பெண்களே காரணம்**

"யாழ். மாவட்டத்திலிருந்து பெண் ஒருவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய வரலாறு எம்மிடம் உண்டு. வடமாகாண சபைத் தேர்தலில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு திருப்திகரமாக இல்லை என்பதை ஏற்றுக் கொண்டாலும் அதற்கான காரணம் பெண்கள்தான் என்பதை சமூகம் தெரிந்து கொள்ள வேண்டும். பெண்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தயக்கம் காட்டிவரும் நிலையில் எவ்வாறு வேட்பாளர் தெரிவில் சரிசமமான வீதத்தை வழங்க முடியும்?" என்று கேள்வி எழுப்பினார் கட்சியின் தெரிவுக் குழு உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமான நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன்.

**கூட்டமைப்புக்கே ஆதரவு**

அரசியலில் ஆர்வம் காட்டிய பெண்கள் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடத்தான் விரும்பினார்களே தவிர ஏனைய கட்சிகளிலல்ல என்றும் அவர் குற்றஞ் சாட்டினார். "போட்டியிடுவதில் மட்டுமல்ல. வாக்களித்தபோதும் பெண்கள் கூட்டமைப்பையே விரும்பினார்கள். அதற்குத்தான் வாக்களித்தார்கள்" என்றார் சுவாமிநாதன்.
ஆக மொத்தத்தில் வடமாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் தெரிவின்போதே பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை, ஆர்வமில்லை என்ற காரணத்தைக் காட்டி ஆண்களே தீர்மானித்துக் கொண்டார்கள்.

**மறுக்கும் பெண்கள்**

ஆண்களால் ஆளப்படும் கட்சிகளில் பெண்களுக்கு இடம் வழங்கப் படாமைக்கு அவர்கள் தேர்தலில் ஆர்வம் காட்டவில்லை என்பது காரணமாகக் கூறப்பட்டாலும், ஆர்வமாக இருந்த பெண்கள் ஊக்குவிக்கப் படவில்லை என்றும் பெண்களை அரசியலுக்குள் கொண்டுவருவதற்கான முற்போக்குத் திட்டம் எதனையும் பிரதான அரசியல் கட்சிகள் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டுகிறார் குடாநாட்டிலுள்ள பெண்கள் உரிமைகள் அமைப்பின் பிரதிநிதி ஒருவர். தனது பெயர் பத்திரிகையில் பயன்படுத்தப் படுவதை அவர் விரும்பவில்லை. "ஒடுக்கப்பட்ட பெண்களை அரசியல் களத்துக்குள் கொண்டுவருவதற்கு இவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்லட்டும் பார்ப்போம்" எனச் சீறுகிறார் அவர். பெண்களுக்கு அரசியலில் ஆர்வமில்லை என்பது வெறும் சாட்டுப்போக்கு என்பது அவரது கருத்து.
இருந்தாலும் வடமாகாண சபைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கை அவரது கருத்துடன் முரண்படுகிறது. குறைந்தளவு பெண் வேட்பாளர்கள் நிறுத்தப் பட்டபோதும்கூட அவர்களை மக்கள் தெரிவு செய்யவில்லை என்பது அரசியலில் பெண்களின் பங்களிப்பு நிராகரிக்கப்பட்டுவிட்டதோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.
யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக அனந்தி சசிதரன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக ஞானசக்தி சிறீதரன், ஜனநாயக ஐக்கிய முன்னணி சார்பாக கந்தசாமி விஜிதா, ஐக்கிய சோசலிச கட்சி சார்பில் ஏ.ஜெயராணி, பாதும்மா சனாஸா, சசிகலா சந்திர சேகரம் ஆகியோர் போட்டியிட்டனர். சுயேச்சைக் குழு -9 அதிகளவில் பெண் வேட்பாளர்களைக் கொண்டதாகக் களமிறங்கியது.
இருந்தும் ஒரே ஒரு பெண்ணாக அனந்தி சசிதரன் மட்டுமே வெற்றி பெற்றார். அவர்கூடத் தனது தெரிவுக்குத் தான் [illegible] காரணமில்லை என்கிறார். "வடமாகாண சபைத் தேர்தலில் நான் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டது மகிழ்ச்சி அளிக்கின்றது. இதனை எனக்குக் கிடைத்த வெற்றியாக நான் கருதவில்லை. இலங்கை இராணுவத்தின் மீதும் அரசின் மீதும் மக்கள் கொண்டிருந்த வெறுப்பே எனக்கான வாக்குகளாக வெளிவந்துள்ளன" என்கிறார் அனந்தி.
விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் தலைவராக இருந்த எழிலனின் மனைவி அனந்தி. அந்த அடிப்படையிலும் அவருக்கு வாக்குகள் கிடைத்தன என்கிறார்கள் தேர்தல் ஆய்வாளர்கள். எனவே அவரது வாக்குகளை ஒரு பெண்ணுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளாகக் கொள்ள முடியாதுள்ளது.
"இலங்கை அரசின் துன்பத்தை அனுபவித்த மக்கள் அவர்கள் மீதான கோபத்தையும் விடுதலை புலிகள் மீதான பற்றையும் தமது வாக்கு கள் மூலம் வெளிப்படுத்தியதாகவே உணர்கின்றேன். இதனையெல்லாம் கருத்தில் கொண்டே என்னைத் தெரிவு செய்துள்ளனர் மக்கள்" என்று கூறும் அனந்தி, பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். "சமூகத்தில் ஆண்களோடு சரிநிகராக வாழும் பெண்கள் அரசியலிலும் அவர்களுக்கு சமமாகச் செல்ல வேண்டும்" என்றும் சொல்கிறார்.

**தெற்கில் நிலைமை வேறு**

வடக்கில் பெண் உறுப்பினர்கள் எவரும் தெரிவு செய்யப்படாத போதும் மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளில் பெண் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர் என்கிறார் இலங்கைத் தாய்மாரும் மகள்மாரும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பொன்னையா லோகேஸ்வரி. இவர் தேர்தல் காலத்தில் கண்காணிப்பாளராகச் செயற்பட்டது மட்டுமன்றி மனித அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளராகவும் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் செயலாளராகவும் சேவையாற்றுகிறார்.
"பெண்களே பெண்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டனர். வடமாகாணத்திலுள்ள பெண்கள் அனைவரும் பெண் வேட்பாளர்களுக்கு வாக்களித்திருந்தால் இன்று அனந்தி சசிதரனைப் போல் எத்தனையோ பெண்களுடன் வடமாகாண சபை பொலிவு பெற்றிருக்கும்" என்கிறார் லோகேஸ்வரி.
"முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரே பெண் வேட்பாளராக நான் தேர்தலில் போட்டியிட்ட போதிலும் என்னால் வடமாகாண சபையில் ஒரு உறுப்பினராக முடியவில்லை. கணிசமான தொகை வாக்குகள் கிடைக்கப் பெற்றிருப்பினும் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. பெண்களே எனக்கு வாக்களிக்கத் தயக்கம் காட்டியுள்ளனர் என்பது தெரிகிறது. இந்த நிலை மாற வேண்டும்" என்கிறார் மேரி கமலா குணசீலன்.
கட்சிகள் சார்பில் இறக்கப்பட்ட ஒருசில பெண் வேட்பாளர்கள்கூட வாக்குகளைக் கவரும் நோக்கத்தோடு களமிறக்கப்பட்டவர்களேயல்லாமல் வெற்றி பெற்று உறுப்பினர்களாவதற்காக அல்ல என்று சந்தேகப்படுகின்றார் என்கிறார் லோகேஸ்வரி. "பெண் வேட்பாளர்கள் என்றால் அனுதாப வாக்குகள் கொஞ்சம் கிடைக்கும் என்று கட்சிகள் எதிர்பார்த்திருக் கலாம்" என்கிறார் அவர்.

**அனந்தி மீது நம்பிக்கை**

இதற்கு மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன. "வடமாகாண சபை உறுப்பினராக அனந்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார். விருப்பு வாக்குகள் பட்டியலில் அவர் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அவரது வாழ்க்கை பெரும் துன்பங்களைச் சந்தித்தது. அவரைப் போன்றே பல பெண்கள் எம்மத்தியில் உள்ளனர். எனவே அனந்தியை தெரிவு செய்வதன் மூலம் தமது வாழ்விற்கு அர்த்தம் கிடைக்கும் என்ற மக்களின் நம்பிக்கையே அனந்தியின் வெற்றி" என்கிறார் நல்லூர்த் தொகுதி வாக்காளரான திருமதி சிவயோகம்.
எப்படி இருந்தாலும் பெண்களுக்கு மாகாண சபையில் போதியளவு இடம் கிடைக்கவில்லை என்பது குறித்த கவலை சிவயோகத்துக்கும் இருக்கத்தான் செய்கிறது.
"தென்னிலங்கையில் பெண்கள் அரசியலில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருதைக் காணமுடிகின்றது. வடமாகாணத்தில் இப்போதுதான் அது பரவி வருகின்றது. அனந்தி என்ற பெண் வேட்பாளர் மாகாணசபை உறுப்பினராகியுள்ளமை பாராட்டுக்குரியது. அவலம், போர், தனிமை, காணாமற் போன உறவுகள் தொடர்பில் களத்தில் நேரடி அனுபவங்களைக் கொண்டவர். வலி அறிந்தோருக்கே வலி புரியும் என்ற மக்களின் நம்பிக்கை அவரை மாகாண சபையில் அமர்த்தியுள்ளது. அது எதிர்காலத்தில் அரசியலில் பெண்களின் பங்களிப்பை மேலும் அதிகரிக்கும்" என்கிறார் பேராசிரியர் சிற்றம்பலம்.
பெண்கள் அரசியலில் ஈடுபடுவது இக்காலகட்டத்துக்கு அவசியமானது என்கிறார் வேட்பாளர் ஞானசக்தி சிறிதரன். "சமத்துவம் என்பது அப் போது தான் கிடைக்கும். பெண்கள் போராளிகளாக இருந்த காலத்தை யாரும் மறந்து விட முடியாது. அரசியலில் பெண்கள் தலையீடு இல்லாதுவிடின் அங்கு வளர்ச்சி இருக்காது. யாழ். மாவட்டத்தில் ஒரு பெண் வேட்பாளர் மட்டுமே மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பெண்களே பெண்களுக்கு வாக்களிக்காத நிலைமைதான் இங்கு காணப்பட்டது. பெண்கள்தான் பெண்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதும் அவசியமில்லை. ஆண்களும் கூட வாக்களித்திருக்கலாம். ஆனால் பெண்களின் வாக்குகளாவது ஆகக் குறைந்தது ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். பெண்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் ஒரு ஆரோக்கியமான சமூகம் உருவாக வேண்டும். வடமாகாண சபைக்குத் தெரிவான எல்லா உறுப்பினர்களும் இதனைக் கருத்தில் கொண்டு பெண்களுக்காகக் குரல் கொடுக்க முன்வர வேண்டும். இளம் பெண்கள் சமூகத்திற்காக குரல் கொடுக்க முன்வந்து உழைக்கவேண்டும்" என்கிறார் அவர்.

**நாமே முன்வர வேண்டும்**

"வடமாகாண சபையில் பெண் உறுப்பினராகிய எனக்கு சக ஆண் உறுப்பினர்களைப் பார்க்கும்போது ஆணாதிக்கவாதிகளாகத் தெரியவில்லை. என்னால் பெண் உரிமைக்காக குரல் கொடுக்க முடியும். உரிமைகள் யாரிடமும் கேட்டுப் பெறுவதில்லை. நாமாகவே எடுத்துக் கொள்வதுதான். என்னைப் பொறுத்தளவில் பெண்களின் அரசியல் பங்களிப்பு இன்னும் அதிகமாக வேண்டும்" என்கிறார் அனந்தி சசிதரன். இந்த நம்பிக்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் என்று நம்புவோம்.
ஒவ்வொரு பெண்ணும் ஒரு புரட்சிவாதி பெரும்பாலும் தன்னைத்தானே எதிர்த்துத் தீவிரமாகப் புரட்சி செய்பவள் என்கிறார் ஆஸ்க்கார ஒயில்ட்டின்.
அரசியல் என்பது நாளாந்த வாழ்வில் தொடர்புடைய ஒரு விடயம். நேர்மையான நியாயமான பெண்கள் அரசியலுக்க வரவேண்டும். பெண்கள் அரசியல் தலைமைத்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பெற்றோரும் அவர்கள் சார்ந்த சமூகமும் வழி சமைத்துக் கொடுக்க வேண்டும். அதற்கு ஆண்கள் சரியான அங்கீகாரத்தினை வழங்க வேண்டும். அதற்கு முன்னர் பெண்கள் தமது அரசியல் பிரதிநிதிகளாக பெண்களைத் தெரிவு செய்வதற்கு முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஔண்யன்

# காணி நிலம் வேண்டும்

> பெற்றதாயும் பிறந்த பொன்நாடும்
> நற்றவவானிலும் நனி சிறந்தனவே... – பாரதி



## சாவிலும் தாய் மண்ணோடுதான்

அவன் இத்தனை நாளும் எந்த நாளுக்காக எதிர் பார்த்திருந்தானோ அந்த நாள் வந்திருந்தது. இவனது முகாமில் இருந்த ஏனைய போராளிகள் தங்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று அவனைப் பொறாமையுடன் பார்த்தார்கள். அடுத்த கணம் கலங்கும் விழிகளோடு தங்கள் தோழனைக் கட்டித்தழுவினார்கள். இன்னும் இருநாள்களில் கடலில்பெரும் வெடியோசையோடு வரப்போகும் வெற்றிச்செய்திக்கான நாயகனாக அவன் எல்லோருக்கும் தெரிந்தான். அந்த அணிக்கு அவன் தனது பெயரைக் கொடுத்த கணத்தில் இருந்தே 'அண்ணை இண்டைக்கு உத்தரவு தருவார்" என்று காத்திருந்து இரவில் ஏமாற்றத்துடனேயே துயிலவேண்டியிருந்தது. இப்போதுதான் அவனின் கனவு நனவாகும் நாள் குறிக்கப்பட்டிருந்தது. அடுத்தநாள் இரவு அண்ணையுடன் இரவு விருந்து. அண்ணையைப் பார்க்கமுதல் அம்மாவைப் பார்த்து விட்டு வரவேண்டும் என நினைத்தான்.

"அம்மாவை ஒருக்காப் பார்க்க வேணும்" அவனது கோரிக்கைக்கு எந்த வித மறுப்பும் சொல்லப்படவேயில்லை. "நாளைக்கே போட்டு வாவன். வாகனம் வேணுமோ?" என்று பொறுப்பாளர் கேட்டார்.

"வேண்டாமண்ணை! சைக்கிள்ள போட்டு வாறன்" சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்தான். யாருமேயில்லாதவளாக, தன் மகன் தன்னைப்பார்க்க வருவான் என்ற ஒற்றை நம்பிக்கையை மட்டுமே சுமந்து கொண்டே, ஒவ்வொரு நாளும் அவனின் காலடித் தடத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தாள் அம்மா.

நண்பன் ஒருவனிடம் நாளைக்கு வருவதாக அவன் சொல்லியனுப்பியிருந்தான். அதுவரை நடைப்பிணமாக இருந்த அம்மாவுக்கு ஆயிரம் யானை பலம் ஒருபொழுதுக்கிடையிலேயே வந்து சேர்ந்தது. வீடெல்லாம் ஒதுக்கி கூட்டி, மகனுக்குப் பிடித்த பலகாரங்களை செய்து, ஆட்டிறைச்சி காய்ச்சி வைத்துவிட்டு வாசலில் வந்து இருந்துவிட்டாள். வியர்த்து விறுவிறுக்க சைக்கிளில் அவன் வருவதை அம்மா தூரத்திலேயே கண்டுவிட்டாள். அன்றைக்கு பகல் முழுவதும் அம்மாவின் பாசமழையில் நனைந்து விட்டிருந்தான். வீட்டு வளவை ஒரு குழந்தை போல அம்மாவின் கையைப்பிடித்தபடி சுற்றிவந்தான். வளவின் ஒவ்வொரு துணிக்கை மண்ணும் அவனின் ஏதேனும் ஒரு நினைவுத்துண்டத்தை சுமந்து கொண்டிருந்தது. அவன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்வையும் அம்மா வாஞ்சையோடு சொல்லிக் கொண்டிருந்தாள். 'அம்மாவையும், என்னை சுமந்திருந்திருந்த இந்தக் காணியையும் இனிப்பார்க்கவே முடியாது' என்ற நினைப்பு வந்தபோது, கண்ணீர் முட்டிக் கொண்டுவந்தது. விடை பெறும் நேரம். வழக்கம் போல அம்மா அவனை முத்தமிட்டு, கட்டித் தழுவி வழியனுப்பினாள். சைக்கிளில் ஏறியவன் என்னவோ நினைத்துக் கொண்டவன் போல, வளவுப்பக்கமாக ஓடினான். மூச்சிரைக்க அவன் வந்தபோது, உடலெங்கும் மண் அப்பியிருந்தது.

'வளவுக்க உருண்டிட்டு வந்திருக்கிறான்' அம்மாவுக்கு அவன் செய்தது புதிசாக இருந்தது.காரணம் கேட்கவும் வாய்வரவில்லை. அவன் திரும்பிப் பார்க்காமலே சைக்கிளை உழக்கிக் கொண்டு முகாமுக்குப் பறந்தான். வாசலில் பிக்–அப் நின்றிருந்தது. அண்ணையிடம் அழைத்துச் செல்லவே அது வந்திருக்கிறது என்று புரிந்தது. விசிலடித்தபடியே ஓடிப்போய் குளித்துவிட்டு சீருடையோடு வந்தான். அவனோடு கூடவே தாக்குதலில் பங்கெடுக்கப் போகும் மற்றைய போராளியும். வாகனத்தில் ஏறிக் கொண்டனர். நீண்ட பயணிப்புக்கு பின் அண்ணையின் இடம் வந்தது.

நம்பிக்கையூட்டும் சொற்களோடு அண்ணை தன் கைகளாலேயே அவர்களுக்கு உணவு பரிமாறினார். புகைப்படம் எடுத்துக் கொண்டார். வெற்றிக்காக வாழ்த்துச்சொல்லி வழியனுப்புகையில் அண்ணையின் கண்கள் தனக்காகக் கலங்குவதைக் கண்டு இவனுக்கு பெருமையாக இருந்தது.

இரவாயிற்று. வெடிபொருள்களை சுமந்து நின்ற படகோடு புறப்பட்டார்கள். கூடவே பக்கத்துணையாக இன்னும் சில தாக்குதல் படகுளும் . வலை விரிக்கப்பட்டிருப்பதை அறியாத பேய்களின் கடற்கலங்கள் திமிரோடு உலா வந்து கொண்டிருந்தன. எதிர் பாராத தருணமொன்றில் தாய்க்கலத்தோடு மோதி, வெடித்து, அதனை மூழ்கடிக்க வேண்டும்.இன்னும் சில செக்கன்கள் மட்டுமே மிச்சம். படகின் வேகம் அதிகரித்திருந்தது. இவன் தன் பொக்கற்றுக்குள் இருந்து ஒரு பேப்பர் சரையை எடுத்தான். சகபோராளி 'என்ன?' என்பது போல பார்த்தான். அந்தச்சரைக்குள் மண்.

இவன் சொன்னான்,

"மச்சான்! இது எங்கட வீட்டு மண். கடலில நான் சாகேக்கயும் என்ர மண்ணோடதான் சாகவேணும். இது மாதிரி இவங்கள் பிடிச்சு வைச்சிருக்கிற எங்கட முழு மண்ணையும் மீட்க வேணும்" கண்ணீர் வழிந்தோட, ஆவேசத்தோடு படகின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

காற்று அதிர்ந்தது. பேரொலியும் தீப்பிளம்பும் கிளம்பின. தாய்க்கலம் மூழ்கத்தொடங்கிற்று. அவன் தன் பிறந்த மண்ணோடு கடலில் கலந்திருந்தான்.

## நிலத்துக்கான காத்திருப்பு

பெற்றதாயை நேசிக்கும் ஒவ்வொருவரும் தான் பிறந்த மண்ணையும் அதேயளவு நேசிப்போடே நோக்குவர். பெற்றவள்கூட குழந்தையை பத்து மாதம் தான் கருவிலே சுமப்பாள். ஆனால் பூமித்தாய் நாங்கள் பிறந்து வளர்ந்து, தவழ்ந்து நடந்து, ஓடியாடி, உழைத்துக் களைத்து, ஓய்வெடுத்து, வாழ்ந்து முடியும்வரை தன் குழந்தைகளாக எல்லோரையும் சுமந்து கொண்டே இருக்கிறாள்.

மண்மீதான பற்று அலாதியானது. அது எப்போது ரம்மியமான [illegible] களை தூண்டக்கூடியது. மனிதர்களுக்கு ஏற்ப மண்ணும் தன் இயல்பை மாற்றி வளைந்து கொடுக்கிறது. அவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக. என்னதான் சொர்க்கத்துக்குச் சென்றாலும் கூட சொந்த மண்ணில் சுருண்டு படுத்திருப்பது போன்ற சுகம் எங்கும் கிடைக்காது.

மண் மனிதர்களின் இயல்பையும் உருவத்தையும் கூட தீர்மானிக்கிறது. அதன் வாசனையை தன் குழந்தைகளான மனிதர்கள் மீது படர விடுகிறது. ஒவ்வொரு இனமும் தத்தம் மண்ணுக்குரிய தனித்துவமான இயல்போடு தம் இருப்பியலை தக்கவைத்துக் கொள்கின்றன. ஆயினும் பலம் கொண்ட இன்னொரு இனம் அடுத்தவனின் மண்ணையும் தனதாக்க பேராசையின் நாவோடு அலையத் தொடங்கியது. இதனால்தான் உலகின் எல்லாப் போர்களும் மண்ணுக்காகவே மூண்டன. வரலாறு எழுதப்படும் காலத்துக்கு முன்னர் இருந்தே மண்ணுக்கான போர் ஆரம்பித்து விட்டது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்னர் தோன்றியவர்கள் என்று மண்ணை விடவும் மூத்தவர்கள் நாமே என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழினத்தின் மண் ஈழத்தில் அவர்களின் அதிகாரத்தை விட்டுப் போய் நெடுங்காலமாகிவிட்டது. கங்கை முதல் கடாரம் வரை வென்ற பேரரசின் வாரிசுகள் ஒரு துண்டுக் காணிக்குக் கூட வக்கின்றி, வருடக்கணக்கில் அகதி என்ற முத்திரையோடு இன்னமும் அலைந்துகொண்டே இருக்கிறார்கள். காணி இருப்பவர்களும் கூட அவற்றை எப்போது இழக்க வேண்டியிருக்குமோ என்ற அச்சத்தோடேயே காலத்தைக் கழிக்கவேண்டியிருக்கிறது. வெற்றிலையும் புகையிலையும், வெங்காயமும், மரவள்ளியும் என்று பச்சை ஆடையுடுத்தி சிரித்துக் கொண்டிருந்த ஏக்கர்கணக்கான காணிகள் இப்போது சீருடைகளால் போர்த்தப்பட்டிருக்கின்றன. மண்ணின் மைந்தர்கள் உள்ளே வரக்கூடாது என்ற பலகையோடு முட்கம்பி வேலி கொண்டு சிறையிடப்பட்டிருக்கின்றன அந்தக் காணிகள். ஆனாலும் என்றைக்கோ ஒருநாள் மீண்டும் தங்கள் சொந்த மண்ணில் [illegible] என்ற கனவுகளோடு நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் காத்திருக்கின்றன.

## பறிபோனதா காணி?

வடக்குத் தேர்தலில் வாங்கிய அடிக்கு பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடங்கி விட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களின் வீடுகள் திடீரெனப் பற்றியெரிகின்றன அல்லது வீட்டு மதில்களில் கழிவு ஒயில் கொண்டு புதிய வடிவங்கள் வரையப்படுகின்றன. இன்னும் சில ஆதரவாளர்களின் வீடுகளுக்கு சிவில் உடையில் செல்லும் சிலர் தங்களைப் பொலிஸார் என்று கூறிக்கொண்டு அச்சுறுத்தத் தொடங்கியுள்ளனர். இவையெல்லாம் அடிமட்ட வெருட்டல்கள்.

இதனைத் தவிர கூட்டமைப்பு தேர்தலில் என்னவெல்லாம் சொன்னதோ அவற்றையெல்லாம் நடைமுறைப் படுத்தவே விடமாட்டோம் என்று அமைச்சர்கள் கூக்குரலிடத் தொடங்கியுள்ளனர். கொழும்புவரை நந்திக்கடலை பெருகச்செய்யப்போகிறார்கள் என்று ஒரு அமைச்சரும், "எங்கே முடிந்தால் ராணுவத்தையும் ஆளுநரையும் வடக்கில் இருந்து விரட்டிப் பாருங்கள் பார்ப்போம்" என்று இன்னொரு அமைச்சரும் மாறிமாறி இனவாதக் கருத்துக்களைக் கக்கத் தொடங்கியுள்ளார்கள். வெறும் வாய்ப்பேச்சோடு மட்டும் நிற்காமல் இன்னொரு வகையிலும் கூட்டமைப்புக்கு அடிகொடுக்க நினைத்தது அரசு. வடக்குத் தேர்தல் முடிந்து ஒரு வாரம் கூட கழியாத நிலையில் "காணி அதிகாரம் மத்திய அரசுக்கே உண்டு. மாகாண சபைக்குக் கிடையாது" என்று ஒரு தீர்ப்பை உயர் நீதிமன்றம் வெளியிட்டுள்ளது. இதன்மூலம் "காணி அதிகாரங்கள் மாகாண சபைக் குக் கிடையவே கிடையாது" என்று தாங்கள் வெற்றிபெற்று விட்டது போல இனவாத அமைச்சர்கள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்ற நோக்கே இவர்களின் கொக்கரிப்பில் தெரிகிறது. என்றாலும் குறித்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் மாகாணங்களுக்குரிய காணி அதிகாரங்கள் பற்றி எதுவுமே ஆராயப்படவில்லை. எந்தக் காணிக்காக வழக்குத் தொடரப் பட்டதோ அந்தக் காணி பற்றிய தீர்ப்பிலேயே ஜனாதிபதியின் அதிகாரம் பற்றியும் மத்திய அரசின் காணி மீதான ஆதிக்கம் பற்றியும் சொல்லப் பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய அரசியலமைப்பின்படி இதுதான் சட்டம். ஆனால் அதன் பின்னர் 1987 இல் செய்துகொள்ளப்பட்ட ராஜீவ்- ஜே. ஆர். ஒப்பந்தத்தின் பிரகாரம் பிரசவமான 13 ஆவது திருத்தம் மாகாண சபைக்கும் காணி மீதான கையாளுகை, நிர்வகிப்பு, கட்டுப்படுத்தல் போன்ற அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. வழக்கில் குறிக்கப்பட்ட காணியில் இந்த விடயம் தேவையற்றது என்பதால் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை வைத்து தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. ஒரு காணிக்கு வழங்கப் பட்ட தீர்ப்பை இலங்கையிலுள்ள ஒட்டுமொத்தக் காணிகளுக்கும் பொருந்தும் என்ற ரீதியில் அறிக்கை விடத் தொடங்கியிருக்கிறார்கள் அமைச்சர்கள். இதன் மூலம் ஒன்றுமேயில்லாத மாகாண சபையைத்தான் கூட்டமைப்பு வென்றிருக்கிறது என்று சொல்லாமல் சொல்ல முனைகிறார்கள். ஆனால் எதுவந்தபோதும் காணி பொலிஸ் அதிகாரத்தை விட்டுக்கொடோம் என்று கூட்டமைப்பு தலைமையில் அமையப் போகும் வடமாகாண அரசு உறுதியோடு இருக்கிறது. இந்த உறுதி இழந்த மண்ணை மீட்டுத்தருமா என்ற ஏக்கதோடு தங்கள் நிலங்களிலிருக்கும் திசை நோக்கி பார்த்தபடியே இருக்கிறார்கள் பல பேர்.

> “ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களின் வீடுகள் திடீரெனப் பற்றியெரிகின்றன அல்லது வீட்டு மதில் களில் கழிவு ஒயில் கொண்டு புதிய வடிவங்கள் வரையப்படுகின்றன. ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> கூட்டமைப்பு மேடைகளில் வீசிய வீர வாக்குறுதிகளை அவர்கள் ஆழமாக நம்பாவிட்டாலும், அந்த மக்களின் ஆன்ம தாகமாக, வேட்பாளர்களால் வீசப்பட்ட வாக்குறுதிகள் பழந்திருக்கின்றன. ஏனெனில் அது தசாப்தகாலக் கனவு. தியாகச் சாம்பலின் மேட்டிலிருந்து தொடர்ந்தும் கட்டவிழும் சுதந்திரப் பறவை அது.

ஜெரா

# வலிதான் வெற்றியின் இரகசியமே



"எவன் வந்தாத்தான் நமெக்கென்ன இனிமேல் ஒரு பிள்ளையும் வீட்டு பக்கம் வரமாட்டான் இதோட மறந்திடுவாங்கள்.."

"..கூட்டமைப்புக்காரர் வந்தாலும் ஒன்றும் செய்ய மாட்டாங்கள்,
அரசாங்கம் வந்தலும் ஒன்றும் செய்ய மாட்டாங்கள்.."

"..கூட்டமைப்புக்காரர் நல்லா கதைக்கத்தான் சரி. உருப்படியா ஒரு வேலையும் செய்யமாட்டாங்கள்.."

"..அரசு வெண்டால் முற்றத்தில இருக்கிற சிங்கள குடியேற்றம் நடு வீட்டுக்குள்ளயும் வந்திடும்.."

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வயதான ஒருவர் அளித்த பதிலில் கூட்டமைப்பின் பிரமாண்ட வெற்றிக்கான காரணம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இலங்கைக்கு வந்துபோகும் அதிகாரிகளும், அனைத்துல ஊடகங்களும் காட்டும் ஈழத் தமிழர் பிரச்சினையின் பிந்திய முகத்தை பொது அரங்கிற்கு மக்களாக இழுத்து வந்து விட்டிருக்கின்றனர். அவர்களின் கொள்கையையும், இனப் பிரச்சினை தீர்வுக்கான வழியையும், வாழ்வுக்கான அபிலாஷைகளையும் மீண்டுமொருமுறை பறையறைந்து நிரூபித்திருக்கின்றனர்.

இன்னொரு வகையில் சொல்வதானால் உலகம் எதிர்பார்த்த ஜனநாயக வழிக்கு தமிழ் மக்கள் திரும்பியிருக்கின்றனர். அதற்காக அவர்கள் நான்கு ஆண்டுகள் ராஜபக்ஷக்களுடன் கடும் போர் புரியவேண்டியிருந்தது. ஆனாலும் ஆயுதப் போராட்டத்தின் சாரத்தையும், அதன் தியாகங்களையும் இறுக்கிப் பிடித்தபடி கத்தியற்ற இன்னுமொரு போருக்கு களமிறங்கியிருக்கின்றனர். நடுநிலைமை, ராஜதந்திரம், சாணாக்கியம், உலகின் போக்கோடு ஒத்து ஓடுதல் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமக்குப் பிடிக்காத சிலவற்றைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டிய போதும்கூட அதற்கே மக்கள் மீண்டும் அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றனர்.

## எப்படிச் சாத்தியமானது பெரு வெற்றி?

தேர்தல் பரப்புரைகளும், சலுகைகளும், வாக்குறுதிகளும், ஈழத் தேர்தல் அரசியலில் எடுபடுவது மிக அரிது. எவன் மக்கள் நேசிக்கும் தேசிய அலைக்குப் பின்னாலும், முன்னாலும் அலையத் தகுதி வாய்ந்தவனோ அவனையே தம் பிரதிநிதிகளாக்கி அழகு பார்க்கின்றனர் மக்கள். தமது தலைவர்களைத் தெரிவுசெய்வதற்கான தமது கொள்கையாகவும் இதையே வைத்திருக்கின்றனர்.

இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என ஈழத்தில் உருவான தேர்தல் அரசியலை மையப்படுத்திய அனைத்து கட்சிகளையும், ஏற்றுக் கொண்டதிலும், நிராகரித்ததிலும் இந்தக் கொள்கைதான் மக்களிடம் முதன்மையிடத்தைப் பிடித்திருந்தது. இந்தப் பின்னணியில் நின்றே விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான தலைவர்களாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரை தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்தனர்.

இந்தக் கொள்கைப் பிடிப்பை சிதைவுறச் செய்ய ராஜபக்ஷக்கள் பல மாயமந்திரங்களை வீசினர். ஆனால் அவை பலிக்கவில்லை.

## மாய மந்திரங்கள்

அபிவிருத்தி என்ற விளம்பரத்தின் பெயரால் பெளத்த மயமாக்கல், அத்துமீறிய சிங்கள குடியேற்றம், கலாசாரச் சிதைப்பு போன்றவற்றை ராஜபக்ஷக்கள் துணிந்து செய்தார்கள். புலித் தோல்வியோடு தமிழர்கள் சிங்களவர்களால் அடிமைப்படுத்தப்பட்ட இனம் என்ற கற்பிதத்தை வலிந்து உருவாக்கிக் கொண்டார்கள்.

இதனை களத்தில் நின்று செய்தவர்கள் சிங்கள அமைச்சர்களோ, அதிகாரிகளோ அல்லர். சீருடை தரித்த பெரும் அதிகாரி ஒருவரைத் தவிர இதில் பங்காற்றிய மற்றெல்லோரும் தமிழர்கள்.

மறுபக்கம் ராஜபக்ஷவோடு ஒட்டிக்கொண்டிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், கீதாஞ்சலி மற்றும் கே.பி. இவர்களே கூட்டமைப்பையும், தமிழ் மக்களையும் ஏதுமற்றவர்கள் ஆக்குவதற்காகத் திட்டமிடப்பட்ட தேர்தலை அரசு சார்பாக நின்று எதிர்கொண்டார்கள்; மக்களைத் திசைமாற்ற முயற்சித்தனர். ஆனால் மக்களோ, ராஜபக்ஷவின் மீதிருந்த ஒட்டுமொத்த கோபத்தையும் வாக்குக் கேட்டு வந்த இவர்களிடம் காட்டியிருக்கின்றனர். இருந்ததையும் இழந்திருக்கிறார் டக்ளஸ்.

## வெற்றிக்கு இன்னொரு காரணம்

ஆளுந்தரப்பு வேட்பாளர்களும், இராணுவமும், புலனாய்வாளர்களும் செய்த அட்டூழியங்களும் கூட்டமைப்பினரை வெல்ல வைத்தன. தேர்தல் அறிவிப்பு வெளிவந்த நாளிலிருந்தே மிரட்டல்களும் தொடங்கியிருந்தன. கூட்டமைப்பினரையும், சுயேச்சைகளையும் இனந்தெரியாதோர் மிரட்டினர். வேட்பாளர்களின் வீடுகளையும், வாகனங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர். வாக்களிப்பு நடைபெறும் அன்றைய தினமும் இராணுவப் புலனாய்வாளர்கள் அந்த நிலைய வாசல்களில் நின்று மக்களை முறைத்தனர்.

தமிழர்களுக்கு எதிரான இந்த அட்டகாசங்களுக்குச் சரியான பாடத்தை புகட்டுவதற்கு மக்கள் தயாராகியிருந்தனர். இதனோடு சேர்த்து முள்ளிவாய்க்கால் கோபமும் அரசியல் தெரிவில் பிரதிபலித்தது. தேர்தல் காலங்களில் வடபகுதியெங்கும் ஏற்பட்டிருந்த எழுச்சி தமிழீழத்தில் வாழ்வதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துவதாகவும், இப்படியே வாழ்ந்துவிடவே கூட்டமைப்பை தெரிவு செய்வதாகவும் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

## அபிவிருத்தியை நிராகரித்தார்களா மக்கள்?

ராஜபக்ஷவின் அணி அபிவிருத்தியை முதன்மைப்படுத்தியே வாக்குச் சேகரிக்க முயன்றது. அதற்காக உடனடிப் பணிகளையும் செய்தது. தேர்தலுக்கு முதல்வாரம்கூட ராஜபக்ஷவின் வெற்றிக்கு இந்தியா உதவியது. இந்தியா அமைத்துக் கொடுக்கும் வடக்கிற்கான புகையிரத பாதையை ராஜபக்ஷ திறந்து வைத்தார். யாழ். தேவி ரயிலிலேயே கிளிநொச்சிக்கு வந்திறங்கி மாயாஜாலம் காட்டினார். வடக்கு வசந்தத்தை நோக்கி திரும்பியிருக்கின்றது என்றார். "என்னை நீங்கள் நம்பலாம்" என்றார். ஆனால் அவரையும் அவரது மாய வித்தைகளையும் நம்ப மக்கள் தயாராக இல்லை.

அதாவது தமது நிலத்தை, அரசியல் அபிலாஷையை, சுயநிர்ணயத்தை, தேசியத்தை, பண்பாட்டை இழந்து பெறப்படும் அபிவிருத்தி மீதான அதிருப்தியை உலகிற்கு சொல்லியிருக்கின்றனர். தங்கள் அபிவிருத்தியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமைதான் முதலில் தங்களுக்கு வேண்டும் என்று மக்கள் தெளிவாகப் பிரகடனப்படுத்தியிருக்கின்றனர். மக்களின் நாடித்துடிப்பறிந்த கூட்டமைப்பினரும் மாவீரர் துயிலுமில்லங்களையும், காணாமல்போனவர்களையும் திருப்பித் தருவோம் என்று கூறி வாக்கு வாங்கியிருக்கின்றனர். வாக்கு கொடுத்திருக்கின்றனர். அவர்தம் கனவுக்கு எதிராக நின்ற அனைத்துத் தரப்பினரையும் வடக்கில் அரசியல் பெறுமதியற்றவர்களாக்கியிருக்கின்றர்.

## வாக்குறுதிகளை மக்கள் நம்புகின்றனரா?

இலங்கை அரச படைகள் இடித்தளித்த மாவீரர் துயிலுமில்லங்களை மீள நிர்மாணித்தல், காணாமல்போனவர்களை கண்டுபிடித்தல் அல்லது சர்வதேச விசாரணைக்கு கொண்டு செல்லுதல், வடக்கிலிருந்து படைக்குறைப்பைச் செய்தல், சுயாதீன அரசொன்றை வடக்கில் நிறுவுதல் எனப் பல வாக்குறுதிகளை முன்வைத்தே கூட்டமைப்பு தேர்தல் களத்தில் நின்றது. இவையனைத்தும் இலங்கையில் நடக்க அரசு அனுமதிக்காது என மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஆனாலும் சர்வதேசம் மீதான நம்பிக்கையும், 'வீட்டை' இழக்கக்கூடாது என்ற நோக்கமும், சிங்களவனின் ஆக்கிரமிப்பை தற்காலிகமாகவாவது தவிர்க்க வழியொன்று கிடைக்கும் என்ற அவாவும் மக்கள் கூட்டமைப்பைத் தெரிவு செய்யக் காரணமாயின. கூட்டமைப்பைத் தவிர வேறு தெரிவுகள் இல்லாதிருந்தமையும் முக்கிய காரணம்.

## வலிதான் வெற்றியின் ரகசியமே

தமது கடமையைச் சரியாகச் செய்து வீடு திரும்பியிருக்கின்றனர் மக்கள். அவர்களின் எதிர்காலத்தை கூட்டமைப்பினரிடம் அள்ளிக் கொடுத்திருக்கின்றனர்.

கூட்டமைப்பு மேடைகளில் வீசிய வீர வாக்குறுதிகளை அவர்கள் ஆழமாக நம்பாவிட்டாலும், அந்த மக்களின் ஆன்ம தாகமாக, வேட்பாளர்களால் வீசப்பட்ட வாக்குறுதிகள் படிந்திருக்கின்றன. ஏனெனில் அது தசாப்தகாலக் கனவு. தியாக தியாகச் சாம்பலின் மேட்டிலிருந்து தொடர்ந்தும் கட்டவிழும் சுதந்திரப் பறவை அது. அதை எந்த அடக்குமுறையினாலும் அடைத்துவிட முடியாது. இதுவே அந்த மக்கள் கொடுக்கும் ஒவ்வொரு வெற்றியினதும் ரகசியம். வலிதான் வெற்றியின் ரகசியமே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தி.ராஜ்

> வெற்றி பெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், தமது தலைவர் சம்பந்தன் முன்பாக பதவி ஏற்பதையே விரும்புகின்றனர்.

# யார்?
## முன் பதவி ஏற்பார்கள்



வடமாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி விட்டாலும், அவர்களது சபை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஓர் நிரந்தரக் கட்டம் இது வரையில் இல்லை. கைதடியில் அமைக்கப்பட்டு வருகின்ற வடக்கு மாகாண சபையின் திணைக் களங்களுக்குரிய கட்டத்திலேயே அதனை தற்காலிகமாக இயக்குவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

குறித்த கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்டதாக அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பினும், கீழ் தள வேலைகள் மட்டுமே தற்போது விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தக் கட்டடத்தின் ஒரு பகுதி மாத்திரம் இன்னும் இரு வாரங்களில் வடக்கு மாகாணசபை நிர்வாகத் திம்கையளிக்கப்படவிருக் கின்றது. மாகாணசபை அமர்வுகளை நடத்தக் கூடிய வகையில் குறித்த கட்டடம் அமைக்கப்படவில்லை. திணைக்களங்களின் பாவனைக்குரிய வகையிலேயே அந்தக் கட்டடமும் அமைக்கப்பட்டுள்ளது. அதனையே மாகாண சட்ட சபையாக மாற்றியமைக்கப் போகிறார்கள்.

இதற்கிடையே தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் யார் முன்பாகப் பதவியேற்றுக் கொள்ளப் போகின்றார்கள் என்ற ஆர்வமும் சர்சையும் கிளம்பியுள்ளது.

ஏனைய மாகாண முதலமைச்சர்கள், ஜனாதிபதி முன்பாகவோ அல்லது ஆளுநரின் முன்பாகவோ பதவியேற்றிருக்கின்றனர். அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அவர்களுக்கு அதில் தடை ஏதும் இருக்கவில்லை.

"மாகாணசபைச் சட்டத்தில் ஜனாதிபதி முன்பாகவோ அல்லது ஆளுநரின் முன்பாகவோதான் பதவியேற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை" என்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன்.

இந்த இருவர் முன்பாகவும் பதவியேற்றுக் கொள்வதில் தமிழ் உறுப்பினர்களுக்கு தார்மீகச் சிக்கல் இருக்கின்றது. ஒருவர் போருக்கு உத்தரவிட்டவர். மற்றையவர் போரை நடத்தி கொன்று குவித்தவர். எனவே இவர்களை ஏற்க தமிழ் உறுப்பினர்களின் மனங்கள் மறுக்கின்றன.

வெற்றி பெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், தமது தலைவர் சம்பந்தன் முன்பாக பதவியேற்பதையே விரும்புகின்றனர்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தவிசாளர்கள் எல்லோரும் தலைவர் சம்பந்தன் முன்பாகவே பதவியேற்றிருந்தனர்.

ஆனாலும் மாகாணசபை உறுப்பினர்கள் தனக்கு முன்பாக பதவியேற்கமாட்டார்கள் என்று 'உதயனிடம்' தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராசவரோதயம் சம்பந்தன்.

கூட்டமைப்பு உறுப்பினர்கள் தனக்கு முன்பாக பதவிப் பிரமாணம் செய்வதையே ஆளுநர் விரும்புகின்றார் எனத் தெரிகின்றது. இதற்கான சமிக்ஞைகளை தனது தூதுவர்கள் ஊடாக கூட்டமைப்புக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

இராணுவத் தளபதியாக அவர் இருந்த காலத்தில் யாழ். மாவட்டத்தில் நடந்த காணாமல் போதல்கள், ஊரடங்கு வேளை யில் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் என்ற நீண்ட பட்டியலுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பாளியான அவர் முன் பதவியேற்பதைவிட பதவி துறப்பதே மேல் என்கிறார்கள் கூட்டமைப்பினர்.

"சட்டத்தரணி முன்பாகவோ அல்லது சமாதான நீதிவான் முன்பாகவோ உறுப்பினர்கள் பதவியேற்க செய்ய முடியும்" என்கிறார், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

இந்த வாரத்தில் பதவியேற்புக்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில் யார் முன் அது நடக்கும் என்பதே பெரும் கேள்வியாகவுள்ளது.

## ஜம்புவின் தடாலடிகள்

தன்னுடைய நண்பனின் மகளது விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடந்ததால் ஜம்புலிங்கமும் கூடவே போயிருந்தார். நீண்ட நாள்களாக இழுபட்ட வழக்கு அது. நீதிபதி அவர்களைத் தனது அறைக்கு அழைத்தார். "உங்களுக்கு விவாகரத்துத் தந்தால் உங்கள் பிள்ளைகளை எப்படிப் பிரித்துக் கொள்வது? 3 பிள்ளைகள் இருக்கிறார்களே!" என்று கேட்டார் நீதிபதி. எல்லோரும் அமைதி காக்க, இடையில் புகுந்த ஜம்புலிங்கம், "அப்பச் சரி! நாங்கள் அடுத்த வருசம் டிவோர்ஸுக்கு அப்ளை பண்ணுறம். அப்ப 4 பிள்ளையளோட வாறம்" என்றார்.





வயதானதால் சாவு பற்றிய பயம் ஜம்புவுக்கு அவ்வப்போது வந்து கொண்டிருந்தது. ஒருநாள் அவர் கடவுளிடம் தன்னுடைய சாவு பற்றிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். "நானும் என்னுடைய தாத்தாவைப் போன்றே உயிரைவிட விரும்புகின்றேன். தாத்தா தன்னுடைய நித்திரையில் உயிரைவிட்டார். அவர் சென்று கொண்டிருந்த கார் விபத்துக்குள்ளானபோது அதன் சாரதியான அவர் மற்றைய பயணிகளைப் போல முழித்துக் கொண்டிருக்கவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக நடப்புகள் ஒரு பார்வை

# உண்மையை ரஷ்யாவிடம் மறைக்கிறதா சிரியா?

## நிரூபணமானால் நிலைப்பாடு மாறும்

ஐ.நாவில் சிரியா பற்றி உலகத் தலைவர்கள் வாதம்
பாகிஸ்தான் நில நடுக்கம்
உருவாக்கியுள்ள புதிய தீவு
தலிபான் தலைவர் விடுதலை

ரெங்கன்

இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டமை தொடர்பாக சிரிய ஆட்சியாளர்கள் உண்மைகளை மறைக்கிறார்களா என்ற வகையில் ரஷ்ய அதிகாரிகளுக்கு இப்போது சந்தேகம் எழுந்திருப்பதாகத் தெரிகிறது. சிரிய ஆட்சியாளர்கள் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தார்கள் என்ற வகையில் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை இதுவரை காலமும் ரஷ்ய அதிகாரிகள் தீர்க்கமாக மறுத்து வந்திருக்கிறார்கள்.

இரசாயன ஆயுதங்கள் அரசுக்கு எதிராகப் போராடிவரும் தரப்பினருக்கும் இலகுவாக கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் அவர்களே டமாஸ்கஸ் புறநகர்ப் பகுதியில் நடத்தப்பட்ட இரசாயன ஆயுதத் தாக்குதலுக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்று ரஷ்யர்கள் கூறி வந்துள்ளார்கள்.

இரசாயன ஆயுதங்கள் டமாஸ்கஸ் புறநகர்ப் பகுதியில் எதிர்த் தரப்பினரின் வசமுள்ள பகுதி மீதே பயன்படுத்தியிருப்பதானது அரச தரப்பினரால் அது மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். புரட்சிவாதிகள் தங்கள் பகுதி மீதே அவ்வாறான தாக்கு தலை மேற்கொண்டிருப்பதற்கு நியாயமில்லை என்ற கருத்து மேலோங்கியிருந்த நிலையில், அரச தரப்பினரே அதனைச் செய்துள்ளார்கள் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக அமெரிக்கத் தலைவர்கள் அறிவித்து மேல் நடவடிக்கை களுக்கு ஆயத்தமானார்கள். இந்த நிலையில் தான் அமெரிக்க -மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர்களுக்கிடையிலான உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் பிரகாரம் கடந்த சனிக்கிழமைக்கு முன்னராக இரசாயன ஆயுதங்களின் கையிருப்பு விவரங்களை சிரியா சர்வதேச கண்காணிப்பு அமைப்பொன்றிடம் பட்டியலிட்டு வழங்க வேண்டும் என்பது நிபந்தனையாக விதிக்கப்பட்டிருந்தது. இப்போது கிடைத்துள்ள தகவல்களின்படி சிரியா தனது இரசாயன ஆயுத விவரங்களை வழங்கி விட்டதாகவும் அது பற்றி ஆராயப்படுவதாகவும் தெரிகிறது. இந்த சூழ்நிலையில்தான் சிரியாவின் அசாத் அரசு தங்களுக்குப் பொய்யான தகவல்களை வழங்கி வந்திருக்கலாம் என்ற சந்தேகம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்தக் கருத்தை ரஷ்ய அரசு அதிகாரபூர்வமாக வெளியிடாவிட்டாலும் ரஷ்ய தரப்பில் பேசக்கூடிய உயர் மட்டப் பேச்சாளர் சூசகமாக தெரிவித்துள்ளார். அந்தப் பேச்சாளர் கருத்தின்படி சிரியா உண்மையாகவே ரஷ்யாவை ஏமாற்ற முயன்றிருக்குமானால் அதன் நிலைப்பாடு அதிரடியாக மாற்றத்துக்குள்ளாகும். அதனால் சிரியாவுக்கு எதிராக பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும் அதனை ரஷ்யா ஆதரிக்கும் நிலைக்குத் தள்ளப்படலாம் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

### இரசாயன ஆயுத விவரம்

சிரியா தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்கள் மற்றும் கையிருப்புக்கள் தொடர்பான முழு அளவிலான புள்ளி விவரங்களை சர்வதேச கண்காணிப்பு நிறுவனத்திடம் கையளித்துள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது. அமெரிக்க ரஷ்ய உடன்பாட்டின்படி கடந்த சனிக்கிழமைக்குள் குறித்த விவரங்களைச் சிரியா கையளித்தாக வேண்டும். இல்லையெனில் அமெரிக்காவின் தாக்குதலுக்கு உள்ளாக நேர்ந்திருக்கும்.

சிரியா வழங்கியுள்ள இரசாயன ஆயுத விவரங்களை இப்பொழுது ஆய்வு செய்து வருவதாக ஹேக் நகரில் இருந்து செயற்படும் இரசாயன ஆயுதத் தடைக்கான நிறுவனம் அறிவித்துள்ளது. சிரிய அரசிடமிருந்து தாங்கள் எதிர்பார்த்த இரசாயன ஆயுதங்கள் பற்றிய விவரங்கள் யாவும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் இரசாயன ஆயுதங்கள் தொடர்பாக சிரிய ஆட்சியாளர்கள் ஏமாற்றுகிறார்கள் என்று தெரிய வருமானால் ரஷ்யா, அது தொடர்பான தன்நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் என்று அந்த அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதுபற்றி கிரெம்ளின் நிர்வாக அதிபர் செர்கே இவானொவ் தெரிவிக்கையில்: நான் இப்போது கோட்பாட்டு முறையிலும் அனுமானத்தின் அடிப்படையிலும் கூறுகிறேன். அதிபர் அசாத் ரஷ்யாவை ஏமாற்றுகிறார் என்ற வகையில் உறுதியாகுமானால் நிச்சயமாக எமது நிலைப்பாடு மாற்றமடையும். ஆனால் இதுவரைக்கும் அப்படியான ஆதாரம் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லையென்றார் இவானொவ்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை கொள்கை ரீதியாக மட்டுமே பயன்படுத்தும். ஆனால் சந்தேகத்துக்கிடமின்றி இரசாயன ஆயுதங்கள் பாவித்தவர் யார் என்பது தெரிய வருமானால் நிச்சயம் நிலைமை முற்றிலும் வேறு விதமாகவே இருக்கும் என்றார் அவர்.

### ஐ.நா.பொதுச் சபையில் வல்லரசுகள் வாய்த் தர்க்கம்

கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா. பொதுச் சபையில் உரை நிகழ்த்திய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சிரியாவுக்கு எதிராக ஐ.நா. கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

ரஷ்ய பிரதிநிதி பேசும் போது அமெரிக்க -ரஷ்ய ஒப்பந்தத்தின்படி சிரிய அரசிடமிருக்கும் இரசாயன ஆயுதங்கள் கையளிக்கப்படுவதை வற்புறுத்துகின்றோம். ஆனால் அதனை வர்த்தக மற்றும் பொருளாதாரத் தடைகளை விதித்து நெருக்குவதன்மூலம் செய்விக்க முனைவதை ஆதரிக்கப் போவதில்லை யென்றார்.

ஐ.நா.பேரவையின் வருடாந்தக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய செயலாளர் நாயகம் பான்கிமூன் சிரியா விவகாரத்தில் வெளிச் சக்திகள் தலையிட்டு எரியூட்ட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தமது பேச்சில் மத்திய கிழக்கில் எரிபொருள் விநியோகத்தையும் பெருமளவில் நாசம் விளைவிக்கும் ஆயுதங்களை அழிக்கச் செய்வதையும் உறுதிப்படுத்துவதற்கான அமெரிக்க நலன்களை பாதுகாப்பதற்குத் தாம் தயாராய் இருப்பதாக அறிவித்தார். அவர் மேலும் பேசுகையில்: அதிபர் அசாத் தனது சொந்த மக்கள் மீதே இரசாயன ஆயுதங்களை பிரயோகித்துள்ளதையடுத்து உலகின் நம்பகத் தன்மை ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது என்றார்.

ஒப்பந்தத்தை மேலும் ஸ்திரமான தாக்கும் வகையில் அதனை ஐ.நா. சட்டத்தில் இடம்பெறச் செய்யும் வகையில் தீர்மானம் ஒன்றை நிறை வேற்ற வேண்டும் என்று மேற்கு மற்றும் அரபு நாடுகள் வற்புறுத்து கின்றன. என்றாலும், தீர்மான வாசகம் தொடர்பாக ரஷ்யா பிரச்சினை கிளப்பி வருகின்றது. சிரியா மீது பலவந் தத்தை அல்லது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கான சொற் றொடர்கள் இடம்பெறுவதை ரஷ்யா எதிர்த்து வருகின்றது.

### தலிபான் தலைவர் விடுவிப்பு

பாகிஸ்தான் சிறையில் வைக்கப்பட்டிருந்த மிக மூத்த ஆப்கான் தலிபான் தலைவரான அப்துல் கானி பராதார் கடந்த வாரம் சனியன்று விடுதலை செய்யப்பட்டார். பாகிஸ்தானின் இந்தச் செயற்பாடு ஆப்கான் தலைவர்களால் வரவேற்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளுடனான அமைதிப் பேச்சுக்களுக்கு இந்தச் செயற்பாடு ஊக்கமளிப்பதாக இருக்கும் என்று மூத்த ஆப்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கான் தலிபான் சிரேஷ்ட தலைவர் முல்லா ஓமாரின் வலது கையாக செயற்பட்டவர் அப்துல்கானி பராதார். மூன்று ஆண்டு காலமாக அவர் பாகிஸ்தான் சிறையில் வைக்கப்பட்டிருந்துள்ளார்.

### தேவாலயத்தில் தற்கொலைத் தாக்குதல்

பாகிஸ்தானின் பேனாவார் நகரில் தேவாலயம் ஒன்றில் கடந்த வாரம் ஞாயிறன்று நடத்தப்பட்ட இரண்டு தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களில் குறைந்தது 29 பேர் கொல்லப்பட்டு 46 பேர் காயமுற்றனர். ஆராதனைகளை முடித்துக்கொண்டு மக்கள் வெளியில் வந்து கொண்டிருக்கையில் தேவாலயத்துக்கு வெளியில் இரண்டு தற்கொலை குண்டுதாரிகள் தம்மைத் தாமே வெடித்துச் சிதற வைத்துக் கொண்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## தேசிய இனப் போராட்டங்கள்

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். ''தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகணைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில்தமிழினத்தின்தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



தமிழ்நாடு பல மன்னர்களால் ஆளப்பட்டாலும்கூட அவர்களின் கீழிருந்த பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை என்பது எத்தகைய வேறுபாடும் இல்லாமல் ஒருபடித்தானதாக அமைந்திருந்தது. தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் தமிழர்களின் அக, புற வாழ்க்கை முறைகளும், கடைப்பிடித்த பழக்க வழக்கங்களும் ஒரே மாதிரியாகத்தான் அமைந்திருந்தன.

**இலக்கிய உடைமை:** மொழி ஒரு தேசிய இனத்தை உருவாக்கியதைப் போல அந்த மொழியின் இலக்கியங்களும் அந்தத் தேசிய இனத்துக்குரிய பண்பாடுகளை உருவாக்குகின்றன. பிற இனப் பண்பாடுகளின், ஊடுருவலின் விளைவாகச் சங்கப் புலவர்களின் பாடல்கள் அழிந்துபடும் நிலை தோன்றியபோது அவற்றைத் தொகுத்துப் பேணிய மூவேந்தர்களின் செயல்களில் தேசியத் தன்மை உண்டு. இதைப் பற்றித் தமிழ் அறிஞர் தெ. பொ.மீனாட்சி சுந்தரனார் ''உண்மையில் சங்க இலக்கியங்கள் தேசியக் கவிதைகளே" என்றார்.



தேசியக் கவிதைகள் என்பது நாட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்றவை என்ற பொருளில் அல்ல. ஒரு வலுவான தேசிய இனத்தின் குரல் அந்தக் கவிதைகளின் கருவில் அமைந்து கிடக்கிறது என்ற பொருளில்தான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**பொதுப் பழக்க வழக்கங்கள்:** தென்புலத்தாரைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம், நடுகல் நாட்டி வணங்கும் வழக்கம் போன்ற தமிழர்களின் பொதுப் பழக்கங்கள் ஒரு தேசியத் தன்மையில் அடிப்படையில் அமைத்தவையாகும். இது போன்ற பழக்கங்கள் தமிழர்களை ஒன்றுபடுத் தியுள்ளன.

**சமூக மரபு:** தமிழர்கள் மரபு வழியில் நிலையான தன்மை கொண்டிருந்தனர். உடல் அமைப்பு, பண்பாட்டுக் கூறுகள், ஒழுக்க நியதிகள் ஆகியவற்றில் அவர்களிடம் ஒன்றுபட்ட தன்மை இருந்தது.

எனவே தமிழர்கள் தனித்தேசிய இனத்தவரே என்பது பெறப்படும்.

ஒரு தேசிய இனத்துக்கு மொழியே அடிப்படையாக அமைகிறது. உலகில் பெரும்பாலான மக்கள் மொழியின் அடிப்படையிலேயே தங்கள் தேசிய இனத்தை அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். ஒரு தேசிய இனத்தைச் சுட்டிக் காட்டும் சிறந்த அடையாளமாக மொழியே விளங்குகிறது.

தமிழர்களும் மொழியின் மூலமாகவே தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். தமிழர்களைப் போலவே தொன்மையான இனத்தவரான கிரேக்கரும் மொழியின் அடிப்படையிலேயே தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். சீனர், பாரசீகர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக் காரர், அரேபியர் போன்ற பலரும் அவ்வாறே அழைக்கப்பட்டனர்.

"தமிழ் எனும் சொல் மக்கள் கூட்டத்தையும் நாட்டையும் குறிக்க வந்திருக்கலாம்'' எனக் கே.சிவராசப்பிள்ளை கருதுகிறார்.

தமிழ் இனத்தைப் பொறுத்தவரை அகச் சான்றுகளை வைத்து நோக்கின்மொழியைக்கொண்டேதமிழினம் பெயர் பெற்றுள்ளமை தெளிவாகும். மொழியைச் சார்ந்தே இனம், நாடு, பண்பு ஆகியவற்றைக் கண்டனர் தமிழர். தமிழ்-தமிழகம்- தமிழ்நாடு- தமிழ் உலகம் என்பன மொழி, இனம், பண்பு ஆகியவற்றின் கருத்தைக் குறிக்க எழுந்த பிற வடிவங்களேயாகும்.

''பழந்தமிழ் நூல்களில் பயின்று வரும் திணை, குடி, குலம், கணம், இனம் ஆகிய சொற்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருள்களை உடையனவாக விளங்குகின்றன. விழுத்திணை, தொல்குடி, நல்லினம் போன்ற சொற்கள் தொடக்கத்தில் கால்வழி என்ற பொருளைத் தந்தன. காலப்போக்கில் இனம் என்ற சொல் மட்டும் மிகுந்த பொருளைத் தரும் சொல்லாக மாறிவிட்டது.

தமிழில் வழங்கும் தேசிய இனம் என்றசொல் ஆங்கிலத்திலுள்ள Nation என்ற சொல்லுக்குரிய நேரடியான தமிழ்மொழி பெயர்ப்பாகும். நாட்டினம் என்ற சொல்லோ, தேசிய இனம் என்ற சொல்லோ 19 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கியங்களில் கையாளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய இனம் பற்றிய சிந்தனை ஏதாவது ஒரு வடிவில் தொன்மைக் காலம் தொட்டே தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. எனினும் அதை விளக்குவதற்குரிய கலைச்சொல் உருவாகவில்லை"

''நாட்டவர், நாட்டகம், எனப் பழந்தமிழில் வழங்கிய சொற்களை இன்று வழங்கும் நாட்டினம் என்ற சொல்லுக்கு இணையானவையாகக் கருதலாம்"

நாடு என்ற சொல்லே நாட்டினத்தைக் குறிக்க வருவதாகத் தமிழறிஞர் தெ. பொ.மீனாட்சி சுந்தரனார் கருதுகிறார். Nation என்ற சொல்லுக்கு ஆங்கிலப் பேரகராதி பின்வரும் பொருள் தருகிறது. பொது மரபினாலோ, பொது மொழியாலோ, பொது வரலாற்றாலோ பரந்து விரிந்துபட்ட மக்கள் ஒரு குழுவாக இணைந்து தங்களுக்கென்று வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அரசை நிறுவி வாழ்பவர்.

'அந்த மண்ணிலேயே பிறந்து அந்த மண்ணிலேயே வாந்து மடியும் கூட்டம்" என்ற பொருள்களோடு வேறு பல பொருள்களையும் தருகிறது. இந்த இரு பொருள்களே Nation என்ற சொல்லுக்கு நெருங்கிய தொடர்புடையன. 'நாடு' என்ற சொல் நாட்டினத்தைக் குறிக்கும் என்று டாக்டர். தெ.பொ.மீ. முன்னே கூறிய கருத்து இங்கே வலுப் பெறுகிறது.

'பொறையொருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவர்க்கு இறையொருங்கு நேர்வது நாடு' (குறள் 733)

என்ற குறள் விளக்கும் கருத்தில் நாட்டினம் என்ற பொருளே தொக்கி நிற்கிறது. மேலும் வள்ளுவர் நாடு என்ற அதிகாரத்தில் கூறும் கருத்துக்கள் அனைத்தும் ஒரு நாட்டினத் தன்மையை (தேசிய இனப்பான்மை) அல்லது ஓர் நாட்டினம் பெற்றிருக்க வேண்டிய சிறப்புக் கூறுகளை விளக் கிக் காட்டும் போக்கிலேயே அமைந் துள்ளன.

'வரையறுக்கப்பட்ட எல்லை' (குறள் 737)
(அதில்) 'ஒரே அரசு' (குறள் 735)
'வேந்தமைவுடைய தன்மை' (குறள் 740)
'தன்னிறைவுடைய நிலைமை' (நாடாவளம்) (குறள் 739)
'மக்களின் அரசப்பற்று'
'மக்களின் ஒருமைப்பாட்டுணர்வு' (குறள் 733)
'இன்ப வாழ்வு காணும் மக்கள்' (குறள் 738)

ஆகியன ஒரு நாட்டுக்கு இன்றியமையாதன என்று வள்ளுவர் கூறுகிறார். ஒரு நாட்டினத்தை வரையறுப்பதற்கும் மேற்கண்ட கூறுகள் இன்றியமையாதன என்று இன்றைய சமூகவியலாளர் கருதுகின்றனர்.

### ஏழு - ஏழு - சஷ்டி

கொத்துக் கொலை ரத்தப் பசியுடை
புத்திக்கெதிர் நித்தக் கருவெறி
செத்துத்தொலை மொத்தத் தமிழனும் எனவோதும்

மஞ்சற் துணி மானம் மூடிட
கஞ்சற் பணி காலம் மேவிட
பிஞ்சுக் கொலை பேணுந் தேரனின் அடிபேணி

வற்றிச் சதை உரிந்தொழுகிடும்
பற்றித் தீ எரி பசுந் தேகமும்
முற்றஞ் சிவந்திட மூடு குருதியும் இரவாகி

வட்டத் தொழுவினுள் வளை மந்தைகள்
கட்டி அடித்துயிர் வறுகும் கொலைஞனின்
திட்டத் தோடினம் மொத்தஞ் சிதைத்த ஓர் நாளே

நித்தப் பணி நீளத் தொழுதுணை
சத்தக் கழி, சாவின் குடல் வரை
இத்தகுமோ இத்தகுமோ என அழுதாரை

வஞ்சாங் [illegible]
அஞ்சேல் தருவிரல் அபயம் வீணென
துஞ்சிப் பெருங் சுபிலின் சிலையென பழுதாகி

வெற்றுக்கடல் வீசுந் தமிழொலி
சுற்றுப் புலம் சூழ்ந்துன் செங்காதில்
சற்றுமகைவின்றி சடத்தின் நிகருடன் வேல்தாங்கி

முற்றுமழித்தவன், சுற்றஞ் சிதைத்தவன்
பெற்ற வாய் பிளந்து பிணமாக்கிப் புணர்த்தவன்
போற்றிய ஹெலியால் பூழை வாங்கிய பெருமாளே...!

-அபிதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தி யோசி...

# ஸ்டோர்களை நிரப்புமா யாழ். ஸ்ரோபரி?

உமாசுதன், பார்ஷான்



"புதிய புதிய முயற்சி களை எப்போதும் செய்து பார்க்க வேண்டும். வெற்றியே கிடைக் கும் என்ற நேர் சிந் தனை மட்டும் அதற்கு முதலீடாகப் போதும். அந்த வெற்றியில் எல்லோரையும் பய ணிக்க வைக்க வேண்டும்."

குளிர் காலநிலைக்குரிய பயிரான 'ஸ்ரோபரி'யை மிதவெப்ப வலயமான யாழ்ப்பாணத்தின் செம்மண் தரையில் பயிர் செய்து அறுவடையாக்கி வெற்றி பெற்றுள்ளார் குணசிங்கம் புவிந்தன்.

புதியன படைக்கும் உத்வேகம் உள்ள இளைஞர்கள்தான் இந்த உலகைப் புரட்டிப் போடக் கூடியவர்கள். புவிந்தன் அவர்களில் ஒருவர். 9 முதல் 13 பாகை செல்சியஸ் வெப்ப நிலைக்கு குறைவான காலநிலையிலேயே வளரும் தன்மை கொண்ட ஸ்ரோபரியை அளவெட்டி மண்ணில் அழகுபடுத்தி இருக்கிறார்கள்.

"இது ஒரு ஈர, அதியுயர் ஈரவலயப் பயிர். யாழ்ப்பாணத்தின் வெப்பநிலை குறைந்தது 24 செல்சியஸாகவும் கூடியது 30 செல்சியஸாகவும் இருக்கையில் இங்கு இந்தப் பயிர் வராது" என்கிறார் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஸ்ரீபாலசுந்தரம். ஆனாலும் இந்தச் சவால்களை எல்லாம் தாண்டி ஸ்ரோபரியை பயிராக்கி இருக்கிறார் புவிந்தன.

யாழ். குடாநாட்டின் மேற்குப் புறமாக உள்ள அளவெட்டி புவிந்தனின் சொந்த இடம். பிரதேசத்தின் ஏனைய விவசாயிகளுக்கும் மகிழ்ச்சியூட்டும் விதத்தில் இவரது பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

இதுவரை யாழ்.குடாநாட்டின் பணப் பயிராக விளங்கிய-புகையிலைக்கு தற்போது அரச ஆதரவு கிடைக்காத







நிலையில், மாற்றுப் பணப் பயிரைத் தேடிக் கொண்டிருக்கும் நிலையில் புவிந்தனின் வெற்றி விவசாயிகள் புருவத்தை உயர வைத்துள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பகுதிநேர தகவல் தொழில்நுட்ப ஆசிரியராகவும் தனியார் கணினிக் கற்கைகள் நிறுவனத்தின் விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகின்ற துடிப்புமிக்க இளைஞனான புவிந்தனுக்கு பூக்கன்றுகளை வளர்ப்பதே பொழுதுபோக்கு.

நுவரெலியாவுக்கு ஒரு தடவை நண்பர்களுடன் சுற்றுலா சென்ற போது தான் ஸ்ரோபரி பயிரிடும் யோசனை புவிந்தனுக்கு பொறிதட்டியது.

நுவரெலியாவின் கந்தன் மூலிகைத் தோட்டத்தில் ஸ்ரோபரியை உற்பத்தி செய்திருந்தார்கள். அதைப் பார்த்த புவிந்தனுக்குத் தானும் அதனைப் பயிரிட்டுப் பார்த்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. ஆர்வ மேலீட்டால் 9 ஸ்ரோபரி கன்றுகளை உடனேயே வாங்கி வந்தார்.

வீட்டின் கிணற்றோரமாக அவற்றை நட்ட புவிந்தனுக்கு ஆச்சரியம். பயிர் நன்றாகச் செழித்து வளர்ந்தது.

"கிலோ ஒன்று 1,200 ரூபாவிற்கு விற்கப்படுகின்ற ஸ்ரோபரியின் சந்தை வாய்ப்பே இந்த முயற்சிக்கு வித்திட்டது" எனச் சொல்கிறார் புவிந்தன்.

"எந்த நேரமும் பயிரினைச் சுற்றி ஈரலிப்புத்தன்மை இருக்க வேண்டும். பயிரிடப்பட்ட ஆரம்ப நிலையில் நிழல் மிகவும் அவசியமானது. பசளையாகத் தனி மாட்டெரு இடப்பட வேண்டும். பசளையும் ஈரலிப்பும் இதன் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. பூச்சாடிகளில் இதனைப் பயிரிடுவது சிறப்பு. ஏனெனில் இதன் வளர்ச்சி ஒரு சாண் வரை மட்டுமே. நிலத்தில் பயிரிட்டால் பயன்தருகின்ற வேளையிலே பழங்களின் நிறை காரணமாக நிலத்தில் சாய்ந்துவிடுகின்றன. இதனால் கிருமித் தொற்று ஏற்படுவதுடன் விளைச்சலின் அளவினை அது வெகுவாகக் குறைக்கின்றது" என்று ஸ்ரோபரியின் விவசாய நுட்பத்தை விளக்கிக் கொண்டே போகிறார் அந்த இளம் விவசாயி.

ஒரு ஸ்ரோபரி பயிரில் இருந்து ஒன்றரைக் கிலோ வரையிலான பழங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாம். பயிரின் ஒவ்வொரு கிளைகளில் இருந்தும் 7 தொடக்கம் 8 பழங்கள் காய்த்துத் தொங்கும். ஒரு சாண் இடைவெளியில் இரண்டு கன்றுகளை வைக்க முடியும்.

வடமாகாணத்திலே இதுவரையில் ஸ்ரோபரி பயிர்செய்கை இடம்பெற்றதாக பதிவுகள் ஏதுமில்லை. "யாழ். மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகளும் இதனையே தெரிவிக்கின்றனர். எனது முயற்சியின் வெற்றியை பார்க்கும்போது அதிக சந்தை வாய்ப்பினைப் பொருளாதார வளத்தையும் தரக் கூடிய வர்த்தக பயிரான ஸ்ரோபரியைப் பயிரிட்டு எமது பிரதேச விவசாயிகள் நன்மைகளைப் பெறமுடியும்" என்கிறார் புவிந்தன்.

ஆனால், ஸ்ரோபரி குடாநாட்டில் ஒரு போதும் வராது என்பது விவசாயத் திணைக்களப் பணிப்பாளரின் கருத்து. "ஆரம்பத்தில் கன்று ஆரோக்கியமாக வளர்ந்தாலும் அதிலிருந்து அறுவடையைப் பெற முடியாது" என்று தெரிவித்தார் ஸ்ரீபாலசுந்தரம். பணிப்பாளரின் கருத்துடன் புவிந்தனுக்கு உடன்பாடில்லை. தான் நட்ட கன்றுகளில் இருந்து மூன்று தடவைகள் பழங்களைத் தான் பெற்றார் எனச் சொல்கிறார். தற்போது தொழில் முறை நோக்குடன் ஸ்ரோபெரியை அவர் பயிரிட ஆரம்பித்துள்ளார். வெற்றி கிடைக்கும் என்று திடமாக நம்புகின்றார்.

புதியவற்றைக் கண்டறியும் புவிந்தனின் முதல் முயற்சியல்ல ஸ்ரோபரி பயிரிடல். தரம் 11 படிக்கும் சிறுவனாக இருந்த போதிருந்தே இத்தகைய முயற்சிகளில் அவருக்கு இருந்த ஆர்வம்தான் இந்த வெற்றியைச் சாதகமாக்கி இருக்கிறது. 16 வயதிலிருந்தே இப்படியொரு முயற்சியில் அவர் இறங்கியிருந்தார்.

"அமெரிக்க சிவப்பு அப்பிள் பழத்தினை உண்ட பின்னர் அதன் விதைகளை இளநீரில் இரண்டு நாள்கள் ஊற வைத்து நட்டேன். அந்த முயற்சி வெற்றியளித்தது. ஆனால் தவறுதலாக இரசாயனப் பசளையைப் போட்டதால் அந்தக் கன்று பட்டுப் போனது" என்கிறார் புவிந்தன்.

இருந்தாலும் நம்பிக்கை தளர்ந்து விடவில்லை அவர். மீண்டும் அப்பிள் மரத்தை உருவாக்கும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறார். தனது முயற்சி வெற்றியளிக்கும் என்ற அசையாத நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்.

"புதிய புதிய முயற்சிகளைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்க்க வேண்டும். வெற்றியே கிடைக்கும் என்ற நேர் சிந்தனை மட்டும் அதற்கு முதலீடாகப் போதும். அந்த வெற்றியில் எல்லோரையும் பயணிக்க வைக்க வேண்டும்." இது தான் புவிந்தனின் ஒரே கனவு.

## திருமணத்துக்கு முன்பாக...

அவன்: ஓம்! ஆகக் குறைந்தது அதையாவது செய். காத்திருப்பதென்பது பெரும் வேதனை.
அவள்: நான் உன்னைவிட்டுப் போய்விடவேண்டும் என்று நினைக்கிறாயா?
அவன்: இல்லை! நான் அப்படிச் சிந்திக்கக்கூட இல்லை.
அவள்: நீ என்னைக் காதலிக்கிறாயா?
அவன்: நிச்சயமாக, மேலும் மேலும்.
அவள்: எப்பவாவது என்னை ஏமாற்றுவாயா?
அவன்: இல்லை, ஏன் இப்படியெல்லாம் கேட்கிறாய்?
அவள்: என்னைக் கொஞ்சுவாயா?
அவன்: கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்...
அவள்: என்னை அடிப்பாயா?
அவன்: உனக்கு என்ன பைத்தியமா? நான் அப்படிப் பட்ட ஆளே இல்லை.
அவள்: நான் உன்னை நம்பலாமா?
அவன்: ஓம்ம்ம்ம்!
அவள்: 'என் அன்பே!'
திருமணத்துக்குப் பின்....
அது வெகு சுலபம். மேலே உள்ளதை அப்படியே கீழிருந்து படித்தாலே போதும்.

நகைச் சுவைகள்...

ஜம்புலிங்கம் தனது நாகர்கோயில் ஓய்வு இல்லத்தில் இருந்தபோது அவருக்கு லண்டனில் இருந்து ஒரு பார்சல் வந்தது. அவரது பால்ய நண்பன் அனுப்பியிருந்தான். பார்சலை எடுத்து வந்த தபால்காரன், அதை ஜம்புலிங்கத்தின் கையில் கொடுக்கும்போது, "இந்தப் பார்சலைக் கொடுப்பதற்காக 5 மைல்கள் நான் சைக்கிளோடி வந்திருக்கிறேன்" என்றான் களைத்துப் பதைத்து. ஜம்புலிங்கமோ அவனுக்கு இலவசமாக ஒரு அட்வைஸை அள்ளி வீசினார். "நீ ஏன் இவ்வளவு தூரம் சைக்கிள் ஓடி வந்தனி? பேசாமல் பார்சலைப் போஸ்டில் அனுப்பி இருக்கலாமே!"



ஜம்புவின் தபாலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 29 09 2013 ஞாயிற்றுக்கிழமை

# அனைவரையும் வசீகரிக்க

வலிமைமிக்க, நீடித்து, நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

05

நிலாமகன்

## நீங்கள் நீங்களாகவே இருங்கள்

நீங்கள் ஓர் தனித் தன்மை வாய்ந்த நபர். ஐஸ்வர்யா ராயை போல நடிக்க, மண்டேலாவைப் போல் இருக்க, அல்லது உங்கள் மேலதிகாரியின் பாவனைகளைக் கொப்பியடித்து மற்றவர்களை வசீகரிக்க முயன்றால் நீங்கள் முழுவதுமாகத் தகர்ந்து போவீர்கள்.

வெவ்வேறு சூழ்நிலை களில், உங்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப நீங்கள் எளிதாக அவற்றை மாற்றிக் கொள்ள முடியும்.

கவர்ச்சித் தன்மை அல்லது வசீகரம் என்பது பிறப்பில் வருவது பாதி, கற்றுக்கொண்டு பெறுவது மீதி என்று ஆய்வுகள் சொல்கின்றன. இந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள பல கருத்துகளை நீண்ட நாள்களாக நடைபெற்று வரும் 'தனிப்பட்ட தாக்கம் பற்றிய பயிலரங்குகளின்' நாங்கள் பரீட்சித்துப் பார்த்து இருக்கிறோம். உண்மை யிலேயே ஒவ்வொருவரும் தம் திறமையை வெளிக் கொண்டு வருவதன் மூலம் இயல்பான வசீகரிக்கும் சக்தியைப் பெற முடியும் என்று அவை சான்றளிக்கின்றன. மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் எங்களுடைய பயிலரங்குகளால் பயனடைந்துள்ளன.

நீங்கள் யோசித்த பின்னர் இந்த வசீகர ஆற்றலை வளர்க்கும் முயற்சியைத் தொடங்கலாம். ஆனால் அதற்கு முக்கிய தேவை ஓர் எளிமையான விடயம்தான். அது என்னவென்றால் சோதனை செய்யவேண்டும் என்ற உங்கள் விருப்பம்தான்.

### பரிசோதனை

பரிசோதனை செய்வது என்பது, உங்களை முழுமையாக வேறு மனிதராக மாற்றிக் கொள்வது, அல்லது உங்களுடைய அடிப்படையான மனப்பாங்கு, தோற்றம் இவற்றை மாற்றிக் கொள்வது என்று பொருளல்ல. இப்போதும் நீங்கள் நீங்களாகவேதான் இருப்பீர்கள். இருந்தாலும் நடவடிக்கைகளில் புதிய வழிகளை முயற்சித்து புதுவகையான ஒரு நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வது என்றால், புதிய கருத்துக்களைப் பரிசோதிப்பது புது நடவடிக்கைகளை ஆராய்வது, உண்மையில் நீங்கள் ஏற்படுத்தும் பாதிப்பைப் பற்றிய சுய விழிப்புணர்வை உயர்த்துவதற்கான வழிகளைக் கண்டு பிடிப்பது போன்றவற்றில் உங்களுடைய விருப்பத்தை வளர்த்துக்கொள்வதாகும். ஊழியர்களை ஊக்குவிப்பதில் வல்லவரான ஆனி சம்மர்ஸ் என்ற சங்கிலித் தொடர் ஸ்டோர்களின் தலைவர் ஜாக்குலின் கோல்டு சுருக்கமாக இப்படிச் சொல்லுவார். "உங்களுக்கு நீங்களே சவாலாக இருங்கள். சிறந்த விஷயங்கள் நடைபெறும்."

உங்களுடைய வசீகரிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள, பயிற்சிகளையும் பரிசோதனைகளையும் செய்வதற்கான வழிகளைத் தினமும் கண்டு பிடித்துச் செயற்படுத்துவது அவசியம். எப்போதெல்லாம் மற்றவர்களுடன் தொடர்புகொள்ள நேரிடுகிறதோ- தொலைபேசியில், கடையில், நண்பர்களுடன் உணவு விடுதியில், பயணம் செய்யும் போது, மற்றவரைச் சந்திக்கும் வேளைகளில், பானங்கள் குடிக்கும் போது என்று எந்த நேரத்திலும் நீங்கள் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

### கண்ணாடிப் பயிற்சி

மனிதர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் நுட்பத்தை நீங்கள் கைவரப் பெற்றால் அதைப் பயன்படுத்துவதற்கு அளவற்ற சந்தர்ப்பங்களைக் கண்டுபிடிப்பீர்கள்.

பரிசோதனைக்கு நீங்கள் தயாராக இருப்பதை அறிந்து கொள்வதற்குக் கீழே உள்ள கண்ணாடிப் பயிற்சியைப் பாருங்கள்.



தேவையான பொருள்கள்

- வினாடி முள்ளுடன் கூடிய கைக் கடிகாரம் அல்லது ஒரு டிஜிட்டல் கடிகாரம்.
- உங்களுக்கு முன்னால் ஒரு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடி.
- சிறிது நேரத்துக்கு எந்த இடையூறும் இல்லாத அமைதியான ஓர் இடம்.

அடுத்ததாக நீங்கள் செய்ய வேண்டியது:

1. கண்ணாடியில் ஒரு ஐந்து நிமிடங்கள் உங்களையே பாருங்கள். ஏமாற்ற வேண்டாம். பாருங்கள், பாருங்கள், பார்த்துக் கொண்டே இருங்கள் என்ன பார்க்கிறீர்கள்?
2. பார்த்துக் கொண்டிருக்கும்போது மனதை முழு விழிப்புணர்வோடு வைத்திருங்கள். உங்களுக்குப் பழக்கமான முகத்தோற்றத்துக்கு அப்பால் எதைப் பார்க்கிறீர்கள்? விழித்துப் பார்க்கும் கண்களில் என்ன பார்க்கிறீர்கள்? உங்களுடைய முகக் குறிப்பில் என்ன உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன? நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த மனிதர் எத்தகைய குண நலன்களைப் பெற்றிருக்கிறார்?
3. தனிப்பட்ட இந்த மனிதரிடம் (அதாவது உங்களிடம்) மற்ற யாரே ஒருவர் குறிப்பாக எதைக் கவனிப்பார்?

ஒரு ஐந்து நிமிடங்களுக்காவது இந்தப் பயிற்சியை உங்களால் செய்ய முடிந்ததா? இல்லை பாதியிலேயே விட்டு விட்டீர்களா? பாதியில் கைவிட்டிருந்தீர்கள் என்றால் ஏன் அது அதிக நீளமாக, கடினமானதாக இருந்தது? பாதியில் விட்டிருந்தீர்களானால் இப்போது சிறிது இடைவெளி எடுத்துக் கொண்டு பிறகு மீண்டும் முயற்சி செய்யவும்? முழு ஐந்து நிமிடங்களுக்கு, இந்த முறை இந்தப் பயிற்சியை செய்யும் போது குறிப்பாக உங்களுடைய எதிர்ச் செயல் எப்படி இருக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனிக்கவும்.

ஐந்து நிமிடங்களை வெற்றிகரமாக முடித்து விட்டீர்களா? என்ன பார்த்தீர்கள்? நிச்சயமாக உங்களைப் பார்த்தீர்கள். அது தவிர வேறென்ன? உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த மனிதர் யார்? இந்த மனிதரைப் பற்றி என்ன கவனித்தீர்கள்? இவருடைய முகத்தில் முதன்மையாகத் தெரிவது எது? இந்த மனிதர் மகிழ்ச்சியோடு இருக்கிறாரா அல்லது சோகமாகவா?




### ஏன் இதைச் செய்ய வேண்டும்?

தன் மீதே காதல் கொள்வது போல் தோன்றும் இந்தச் செயற்பாட்டை ஏன் செய்ய வேண்டும்? எப்படி இருந்தாலும், தினமும் உங்களை நீங்கள் கண்ணாடியில் பார்த்துக் கொள்வீர்கள்.

பொலிவோடு, கவர்ச்சியோடு தோன்றுவதற்கு நிறைய நேரத்தைக் கண்ணாடிமுன் செலவிடக் கூடும். உங்களை இன்னமும் அதிக மாகத் தெரிந்து கொள்ள உங்கள் சுய விழிப்புணர்வை அதிகரிக்க சமிக்ஞைகளையும், தகவல்களையும் உற்றுக் கவனித்துப் புரிந்து கொள்ளும் திறமையை அதிகரிக்க இந்தக் கண்ணாடிப் பயிற்சி உதவுகிறது.

அதனால், கண்ணாடியில் எத்தகைய மனிதர் உங்களை உற்றுப் பார்த்தார்? ஆழ்ந்து யோசிக்கும் நபரா, தொடர்ந்து சிரிப்பவரா, அல்லது புருவத்தை நெரித்துக் கொள்ளும் மனிதரா, அல்லது மகிழ்ச்சியாக, துயரமாக, கோபமாக, கவலையோடு இருப்பவரா? இவற்றை வைத்துக் கொண்டு அந்த மனிதரைப் பார்த்தவுடன் அவரைப் பற்றி உங்களால் என்ன சொல்லமுடியும்? (வளரும்)

# பொய்களாக்கப்பட்ட வரலாறுகள்

மெய்மைகளை ஒளித்துவிட்டு மெல்ல மெல்லப்
பொய்மைகளைப் புகுத்துகின்றனர் வரலாறதில்
உண்மைகள் நெடுநாளும் உறங்கிக் கிடக்கும்- ஆனாலும்
உயிர் நீத்து விடாது ஒரு போதும்

மெய்ச் சரித்திரத்தையே இரையாக்கிக் கொண்ட பொய்கள்
பாங்குகள் கூறி நிமிர்ந்து நிற்கின்றன நீதியைக் கொன்றுவிட்டு
தமிழ் மறவர் தம் வீரமும், மாண்ட தமிழ் வேந்தர் தம் புகழும்
தகர்த்தெறிந்து விடப்பட்டன வரலாற்றின் பக்கத்தைவிட்டு

அநீதிக்கெதிராக குரல் கொடுக்க அஞ்சி நடுங்கும் கூட்டம்
ஆண்மையாம் தம் வீரம் கூறித் திரிகின்றனர் வெட்கமின்றி- இதைத்
தவறென்று எதிர்த்துப் பேசத் தயங்கும் தமிழன்- இத்தரணி
தனிலே தலைநிமிர்ந்து வாழ்வது எப்போது?

சாகாத தன் சரித்திரம் தனைப் படித்துவிட்டால்
-பின்னர் சிங்கம்தனை மிதித்து சிகரம் தனைத்
தொட்டுவிடுவான் என்றெண்ணியோ
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்
தோன்றிய தமிழனை
காலமது கடந்து இந்நாடு வந்தோரென
வரலாறமைத்தனர் பொய்யாய்

உண்மையே ! நீ உறக்கத்தின்றும் விழித்தெழு
விரைந்து உன்னைப் பொய்களாக்கும் கயவர் தம்
[illegible] அத்தனையும்
[illegible] உன்னை [illegible]
உத்தமர்களை உன் பக்கம் சேர்த்து மெய்ச் சரித்திரம்
தனைப் படைத்துவிடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகத்தை அழிக்க போவது யார்?

## விஞ்ஞானிகள் தரும் விடை

ரம்யன்

கடந்த 2012 ஆம் ஆண்டு உலகம் அழியப்போகிறது என்று முன்கூட்டியே சிலர் அறிவித்து உலக மக்களை திகில் கொள்ளச் செய்திருந்தார்கள். அப்படி ஏதும் நிகழாது போனாலும் அந்த ஆண்டின் கடைசிநாள் முடிவடையும் வரை அந்த நிகழ்வை எதிர்பார்த்து இருந்தவர்களும் உண்டு.

உலகம் அழிவது பற்றி முன்கூட்டியே அறிவித்தவர்கள் தமது எதிர்வுகூர்வு நிகழ்ந்துவிட்டால் தங்கள் நம்பிக்கைகளை, அல்லது சமய சிந்தனைகளை மெய்யானவை என்று விதந்துரைத்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் உலகம் உண்மையாக அழிந்திருக்குமானால் அது பற்றி பேசுவதற்கு இவர்கள் எங்கே இருந்திருக்கப் போகிறார்கள்? இவர்களும் சேர்ந்துதானே அழிந்திருப்பார்கள்?

இறுதியில் அது வெறும் கற்பனை அல்லது மூடநம்பிக்கை என்ற வகையில் முடிவுக்கு வந்தது. அவர்களும் அதைப் பற்றிய பேச்சையும் மறந்ததுபோல் விட்டுவிட்டார்கள்.

எதுவானாலும் இப்போது வேறு ஒரு வகையில் உலகம் அழியத்தான் போகிறது என்ற வகையில் ஒரு சிந்தனை முன்வைக்கப்படுகின்றது.

அதன்படி, உலகம் இயற்கையாக, அல்லது வேற்று கிரகவாசிகள், அதுவும் இல்லையென்றால் சமயவாதிகள் சிலர் நினைப்பதுபோல் இறைவனின் கோபத்துக்கு அல்லது சாபத்துக்கு உள்ளாகி அழிவதாக இருக்காது. உலகம் அதில் வாழும் மனிதனின் செயற்பாடுகளாலேயே அழியப் போகிறது. போகிற போக்கைப் பார்த்தால் நாளைய தினமே அல்லது இன்னும் சில காலம் கழித்து இந்த அழிவை மனிதன் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளப் போகிறான் என்பதே அந்தப் புதிய சிந்தனை.

இதனை வெறும் நம்பிக்கையினால் ஆரூடமாக எவரும் முன்வைக்கவில்லை. விஞ்ஞானபூர்வமாக சிந்திக்கும் அறிஞர்களே இந்தக் கருத்தினை முன்வைக்கிறார்கள்.

இயற்கை அனர்த்தங்களான ஒரு விண் எரிகல் பூமியின் மீது மோதுவதனால் அல்லது, மிக உச்ச காலநிலைகள் மற்றும் உலகம் முழுவதும் பரவக் கூடிய வைரஸ் நோய்கள் போன்றவை உலக அழிவுக்கு காரணமாக இருக்கலாம். ஆனால் அதைவிட "மனிதனின் இருப்புக்கு இன்று ஏற்படக்கூடிய அச்சுறுத்தலானது மனிதன் மூலமே ஏற்படுவதாய் இருக்கப் போகிறது" இவ்வாறு கூறுகிறார் லோர்ட் மார்ட்டின் றீஸ் என்ற அறிஞர்.

றோயல் மற்றும் கேம்பிறிஜ் பல்கலைக் கழகவிண்வெளிவிஞ்ஞானியானஇவரும் பௌதிகவியலாளர்கள் ஸ்டீபன் ஹாக்கிங் மற்றும் முன்னாள் அரசதுறை பிரதான விஞ்ஞானி றொமேர்ட்மே போன்ற பிரபல சிந்தனையாளரும். உலகின் முழு அழிவுக்கு வழி கோலுவதான அச்சுறுத்தல்களை ஆராயவும் பரிகார மார்க்கங்களைக் கண்டுபிடிக்கவுமென சபை ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த சபையின் தலைவராக மார்ட்டின் றீஸ் பிரபு இருக்கின்றார். பயங்கரவாதிகளால்மேற்கொள்ளப்படக்கூடிய கணினி மூலமான தாக்குதல்கள் மனிதனின் முதல் அச்சுறுத்தல் என்கிறார். உலக வலைப்பின்னலைப் பயன்படுத்தி மிக மோசமான அழிவுகளை பயங்கரவாதிகளால் உருவாக்க முடியும். மக்களைத் தாக்கும்படியான நோய்களை பரவச் செய்ய முடியும். கணினிகளே கொலைக் கருவிகளாக பயன்படுத்தப்படலாம். எனவே உலகின் எதிர்காலம் மிகவும் பயங்கரமாகவே காணப்படுகின்றது என்கிறார்கள் இந்த அறிஞர்கள். என்றாலும் இந்த ஆபத்துக்களில் இருந்து உலகத்தை காப்பாற்றுவதற்கான ஆராய்ச்சிகளை இவர்கள் தமது அமைப்பின் மூலம் இப்போது மேற்கொண்டு வருகிறார்கள். இந்த ஆராய்ச்சிகள் பயனளிக்கும் என்றும் நம்புகிறார்கள்.

ஆபத்து எதுவென அடையாளம் காணப்பட்டவுடன் அதிலிருந்து உலகை காப்பாற்றும் மார்க்கமும் கண்டுபிடிக்கப்படும் என்பது அவர்களின் நம்பிக்கை. விண் எரிகற்கள் பூமித்தரையில் மோதுவதன் மூலம் மாபெரும் அழிவுகளை ஏற்படுத்துவது சாத்தியமே. அதற்கு எதிராக நாம் எதுவும் அதிகமாக செய்து பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வது இலகுவல்ல என்கிறார் கேம்பிறிஜ் பல்கலை புள்ளிவிவரவியலாளர் பேராசிரியர் டேவிட் ஸ்பீஜல் ஹோல்டர் என்பவர். "எமக்கு இன்னமும் சரியாக தெரியாமல் இருப்பது என்னவென்றால் தொழில்நுட்பவியல் அபாயங்கள் ஆகும். தொழில்நுட்பத்தின் மீது நாம் பெருமளவும் சார்ந்திருப்பதே அதன் ஆபத்துக்களுக்கும் பாத்திரமாகும் நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. மின் சக்தியிலிருந்து உணவு பரிமாறல், வங்கி சேவைகள் வரை நாம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொறி முறைகளிலேயே தங்கியிருக்கிறோம். இவைகளில் ஏதாகிலும் தவறு ஏற்படுமானால் அல்லது பிரச்சினை ஏற்படுமானால் அல்லது சதிவேலை இடம்பெறுமானால் உண்மையாகவே ஆபத்து விளையவே செய்யும். இன்றைய காலப்போக்கில் எல்லாம் நவீனமயமாகியுள்ள நிலையில் உணவுகளை களஞ்சியப்படுத்தும் முறையைக் கைவிட்டு வருகின்றோம். உணவு பொருள் விநியோகம் தடைப்படுமானால் 48 மணி நேரத்துக்குள் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டு கலவரம் தோன்றிவிடும். அப்படிப் பார்க்கும் போது தனிப்பட்ட நபர்களும்கூட பழுதடைந்து போகாத உணவு வகைகளை ஓரளவுக்கு சேமித்து வைத்துக் கொள்வது நலமாகும். சக்தியை உருவாக்கிக் கொள்வதற்கு வெளிநாடுகளில் இருந்தே எரிபொருள் தருவிக்கும் நிலையும் இருக்கிறது. அந்த வகையிலும் பாதுகாப்புகள் பற்றி ஆலோசிப்பது அவசியம் என்கிறார்கள் அவர்கள்.

அவ்வளவு ஏன், இப்பொழுது எந்த வல்லரசு நாட்டிடம் அணுகுண்டு, இரசாயனக்குண்டு அல்லது அது போன்ற பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இல்லை?

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வடகொரியா ஆகிய நாடுகளிடம் அணுகுண்டுகள் ஏராளம் தாராளமாக இருக்கின்றன. இந்த நாடுகள் ஏதாகிலும் ஒன்று தன் எதிரி நாட்டின் மீது குறைந்த அளவில் அணு ஆயுதத்தைப் பிரயோகித்தாலும் உலக அழிவுக்கு வழிவகுத்துவிடலாம். சமீபகாலத்தில் அணு ஆயுதம் சிலவற்றை உருவாக்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் வடகொரியா பெரும் எடுப்பில் அமெரிக்காவுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்யும் அளவுக்கு ஆத்திரமூட்டலில் இறங்கியதைக் காணமுடிந்தது. அதன் காரணமாக கொரியகடல் பகுதியில் அமெரிக்க அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட விமானங்களுடன் கூடிய பெரிய கப்பல் அணியொன்று அனுப்பப்பட்டிருந்தது. நல்ல காலமாக எதுவித அழிவுகளும் ஏற்படவில்லை. இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானில் ஹிரோஷிமா மற்றும் நாகசாக்கி ஆகிய நகரங்கள் மீதும் அமெரிக்கா அணுகுண்டு வீசியதன் எதிர்விளைவுகளால் இன்னமும் அந்த நாட்டு மக்கள் அவஸ்தைகளுக்குள்ளாகி வருகிறார்கள். அணு குண்டுகளை பதுக்கி வைத்துள்ள இடங்களில் ஏதும் தவறு நடந்தாலும் அதனால் பெரும் அழிவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு. அதைவிட அணு ஆயுதக் கிடங்குகள் எந்த நாட்டிலாவது தீவிரவாதிகளின் கைகளில் சிக்குமானால் உலகத்தை கடவுளால்தான் காப்பாற்ற வேண்டியிருக்கும். உலகை அச்சுறுத்திக் கொண்டுள்ள விடயங்களாக பின்வரும் விடயங்கள் பட்டியல் இடப்படுகின்றன.

### தொழில்நுட்பவியல் ஆபத்துக்கள்

கணினிகளின் வலையமைப்புகள் தங்களுக்கென்றே ஒரு சொந்த செயல்முறையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இயந்திரங்கள் மனிதனின் தேவைகளைப் பயன்படுத்திக் கொண்டு தமது சொந்த குறிக்கோள்களை எட்டிப்பார்க்கலாம். அதனால் மனிதனுக்குத் தேவையான உணவுகள் அழிக்கப்பட்டு மனித இனம் அச்சுறுத்தலுக்குள்ளாகலாம்.

### இணையங்களின் தாக்குதல்

ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டுள்ள இணையங்களின் மீது தங்கியிருக்கும் மின் கிறிட்டுகள், விமானப் பயணக்கட்டுப்பாடுகள், வங்கி சேவைகள் மற்றும் தொடர்பாடல்கள். இவைகள் எதிரி நாடுகளின் அல்லது தீவிரவாதிகளின் செயற்பாட்டால் முடங்க நேருமானால் சமூகவலை அமைப்புகள் சீர்குலைந்து நாசம் ஏற்படும்.

### உருவாக்கப்படும் தொற்றுநோய்கள்

மனிதனால் உருவாக்கப்படும் ஒரு சூப்பர் வைரஸ் அல்லது உயிர் அணு சோதனை கூடத்திலிருந்து தவறுதலாக ஒரு வைரஸ் வெளியேறுமானால் அல்லது பயங்கரவாதிகளால் விடுவிக்கப்படு மானால் மில்லியன் கணக்கான மக்கள் மடிய நேரும்.

### உணவு வழங்கலில் ஏற்படும் சீர்குலைவு

மேற்குலகில் பல நாடுகள் 48 மணி நேரத்துக்கான உணவு வகைகளையே சேமித்து வைக்கும் பழக்கத்தில் உள்ளன. இதில் ஏற்படும் தடங்கல் பேரழிவாக மாறிவிடும்.

### காலநிலைகளின் சீர்குலைவு

பூமி உருண்டையானது தொடர்ந்து வெப்பமடைந்து வருகின்றது. ஒரு குறிப்பிட்ட நிலையில் அது பின் நகர்த்த முடியாத ஒரு கட்டத்தை எட்டும் போது இயற்கை அழிவுகள் தவிர்க்க முடியாததாகிவிடும்.

### தொற்றுநோய்கள் விரைவாக பரவுதல்

ஒரு புதிய உயிர் கொல்லி வைரஸ் விலங்குகள் மூலம் உருவாகி உலகம் முழுவதிலும் சில நாள்களில் மிக விரைவாக பரவக்கூடும். அதனால் புதிய எதிர்ப்பு மருந்தொன்று கண்டு பிடிப்பதற்கு முன்னர் மில்லியன் கணக்கானவர்கள் இறக்க நேரிடும்.

### போர் அழிவு

மனித வர்க்கம் வேகமாக விருத்தியடைவதன் காரணமாக உணவு, மற்றும் தண்ணீர் போன்ற மூல வளங்களில் தட்டுப்பாடு ஏற்படலாம். இந்த மூலப் பொருள்களை தம்வயமாக்கிக் கொள்ள நாடுகள் போரில் இறங்கக் கூடும்.

### அணு ஆயுத தாக்குதல்

நாடுகள் போர்களில் இறங்கி அணு ஆயுதங்களைக் கொண்டு இலக்குகளைத் தாக்கலாம். அதனால் பெரும் போர் தொடங்கி உயிர்கள் அழிய நேரும். அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளில் சிக்கிவிடும் அபாயமும் உண்டு.

### விண் எரிகல் பூமியில் மோதல்

ஒரு காலத்தில் பூமியின் மீது விழுந்து சிதறிய மாபெரும் விண் எரிகல்லினால் அக்காலத்தில் பூமியில் வாழ்ந்த டைனோசர்கள் அழிந்துபோனதாக நம்பப்படுகின்றது. அதேபோன்றதொரு தாக்கம் மீள ஏற்பட்டால் ம[illegible] இனத்துக்கும் அதே கதி ஏற்படல[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத்திலிருந்து பிரித்தெடுத்த முகங்கள்

facebook

**வடக்குத் தேர்தலையொட்டி முகப்பு புத்தகத்தில் பதைரப்பட்டவர்களும் பல் வேறு கருத்துக்களை விறுவிறுப்பாக பதிவு செய்துகொண்டிருந்தார்கள். அவற்றில் சில இங்கே...**



**Varathan Kirisna**
நான் இலங்கையி
மாகாணத்தில், தட

நான் இலங்கையில் நடந்த மாகாணசபைத் தேர்தலில் வட மாகாணத்தில், தமிழ்க் கூட்டமைப்பு மாபெரும் வெற்றிப் பெற்றதில் பெருமிதம் கொள்ளவில்லை. சிங்களவர்கள் சூழ்ந்த மலையகத்தில் 14 உறுப்பினர்கள் தமிழர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மலையகத் தமிழர்களின் ஒற்றுமையை பாராட்டவேண்டிய கடமைக்கு வந்து நிற்கிறோம். மாகாண சபை உருவாக்கம் பெற்று முதல் தேர்தலில் இரண்டு உறுப்பினர்களுடன் இருந்த மத்திய மாகண சபையில் இன்று 14 தமிழர்களின் ஆதிக்கம். தமிழர் தாயகம் என்று சொல்லப்படும் நிலைகளைத் தாண்டிய இடம். அதுதான் மலையகம்.



**Sambasivam Harikaran**
21 ம் திகதிக்கு பின் என்
(முகங்களையும் உற்று

21 ஆம் திகதிக்கு பின் என்னை தாண்டிச் செல்லும் எல்லா தமிழ் முகங்களையும் உற்றுப் பார்க்கிறேன்.
ஏதோ ஒரு வரலாற்று கடமையை செய்து முடித்த திருப்தி.
இத்தனை நாளும் தேக்கி வைத்திருந்த ஆத்திரத்தை யார் மீதோ தீர்த்துக் கொண்ட நிம்மதி. ஏனிந்த மாற்றம்? இவர்கள் அப்படி என்ன செய்தார்கள்? இவை எனக்குள் எழும் விடை தேடும் கேள்விகள்.



**Surenthira Thurairaja**
வெள்ளையனிடம் இரு
தசாபத்தமாக எம்மை

வெள்ளையனிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து பல தசாப்த்தமாக எம்மை அடித்து அழித்தார்கள். காலாதிகாலம் அதை மறக்காமல் இருந்து திருப்பி அடித்தோம். எம்மை சர்வதேசநாடுகளோடு சேர்ந்து அடித்து அழித்தார்கள். நாம் மீண்டும் எழும்பிவிட்டோம் மக்கள் புரட்சியாக. ஜனநாயக வழியில் உரிமையோடு எமது உரிமையை கேட்போம். அரசிடம் மட்டுமல்ல எம்மை சேர்ந்து அழித்த சர்வதேச நாடுகளிடமும். தயவு செய்து மண்டியிட்டுக் கேளாதீர்கள். மக்கள் வழங்கிய தீர்ப்பு. உரிமையை மானத்தோடு கேட்பதற்குத்தான். துப்பாக்கிக்கு முன்னால் எதிர்த்து நின்று தூக்கித் தந்த ஜனநாயக ஆயுதத்தை மறந்து விடாதீர்கள் அன்பர்களே..



**Kumarathasan Karthigesu**
மக்கள் எழுச்சியினால் சா
கூட்டமைப்பு கட்சிகள் அ

மக்கள் எழுச்சியினால் சாத்தியமான வெற்றியை கூட்ட்மைப்பு கட்சிகள் அமைச்சுப் பகிர்வில் போட்டுடைத்து விடுவார்களோ என்ற கவலை இப்போது.. ஆனந்தசங்கரி தோல்வி : வன்னி மக்களின் தீர்ப்பு கவனிக்கத்தக்கது...



**Thiru Thirukkumaran**
22 September

அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மாகாண சபைக்கு அறுதிப் பெரும்பான்மை பெற வாக்களித்த மக்கள். ஐ.நா. மேற்பார்வையில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தினால் என்ன செய்வார்கள்?
அடக்குமுறையாளர்களே! மீள்நல்லிணக்கத்தை போதிக்க முனைபவர்களே! மற்றும் தோல்வி மனப்பான்மையால் பாதிக்கப்பட்ட நண்பர்களே! சிந்தியுங்கள்...
எல்லாவற்றையும்விட மகிழ்ச்சி என்னவென்றால், ஐக்கிய தேசியக்கட்சிக்கு மக்கள் அடிவயிற்றில் போட்ட அடிதான். எங்கள் விலைமதிக்க முடியாத சொத்தான பொது நூலகத்தை எரித்ததில் இருந்து, பலமாக இருந்த விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை என்ற பெயரில் அழைத்து கிழக்கு வடக்கென உடைத்து பலவீனப்படுத்தி, சர்வதேசத்தை முழுவதுமாக எமக்கெதிராகத் திருப்பி விட்டு இன்று நாம் இருக்கும் இந்தக் கையறு நிலைக்கு முதன்மைக் காரணகர்த்தாக்களான ஐ.தே.கவை. அப்படி ஒரு கட்சியே வடக்கில் இல்லை எனுமளவுக்கு மக்கள் அடித்து விரட்டியிருக்கிறார்கள்.
மக்கள் ஏதோ தங்கள்பாட்டில் இருப்பது போல் தெரிந்தாலும் மனசுக்குள், இவர்கள் ஆபத்தானவர்கள் நிராகரியுங்கள் என்று நினைத்திருக்கிறார்கள். அன்று தம்பிள்ளைகள் ஐ.தே.க. குறித்துச் சொன்னதை இன்னும் ஞாபகம் வைத்து மிகுந்த அரசியல் விழிப்புணர்வுடன் பாடம் புகட்டியிருக்கிறார்கள்.



**Jera Thampi**
ஈழம்- தமிழக
நேர்கோட்டுக்

பரமசாமி ஐயாவுக்கு 67 கடக்கையில், கனகத்துக்கு 65 வயதாகிறது. நேற்றிரவு நெடுநேரமாகியும் இருவரும் உறங்கவில்லை. முதுமையின் தனிமையும், கவலையும், கிடுகுத்துவாரங்களுக்குள்ளால் தெரியும் கோடி நட்சத்திரங்களை எண்ண வைத்துவிட்டன.
வாக்களிக்கப்போவதில்லை என்ற முடிவோடு அதிகாலையில் கனகம் உறங்கிப்போனாள். பரமசாமி உறங்கியிருக்க வாய்ப்பில்லை. வழமையான இருமல் அவரின் இரவைத் தின்றது.
5 மணிக்கே கனகத்தின் மூளையில் மணியடித்தது. மானத்தை மறைக்க வைத்திருக்கும் கடைசிச் சேலையை (வெள்ளையில் பிறவுண் பூப்போட்டது) வரிந்து கொண்டாள். படத்தட்டை சுத்தப்படுத்தினாள். படத்தட்டில் வழமையாக வீற்றிருந்த சிவன் குடும்பத்தாருக்கு ஓய்வு கொடுத்து ஒதுக்கிவிட்டு, அதற்குப் பின்னால் மறைந்திருந்த மேஜர். கார்வண்ணனின் படத்தை அன்றைய படத்தட்டுக்குரியவனாக்கினான்.
மங்கிய புலி வரியுடையில் எப்போதும்போன்ற சின்ன சிரிப்போடு கார்வண்ணன் தன் அம்மாவை பார்த்துக் கொண்டிருந்தான். கதவை உட்பக்கமாகப் பூட்டிக்கொண்டு மகனுக்குத் தாய் விளக்கேற்றினாள். அவளின் கண்ணீர் அந்த காலைப்பொழுதை சுத்தப்படுத்தியது.
பரமசாமிக்குப் பொறி தட்டியிருக்க வேண்டும். பறந்தடித்து எழும்பினார். தலையணைக்கடியில் இருக்கும் சுருட்டுக் குறையனை எடுத்துக்கொண்டு தீப்பெட்டியைத் தேடவும் இங்க கெதியா வாங்கோ என்று படத்தட்டடியிலிருந்த கனகத்தின் அசரீரி கேட்கவும் சரியாக இருந்தது. மகனை பார்த்ததும் எழும் எல்லா உணர்வுகளையும் விழுங்கிக் கொண்டு, கும்பிட்டார் பரமசாமி.
கெதியா வெளிக்கிடுங்கோ. மூன்றாவது காலின் உதவியோடு அவள் தெத்தத் தொடங்க, யாரோ ஒரு இளசு இருவரையும் வாக்களிக்கும் பாடசாலை வரை வழிநடத்தினான். விரலில் மை தடவி உள்ளே அனுப்பினான். திருப்பிக் கூட்டிவந்து விட எந்த இளசும் தயாரில்லை. தனியே நடக்கையில் கேட்டாள். யாருக்குப் போட்டனியப்பா இந்த துலைஞ்சிபோவாருக்குத்தான் (அதிகம் நேசிப்பவர்களை சுட்ட பயன்படுத்தப்படும் செல்லச் சொல்).
தேத்தண்ணியாவது போடன். வந்த களையோடு அடுப்பை மூட்டினாள் கனகம். தேயிலை இருக்கவில்லை. நக்கிக்கு குடிக்குமளவுக்கு இருந்த சீனியை கருக்கி அரை - அரை டம்ளர் சாயத்தண்ணியோடு வெளியே வந்தாள். திண்ணையில் சரிந்த பரமசாமி கடவுளை அடைந்து இரண்டு நிமிடங்கள் கடந்திருந்தன.

--------------------------------

செய்தி- வாக்களித்துவிட்டு வீடு திரும்பிய தமிழ் தேசிய பற்றாளர் மரணம் -



**Janakan Sivagnanam**
வடக்கு மாகாண சபை
கூட்டமைப்பு தெரிவா

வடக்கு மாகாண சபையை ஆட்சி செய்ய தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவாகியுள்ள நிலையில், தேர்தல் வெற்றி பற்றிய ஒரு பதிவு.
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த வெற்றியை த.தே.கூட்டமைப்புக்கு பெற்றுக் கொடுத்த பிரதான காரணிகள் ஐந்து.
1. மக்களின் ஆர்வம்.
2. எதிரணி கட்சிகளின் உட்கட்சி மோதல்கள்.
3. ஊடக ஆதரவு
4. அரசாங்கம்
5.புதிய முகங்களின் வரவு

***மக்களின் ஆர்வம் :***
அண்மைய தேர்தல்களைக் காட்டிலும் இந்தத் தேர்தலில் மக்கள் காட்டிய ஆர்வம் அதிகமானது. இளைஞர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை ஆர்வம் காட்டியிருந்தனர். அதிலும் பெண்களின் ஆர்வம் குறிப்பிடத்தக்கது. வெவ்வேறு காரணங்களுக்காக அவர்களின் ஆர்வம் இருந்தாலும் அவை அனைத்தும் தேர்தலையே மையமாகக் கொண்டிருந்தன.
ஆனால், இந்த அதிகரித்த வாக்களிப்பானது சந்தேகத்தோடு கணிக்கப்பட்டதும் கவனிக்கத்தக்கது.

***எதிரணி கட்சிகளின் உட்கட்சி மோதல்கள் :***
அரச கட்சியினர் மக்களின் ஒன்றித்த ஆதரவை பெற வேண்டிய நிலையில், தமக்குள் ஒன்றித்த உறவை வளர்க்காமல் முரண்பாடுகளை வெளிப்படையாகவே கொண்டிருந்தது இத் தேர்தலின் முடிவில் தாக்கத்தை காட்டியிருக்கின்றது. (கட்சித் தலைமை இனியாவது கவனத்தில் எடுக்கட்டும்.) அத்தோடு இத்தகைய முரண்பாடுகளும் மக்களை தேர்தலில் வாக்களிக்க தூண்டியதும் மறுக்க முடியாததே.
த.தே.கூட்டமைப்புக்குள்ளும் முரண்பாடுகள் இருந்ததும் மறுக்க முடியாதவை.

***ஊடக ஆதரவு :***
குடாநாட்டு ஊடகங்கள் தமக்குள் தனிப்பட்ட கொள்ளை நீரோட்டங்களை கொண்டிருந்தாலும், பிரதான படகை கவிழ்ப்பதற்காக அவை அனைத்தும் ஒன்றிணைந்தமை கவனிக்கத்தக்கது.
ஊடக பிரசாரத்தின் பங்களிப்பும், எதிரணிகளை வீழ்த்தும் செய்திகளுக்கான முக்கியத்துவங்களும் மக்கள் மத்தியில் அதீத செல்வாக்கை செலுத்தியிருந்தன.
த.தே.கூட்டமைப்பின் வீட்டுக்குள் இருந்த சண்டைகளைப் பக்கத்து வீடுகளுக்கு கூடத் தெரிய விடாமல் பார்த்துக் கொண்ட சாணக்கியம் யாழ். ஊடகங்களுக்கே உரித்தானது.
த.தே.கூட்டமைப்புக்குக் கிடைத்த இந்த வெற்றி ஒருவகையில் ஊடகங்களினால் சாத்தியமாக்கப்பட்ட வெற்றிதான்.

***அரசு:***
இந்த வட மாகாண சபைத் தேர்தலில் யாரும் எதிர்பார்க்காத பங்களிப்பை அரசு த.தே. கூட்டமைப்புக்குச் செய்துள்ளது.
தேர்தலுக்கான தனது கட்சியின் வேட்பாளர் தெரிவில் மேற்கொண்ட அணுகுமுறையும் தெரிவும்.
வடக்கு தேர்தல் தொடர்பில் சில உடனடி முடிவுகளை எடுக்கத் தவறியமை. குறிப்பாக தேர்தலில் இராணுவ தலையீடு தொடர்பிலான முரண்பாடுகள்.
பலமான ஊடக ஆதரவை தமக்கு ஏற்படுத்திக் கொள்ளத் தவறியமை.
அரச தரப்பு தலைவர்கள் சிலரின் கருத்துக்கள் ஏதோ ஒருவகையில் த.தே.கூட்டமைப்புக்குச் சாதகமாக இருந்தமை.

***இவற்றோடு புதிய முகங்களின் வரவு...***
இரு தரப்பிலும் ஏராளமான அரசியல் புது முகங்கள் இருந்தனர். த.தே.கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் உள்ளிட்ட பலரும், ஐ.ம.சு.மு இன் பெரும்பாலான வேட்பாளர்களும் புதியவர்களாகக் களமிறங்கியிருந்தனர்.
அந்தப் புதுமுகங்கள் ஐ.ம.சு.முவுக்கு இறங்குமுகங்களாக இருந்ததோடு, த.தே.கூட்டமைப்புக்கு ஏறுமுகங்களாகவும் மாறியிருந்தமை கவனிக்கத்தக்கது ( விருப்பு வாக்குகளும் அதையே சொல்லப் போகின்றன)
கவனத்துக்கு :- நேற்று வரை வீடு என்றிருந்த கருத்து பகிர்வுகள் இன்று தமிழ் தேசிய உணர்வாக மாறியிருக்கின்றன. ஆனால் இந்த கருத்து நிலையானது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டுமன்றி கட்சிக்குள்ளும் இருந்தால் மக்கள் ஏமாற்றப்பட மாட்டார்கள்.



**R.j. Kiru**
1977ஆம்
தமிழீழமே

1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், தனித் தமிழீழமே ஒரே தீர்வு என்று தமிழ் மக்கள் ஆணை வழங்கினார்கள்.
2004ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று தமிழ் மக்கள் ஆணை வழங்கினார்கள்.
2013ஆம் ஆண்டு வடக்கில் நடைபெற்ற தேர்தலில், சர்வதேசமே ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி என்று தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.
போராட்ட வடிவங்கள் மாறிய போதும்,
போராட்ட இலட்சியம் மாறவில்லை !



**ஈழ சுதேசம்**
குழப்பங்கள நி
ஊடகங்களுக்கு

குழப்பங்கள் நிறைந்த கருத்துக்களை பேசுவதும் ஊடகங்களுக்கு செவ்வியளிப்பதையும் விக்னேஸ்வரன் ஐயா தவிர்க்கவேண்டும். ஏனெனில் மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களித்தது. இலட்சியத்தை மறந்து அல்ல. மஹிந்த அரசை எதிர்த்தே. தமிழகத்திலும் புலத்திலும் இருந்து எமது இலட்சியத்துக்காகப் போராடிவரும் மக்களையும் உணர்வாளர்களையும் உங்கள் கருத்துக்களால் நோகடிக்காதீர்கள். மக்களது மனங்களில் உள்ள வடு இன்னும் ஆறவில்லை. 40,000க்கு மேற்பட்ட மாவீரர்களினதும் இலட்சக்கணக்கான மக்களதும் குருதி இன்னும் காயவில்லை. இந்த நினைவுகளோடுதான் மக்கள் உங்களுக்கு வாக்களித்துள்ளனர் என்பதை கூட்டமைப்பு புரிந்துகொள்ள வேண்டும். தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் நாளை இன்னொருகட்சி இலட்சியப்பாதையில் வந்து நிற்கும்.



**Selva Kavitharan**
கடந்த பிரதேசசபை
வடக்கு மக்களின்

கடந்த பிரதேசசபை தேர்தலில் வீட்டுக்கு வாக்களித்த வடக்கு மக்களின் வீடுகளில் அழுகுரல்கள் கேட்க வைத்தார்கள். இருப்பினும் எமக்குத் தேவை உரிமை என்ற கனவுகளோடு உயிரைப் பணயம் வைத்து வீட்டுக்கு மீண்டும் வாக்களித்துள்ளார்கள்.
இதை சம்பந்தன் ஐயாவும், சுமந்திரன் ஐயாவும் உணர்ந்து செயற்பட்டால் நன்று. மாறாக கள்ளநரி விளையாட்டுக்கள் காட்டினால் தமிழ் மக்கள் யார் என்பதை இனிவருகின்ற தேர்தல்களில் காட்டுவார்கள். இதற்கு சிறந்த உதாரணம் எங்கள் சங்கரி ஐயா. காத்திருந்து சாியான பாடம் சொல்லியிருக்கிறார்கள் மக்கள். இப்போ அவர் போனஸ் கேட்கிறார்.
தமிழ் மக்கள் விக்னேஸ்வரனுக்கோ சம்பந்தனுக்கோ வாக்களிக்கவில்லை தமிழ்த் தேசியத்துக்கே வாக்களித்துள்ளார்கள். இதனை மனதில் வைத்து இவர்கள் பயணிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல் கதைகள்

ஆதங்கன்

## துப்பாக்கி துளைத்த வெற்றிலை

இரவிரவாக கண் விழித்து வாக்குகளை எண்ணிக் கொண்டிருந்தார்கள் உத்தியோகத்தர்கள். ஒவ்வொரு கட்சிக்கும் உரிய வாக்குகளை தரம் பிரித்துக் கொண்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் ஒரு வாக்குச் சீட்டை மாத்திரம் எந்தக் கட்சிக்கு உரித்தாகுவது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார். "என்னதான் இருந்தாலும் எங்கட சனம் உணர்வோட தான் இருக்குது" என்று சற்றுப் பலமாகவே சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு வாக்குச் சீட்டோடு சக உத்தியோகத்தர் நீண்ட நேரமாக மாரடித்துக்கொண்டிருப்பதை கண்ட மற்றைய உத்தியோகத்தர்கள் அந்த வாக்குச் சீட்டில் அப்படி என்னதான் இருக்கிறது என்று ஆர்வம் பொங்க பிடுங்காத குறையாக வாங்கிப் பார்த்தார்கள். அதில் வெற்றிலை சின்னத்துக்கு நேரே துப்பாக்கி ஒன்றில் இருந்து சன்னங்கள் வெற்றிலையை துளைப்பது போன்று வரையப்பட்டிருந்தது. ஓர் உத்தியோகத்தர் சொன்னார் "பேசாமல் இதை செல்லுபடியற்ற வாக்குப் பெட்டியில் போட வேண்டியது தானே". மற்றவர் சொன்னார் "இதைப் போட்ட ஆள் தன்ர மனசில உள்ளதைத் தானே வெளிக்காட்டி இருக்கு. அது எப்படி செல்லுபடியற்றது என்று சொல்ல முடியும்?" அவர் சொன்னதும் உண்மைதானே. உண்மையைச் சொல்வது எப்படி செல்லுபடியற்றதாகும்?

## எது வாக்குப் பெட்டி?

பார்த்தவுடனேயே படித்த இளைஞன் என்பது எல்லோருக்கும் புரிந்தது. ஸ்ரைலாக கண் ணாடியை சரி செய்து கொண்டே தனது வாக்காளர் அட்டையைக் காட்டி . ஆள் அடையாளத்தை உறுதி செய்து கொண்டு வாக்குச் சீட்டைப் பெற்றுக்கொண்டான். புள்ளடி போடுவதற்கென அமைக்கப்பட்டிருந்த இடத்துக்கு சென்றான். சுற்றிவர காட்போட் மட்டையால் மறைப்பிடப்பட்ட அந்த மேசையில் வாக்குச் சீட்டை வைத்து புள்ளடி போட்டுவிட்டு பிரதான அதிகாரிக்கு முன்னால் உள்ள வாக்குப் பெட்டியில் அந்தச் சீட்டைப் போட வேண்டும். ஆனால் இந்த இளைஞனோ புள்ளடி போடும் இடத்திலிருந்து வெறுங் கையோடு வெளியே வந்தான். "எங்க தம்பி உங்கட வாக்குச் சீட்டு?" பதற்றத்தோடு கேட்டார் சிரேஸ்ட உத்தியோகத்தர். "அதைத்தான் பொக்ஸுக்குள்ள போட்டுட்டனே" என்று சொல்லிவிட்டு நடக்க முற்பட்டான். "பொக்ஸோ? அது இஞ்சையெல்லோ இருக்கு. நீர் எதுக்குள்ள போட்டனீர்?" என்று கேட்டபடியே இளைஞனோடு புள்ளடி போடும் மறைவிடத்துக்கு சென்ற அந்த உத்தியோகத்தர். அங்கே சென்று பார்த்தவருக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. அந்த இளைஞன் மறைவிடத்திலிருந்த மேசையின் பலகைகளுக்கிடையே இருந்த இடைவெளிக்குள் வாக்குச் சீட்டை நுழைத்துவிட்டிருந்தான். அது பரிதாபத்தோடு மேசைக்கு கீழே விழுந்திருந்தது. தலையில் அடித்தவாறே அந்த வாக்குச் சீட்டை எடுத்து வந்து வாக்குப் பெட்டியில் போட்டார் அந்த அதிகாரி. இளைஞன் தலையைச் சொறிந்தவாறே வெளியேறினான்.

## புலிக்குப் புள்ளடி?

உச்சி வெயிலையும் பாராமல் அந்தப் பாட்டி மூன்று மைலுக்கு அப்பால் இருந்து மூச்சிரைக்க வந்து சேர்ந்தார் வாக்களிப்பு நிலையத்துக்கு. வந்தவர் இடுப்பில் இருந்து வியர்வையில் தோய்ந்து போன வாக்காளர் அட்டையை , நொந்து நூலாகிக் கிடந்த அடையாள அட்டையை அதிகாரிகளிடம் எடுத்துக் கொடுத்தார். பாட்டிக்கு 80 வயதுக்கு மேல் இருக்கும். அப்படி இருந்தும் கூட கள்ள வாக்குப் போட வந்திருப்பாரோ என்ற சந்தேகத்தில் அடையாள அட்டையையும் வாக்காளர் அட்டையையும் நீண்ட நேரமாக அதிகாரிகள் பரிசோதித்தார்கள். பரிசோதனையின் முடிவில் அரைமனதோடு அவரை வாக்களிக்க அனுமதித்தார்கள். வாக்குச் சீட்டை கையில் வாங்கிய பாட்டிக்கு எப்படி வாக்களிப்பது என்று தெரியாமல் தடுமாறத் தொடங்கினார். அங்கிருந்த அதிகாரி உதவிக்கு போனார். "பாட்டி ! எந்தச் சின்னத்துக்கு டோட வேணும் எண்டு சொல்லுங்கோ நான் கீறுறன்." உடனே பாட்டி சொன்னார் "தம்பி ! புலிச்சின்னத்துக்கு கீறடா" அதிகாரிக்கு வியர்த்து விறுவிறுத்துப் போனது. ஐந்தும் கெட்டும் அறிவும் கெட்டவராக "அப்படி ஒரு சின்னம் இல்லையணை" என்றார். பாட்டி சிறிது நேரம் யோசித்துவிட்டு "புலி இல்லாட்டிக்கு வீட்டுக்கு கீறடா மோனே." என்று சொல்லிவிட்டு புள்ளடியிடப்பட்ட வாக்குச் சீட்டை பெட்டிக்குள் போடுவதற்காக நகர்ந்தார்.

## ஏன் கிழித்தார்?

அந்த மனிதருக்கு ஒரு ஐம்பது வயதிருக்கலாம். வரும்போதே குப்பென்று சாராய நெடி கமகமத்தது. அந்த வெறியிலும் தன் வாக்குச் சீட்டை பெற்றுக் கொண்டு புள்ளடி போடும் இடத்துக்கு தள்ளாடித் தள்ளாடி போனார். சிறிது நேரத்தின் பின் கையில் இரண்டு வாக்குச் சீட்டுகளோடு வெளியில் வந்தார். சிரேஸ்ட அதிகாரிக்கு ஒரே குழப்பம். அவருக்கு தவறுதலாக இரண்டு வாக்குச் சீட்டுக்களை முன்னால் இருந்தவர்கள் கொடுத்துவிட்டார்களோ என்று உள்ளுக்குள் பதறித் துடித்தார். என்றாலும் அதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல் . மூக்கைப் பொத்தியபடி அந்த மனிதரை அழைத்தார்.

"இஞ்ச வாங்கோ ஐயா. உதென்ன கையில ரெண்டு வாக்குச் சீட்டு. ? முன்னுக்கு இருக்கிறவை மாறி ரண்டைத் தந்திட்டினமோ"

என்று கேட்டார்.

"எனக்கு வெறி எண்டாலும் நிதானம் தப்பாது. அவை ஒண்டுதான் தந்தவை. நான் என்ர கட்சிக்கு புள்ளடி போட்டுட்டு கட்சியின் சின்னமுள்ள பக்கத்தை மட்டும் பெட்டிக்க போடப்போறன். தேவையில்லாத மிச்சத்தை கிழிச்சுக் கொண்டு போறன்." என்று அவர் சொன்னதும் தலையைக் கொண்டுபோய் சுவரில் மோதலாமா அல்லது மேசையில் மோதலாமா? என்று யோசிக்கத் தொடங்கினார் அதிகாரி.

# மன்னாரில் ஐயாயிரம் ஹெக்ரேயர் நிலம்-'பறவைகள் சரணாலயம்' என்ற போர்வையில் பறிப்பு



தமிழர் தாயகப் பகுதிகளில் போரின் பின்னரான காலப் பகுதியில் அரசபடைகளைக் கொண்டு பல்வேறு பாணியிலே நிலங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. இராணுவமுகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் பௌத்த விகாரைகள், சிங்களக் குடியேற்றங்கள், விவசாயப் பண்ணைகள் ஆகியன வடக்கில் பெருமெடுப்பில் அமைக்கப்படுகின்றன. இதற்காகப் பெருமளவு காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. அத்துடன் நின்றுவிடாது பறவைகள் விலங்குகளுக்கான சரணாலயங்கள் அமைப்பதற்கும் நிலங்கள் எடுக்கப்படுகின்றது.

இந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கின்ற பகுதியைச்சூழ (Vankalai Bird Senctuary) "வங்காலைப் பறவைகள் சரணாலயம்" என்ற பெயரில் சுமார் ஐயாயிரம் ஹெக்ரயர் (4838.95 ஹெக்ரயர்) நிலம் 2008 இல் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு பறிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் இயற்கை வள அமைச்சராக இருந்தவரும் தமிழர் விரோத நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுபவருமான [illegible] பிரதான சூத்திரதாரி.

இந்த வங்காலை முக்கோண பறவைகள் சரணாலயம் பள்ளிமுனை, சவுத்பார், வங்காலை, திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. இதன் மத்தியிலேயே தள்ளாடி பெரும் படைத்தளம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தள்ளாடி முகாமை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் நன்கு திட்டமிடப்பட்ட ரீதியில் இந்த சரணாலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பொதுமக்களும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் பகுதியின் குறித்த சில பகுதிகளில் மட்டும் நவம்பர்-டிசெம்பர் மாத காலப் பகுதிகளில் (மாரி காலத்தில்) வெளியிடத்து பறவைகள் முக்கியமாக சைபீரியன்டக்-எனப்படும் தாராக்கள், சோல்ட்ஜர் மற்றும் வேறு சில பறவைகள் இடம்பெயர்ந்து வந்து தங்கிவிட்டு மீண்டும் சென்று விடுகின்றன. வருடத்தின் பெரும்பாலான காலப் பகுதிகளில் இந்தப் பகுதி வற்றி வரண்ட சதுப்பு நிலமாகவே காட்சியளிப்பன.

இந்தப் பிரதேசத்துக்கே உரித்தான கோட்டான்கள், [illegible] கட்டாக்காலி எருமைகளையுமே விசேடமாக கழுதைகளையுமே இங்கு காண முடியும். சதுப்புநிலக் காடுகளும் கண்டற் [illegible] போதிலும் அவை பெருமளவில் அழிவடைந்த நிலையிலேயே உள்ளன. பறவைகள் சரணாலயத்துக்கு இந்தப் பிரதேசம் முற்றிலுமாக பொருத்தமற்ற ஒன்றாகவே அமைந்துள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர். பறவைகள் சரணாலயம் அமைப்பதா யின் தள்ளாடி இராணுவ முகாமை அண் டியுள்ள பகுதியே அதற்கும் பொருத்த மானதாகும். அந்தப் பகுதி பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தள்ளாடி முகாம் அகற்றப்பட வேண்டும். இல்லையேல் பறவைகள் சரணாலயத்தை காப்பாற்ற முடியாது.

இந்த சரணாலய எல்லைக்குள் எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளும் முக்கியமாக குடியிருப்பு அமைத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. வங்காலை கிராமத்தினை அண்டிய பகுதியில் குடியிருப்புக்காக அமைக்கப்பட்ட வேலிகள் [illegible] உள்ளதுடன் குடியிருப்புக்கள் அமைக்கக்கூடாது என மக்களுக்கு [illegible] விடப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் புதிய குடியிருப்புக் [illegible] எதிர்நோக்கியுள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்களை அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் தள்ளாடி இராணுவ முகாமானது விஸ்தரிக்கப்பட்டு மூன்று இடங்களில் புதிய தளங்களைக் கொண்டுள்ளது. இங்கு முன்னர் ஒரேஒரு தளமே இருந்தது. அத்துடன் புதிய சுற்றுலா விடுதிகளும், கடைத் தொகுதிகளும் இராணுவத் தேவைக் காக இந்தப் பிரதான சந்தியில் அமைக்கப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடம் திரும்பி தமது குடியிருப்புக்களை அமைக்க தடைவிதிக்கப்பட்டு இருக்கின்ற இந்த வேளையில் பறவைகளுக்கு சரணாலயம் அமைப்பது நகைப்புக்கிடமாகவே பார்க்கப்படுகிறது. பறவைகளும் விலங்குகளும் இந்தப் பகுதியில் பாதுகாக்கப்படுவது உறுதியோ இல்லையோ தள்ளாடி இராணுவ முகாம் மட்டும் இதன் மூலம் மேலும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. ஆதித்தியான், தரம்-1பி,
யா/ தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை



த.டனுஸ்ரன், தரம்-4ஏ,
யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தி.




கோ.துலக்சினி, தரம்- 4, யா/ திருஞானசம்பந்தர்

# அனுபவமே ஆசான்!



ஓர் இளைஞன் பாலைவனம் ஒன்றைக் கடக்க எண்ணி, தன்னைப் போன்ற மன உறுதிமிக்க நண்பர்கள் பலரைத் துணைக்கு அழைத்துக் கொண்டான். அவர்களிடம், "எம்முடன் முதியவர்கள் யாரும் துணைக்கு வரக்கூடாது. அவர்களது உதவியும் எமக்குத் தேவையில்லை" என்று கூறிப் பயணத்தைத் தொடங்கினான். அவரவர் தமக்குத் தேவையான பொருள்களைச் சுமந்துகொண்டு அவனோடு சென்றனர்.

பல நாள்களாகப் பயணம் செய்த பின்பும் பாலைவனத்தைக் கடந்து செழிப்பான இடத்துக்கு அவர்களால் வர முடியவில்லை. இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. கொண்டு வந்த உணவும் தண்ணீரும் தீர்ந்து கொண்டிருந்தன. மேலும் இந்தப் பாலைவனத்தை எப்படிக் கடப்பது என்ற கவலை அனைவரையும் தொற்றிக் கொண்டது. எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்கவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துத் திகைத்துப் போனார்கள்.

ஒருவன் மட்டும் சற்றுத் தூரம் ஒதுங்கிப் போனான். சிறிது நேரம் கழித்து வந்தவன், நேராகத் தலைவனிடம் சென்றான் "இன்னும் கொஞ்ச தூரத்தில் தண்ணீர் கிடைக்கும்" என்று உறுதியாகக் கூறினான். எல்லோருக்கும் வியப்பாகப் போய்விட்டது. "எங்களோடு வந்த உனக்கு மட்டும் இது எப்படித் தெரிந்தது?" என்று கேட்டனர்.

முதலில் சொல்லத் தயங்கிய அவன், நண்பர்களின் வற்புறுத்தல் காரணமாக, நான் எங்கு சென்றாலும் என் வயதான தந்தையை அழைத்துச் செல்வேன்; அல்லது ஆலோசனை கேட்டுச் செல்வேன். இப்போது இந்தப் பெட்டியில் அவரை வைத்துச் சுமந்துகொண்டுதான் வந்தேன். அவரிடம் கேட்டபோது, வெளியே வந்து சுற்றிலும் பார்த்தார். ஒரு பறவை பறந்து சென்றதைக் கண்டார். இந்தப் பறவை தண்ணீர் இருக்கும் இடத்தில்தான் வாழும். அதனால் அருகில் தண்ணீர் நிச்சயம் இருக்கும்' என்றார். அதைத்தான் நான் உங்களிடம் வந்து சொன்னேன்" என்றான்.

தலைவனான நண்பன், அனுபவமே சிறந்த ஆசான் என்பதையும் வயதானோர் ஆலோசனைகளை மதிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டான்

## கீ வரிசைப் பழமொழிகள்

- கிடக்கிறது ஓட்டுத் திண்ணை கனவு காண்கிறது மச்சு வீடு.
- கிழவிக்கு கிழவி பேத்தி.
- கிட்டவா நாயே என்றால் எட்டி மூஞ்சியை நக்குகிறது.
- கிணற்றின் ஆழமும் கயிற்றின் நீளமும் பார்க்க வேண்டும்.
- கிணற்றுத் தவளைக்கு நாட்டு விளப்பமேன்?
- கிணறு வெட்ட பூதம் வெளிக்கிட்டதாம்.

சு.ஆகீசன், தரம்-5டி,
யா/ யாழ்ப்பாணக் கல்லூரி.

## நரி



நரி ஒரு மிருகம், நரி காட்டில் வசிக்கும், நரி தந்திரம் மிக்க மிருகம், நரி ஒரு ஊனுண்ணி,நரிக்கு நான்கு கால்களும் ஒரு வாலும் உண்டு.

த.அபிநயா, தரம்-2சி,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

# மிகப் பெரிய ஆறு



கருங்கடலுக்கடியில் மிகப் பெரிய ஆறுகிழக்கு ஐரோப் பாவையும் மேற்கு ஆசியாவையும் பிரிக்கும் வகையில் ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகளோடு இணைந்து அமைந் துள்ளது.

கருங்கடல் அண்மையில் லண்டன் லீட்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கருங்கடல் பற்றிய தான பெரும் ஆராய்ச்சியை மேற்கொண்டனர். அதன் போது கருங்கடலுக்கடியில் அதி வேகத்தில் ஆறு ஒன்று ஓடுவதைக் கண்டறிந்துள்ளனர். இந்த ஆற்றின் ஆழம் 115 அடி என்றும் தெரியவந்துள்ளது. பூமியின் மேற்பரப்பில் இந்த ஆறு இருந்திருந்தால் உலகின் ஆறாவது பெரிய ஆறு என்ற பெருமையைப் பெற்றிருக்கும் என ஆய்வு களை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

சி.கஜானி, தரம்-9டி,
கிளி/ இந்துக் கல்லூரி.



## விடை தெரியுமா ? 230

### உங்களுக்கும் பரிசுகள்

1. எதிர்பை உணர்த்தும் கொடியின் நிறம் என்ன?
2. மிகச் சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?
3. ஓமோன் இல்லாத உயிரினம் எது?
4. பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள் அந்தப் பத்தும் எவை?
5. நால்வகை பாக்களும் எவை?

**விடைகள் 228**

1. பலஸ்தீனம்
2. சீனா
3. செப்ரொம்பர் -8
4. வௌவால்
5. நாய்

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 05.10.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (227)

- செ.கோகிலராஜ், தரம்-10, யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி.
- வி.அபிசா, தரம்-5, யா/நாகேஸ்வரி வித்தி.
- ச.நிரோஸ்குமார், தரம்-4, யா/நாகேஸ்வரி வித்தி.
- சு.ஆர்த்திகா, தரம்-9டி, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
- எவ். றோமி அன்ரன் குறூஸ், மானிப்பாய்



சு.அ[illegible],
சித்தங்கேணி பாலர் பாடசாலை






எஸ். ஆன்சுமேக்கா, தரம்- 3,
கிளி/ பிரமந்தனாறு ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை

■ அழகிய பாண்டியன்

மைக்ரோசொஃப்ட் அலுவலகத்தில் ஒரு பக்கம், ஐபிஎம் தனிப் பாவனைக் கணினிகளுக்கான மென்பொருள் எழுதும் வேலை துரிதமாக நடை பெற்றுக்கொண்டிருந்தது. மறுபக்கம் இயங்குதள (ஓ.எஸ்.) குளறுபடிகளைச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஒழுங்குபடுத்தப்பட்ட ஓ.எஸ்ஸை எடுத்துக் கொண்டு ஐபிஎம் நிறுவனத்துக்குப் பறந்த பில்கேட்ஸ், அங்கே அவர்களின் கணினிகளில் வைத்துப் பரிசோதித்தபோது அந்த ஓ.எஸ். முழுமையாக இயங்காமல் கண்ணாமூச்சி காட்டியது.

"விரைவில் சரிப்படுத்திக் கொண்டு வருவ"தாக ஐபிஎம்மிடம் சொல்லிவிட்டு மைக்ரோசொஃப்டுக்குப் பறந்து வந்தார் கேட்ஸ். பில்கேட்ஸ் குழுவினர் அதைச் செயற்பட வைக்கத் தெரியாமல் திண்டாடினார்கள்.

"இந்த ஓ.எஸ்.ஐ எழுதிய டிம் பேடர்ஸனையே இழுத்துக் கொண்டு வந்தால்தான் வேலை நடக்கும்" என்பதைப் புரிந்து கொண்ட கேட்ஸ், பேடர்ஸனை சந்தித்து மைக் ரோசொஃப்டில் வந்து இணையுமாறு கேட்டுக் கொண்டார். பேடர்ஸனும் உடனே ஒப்புக்கொண்டு மைக்ரோ சொஃப்டில் சேர்ந்தார்.

இப்போது பேடர்ஸனின் தலைமையில் மைக்ரோசொஃப்ட் படை அணி வகுத்தது. ஓ.எஸ். பணியில் பேடர்ஸனுக்கு அனுபவமும், திறமையும் இருந்ததால், அந்தப் பணியை விருப்பமுடன் ஏற்றுக் கொண்டார்.

சில மாத உழைப்பிற்குப் பிறகு, அந்தப் பழைய (அவரே எழுதியதுதான்) ஓ.எஸ்ஐ. ஐபிஎம் கணினிக்கு ஏற்ற வகையில் வெற்றிகரமாக மாற்றியமைத்து விட்டார் பேடர்ஸன். அன்று மைக்ரோசொஃப்ட் அலுவலகத்தில் வெற்றி மகிழ்ச்சி எல்லோருடைய முகங்களிலும் தாண்டவமாடியது.

இப்படித் திருத்தப்பட்ட ஓ.எஸ்க்கு பீசி-டிஓஎஸ்(Personal computer-Disk operating system) என்ற புதுப் பெயரைச் சூட்டியது மைக்ரோ சொஃப்ட்.

இப்படியாக ஐபிஎம் கணினிக்கான மென்பொருள் மற்றும் ஓ.எஸ். தயாரித்துக் கொடுப்பதற்காக மைக்ரோசொஃப்ட் ஓர் ஆண்டு உழைத்திருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த ஓர் ஆண்டு என்பது ஐஎம்பி நிர்ணயித்த கால அளவுதான்.

இதற்கு ஐபிஎம் நிறுவனத்திலும் வன்பொருள் மற்றும் பிற சமாச்சாரங் களும் தயாராகியிருந்தன. எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து ஐஎம்பி பீசி கணினிகள் 1981 ஒகஸ்ட் 12 ஆம் நாள் சந்தைக்கு வந்தன.

மற்ற கணினிகளைக் காட்டிலும் ஐபிஎம் கணினிகள், விலை குறைவாகவும், அளவில் சிறியதாக வும் சற்று மேம்பட்ட வசதிகளுடனும் இருந்ததால் அமெரிக்க மக்கள் ஐபிஎம் கணினிகளை அள்ளிக் கொண்டு போனார்கள். பெரிய அளவிலான கணினி ஜாம் பவனாக விளங்கிய ஐஎம்பி நிறுவனம், தனிப் பாவனைக் கணினிகளிலும் தானே ஜாம்பவான் என்பதை நிரூபித்தது.

"ஆண்டுக்கு 50,000 கணினிகள் விற்க வேண்டும்" என்பதுதான் ஐபிஎம் இலக்காகி இருந்தது. அவர்களே எதிர்பாராத அளவில் ஆண்டுக்கு 200, 000 கணினிகளுக்கு மேல் விற்பனையாயின.

இந்த பிரமாதமான வெற்றியைப் பார்த்து மற்ற கணினி நிறுவனங்கள் எல்லாம் மிரண்டு போயின. "இந்தப் பிரம்மாண்டமான வெற்றிக்கு மைக்ரோசொஃப்டின் மென்பொருள்களும் பீசி-டிஓஎஸ் இயங்குதளமும் தான் காரணம்" என்று மைக்ரோசொஃப்ட் தரப்பிலிருந்து மறைமுகமாகப் பிரசாரம் ஒன்று முடுக்கி விடப்பட்டது.

பின்னர் என்ன? புதிதாகக் கணினி தயாரிப்பில் இறங்கியவர்களும் பழைய நிறுவனங்களும் மைக்ரோசொஃப்டுக்குப் படையெடுத்து வந்து, கியூவில் நின்று கொண்டு, "எங்கள் கணினிகளுக்கு உங்கள் மென்பொருளும், ஓ.எஸ் உம் வேண்டும்" என்று அடம்பிடித்தார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழலுக்காகத்தானே பில்கேட்ஸ் காத்திருந்தார். வந்திருந்த அத்தனை பேரிடமும் காசை வாங்கிக் கல்லாவில் போட்டுக் கொண்டு மென்பொருள் எழுதிக் கொடுத்தும், ஓ.எஸ்ஐ விற்றும் குபேரனாகிக் கொண்டிருந்தார்.

முதலில் எஸ்சிபீ நிறுவனத்திடமிருந்து ஓ.எஸ்ஐயும், பின்னர் டிம் பேடர்ஸனையும் கொண்டு வந்து உருவாக்கப்பட்ட பீ.சி.-டிஓஎஸ் ஐ உருவாக்க பில்கேட்ஸுக்கு ஐபிஎம் நிறுவனம்தான்!

ஐபிஎம் இடமிருந்து டொலர்களை வாங்கிக் கொட்டிக்கொண்ட பில்கேட்ஸ், பீசி-டிஓஎஸ் யை ஐபிஎம் இற்கே விட்டுக்கொடுத்திருக்கவேண்டும். ஆனால் கேட்ஸ் அப்படிச் செய்யவில்லை.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்ற நேரம் பார்த்துப் பில்கேட்ஸ் "ஒரு வருடம் கடுமையாக உழைத்து..... எக்கச்சக்கமான டொலர்களைக் கொட்டி...... இந்த பீசி-டிஓஎஸ்-ஐ உருவாக்கி இருக்கிறோம். இதை இப்போது நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். பின்னாள்களில் வேறு எவருக்கும் விற்பதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு" என்றார்.

ஐபிஎம் கொஞ்சம் விறைத்துக் கொண்டு "இது எங்களுக்காக உருவாக்கப்பட்ட ஓ.எஸ். இதன் மூலம் முழு உரிமையும் எங்களுக்குத்தான் சேர வேண்டும்" என்று நெருக்கியிருந்தால் பில்கேட்ஸுக்கு வேறு வழியிருந்திருக்காது. அவரும் விட்டுக் கொடுத்திருப்பார்.

ஐபிஎம் நிறுவனத்துக்கோ கணினி சந்தையைப் பிடிக்க வேண்டும் என்கிற அவசரம். இந்த ஓ.எஸ். உருவாக்கவே ஒரு வருடம் ஆகி இருக்கிறது. கடைசி நிமிடத்தில் பில்கேட்ஸ் "தர மாட்டேன்" என்று சொல்லிவிட்டால் வேறு யாரிடம் போய் ஓ.எஸ். கேட்பது? இப்படியெல்லாம் அவசரமாகச் சிந்தித்த ஐபிஎம், "பிற்காலத்தில் யாருக்கு வேண்டுமென்றாலும் விற்றுக் கொள்ளுங்கள்; இப்போதைக்கு எங் களிடம் கொடுங்கள்" என்று கூறி வாங்கிச் சென் றார்கள்.

ஐபிஎம் பீசிக்களின் அமோக வெற்றியைத் தொடர்ந்து புதிதாகக் கணினி தயாரிப்பில் இறங்கிய நிறுவனங்கள்; ஓ.எஸ்இற்காகப் பில்கேட்ஸிடம் கையைக் கட்டிக்கொண்டு நின்றன.

"இப்படி எல்லாம் நடக்கும்" என்று எதிர்பார்த்துத்தானே அந்த உரிமையைத் தன்னிடம் வைத்திருந்தார் அவர்.



பில்கேட்ஸ் கொடுத்த 75,000 டொலர்கள்! இப்போது மேலும் 9, 25,000 டொலர்கள் ஆக மொத்தம் வெறும் பத்து லட்சம் டொலர்கள் மட்டுமே எஸ்சிபி நிறுவனத்துக்குக் கிடைத்தது. ஆனால் பில்கேட்ஸ் சம்பாதித்ததோ மில்லியன்களையும் தாண்டி பில்லியன்களில்.... ❞

பீசி- டிஓ எஸ் என்ற பெயரில் ஐபிஎம் இற்குக் கொடுத்த அதே ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை இப்போது எம்எஸ்-டிஓஎஸ் என்று பெயர் மாற்றம் செய்து மற்ற நிறுவனங்களுக்கும் விற்று டொலர்களை எண்ண ஆரம்பித்தார். ஐபிஎம் இற்கு விற்ற அதே ஓ.எஸ்ஐ மாற்றவர்களுக்கும் விற்றால், அது ஐபிஎம் இற்கு நட்டம்தானே? பில்கேட்ஸைப் பொறுத்த வரையில் மைக்ரோசொஃப்டின் வளர்ச்சிதானே முக்கியம்.

எஸ்சிபீ நிறுவனம்தான் உருவாக்கிய ஓ.எஸ்ஐ பில்கேட்ஸ் இத்தனை வழிகளில் காசு பண்ணிக் கொண்டிருப்பதைக் கொஞ்சம் தாமதமாகப் புரிந்து கொண்டதும் சுதாகரித்துக் கொண்டு பில்கேட்ஸிடம் வந்து "நீதி" கேட்டது. கேட்ஸிடம் நீதி கிடைக்காததால் எஸ்சிபீ நிறுவனம் நீதிமன்றத்துக்குச் சென்று விட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, "ஓ.எஸ் விடயத்தில் பில்கேட்ஸின் திருவிளையாடல்"களைப் புரிந்து கொண்டு, "மைக்ரோசொஃப்ட் நிறுவனம் 925,000 டொலர்களை எஸ்சிபீ நிறுவனத்துக்குக் கொடுக்க வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

ஏற்கனவே பில்கேட்ஸ் கொடுத்த 75,000 டொலர்கள். இப்போது மேலும் 925,000 டொலர்கள் ஆக மொத்தம் வெறும் பத்து லட்சம் டொலர்கள் மட்டுமே எஸ்சிபி நிறுவனத்துக்குக் கிடைத்தது. ஆனால் பில்கேட்ஸ் சம்பாதித்ததோ மில்லியன்களையும் தாண்டி பில்லியன்களில்.





### பக்க விளைவுகளை தவிர்க்க.....

ஜம்புலிங்கம் ஒருநாள், பனடோல் குளிசைகளின் ஓரங்களை கத்திரித்துக் கொண்டிருந்தார். அது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? 'பக்க' விளைவுகளை தவிர்ப்பதற்காகவாம்.

ஜம்புவின் தடாலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலின் அருமை வெயிலில் தெரியும்

இ.நிவேதா,
வேம்படி மகளிர் கல்லூரி.

மேகக் கூட்டங்களுக்கிடையே சிறைப்பட்ட நிலவின் ஒளி அந்த சிறைச்சாலை முழுதையும் இருளில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. எங்கோ தொலை தூரத்தில் நாயொன்று ஊளையிடும் சத்தம் அந்தச் சூழலில் பயங்கரமாக எதிரொலித்தது. இடையிடையே விடுதலையாகிய நிலவின் ஒளியில் சிறைச்சாலையின் பெயர்ப்பலகை பிரகாசித்துக் கொண்டிருந்தது.

தன்னை நோக்கி வந்த நுளம்பை கையால் விலத்திவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டான் முகுந்தன். "எல்லோரும் தூங்குங்க..." என்று கூறி தன் தடியால் சிறைக் கதவுகளில் தட்டியவண்ணம் வந்து கொண்டிருந்த சிறைக்காவலாளி சிதம்பரம், அந்த சிறை வரிசையில் இறுதியாக இருந்த அறைமுன் மட்டும் ஒரு நிமிடம் நின்று பார்த்து விட்டுச் சென்றுவிட்டார். சிறைக்குள் முகுந்தன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பதாக நினைத்தார் அவர். அவர் சென்ற மறுநொடியே தன் கண்களைத் திறந்து கொண்டான் முகுந்தன். திறந்ததுதான் தாமதம் அவனது கண்களி லிருந்து நீர்த்துளிகள் போட்டி போட்டுக்கொண்டு வெளியே வந்தன.

முகுந்தன் எழுந்து அமர்ந்து கொண்டான். அவனது முகம் எதையோ பறிகொடுத்தவனைப் போல் பரிதாபகரமாக இருந்தது. முகுந்தன் சிறைக்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகின்றன. இதுவரை அவன் யாரிடமும் கதைத்ததுகூட இல்லை. அவ னுக்கென்றிருந்த ஒரே ஆறுதல் சிறைக்காவலாளி சிதம்பரம் ஐயாதான். அவரிடம்தான் முகுந்தன் தன் கடந்த காலத்தைப் பற்றி சொல்லுவான். தன் துன்பங்களைப் பகிர்ந்து கொள்வான். அவரும் முகுந்த னோடு மிகவும் அன்பாகவே பேசுவார்.

தூக்கம் இன்றித் தவித்துக் கொண்டிருந்த முகுந்தன், அங்குமிங்கும் நடக்கத் தொடங்கி னான். ஆனாலும் அவனது நினைவுகள் அனைத்தும் கடந்த காலத்தையே சுற்றித் திரிந்தன.

அழகான கிராமம், அன்பான வீடு, பாசமான பெற்றோர் என்று கொடிகட்டிப் பறந்தவனுக்கு குறை என்று கூற ஒன்று மட்டுமே இருந்தது. "ஏழ்மை"! அதை மிகவும் கொடுமை என்று முகுந்தன் எண்ணினான். அவனை அவனது பெற்றோர்கள் எவ்வளவுதான் அன்பாக வளர்த்தாலும், அவனது மனதில் தான் ஒரு "ஏழை" என்ற தாக்கம் குடிகொண்டிருந்தது.

கிராமப்புறத்தில், வசதிக்கேற்ப சிறிய வீடு ஒன்றில்தான் முகுந்தனின் குடும்பம் வசித்து வந்தது. அப்பா, அம்மா, தங்கை என்று முகுந்தன் ஏக்கத்துடனேயே வாழ்ந்தான். வறுமையால் பல துன்பங்களை அனுபவித்த முகுந்தனின் மனம் ஆடம்பர வாழ்க்கைக்காக ஏங்கியது. அவன் கெட்ட நண்பர்களுடன் சேரத் தொடங்கி னான். ஆடம்பர வாழ்க்கையை விரும்பிய முகுந்தனின் வாழ்க்கைப் பாதை மாற்றியது. பிரகாஷ் உடனான நட்புத்தான் அவனைக் கவிழ்த்தது. பிரகாஷ் பெரிய தொழிலதிபரின் மகன். பணத்திமிரால் தீய வழிகளில் சென்று உல்லாசமாக இருப்பவன். போதை, மது என்று அவனிடம் இல்லாத பழக்கங்களே கிடையாது. ஆடம்பரத்தின் மீது மோகங்கொண்டு பிரகாஷ் உடன் சேர்ந்து சுற்றத் தொடங்கினான் முகுந்தன். மது அருந்துவது, பின் வீட்டுக்கு தாமதமாக வருவது, வேலைக்குச் செல்லாமல் ஊர் சுற்றுவது என்று முகுந்தன் தன்னையே மாற்றிக் கொண்டான்.

விடுமுறை நாளன்று வழக்கம்போல் பிரகாஷ் உடன் மது அருந்திவிட்டு போதையில் தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தான் முகுந்தன். வழியில் ஒரு முதியவர் முகுந்தனின் நிலைமையைக் கண்டு அறிவுரை கூற முற்பட்டார். போதை தலைக்கேறி ஒரு மிருகமாய் மாறியிருந்த முகுந்தன் அந்த முதியவரை வெறி கொண்டவன் போல் பிடித்துத் தள்ளினான். எழுபது வயது வாய்க்கப்பெற்ற அவர் முகுந்தனின் தாக்குதலில் நிலைகுலைந்து வீழ்ந்தபோது அருகில் இருந்த சுவரில் தலை அடிபட்டு அவ்விடத்திலேயே உயிரை விட்டார்.

முகுந்தன் பைத்தியக்காரன் போன்று ஓடினான். வீட்டுக்குள் சென்று மறைந்து கொண்டான். ஆனால் பொலிஸார் எப்படியோ அவனைப் பிடித்து விட்டனர். நீதிமன்றத்தால் அவனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

"என்னப்பா நித்திரையாகிவிட்டாய் என்று நினைச்சன், இன்னும் படுக்கேல்லையா? " என்று சிதம் பரம் ஐயாவின் குரல் வலுக்கட்டா யமாக முகுந்தனை நிகழ்காலத் துக்கு அழைத்து வந்தது. வாடியிருந்த முகுந்தனின் முகத்தில் கண்ணீர் வடிந்திருந்த அடையாளங்கள். அழுது அழுது அவனது கண்ணீர் வற்றிப் போயிருந்தது. சிதம்பரம் ஐயாவுக்கு பதில் கூறக்கூட அவனால் முடியவில்லை. வாயிலிருந்து வார்த்தை வரவே துடித்தது. மௌனமாக நின்ற சிதம்பரம் ஐயா, அவனுக்கு ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லாமல் திரும்பினார். முகுந்தனின் கண்முன்னே அவனது அப்பா, அம்மா, தங்கையின் உருவங்கள் வந்து வந்து மறைந்து போயின. அந்த நிமிடம் முகுந்தனின் மனம் சொன்னது "நிழலின் அருமை வெயிலில் தெரியும்" என்று. தன் மனம் சொன்னதற்கே பதில் கூற முடியாமல் மீண்டும் போய் படுத்துக் கொண்டான்.



முகுந்தன் எழுந்து அமர்ந்து கொண்டான். அவனது முகத்தில் எதையோ பறிகொடுத்தவனைப் போல் பரிதாபகரமாக இருந்தது. முகுந்தன் சிறைக்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகின்றன.

# உயர்ந்த எண்ணங்கள்

நவீன நாகரிகம் நம்மை நெருங்க, நெருங்க நமது சிந்தனைகளும், உயர்ந்த எண்ணங்களும் நம்மை விட்டு மறைந்து போகின்றன. குறிப்பாக இளம் சந்ததியினர்தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய ஆற்றல் ஐம்புலன்கள் ஊடாக வெளியுலகை நோக்கிப் பாய்கின்றது. இவர்களின் தாளத்துக்கு பெற்றோரும் கைகொடுக்கிறார்கள் என்ன பரிதாபம்?

எண்ணங்கள்தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆளுகை செய்கின்றன. நல்ல எண்ணங்களோ, கெட்ட எண்ணங்களோ நம்மிடம் இருந்து தோன் றும்போது அது உடனே செயல்பாடாகப் பரிணமிக் கிறது. அந்த செயல்பாடே மற்றவர்களிடம் இருந்து நம்மைத் தனியாக அடையாளப்படுத்துகிறது. அத னால் எண் ணங்களிடம் நாம் மிக விழிப்பாக இருக்க வேண்டும். இந்தப் பிரபஞ்சத்தின் நன்மை, தீமைக்கும் நம்மில் உருவாகும் எண்ணங்களே காரணம். நம் எண் ணங்கள் இந்தப் பிரபஞ்சத்தைத் தாக்குகின்றன. அவை நல்லதாக இருக்கும்போது நல்ல விளைவை யும் தீயதாக இருக்கும்போது தீய விளைவையும் இந்தப் பிரபஞ்சத்துக்கு கொடுக்கின்றன.

தீய எண்ணத்தால் இந்தப் பிரபஞ்சத்தின் சமநிலை குலைகின்றது. இது இயற்கை அழிவுகளுக்கு வித்திடு கின்றது எனக் கூறுகிறது நவீன விஞ்ஞானம் இதை பண்டைய கால ரிஷிகள், ஞானிகள் மெய்ஞானத் தால் கண்டுணர்ந்துள்ளார்கள். எப்படி எல் லாம் எமது எண்ணங்கள் இந்தப் பிர பஞ்சத்தில் பங்கு வகிக்கின்றன பார்த்தீர் களா!

எமது முன்னோர்கள் இந்தப் பிரபஞ் சத்தைப் பரிபாலிப்பதற்காக இறைவனிடம் நெருங்கி நல்ல சிந்தனைகளையும், எண் ணங்களையும் பிரார்த்தனை மூலம் வரு வித்துக் கொண்டார்கள். ஏனெனில் அவர் கள் இந்த இயற்கையை ஆதிபராசக்தி என உணர்ந்தார்கள். அதனால்தான் பண் டைய கால ரிஷி ஒருவர் மிகவும் பக்தியு டனும், சிரத்தையுடனும் இப்படி பிரார்த்திக் கிறார்.

"ஆ நோ பத்ரா: கிரதவோ யந்து விச்வத"

"உயர்ந்த எண்ணங்கள் எல்லா திக்கு களிலும் இருந்து எம்மைச் சேர்வதாக"

இது (ரிக்வேதம்) வேதத்தின் ஒரு மந்திரம். நல்ல உணவுகள் தேகத்துக்கு ஆரோக்கி யம். உயர்ந்த எண்ணங்கள் ஆத்மாவுக்கு ஆரோக்கியம். அறியாமையால் திணறும் நாங்கள் இதைப் புரிந்து கொள்வதில்லை. எமது முன்னோர்கள் காட்டிய பாதை யில் நாம் பயணித்தால், பிரார்த்தித்தால் நமது மன தில் நல்ல எண்ணங்கள் எப்போதும் கரைபுரண்டோடும்.

எமது தேசமும் மக்களும் மிகவும் நலிவடைந்து விட்டார்கள். அவர்களின் எண்ணமே அவர்களைத் தாக்குகிறது. இன்று சுயநலம் எல்லா திக்குகளிலும் பரந்து விரிந்திருக்கிறது. அப்போ எப்படி உயர்ந்த சிந்தனைகளை வருவித்துக் கொள்ள முடியும்? இளம் சந்ததியினர், மாணவர் களிலேதான் நலிவடையும் மக்களின் வளர்ச்சி தங்கியுள்ளது. பண் டைய கால ரிஷியைப் போல் உயர்ந்த எண்ணங்களுக்காக பிரார்த்திப்போம் நிச்சயம் அது நம்மை கடைந்தேற்றும்.

*சா.ரமேஸ்குமார்,*
*மருதனார் மடம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்முறைகளுக்கு விடிவு எப்போது...

சு.சுபா
4ஆம் கட்டை, மானிப்பாய்.

இன்று உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் காலத்திற்கு காலம் வெவ்வேறு வடிவம் பெற்று வருகின்றனவே தவிரக் குறைந்தபாடில்லை. பெண்களுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

ஐ.நாவின் அறிக்கைகளைப் பார்க்கும்போது குடும்பத்தில் தனக்கு மிக நெருக்கமானவர்களாலேயே பெண்கள் பல்வேறு வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். தம் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகளை எதிர்த்து குரல்கொடுக்கத் துணியாத நிலையிலேயே பெண்கள் மீதான வன்முறைகளும் அடக்குமுறைகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன என்பதே உண்மை.

உலக சனத்தொகையில் இன்று பெண்களின் தொகை 50 வீதத்தை எட்டிவிட்டது. ஆண்களைவிட ஒரு சமூகத்தில் பெண்கள் அங்கம் வகிக்கும் பாத்திரங்கள் இன்றியமையாதவை என்று கூறலாம். எனினும் குடும்பம் மற்றும் சமூக வன்முறைகளில் பெரிதும் பாதிக்கப்படும் ஒரு பாத்திரமாகப் பெண் விளங்குவது வேதனைக்குரியதே.

இன்று குடும்ப வன்முறை என்ற பதம்கூட பெண்களுக்கு எதிரான அநீதிகளின் அதிகரிப்பால் உருவானதோ என்றுகூட கூறத் தோன்றுகிறது. காரணம் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்களின் எண்ணிக்கை அதிகளவானது.

இன்று உலகம் எந்தளவுக்கு நாகரிகத்திலும் அறிவியலிலும் ஏற்றம் கண்டுவருகின்றதோ அந்தளவுக்கு குற்றச் சம்பவங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

> ஆய்வுகளின் படி பாரம்பரியம், கலாசாரம், சடங்கு என்ற பெயர்களில் இன்று உலகம் முழுவதும் 10-17 வயதுக்கிடைப்பட்ட 82 மில்லியன் சிறுமிகள் கட்டாயத் திருமணம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஆய்வுகளைப் பார்த்தால் தலை சுற்றும். இன்று உலகில் உள்ள பெண்கள் எண்ணிக்கையில் ஐந்துபெண்களில் ஒருவர் தன் வாழ்நாளில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டோ அல்லது பலாத்காரத்துக்கு உட்பட்டோ இருப்பார் என்கின்றன ஆய்வுகள்.

அமெரிக்காவில் 20 நிமிடங்களுக்கு ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகிறாள். பிரான்ஸில் வருடந்தோறும் 25 ஆயிரம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். துருக்கியில் திருமணமான பெண்களில் 35 வீதமானோர் தமது கணவராலேயே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அவ்வளவு ஏன் எமது அயல் நாடான இந்தியாவில் கூட வருடந்தோறும் 15 ஆயிரம் பேர் சீதனக் கொடுமையால் கொல்லப்படுகின்றனர். திருமண பராயம் அடையும் முன்பாகவே பெண்களை இல்வாழ்வில் பலவந்தமாகச் சேர்க்கும் நடைமுறை இன்று உலகில் பல நாடுகளில் உள்ளது. ஆய்வுகளின்படி பாரம்பரியம், கலாசாரம், சடங்கு என்ற பெயர்களில் இன்று உலகம் முழுவதும் 10-17 வயதுக்கு இடைப்பட்ட 82 மில்லியன் சிறுமிகள் கட்டாயத் திருமணம் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குடும்ப கௌரவம் சமூகத்தின் விமர்சனம் என்பவை காரணமாகப் பல பெற்றோர்கள் கூட தமது பிள்ளைகளுக்கு நடக்கும் அக்கிரமங்களை மூடி மறைத்து விடுகின்றனர். இதுவே அவர்களுக்கு எதிராக மேலும் மேலும் குற்றங்கள் பெருக வழி வகுக்கிறது. வீட்டு வன்முறைகளுக்கு அப்பாற்பட்டு போர்கள் கூட இன்று பெண்களைப் பாடாய்படுத்துகின்றன. போரினால் இடம் பெயர்ந்த அகதிகளில் 80 வீதமானோரில் பெண்களும் சிறுவர்களுமே அடங்குகின்றனர்.

பெண் என்பவள் பிறந்ததிலிருந்து பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுத்து வளரக்கூடிய ஒரு சூழல் உண்மையில் ஆசிய கண்ட நாடுகளுக்கு குறிப்பாக தென்னாசிய நாடுகளிடையே நிலவுகிறது.

பெண்களைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக வீடு, குடும்பம் சார்ந்த உழைப்பில் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சமுதாய மாற்றங்களுடன் கால ஓட்டத்தில் அதற்கப்பாலும் பெண்ணின் உழைப்பு தேவைப்பட்டது. புராதன கம்யூனிஸ் சமுதாயத்திலிருந்து நிலப்பிரபுத்துவ அமைப்பு மாறிய போதும் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்களது வாழ்கை முறையிலும் அது மாற்றங்களை ஏற்படுத்தியது. பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்ட போதும் குடும்பம் சார்ந்த உழைப்பையும் அவர்களே செய்ய வேண்டிய நிலை இருந்தது. வேலைகள் சமனாகப் பங்கிடப்படாமல் இரட்டைச் சுமையுள் அவள் அழுந்தினாள். அவளது சமூக உற்பத்திக்கான உழைப்பு இரண்டாம் தரமானதாகவே கருதப்பட்டது. குடும்பத்துக்கான அவளது உழைப்பே மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது; விரும் பவும் பட்டது. இவ்விரட்டிப்பு வேலைப் பளுவிலிருந்து பெண் விடுபட முனையும் போது, அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும்போது, குடும்பத்திற்கு வெளியே உலகைக் காணவிளையும் போது, மீண்டும் மீண்டும் அடக்குமுறைக்குள் பெண்ணைத் தள்ளுவதற்கான எதிர்ப்புக் குரல்கள் உயர்வாக ஒலிப்பது இயல்பானதுதான். ஏனெனில், மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடி யாத, வசதிகளை அனுபவிக்க விரும்பும் அனைவருமே பெண் விடுதலை பெறுவதை விரும்பமாட்டார்கள்.

பல ஆண்டுகளாக குடும்பம் சார்ந்த வேலைகளையே தனது கடமைகளாகச் செய்து வந்த பெண், சம அந்தஸ்துடன் குடும்பத்திற்கு அப்பால் உள்ள உலகத்திற்குள்ளும் தனது பங்களிப்பை செய்ய விழையும்போது குடும்பம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும். காலா காலமாகப் பெண்களது கைகளில் இருந்த சமையலறை, குடும்பம் என்பன மற்றவர்களுக்கும் பங்கிடப்படும்போது அந்த வேலைகளில் குறைபாடும், நேர்த்தியின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாது.

அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான தீர்வுகள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் போது பிரச்சினைகளும் மறைந்து போகும். இந்தப் பிரச்சினை ஒரு சமுதாயப் பிரச்சினை. தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினையாகவும் இதனைக் கருத முடியாது. குடும்ப அமைப்புகளை பேணுவதற்கு பெண்களை மீண்டும் வீட்டில் மட்டும் உழைப்பை வழங்குவதற்காக அதாவது தனது குடும்பத்தைக் காக்கும் பணி பெண்ணினது அதற்காக அவள் வீட்டுக்குள் போயிருந்து வேலையைக் கவனிப்பதுதான் வழி என்ற கருத்தை ஒரு போதும் ஏற்க முடியாது.

நோர்வே, கனடா, டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளில் பாலூட்டும் தாய்மார்களுக்கு, பாலூட்டும் நேரங்கள் எனக் குறுகிய நேர விடுமுறைகள் நடைமுறையில் உள்ளன. இந்தப் பிரச்சினைக்கு மாற்றுத் திட்டங்களைப் பற்றி நாமும் யோசிப்பது அவசியம். பிரச்சினைகள் அடை யாளம் காணப்பட்டு அதற்கான தீர்வுகள் முன் வைக்கப்பட வேண்டும். அதை விடுத்து கேலியாகவும் கிண்டலாகவும் குடும்பத்தைச் சீரழிக்கும் பாவிகளாக பெண் சித்திரிக்கப் படுவது ஆணாதிக்கச் சிந்தனை முறையின் மேலாட்சியைக் காட்டுகிறது.

இன்றைய காலம் குடும்ப அமைப்பையே கேள்விக்குள்ளாக்குவது. கணவன், மனைவி, குழந்தைகள் என்ற குடும்ப அலகே பெண்களின் அடிமைத்தனத்துக்கும் அடக்குமுறைக்கும் காரணம் என்று தீவிரப் பெண்ணியவாதிகள் கருதுகின்றனர்.

சமுதாய உற்பத்தி முறைமை அதன் உறவுகள், கலாசார விழுமியங்கள். என்பவற்றிற்கேற்ப குடும்ப அமைப்பு காலத்துக்குக் காலம் மாறி வந்துள்ளது. எமது இன் றைய சமூக முறைமை ஐம்பது அறுபதுகளில் இருந்ததைவிடவும் எவ்வளவோ மாறிவிட்டது. பெண்கள் சமுதாய வேலைகளில் பங்களிப்பதால் குடும்பம் சிதைவுறுவதாக கூறுவதானது மிகவும் தவறான கருத்தியல்பு. குடும்பம் பற்றிய கோட்பாடுகள் முன்னைய சமூக வாழ்வு முறைக்கேற்ப இயைபாக்கம் அடைந்தாக இருப்பதால் இன்றைய வாழ்வு முறைக்கேற்ப அவை தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

எவ்வாறாயினும் சமூகத்தில் பெண்களின் சம உரிமை, சம அந்தஸ்து என்ற விடயங்களில் அக்கறை இன்றிப் பெண்ணிலைவாதம் பற்றித் திறந்த மனதுடன் ஆராய யார் மறுத்தாலும் குடும்பம் பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்டுத்தான் வருகின்றன. காலச் சக்கரம் தனது பாதையில் நகர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அதைத் தடுப்பது பெரிய அணையை கைகளால் பொத்த நினைப்பது போலத்தான். எனவே இவ்வாறான மாற்று அமைப்புகள் அல்லது மாற்று வழிமுறைகள் பற்றிய கணிப்பீட்டை நிதானமாக உருவாக்கிக் கொள்ளவேண்டும். ஆகவே, சமுதாயம் தொடர்பான புதிய சிந்தனைகளுக்கு வழிகோலுவது, வாழ்வுக்கு அர்த்தம் சேர்ப்பதாக அமையும்.

> எவ்வாறாயினும் சமூகத்தில் பெண்களின் சம உரிமை, சம அந்தஸ்து என்ற விடயங்கள் அக்கறை இன்றிப் பெண்ணிலைவாதம் பற்றித் திறந்த மனதுடன் ஆராய யார் மறுத்தாலும் குடும்பம் பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்டுத்தான் வருகின்றன.

# ஆணாதிக்க சிந்தனைவாதிகள் கொஞ்சம் மாறுங்களேன்...!



கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 29 09 2013 ஞாயிற்றுக்கிழமை



ஞாயிறு காரம்

# தேர்தல் முடிவுகள் சொல்லும் செய்திகள்

சந்திரசேகர ஆஷாத்

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட பகுதி மக்களின் 78 வீத ஆதரவு வாக்குகளைப் பெற்று 38 ஆசனங்களில் 30 ஆசனங்களைக் கைப்பற்றி ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. வெற்றியானது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட போதிலும்கூட இது ஒரு சாதனை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

### தெளிவான முடிவு

கட்டட அடிக்கல் நாட்டல், திறப்பு விழாக்கள், புகையிரத சேவை ஆரம்பம், பெரும் பரப்புரைப் பேரணிகள் என அரச தரப்பு எங்கும் ஒரு அபிவிருத்தி மாயையைப் பரப்பியிருந்தது. இன்னொரு புறம் வன்முறைகள், மிரட்டல்கள் என அச்சுறுத்தல் நடவடிக்கைகளும் கட்டவிழ்க்கப்பட்டன.

ஆளுங்கட்சியின் தேர்தல் பரப்புரைகளில் ஆளுநர் உட்பட அரச அதிகாரிகள் களமிறக்கி விடப்பட்டனர். திணைக்களங்களின் வாகனங்கள், அதிகாரங்கள் உட்பட அரச வளங்கள் தாராளமாகவே பயன்படுத்தப்பட்டன. சில அரச தரப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் படையினர் நேரடியாகவே இறங்கிச் செயற்பட்டனர்.

இப்படியான நெருக்கடிகளும் விதி மீறல்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் வட பகுதி மக்கள் அவர்களை நிராகரித்ததன் மூலம் தமது அபிலாஷைகளைத் துணிச்சலுடன் வெளிப்படுத்தியுள்ளனர்.

வடமாகாணத் தேர்தல் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு தமிழ் மக்கள் தமது உறுதியான அங்கீகாரத்தை வழங்கிவிட்டனர்: ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் என்ற கோரிக்கையே தமிழ் மக்களின் உறுதியானதும், இறுதியானதுமான முடிவு என்பது தெளிவாகவே முன்வைக்கப்பட்டு விட்டது. இதைத் தவிர்ந்த எந்த ஒரு முடிவையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதும் துலாம்பரமாகிவிட்டது.

இம்முறை வடமாகாண சபைத் தேர்தலில் தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கட்சிகள் உட்படப் பல கட்சிகளும் போட்டியிட்டன. இதில் நகைப்புக்கிடமான விடயம் என்னவெனில் இவர் கள் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயற்பட்டது மட்டுமன்றி தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர்கள்.

### கட்சிகள் விரட்டியடிப்பு

இவர்களில் முக்கியமான ஒரு தரப்பினர் ஜே.வி.பியினர். இவர்கள் ஒன்றாக இருந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை பிரிப்பதற்காக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அதில் வெற்றியும் பெற்றவர்கள். இன்று கிழக்கு மாகாணம் வடக்கை விட்டுப் பிரிந்து மாகாண சபையின் அதிகாரம் அரச தரப்பிடம் செல்ல அடியெடுத்துக் கொடுத்தவர்கள். அதுமட்டுமன்றி போர் மும்முரமாக இடம்பெற்ற வேளையில் தமிழ் மக்களின் அழிவுகளைப் பொருட்படுத்தாது போரில் அரச தரப்புக்கு எல்லாவித ஆதரவையும் வழங்கியவர்கள்.

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள இடதுசாரிச் சிந்தனைப் போக்குடையவர்களை சிவப்புச் சட்டையைக் காட்டிக் கவர முடியும் என்ற நம்பிக்கையுடன் களமிறங்கினர். ஆனால் தமிழ் மக்கள் முற்றுமுழுதாகவே அவர்களை நிராகரித்துவிட்டனர். அதனால் அவர்கள் தேர்தல் முடிந்த பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் வெற்றி பெற்றதால் பிரிவினை முயற்சிகள் தொடர்பாக அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளனர். அவர்கள் தங்கள் இனவாத முகத்தைப் பகிரங்கமாகவே காட்டிவிட்டனர்.

'ஈரோஸ்' என அழைக்கப்படும் ஈழ மக்கள் புரட்சிகர அமைப்பும் இடதுசாரி சிந்தனை கொண்ட தமிழர்களின் வாக்குகளை வேட்டையாட வந்தது தான். அரசின் விசுவாசிகளான அவர்களையும் தமிழ் மக்கள் இங்கு காலூன்ற அனுமதிக்கவில்லை.

தமிழ்மக்களுக்கு எதிரான போருக்குத் தலைமை தாங்கி வழி நடத்தி தமிழ் மக்களுக்குப் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய முன்னாள் [illegible] தளபதி சரத் பொன்சேகா[illegible]னரும் வடக்கில் போட்டியிட்டனர். தேர்தல் காலத்தில்கூட தமிழ் மக்கள் யாரும் காணாமற் போகவில்லை எனத் துணிந்து கூறியவர் அவர். விடுதலைப் புலிகளுக்கும் ஐ.தே.கட்சி அரசுக்கும் பேச்சு இடம்பெற்றபோது உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்ற மறுத்து பேச்சில் பின்னடைவு ஏற்பட வைத்தவர் இவர் என்பதையும் மறந்து விடமுடியாது. இவருக்கும் தமிழ் மக்கள் படுதோல்வியையே பரிசாகக் கொடுத்தனர்.

போட்டியிட்ட மற்றொரு கட்சியான சிறிலங்கா மக்கள் கட்சியையும் யாரும் கண்டுகொள்ளவேயில்லை.

இன்னும் பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் வந்து போயின. எல்லோருமே கட்டுப் பணங்களையே இழந்து தமிழ் மக்களை இலகுவில் ஏமாற்றிவிட முடியாது என்பதைப் புரிந்து கொண்டனர்.

கடந்த பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி வடக்கில் ஒரு ஆசனத்தைவெற்றிகொண்டது. ஆனால் தற்சமயம் இடம்பெற்ற தேர்தலில் மாகாண சபையில் ஒரு ஆசனத்தைக் கூடப் பெற முடியவில்லை.

### ஐ.தே.கவுக்கும் இடமில்லை

தியாகராசா மகேஸ்வரன் போர் மும்முரமாக இடம்பெற்ற காலப்பகுதியில் கொழும்பிலிருந்து துணிச்சலாகத் தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்தவர். அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே அவரின் மனைவி கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டபோது வெற்றிபெற்றார்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்கு நேர்மையாகக் குரல் கொடுப்பதில்லை. அதுமட்டுமன்றி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட தியாகராஜா துவாரகேஸ்வரன் தனது பரப்புரையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே திருப்பியிருந்தார். அதன் காரணமாக அவர்கள் இருந்த கொஞ்சநஞ்ச ஆதரவையும் இழக்க வேண்டிய நிலை எழுந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மூன்று பிரிவினர் [illegible] இவர்களேபொறுப்பேற்றுக்கொண்டனர். முதலாவது பிரிவினர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலான குழுவினர். இவரின் தந்தை ஒரு துப்பாக்கிச் சண்டியர். கடந்த பொதுத் தேர்தலின்போது யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குண ராஜாவை வழிமறித்துத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியவர். இப்போது இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் சார்பில் போட்டியிட்ட சர்வானந்தாவுடன் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டார் எனக் கூறி கைது செய்யப்பட்டவர்.

அடுத்த குழுவினர் இராணுவத்தினரின் ஆதரவுடன் போட்டியிட்டவர்கள், இவர்களுக்காகப் படையினரே எல்லாமும் செய்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேல் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் இவர்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்டதாகவே கருதப்படுகிறது. எனினும் அங்கஜன் இராமநாதனே இவர்களின் பிரதான இலக்கு.

இந்த இரு தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் துப்பாக்கிச் சமர் உட்படப் பல வழிகளிலும் மோதிக் கொண்டனர். ஒருவரைஎதிர்த்துஒருவர் பிரசாரங்களையும் பெருமளவில் மேற்கொண்டனர். எனினும் அங்கஜன் இராமநாதன் ஓரளவு வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இராணுவத்தினரின் ஆசி பெற்ற குழுவினருக்கு ஒரு ஆசனம் கூடக் கிடைக்கவில்லை.

### மண்கௌவிய ஈ.பி.டி.பி

அடுத்த தரப்பினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியினர். கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இவர்களுக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்தன. ஆனால் இம்முறை யாழ்ப்பாணத்தில் ஒன்றும் கிளிநொச்சியில் ஒன்றுமாக மிகக் குறைந்த வாக்குகள் பெற்று இரு ஆசனங்களே கிடைத்துள்ளன.

மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கோஷத்துடன் வீணைச் சின்னத்துடன் ஒரு காலத்தில் தேர்தலில் களமிறங்கியவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. மெல்ல மெல்ல கோஷத்தையும் கைவிட்டு வீணையையும்வெற்றிலைக்குள்கரைத்துவிட்டு மாகாண சபையில் களமிறங்கினார். அழுகிய வெற்றிலைகளுக்கு வாக்களிக்காமல் நல்ல வெற்றிலைகளுக்கு வாக்களிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் வடக்கின் குறுநில மன்னர் எனப் போற்றப்பட்டவர். இப்போது டக்ளஸா றெமிடியஸா அல்லது அங்கஜனா குறுநில மன்னர் என்ற குழப்பம் ஆரம்பித்து விட்டது.

ஒரு காலத்தில் கிழக்கில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தராக விளங்கிய பிள்ளையான் என அழைக்கப்பட்ட சந்திரகாந்தன் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்து ஜனாதிபதியின் செல்லப்பிள்ளையாக மாறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்தமையைப் பயன்படுத்தி அவர் கிழக்கின் முதலமைச்சரானார்.

மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிப்பது உட்படப் பல விடயங்களில் அரசுக்கு ஆதரவளித்துத் தனது பதவியைப் பாதுகாத்துக் கொண்டார்.

எனினும் இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியைச் சேர்ந்த அப்துல் மஜீத்துக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது. பிள்ளையான் அரச தரப்பாலும் கைவிடப்பட்டு தமிழ் மக்களாலும் வெறுக்கப்பட்டு அரசியல் அநாதையானார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பியினர் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் புறமொதுக்கப்பட்டமை தெளிவாகவே வெளிப்படுத்தப்பட்டது. அதேவேளையில் அரச தரப்பினரும் படையினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கே முன்னுரிமை வழங்கினர். அமைச்சர் டக்ளஸ்தொடர்ந்துஅரசுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயற்பட்ட காரணத்தால் தமிழ் மக்களும் அவரை முற்றாக ஒதுக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. வெகுவிரைவில் அவருக்கும் பிள்ளையானுக்கு ஏற்பட்ட நிலை ஏற்பட்டால் ஆச்சரியமில்லை.

### தமிழன் ஏமாறமாட்டான்

எப்படியிருப்பினும் தமிழ் மக்கள் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் தெளிவாக ஒரு செய்தியைச் சொல்லியுள்ளனர்.

அதாவது தமிழ் மக்களிடம் போலியான அபிவிருத்தி நாடகங்களையும் சலுகைகளையும் முன்வைத்து ஏமாற்ற முயலும் எவரும் மக்களால் முற்றாக நிராகரிக்கப்படுவார்கள். நேர்மையாகவும் அர்ப்பண உணர்வுடனும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற உழைப்பவர்களை மட்டுமே மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

மக்களை ஏமாற்ற முயல்பவர்கள் அரசியல் அநாதைகளாக மாறி விலாசமே இல்லாமல் போகும் நிலை ஏற்படும் என்பது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சலுகைகள் அல்ல உரிமையே தேவை

அதிரன்

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. வன்முறைகள், தேர்தல் விதி மீறல்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு மத்தியில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் 30 ஆசனங்களைக் கைப் பற்றி ஒரு வரலாற்று வெற்றியை பதிவு செய்திருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. 38 ஆசனங்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் 30 ஆசனங்களைக் கைப்பற்றியதன் மூலம் 3 இல் 2 பெரும்பான்மையைப் பெற்று சாதனை படைத்தது கூட்டமைப்பு. அரச தரப்புக்கு வெறும் 7 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. மன்னாரில் போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த வெற்றி 1977 ஆம் ஆண்டு வட்டுக் கோட்டை தீர்மானத்தினால் கிடைத்த வெற்றியிலும் பார்க்க மிகப் பெரிய வரலாற்று வெற்றி என்று கூறினார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். 1977 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினால் கிடைத்த வெற்றியும் மிகப் பெரியதுதான். ஆயினும் அதனிலும் பார்க்க அதிகமான வெற்றியை நாம் வடக்குத் தேர்தலில் பெற்றிருக்கிறோம் என்றும் குறிப்பிட்டார் அவர்.

முடிவடைந்த இந்தத் தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் சர்வதேசத்துக்கும் இலங்கை அரசுக்கும் ஒரு தெளிவான செய்தியை வழங்கியிருக்கிறார்கள். போர் நிறைவடைந்து நான்கு வருடங்களின் பின்னர் நடைபெற்ற இந்தத் தேர்தல் ஒரு இனத்தின் அங்கீகார அளவீடாக நோக்கப்பட்டது. சர்வதேச நாடுகள் இந்த வடக்குத் தேர்தலை தமிழர்களின் ஜனநாயக ரீதியிலான தீர்ப்பாகவே கருதிக் கொண்டு நன்கு அவதானித்தன. சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக உரிமைகளுக்காக அஹிம்சை ரீதியிலும் அதன் பின்னர் ஆயுத ரீதியிலும் போராட்டங்களை முன்னெடுத்த தமிழினத்துக்கு இன்று வரை தீர்வு கிடைக்கவே இல்லை. ஆயுத ரீதியான போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழர்களின் உரிமைப் போராட்டம் பெரும்பாலும் முற்றுப்பெற்று விட்டது என்றே இலங்கை அரசும் சிங்கள இனவாதிகளும் கருதிக் கொண்டனர். புலிகளைத் தோற்கடித்த வெற்றியைத் தேசிய விழாவாகப் பிரகடனப்படுத்தி அந்த வெற்றி மமதையில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை தட்டிக்கழித்து வந்தது இலங்கை அரசு. குறிப்பாக சொல்லப் போனால் தமிழருக்காக குரல் கொடுக்க இனி எவருமே இல்லை என்ற தோரணையில் அரசின் செயற்பாடுகள் அமைந்தன. தீர்வை இழுத்தடிக்கும் கைங்கரியங்களிலேயே அரசு குறியாக இருந்தது. ஆயினும் புலிகள் விட்ட இடத்தில் இருந்து உரிமைப் போராட்டத்தை நகர்த்த வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் விழுந்தது. அந்த வரலாற்றுக் கடமையை சரியாக நிறைவேற்றுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடனான பேச்சுக்கள், சர்வதேசத்துடனான ஆலோசனைகள் என பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆயினும் தமிழர்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் என்பதை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் மீண்டும் ஒருமுறை நிரூபிக்க வேண்டிய தேவை கூட்டமைப்புக்கு இருந்தது. அதற்காக இந்த வடக்கு மகாண சபைத் தேர்தலை சரியாகப் பயன்படுத்தி அதனை நிரூபித்தும் உள்ளது கூட்டமைப்பு.

புலிகள் அழிக்கப்பட்டாலும் தமிழரின் உரிமைப் போராட்டம் அடங்கிப் போகவில்லை. உரிமைகளை அடையும் வரை தமிழர்கள் அடங்கிவிடமாட்டார் கள் என்பதை வடக்கு மாகாண சபைத் தேர்தல் தெளிவாக எடுத்துக்காட்டியிருக் கிறது. வடக்கில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை அரசு மேற்கொண்டுள்ளது. பிரதான வீதிகள் அனைத்தும் 'காப்பெற்' ஆகின. கட்டடங்கள் நிமிர்ந்தன. போக்குவரத்து வசதிகள் பெருகின. ஆயினும் தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் அரசு எடுக்கவேயில்லை. அபிவிருத்தியின் மூலம் தமிழர் மனங்களை வென்று விடலாம் என்ற நப்பாசையிலேயே அரசின் செயற்பாடுகள் அமைந்தன. ஆயினும் அரசின் இந்த சலுகைகள் எதற்கும் எடுபடாமல் உரிமையே எமக்கு முக்கியம் என்பதை தமிழ் மக்கள் மீண்டும் ஒருமுறை உலகறியச் செய்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளை வடக்கு மக்கள் ஏற்றுக் கொள்ளவே இல்லை. அவர்கள் இனவாதிகள். புலிகளின் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர் என்று பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வந்த அரசுக்கும் சிங்கள இனவாத சக்திகளுக்கும் உச்சந் தலையடி கொடுத்திருக்கிறது வடக்குத் தேர்தல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும் அவர்களின் கொள்கைகள் தமிழரின் தனித்துவத்துக்கான கோட்பாடுகள் என்பதையும் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தமது வாக்குகள் மூலம் உணர்த்தியிருக்கிறார்கள் வடக்குமக்கள்.

இந்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தம்மிடம் உள்ள ஆகக் கூடிய அதிகாரப் பலத்தை அரசு பயன்படுத்திய போதும் அந்த முயற்சிகள் அனைத்தும் தமிழரின் வாக்குகளின் முன்னால் தோற்றுப்போய்விட்டன.

அரசை பொறுத்தவரை வடக்குத் தேர்தல் ஒரு வரலாற்றுப் படுதோல்வி. வடக்கு மாகாண சபையில் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற முடியாதவாறு எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற முனைப்புடன் அரசின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன. தேர்தல் தினத்தன்றும் வாக்களிப்புக்குச் சென்ற மக்கள் தடுக்கப்பட்டார்கள். மிரட்டப்பட்டார்கள். வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் சீருடையினர் சிவில் உடையில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் வாக்களிக்கச் செல்லும் மக்களிடம் வெற்றிலைக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் செய்தனர். ஆயினும் அந்தத் தந்திரங்கள் எவையும் பலிக்கவே இல்லை. அச்சுறுத்தல்கள். மிரட்டல்கள் இருந்த போதும் தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வாக்குகளை அள்ளி வழங்கினார்கள். முன்னர் நடைபெற்ற தேர்தலிலும் பார்க்க வாக்களிப்பு வீதம் காலையிலேயே அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. மாலையில் அது உச்சக்கட்டதை எட்டியது. தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றும் உரிமைக்கான விடுதலை உணர்வும் மக்களை இம்முறை வாக்களிப்புக்குத் தூண்டின. இந்தத் தேர்தல் தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான ஒரு வரலாற்று முடிவாக அமையப் போகிறது என்பதால் வயது வித்தியாசமின்றி அனைவரும் வாக்களித்தனர். சலுகைகளுக்கு எடுபடாமல் உரிமைகளே எமது எதிர்பார்ப்பு என்ற அடிப்படையில் மக்கள் வழங்கிய ஆணையால் எவருமே எதிர்பார்த்திராத அமோக வெற்றியைப் பெற்றுக் கொண்டது கூட்டமைப்பு. அந்த வெற்றி கூட்டமைப்புக்கான வெற்றி அல்ல தமிழ்த் தேசிய இனத்துக்கான வெற்றி. தமிழர்கள் தனியான கலை. கலாசாரம். பண்பாடு. அரசியல் உரிமை ஆகியவற்றைக் கொண்ட தனித்துவமான இனம் என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துரைத்த வெற்றி யிது. இதன் மூலம் சர்வதேச ரீதியில் தெளிவான செய்தியை சொல்லியுள்ள தமிழர்களுக்கு சர்வதேச சமூகம் வழங்கப் போகும் செய்தி என்ன? என்பது அடுத்துள்ள எதிர்பார்ப்பு.

**தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றும் உரிமைக்கான விடுதலை உணர்வும் மக்களை இம்முறை வாக்களிப்புக்குத் தூண்டின. அந்த வெற்றி கூட்டமைப் புக்கான வெற்றி அல்ல தமிழ்த் தேசிய இனத்துக்கான வெற்றி.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி.....?



**29.09.2013 முதல் 05.10.2013 வரை**

**மேடம்**- உங்களின் பணிகளை எளிதாக நிறைவேற்றும் புதிய சூழ்நிலை உருவாகும். ஆன்மிக எண்ணங்களை வளர்த்து மனதில் உற்சாகம் பெறுவீர்கள். இல்லறத்துணையின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருவது அவசியம். தொழில், வியாபாரம் தொடர்பாக அரசின் உதவி கூடுதல் முயற்சியால் கிடைக்கும். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால் படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

**துலாம்**- உறவினர், நண்பர்களிடம் தன் செல்வச் செழிப்பை வெளிப்படுத்துகிற எண்ணங்களுடன் செயற்படுவீர்கள். கவனம் தேவை. உறவினர்களிடம் தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். இல்லறத்துணை, குடும்ப ஒற்றுமை வளர, கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி விற்பனை இருக்கும். மாணவர்கள், நண்பருக்கு உதவுவதில் நிதானத்தைப் பின்பற்ற வேண்டும்.

**இடபம்**- பேச்சில் நல்ல கருத்துக்களும் இனிமையான அணுகுமுறையும் உருவாகும். பூர்வீக சொத்தில் பெறுகிற பணப்பலன் அதிகரிக்கும். எதிரியால் உருவான சிரமம் விலகும். இல்லறத்துணையின் மனதில், கூடுதல் நம்பிக்கை வளர்க்கும் விதமாக நடந்துகொள்வது, ஒற்றுமையை சீராக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள். மாணவர்கள், நண்பர்களிடம் சுமுக நட்பு பாராட்டுவது நல்லது.

**விருச்சிகம்**- சான்றோர்களின் வார்த்தைக்கு உரிய மதிப்பு தருவதால் அவர்களிடம் உங்கள்மீதான நல்ல எண்ணம் வளரும். வாழ்வில் எதிர் வருகிற சிரமம் சமாளிக்க இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். எதிர்மறை எண்ணத்துடன் உங்களிடம் பழகிய சிலர் நல்லவிதமாக மனமாற்றம் பெறுவர். தொழில், வியாபாரம் தொடர்பாக எதிர்பார்த்த அரச உதவி கிடைக்க அனுகூலம் உண்டு. மாணவர்கள், கூடுதல் பயிற்சியில் மட்டுமே, சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்**- புதிய இனங்களில் பணவரவு கிடைக்கின்ற வாய்ப்புக்களை தவறாமல் பயன்படுத்துவீர்கள். உங்களிடம் நன்றாகப் பழகி இயன்ற எவில் உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். உரிய பாதுகாப்பு முறையைப் பின்பற்ற வேண்டும். இல்லறத்துணை உங்களின் எண்ணங்களை செயல்வடிவமாக்க உதவுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். மாணவர்கள் பெற்றோர் சொல் கேட்டு கல்வியில் கவனம் செலுத்துவர்.

**தனுசு** -உங்கள் எண்ணம், செயலில் புத்துணர்வு பிறக்கும். பணி நிறைவேற நற்குணம் உள்ளவர்களின் தாராள உதவி கிடைக்கும். இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன், குடும்ப நலம் பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் தாராள பணச்செலவில் அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள். பணியாளர்கள், சலுகைப்பயன் பெற அனுகூலம் உண்டு.

**கடகம்**- புதியவர்கள் அறிமுகமாகி அன்பு பாராட்டுவர். உறவினர்களிடம் அதிக உரிமை பாராட்டி, கண்டிக்கும் வகையில் பேசவேண்டாம். இல்லறத்துணை உங்களின் அருமை, பெருமை நிறைந்த செயல்களை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் சிலமாற்றம் பின்பற்றுவதால் உற்பத்தி, விற்பனை சீராகும். மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவர்.

**மகரம்**-நண்பர்களிடம் கருத்து வேறுபாடு வராத அளவுக்கு பேசுவது நல்லது. சூழ்நிலை தாக்கத்தால் பொதுநலப் பணிபுரிவதில் இருந்த ஆர்வம் குறையும். இல்லறத் துணையின் மனதில் எதிர்கால வாழ்வு குறித்து, நம்பிக்கை வளர்ப்பது அவசியமாகும். பணியாளர்கள் பணியில் கூடுதல் அக்கறை கொள்வது நல்லது. மாணவர்கள் நினைவுத்திறன் வளர கூடுதல் பயிற்சி, தியானம் பின்பற்றுவதும் முன்னேற்றம் தரும்.

**சிங்கம்**- உங்களின் அறிவுத் திறமை, பொருளாதார வளர்ச்சி கண்டு சிலர் பொறாமை குணத்துடன் அவமதித்துப் பேசுவர். அவர்களிடம் விலகி சொந்தப் பணிகளில் ஆர்வம் கொள்வது நற்பலன் பெற உதவும். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரித்து பணவரவு கிடைக்கும். தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு திருப்திகர அளவில் சன்மானம் கிடைக்கும். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.

**கும்பம்** - உங்கள் செயல் சிறந்து, புதிய பரிமளிப்பு உருவாக, அன்பு நிறைந்தவர்களின் வாழ்த்து, உதவி கிடைக்கும். குடும்பத்தில் உருவான சச்சரவு சமரச தீர்வுகளை உருவாக்கும். தொழில், வியாபார நடைமுறை யில் சுறுசுறுப்பான சூழ்நிலை உருவாகும். பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்களின் படிப்புக்கான தேவைகள், எளிதாக நிறைவேறும்.

**கன்னி**-நீங்கள் பேசும் வார்த்தை இனிமையும் வசீகரமும் நிறைந்திருக்கும். இருப்பினும் இடம், சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து கருத்துகளை வெளியிடுவது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் உருவாகும் இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணியாளர்கள் இலக்கு நிறைவேற பணித்திறன் வளர்த்துக் கொள்வது அவசியமாகும். மாணவர்கள் படிப்பதற்கு கிடைத்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்துவதால் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**மீனம்**- புதியதாக உருவாகிற சவால்களை பொறுமை, சமயோசித புத்தியுடன் அணுகுவது அவசியமாகும். கடந்த கால படிப்பினையை கவனத்தில் கொள்வதால் பணிகள் திட்டமிட்ட படி நிறைவேற்றலாம். பணியாளர்கள் அதிக வேலைவாய்ப்பைப் பயன்படுத்துவதால் குடும்ப செலவுகளை முழு மனதுடன் ஏற்க இயலும். மாணவர்கள் நன்றாகப் படித்து ஆசிரியர், பெற்றோரிடம் நன்மதிப்புப் பெறுவர்.

தருபவர் - வித்தியா

# தர்மம் செய்யவே மனித பிறவி



ஸ்ரீமத் பகவத்கீதை மகாபாரதம் என்னும் இதிகாசத்தில் அடங்கியுள்ளது. பீஸ்மபர்வதத்தில் 25ஆவது அத்தியாயத்திலிருந்து 42ஆவது அத்தியாயம் வரையில் இந்தப் புனித நூலைக் காணலாம். இது பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. இதில் அமைந்துள்ள சுலோகங்களின் எண்ணிக்கை எழுநூறு.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் நடைபெற்ற போரில் பாண்டவருக்கு தேரோட்டியாக விளங்கிய அவதார புருஷரான கிருஷ்ண பரமாத்மாவால், பாண்டவர் பிரதிநிதியான அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது கீதை. உபநிடதங்கள் என்னும் பசு கொடுத்த பால்தான் இந்தக் கீதை. மனித வர்க்கம் முழுவதும் உயர் நிலை அடைவதற்காகப் பரமாத்மாவால் கறக்கப்பட்ட பால் இது.

கீதையின் நான்காவது அத்தியாயத்தின் முதல் மூன்று சுலோகங்களில், இறைவன் முதலில் சூரியனுக்கும் பின்னர் மனுவுக்கும் கீதையை உபதேசித்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மனுவிடமிருந்து இஸ்வாகுவையும் அவனிடமிருந்து மற்றவர்களையும் முறையாக அது அடைந்தது என்ற செய்தியும் கீதையில் தெட்டத் தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஆகவே கீதை காலத்துக்கு அப்பாற்பட்டது. கடந்த காலத்திலோ தற்காலத்திலோ ஒரு திகதியிலோ அது உபதேசிக்கப்பட்டதாகக் கூற முடியாது.

தனக்குரிய தருமங்களை எல்லாம் செய்வதற்காகத்தான் மனிதன் இந்தக் கர்ம சேத்திரத்துக்குள், செயற்களத்துக்குள் வந்து சேர்ந்திருக்கிறான். அந்தச் செயல்களின் பயனைப் பெறுவதற்காக அல்ல என்பதுதான் கீதையின் உபதேசம். அதுவே அதன் அடிப்படை சாரம். அதன் முதல் சுலோகமே "தர்ம சேத்ரே, குருசேத்ரே" என்று தர்மம் என்ற சொல்லை முதலில் வைத்தே ஆரம்பிக்கிறது. தர்மத்தை நினை, தர்மத்தைச் செய் இதுவே இந்தப் பிரபஞ்சத்தை தாங்கி நிற்கும் இறைவனின் கோட்பாடு என்கிறது கீதை. தருமத்தின் மையம் வரை கீதை நம்மை அழைத்துச் செல்கின்றது. தர்மத்தை எல்லா செயல்களோடும் அது ஆராய்கின்றது. இடையறாத சோதனையே வாழ்க்கை. அந்தச் சோதனைகளிலிருந்து மீண்டு வர கீதை பாலம்போன்று அமைகின்றது. வாழ்க்கையின் மர்மம் தெரிந்தாலே அன்றி அதனில் இருந்து மீள முடியாது. அவ்வாறு மீள்வதற்குக் கீதை நான்கு யோகங்களைக் கற்பிக்கின்றது. கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற நான்கு யோகங்களும் மனிதனை நான்கு வழிகள் ஊடாகப் பரிபூரண நிலையை அடையச் செய்கின்றன. அவரவர் மனத் தாளத்துக்கு ஏற்ப ஏதாவது ஒரு யோகத்தை தேர்ந்தெடுக்கலாம் என கீதை அறிவுறுத்துகின்றது.

நான்குயோகங்களும்ஒன்றையொன்று பிரியாததால் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் இந்த நான்கும் இணைந்தே செல்கின்றன என கீதை குறிப்பிடுகின்றது. எல்லா யோகங்களும் இறுதியில் ஞானத்திலேயே முற்றுப் பெறுகிறது. ஞானமே மனித வர்க்கத்தைக் கர்மங்களில் இருந்து மீளவைக் கும் துடுப்பு.

வலிவு படைத்தவனே வாழ்வுக்குரியவன் என்பது கீதையின் கோட்பாடு. வலிவு மனதை உறுதியாக்குகின்றது. தூய்மையை நிலைபெறச் செய்கின்றது. ஒரு மனிதனின் வெளி இயற்கையையும், உள்(மனம்)இயற்கையையும் வலிவு அடக்கியாள்கின்றது. வலிவே ஆத்மாவை வளர்க்கின்றது. மெலிவு கர்மாவை வளர்த்து பிறப்பு, இறப்பு எனும் சூறாவளிக்குள் மனிதனை வீழ்த்துகின்றது. இந்த வலிவுக்கு உதாரணம் கிருஷ்ண பரமாத்மாதான். மகாபாரதம் என்னும் போராட்டத்தில் பெரிய கர்மவீரராயிருந்தவர் அவரே. மற்றவர்கள் எல்லோரும் கூடிச் செய்த செயல்கள் அவருடைய வலிமைக்குக் காற்பங்கு கூட ஆகாது. அத்தனை செயல்களுக்கும் இடையில் ஒரு செயலிலும் பந்தப்படாமல் இருந்தவரும் அவரே. இதுதான் அவருடைய வலிமையின் தன்மை. இந்த வலிவே நமக்கு இப்போதைக்குத் தேவை.

நம் சனாதன தர்மத்தின் சத்தியத்தை போதித்த பரமாத்மாவை வாழ்த்துவோம். கீதையைபோதிக்ககாரணமாயும், கருவியாயும் இருந்த அர்ஜுனனை வாழ்த்துவோம். கீதையை குறித்து வைத்த வியாசரை வாழ்த்துவோம். எல்லாவற்றுக்கும் மேலாக கீதை எனும் தாயை வாழ்த்துவோம்.

கீதையின் சுலோகங்கள் உங்கள் மனம், புத்தி, நரம்பு போன்றவற்றில் கலக்கப்படும் போதை எனும் நரகத்துக்குள் வீழாமல் கீதையெனும் வைரத்துக்குள் பயணம் செய்யுங்கள். சகல வல்லமையும் பொருந்திய அர்ஜுனர்கள் நாளை நீங்கள்தான் என்பதை இளைஞர்களே மறந்து விடாதீர்கள்.

***சா. ரமேஸ்குமார், மருதனார்மடம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலநடுக்கம் உருவாக்கியுள்ள புதிய தீவு

பாகிஸ்தான் தென்மேற்குக் கரையில் திடீரென்று உருவாகியுள்ள சிறு தீவு அந்தப் பகுதி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கும் அதேவேளை, அந்தத் தீவு வெகு காலத்துக்கு நீடித்திருக்காது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

பாகிஸ்தானின் தென் பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கத்தின்போது 350 பேர் வரை உயிர் இழந்தும், 500 பேருக்கு மேல் காயமடைந்தும் உள்ளார்கள்.

இந்த நிலநடுக்கம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திச் சென்றுள்ளது மட்டுமன்றி அந்தப் பகுதி கடலில் சிறு தீவு ஒன்றையும் உருவாக்கிவிட்டுச் சென்றுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் பலுசிஸ்தான் பகுதியில் மூன்று லட்சம் பேர் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதிக் குள்ளாகியுள்ளார்கள்.

நில நடுக்கத்தின் பின்னர் பலுசிஸ்தான் பகுதியின் கரைக்கு அப்பால் சிறு தீவு ஒன்று தோற்றுவிக்கப் பட்டுள்ளது. சேறும் பாறைகளுமாகக் காணப்படும் அந்தத் தீவிலிருந்து மெதேன் வாயு வெளிவந்து கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளதுடன், அந்தத் தீவு நீண்ட காலத்துக்கு நிலைப்பது

> அது மிகவும் விசித்திரமாக இருக்கிறது. சற்று பீதியைக் கிளப்புவதாகவும் இருக்கிறது. ஏனென்றால் திடீரென்று ஒரு பெரிய தீவு கடலில் இருந்து வெளியில் எட்டிப் பார்க்கிறது என்றார் அந்தப் பகுதியில் வாழும் மனிதர் ஒருவர்.



சாத்தியமில்லையென்றும் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கத் தீவு என்று உள்ளூர் வாசிகளால் பெயரிடப் பட்டுள்ள இந்தத் தீவைப் பார்வையிடுவதற்குத் தினமும் ஏராளமான மக்கள் அந்தப் பகுதி கடற்கரைக்கு வருகிறார்கள்.

அது மிகவும் விசித்திரமாக இருக்கிறது. சற்று பீதியைக் கிளப்புவதாகவும் இருக்கிறது. ஏனென்றால் திடீரென்று ஒரு பெரிய தீவு கடலில் இருந்து வெளியில் எட்டிப் பார்க்கிறது என்றார் அந்தப் பகுதியில் வாழும் மனிதர் ஒருவர்.

அந்தத் தீவுக்குச் சென்று ஆய்வு நடத்திவிட்டுத் திரும்பியுள்ள பாகிஸ்தான் கடல் வள விஞ்ஞானியும், கடல் வாழ் உயிரின ஆய்வாளருமான மொகம்மது தானிஷ் கூறுகையில்; அந்தத் தீவிலிருந்து மெதேன் வாயு வெளி வந்து கொண்டிருக்கிறது. தீவிலிருந்து வெளிவரும் வாயுவில் தீக்குச்சி ஒன்றைப் பற்ற வைத்த போது அது தீப்பற்றிக் கொண்டதை எமது குழுவினர் கண்டார்கள் என்றார். அதனால் மேற்கொண்டும் தீப்பற்ற வைத்து ஆராய்ச்சி செய்வதை நாங்கள் நிறுத்திவிட்டோம் என்றார்.

அந்தத் தீவானது 60-70 அடிகள் (18-21 மீற்றர்) உயரம், 300 அடி, நீளம் மற்றும் 120 அடி அகலம் கொண்டதாகவும் காணப்படுகிறது என்றார் தானிஷ். அவர் மேலும் கூறுகையில், அதன் மேற்பாகம் சேறு கலந்த கற்களைக் கொண்ட கெட்டியான தரையைக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள வெடிப்புக்களில் மணலும் நீரும் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டார். இறந்த மீன்களும், கடல் தாவரங்களும் கூட மேற் பரப்பில் காணப்படுகின்றனவாம்.

– ரம்யன்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 285



அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. குழந்தைப் பேறு
4. அழகு
6. பர்வதம்
7. பாடுவதைக் குறிக்கும்
8. மகளிர்
10. மருந்து
11. செருக்கு
13. தீவிரம்
14. நமது
15. முறம்
16. உயர்ந்த இடம்
17. பிணம்
18. மரக்கறி வகைகளில் ஒன்றான நீளமான காய் தரும் மரம்
20. வனம்
21. தாடையில் வளர்வது
22. உயர இருந்து கீழே பாய்

### மேலிருந்து கீழ்

1. அபாரம்
2. சண்டையிடும் இடம்
3. பின்னப்படுவது
4. வதக்க
5. தாய்- தந்தை- பிள்ளைகள் ஒன்று சேர்ந்த தொகுதி.
7. பகுதி
9. சிரசு
10. பூமிக்கு மேலே உள்ளது
12. இதன் காரம் பெரிது
14. அச்சத்தால் விதிர் விதிர்
15. தடம்
16. மலை
17. தோழன்
18. கிரீடம்
19. சிறைப்படுத்தப்பட்டவன்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 283 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பிசகு (4) வாசகன் (7) சாட்டல் (8) கல (9) சுடலை (10) சிலம்பு (12) கரம் (13) அபிநயம் (15) கவி (16) கல் (17) குழு (18) பகர (20) பருத்தி (22) திரும்பல் (23) துரு.

**மேலிருந்து கீழ்**

(1) பிசாசு (2) சட்டம்பி (3) குடலை (5) சகலம் (6) கலம் (10) சிரம் (11) புரவி (12) கயல் (13) அதிபதி (14) நகரம் (15) கழுத்து (17) குரு (19) பல் (21) திரு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர்கள் எவரும் சொற்சிலம்பப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/- ரூபா 250/- ரூபா 200/- ரூபா150/- ரூபா 100/- பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி
இல. 285**
*நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (09.10.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.285 இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 13.10.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 283 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
திருமதி அ.மலர்குரூஸ்,
ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

**2 ஆம் பரிசு**
த.புவனேஸ்வரி,
கல்லூரி வீதி, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு**
சு.ஹரிப்பிரசாத்,
பருத்தியோலை வீதி, மயிலணி,
சுன்னாகம்.

**4 ஆம் பரிசு**
தி.ஜயா,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

**5 ஆம் பரிசு**
திருமதி அ.சச்சிதானந்தன்,
இல.289, 3 ஆம் ஒழுங்கை,
திருநாவற்குளம், வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

செ.லோஜி,
இல.189, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

ச.தூரிகா,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

ராணி வீரசிங்கம்,
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். [illegible] தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபமூட்டும் சிரிப்புப் படம்

# யாயா




ஒருவனுக்கு இனிப்புப் பிடிக்கும் என்பதால் தொடர்ச்சியாக இனிப்பை மட்டுமே உண்ணக் கொடுத்தால் ஒரு கட்டத்தில் அது திகட்டி, குமட்டி கடைசியில் இனிப்பென்றாலே வெறுப்பாகிவிடும் நிலை ஏற்பட்டு விடும். கிட்டத்தட்ட தமிழ் சினிமாவிலும் இப்போது இந்த நிலைதான் இருக்கிறது.

ஒரே அடிதடி இரத்தம், வன்முறை என்று பயணப்பட்டுக் கொண்டிருந்த தமிழ் சினிமாவில் திடீரென முளைத்த நகைச் சுவைப் படங்கள் ரசிகர்களைச் சிரிக்க வைத்து ஆறுதலளிக்க முற் பட்டன. இதனால் சிறிய முதலீட்டில் தயாராகும் சிரிப்புப் படங்கள்கூட வசூலை வாரிக் குவித்தன.

இதனால் படத்தை மட்டுமே குறியா கக் கொண்ட தமிழ் சினிமா உல கம் கதையம்சத்தைத் தூக்கி எறிந்து விட்டு தனியே நகைச் சுவையை மட்டும் பிரதானப் படுத்தி தொடர்ச்சியாகப் படங்களை வெளி யிட்டு வருகின்றது. ஆனால் வெறுமனே கிச்சுக்கிச்சு மூட்டி சிரிக்க வைப்பதில் காட்டும் அக்கறையை, தேர்ந்த தரமான படமாக உருவாக்குவதில் இயக்குநர்கள் காட்டுவதில்லை.

இதனால் எவ்வளவு தான் சிரிக்க வைத்தாலும் பார்வையா ளர்கள் கடுப்போடு தான் நகைச் சுவைப் படங்களையும் பார்க்கும்நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் வந்த ஒரு படம்தான் 'யாயா'.

தமிழ் சினிமாவின் தற்போதைய நகைச்சுவை மன்னன் என்ற பட்டத்தோடு வலம்வரும் சந்தானம், நேற்று பெய்த மழையில் திடீரென்று பூத்த நகைச்சுவை நாயகர்களில் ஒருவரான மிர்ச்சி சிவா, சமீபத்திய தமிழ் சினிமா நகைச்சுவை கலவரக்காரரான பவர் ஸ்டார் இவர்களை ஒப்பந்தம் செய்து விட்டால் போதும், மற்றபடி கதை, திரைக்கதை, காட்சியமைப்பு என்று எதைப்பற்றியும் ரசிகர்கள் யோசிக்க மாட்டார்கள், சிரித்து விட்டு நமது கல்லாவை நிரப்பி விடுவார்கள்! என்று யோசித்து, இந்த கூட்டணியை வைத்து தயாரிப்பாளர் எம்.எஸ். முருக ராஜ் இந்த 'யாயா' படத்தை தயாரித்திருப்பார் போலிருக்கிறது. அவருடைய காலம் யாயா பார்த்துவிட்டுதிரையரங்கைவிட்டு வெளியே வரும் ரசிகர்கள் ஐய்யோ! ஐய்யோ! என்று புலம்புகிறார்கள்.

கிரிக்கெட் விளையாட்டை எடுத்துக் கொண்டு, அதனுடன் நட்பையும், காதலையும் குழைத்து 20 /20 ஆட்டம் ஆட நினைத்திருக்கிறார் இயக்கு நர். அதில் அவரால் சதம் அடிக்க முடிந்ததா என் பதுதான் கேள்வி.

நாயகன் சிவாவின் அம்மா ராமராஜனின் தீவிர விசிறி என்பதால் தன்னுடைய பிள்ளைக்கு, ராமராஜன் பெயரையே சூட்டுக்கிறார். சிவாவோ அந்தப்பெயரை டோனி என்று மாற்றிக் கொண்டு வெட்டி யாக ஊர்சுற்றும் சேட்டைப் பேர்வழி.

அப்படிப்பட்டவர் தனது நண்பர்களை அடித்த சந்தானத்தைச் சந்திக்கிறார். அவரது பெயர் சேவாக். இரண்டு பேரும் மோதிக்கொள்ளப் போகிறார்கள் என்று பார்த்தால் நண்பர்கள் ஆகிவிடுகிறார்கள். காரணம் டோனி - சேவாக் என்ற பெயர்களில் இருக்கும் பொருத்தம். நட்பென்றால் ஒன்றுக்குள் ஒன்று என்று ஆகிவிடுகிறார்கள். இந்த நட்பை உடைக்க வருகிறது காதல்! இருவரும் திடீர் எதிரிகள் ஆவதும் பின்பு இணைவதும் எப்படி என்பதுதான் திரைக்கதை. காதலிகளால் கைவிடப்பட்டவர்களுக்கும், நண்பர்களால் ஏமாற்றப்பட்டவர்களுக்காகவும் இந்த படம் என்று இயக்குநர் சமர்ப்பணம் போடும் போதே கதை புரிந்துவிடுகிறது. கதையில் புதுமை இல்லாவிட்டாலும் சொல்ல வந்த கதையை சுவையாகச் சொல்வதுதான் திரைக்கதை என்பதில் சிக்ஸர் அடிக்கத் தவறிவிடுகிறார் இயக்குநர். சந்தானத்தின் நகைச்சுவை பழகி விட்டது. மாற்றிக் கொள்ளாவிட்டால் அவரது ரசிகர்களுக்கே விரைவில் இது அலு ப்புத் தட்டிவிடலாம். இடையி டையே வரும் பவர்ஸ்ரார் கலகலப் பூட்டத் தவறவில்லை. சந்தானத்தைவிடவும்இவருக்கே வரவேற்பு அதிகமாக இருக்கிறது.

சந்தானத்தை சகித்துக் கொள்ளும் அதேநேரம், ஏனைய சில காதாபாத்திரங்களின் தேவையற்ற நகைச் சுவைக் காட்சிகளை ரசிக்க முடியவில்லை. அவை படத்தில் ஒட்டவும் இல்லை. பெண் காவலராக வரும் டோனியின் அத்தை பெண் கனகாவும், சேவாக்கும் காதலிக்கும் காட்சிகளை ரசிக்கலாம். ஆனால், அறைத் தோழி சீதாவுக்காக, டோனியை விட்டுக் கொடுப்பதாகச் சித்தரிக்கப்பட்ட காட்சிகள் அவ்வளவு வலுவாக இல்லை. ராமராஜன், கனகா, சீதா, ராஜ் கிரண், தோனி, சேவாக், சச்சின், ஏ.ரி.எம். ரைம் பாஸ் என்று கதாபாத்திரங்களுக்கு பெயர் வைப்பதில் இருக்கும் கவனம் திரைக் கதையிலும் இருந்திருந்திருந் தால் படத்துக்கும் யாயா சொல்லியிருக்கலாம். இயக்குநர் ராஜசேகரனுக்கு இது தான் முதல் படம். பாவம், இதுவே கடைசி படமாக ஆகிவிடுமோ என்று நினைக்க தோன்றும் அளவுக்குப் படத்தை எடுத்திருக்கிறார். ரசிகர்கள் சிரித்துக் கோபத்துக்குள்ளாகும் படங்களுக்கு இதுவும் ஒரு உதாரணம்.

# சித்த மருத்துவ அழகுக் குறிப்புகள்



- தேங்காய் எண்ணெயில் மஞ்சள் தூளைப் போட்டுக் குழைத்து உடம்புக்குத் தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

- ஒரேஞ்ச் பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

- முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அ[illegible] சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

- பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெது வெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிடவேண்டும்.

- நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

- கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சீனியைக் கலந்து தலை யில் [illegible] முழுக வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.




யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சமையல்

தேவையான பொருள்கள்:
நண்டு - 500 கிராம்
பெரிய வெங்காயம் - ஒன்று
சிறிய வெங்காயம் - 5
பச்சை மிளகாய் - 5
உள்ளி - 5 பல்
கறிவேப்பிலை 1 இறகு
புளி சிறிய தேசிக்காயளவு
இஞ்சி - சிறிது
சரக்கு மிளகாய்த்தூள்- 3 தேக்கரண்டி (உறைப்பு தேவைக்கேற்ப)
மஞ்சள்தூள் - சிறிதளவு
பெருஞ்சீரகம் (சோம்பு) - ஒரு தேக்கரண்டி
கடுகு - சிறிதளவு
மிளகு - சிறிதளவு
வெந்தயம் - சிறிதளவு
தேங்காய் - பாதி
தாளிக்க தேவையான அளவு எண்ணெய்
உப்பு - தேவையான அளவு

செய்முறை:

1. நண்டைச் சுத்தம் செய்யவும் பெரிய நண்டாக இருந்தால் 4 துண்டுகளாக உடைக்கவும். சிறிய நண்டாயின் இரண்டாக உடைக்கவும். பெரிய கால்களை இரண்டாக முறிக்கவும். அவற்றை சிறிது மஞ்சள் தூள் சேர்த்துத் தடவி வைக்க வும். [சிலர் மஞ்சள் பாவிப்பதில்லை]
2. பாதித் தேங்காயைத் துருவி ஒரு தட்டில் வைக்கவும். வெங்காயம், பச்சை மிளகாய், என்பனவற்றை நீட்டாக வெட்டித் தனித்தனியாக வைக்கவும். உள்ளியை சிறுதுகள்களாக சீவிக் கொள்ளவும். இஞ்சியையும் சீவிக் கொள்ளலாம் அல்லது சிரட்டையில் போட்டுக் குத்திக் கொள்ளவும்.
3. தேங்காய், பெருஞ்சீரகம், மிளகு, ஆகியவற்றை ஒரு தாச்சியில் இட்டு தேங்காய்பூ பொன்னிறமாகும் வரை வறுத்து எடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்திருக்கவும்.
4. தாச்சியில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி, எண்ணெய் சூடேறியதும் அதில் கொஞ்ச கடுகு, பெருஞ்சீரகத்தை போடவும். கடுகு காய்ந்து வெடித்ததும் அதற்குள் கொஞ்ச வெந்தயம் போடவும். வெந்தயம் பொரிந்து சிவத்ததும் வெட்டிவைத்த பெரிய வெங்காயத்தையும் பச்சை மிள்காயையும் உள்ளியையும் போட்டு வதக்கவும்.

வெங்காயம் வதங்கி வந்ததும் அதற்குள், கழுவி வைத்த நண்டை போட்டு கிளறி வதங்க விடவும். கொஞ்சம் வதங்கி வந்ததும் அதற்குள் பழப்புளியைக் கரைத்து விடவும். அத்துடன் நண்டு அவியத் தேவையான அளவு தண்ணீரையும் விடவும்.

சிறிது நேரத்தில் அதற்குள் 3 தேக்கரண்டி சரக்கு மிளகாய் தூளும் [உறைப்புக் கேற்ப], தேவையான உப்பும் போட வும். சீவி வைத்த இஞ்சியையும், வெட்டி வைத்த சின்ன வெங்காயத்தையும் போட்டுக் கலக்கிய பின்னர் பாத்திரத்தை மூடி அவிய வி[illegible]

வெட்டிய ப[illegible] மிள்காயை வதக்காது சின்ன வெங்காயத்துடன் சேர்த்து அவியவும் விடலாம். அவரவர் சுவைக்கு ஏற்ப இதனைச் செய்யலாம்.

நண்டு அரை அவியல் அவிந்ததும் அதற்குள், நாம் வறுத்து வைத்த தேங்காய் வறுவலைப் போட்டு நன்கு கலக்கித் துளாவி திரும்பவும் கொதிக்க விடவும்.

கறி வற்றிப் பிரட்டலாக வரும்போது கறிவேப்பிலையைப் போட்டு இறக்கி மூடிவிடவும். இப்போது மிகச் சுவையான யாழ்ப்பாணத்துப் பாரம் பரிய நண்டுக் கறி ரெடி.

குறிப்பு:

*சிலர் பழப்புளிக்குப் பதிலாகத் தேசிக்காய் புளியும் விடுவார்கள். இன்னும் சிலர் கறிமுருக்கம் இலை சேர்ப்பார்கள். தேங்காயைப் பாலாகவும் சேர்க்கலாம், கறி தடிக்காது. பூவை வறுத்துப்போட்டால் கறி தடிக்கும், ருசியாகவும் இருக்கும். நண்டு வாங்கும்போது பாரமான கொழுத்த நண்டாக பார்த்து வாங்கினால் கறி மிகச் சுவையாக இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுயாட்சிதான் வேண்டும்

## தமிழ் மக்களின் செய்தி தெளிவானது

மூணாத்தானா

செப்ரெம்பர் 21ஆம் நாள் நடைபெற்றவடக்குமாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாணத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இமாலய வெற்றியினை வாரி வழங்கியமையானது சிங்கள தேசத்தை ஒரு கணம் உலுப்பித்தான் விட்டது. தமிழ் மக்களுக்கு உளவியல் ரீதியாகப் படையினரும் அரசும் தினமும் கொடுத்து வந்த வலியையும் வேதனையையும் வாக்குகள் மூலம் அரசுக்கும் அடிவருடி வேட்பாளர்களுக்கும், ஒட்டுக்கட்சியினருக்கும் திருப்பிக் கொடுத்துவிட்டனர் தன்மானத் தமிழ்மக்கள்.

### காத்திருந்து தாக்குதல்

போர் முடிந்த பின்னர் இராணுவமும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரும், ஆளுநரும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்கள் மீது உளவியற் போரினை நடத்தி வந்தனர். தமிழர்கள் மீண்டும் மீண்டும் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். எனவே சரியானதொரு பாடத்தைப் படிப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தனர் தமிழர்கள். அந்த நாளும் வந்தது. மாகாண சபைத் தேர்தல் என்ற வடிவில்.

போருக்குப் பின் நாட்டில் ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் எனப் பல தேர்தல்கள் நடைபெற்றன. அந்தத் தேர்தல்களில் தமிழ் மக்கள் பெருமளவில் பங்கு கொள்ளாமல் இருந்து விட்டனர். அதேசமயம் போர் முடிந்து ஐம்பத்திரண்டு மாதங்கள் கடந்த பின்னும் தமிழர்களை அடிமையாகவே வைத்திருக்க முயற்சித்தது அரசு. இதனை உணர்ந்து கொண்ட தமிழ் மக்கள் மீண்டும் உரிமைப் போருக்குத் தயாரானார்கள்.

### பித்தலாட்டங்கள்

வடக்கு மாகாண சபைத் தேர்தலை தமிழ் மக்கள் சந்தித் தனர். காலத்தின் கட்டாயம் இந்தத் தேர்தல் என உணர்ந்தனர்.

போறா.... சுதந்திரமா...?, அபிவிருத்தியா... அதிகாரப் பகிர்வா?, சலுகையா.... உரிமையா...?, பேனையா...., துப்பாக்கியா...?, மகிந்த சிந்தனையா...., பிரபாகரன் சிந்தனையா...? வெற்றிலைக்கா... வீட்டுக்கா...?, வடக்கின் வசந்தமா...., முள்ளிவாய்க்கால் நரகமா...? அரசின் பக்கமா...., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பக்கமா...? என்றவாறு தமிழ் மக்களை நோக்கி அரசும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரும், இராணுவத்தினரும் மும்முனை அழுத்தங்களை வழங்கினர். இது போதாதென்று தமிழர்களின் இதயத்தை நோகடித்தார்கள். காணாமற்போனோர் உறவுகளை, மாவீரர்களின் உறவுகளை, போராளிகள் குடும்பத்தினரை, தமிழ்த்தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்களை தங்களது உரைகள் மூலமும், பட்டிமன்றம் மூலமும் காயப்படுத்தினார்கள். இறுதித் தேர்தல் நாள் வரை தமிழ் வாக்காளர்களை உளவியற் தாக்கத்துக்கு உள்ளாக்கினார்கள்.

அதுமட்டுமன்றி 19.09.2013 அன்று படையினர் என்று கருதப்படுபவர்களால் போலியான 'உதயன்' பத்திரிகை தமிழ் மக்கள் முழுக்க முழுக்க நம்பக் கூடியவாறு வெளியிட்டார்கள். தமிழ் மக்கள் மனங்களை குழப்பமடையச் செய்தார்கள். மக்கள் இதனை நம்பவில்லை. அதனால் அதற்கும் சேர்த்து தமிழ் மக்கள் ஒன்று திரண்டு விடுதலை வேட்கையோடு வாக்களித்தனர். வடக்கு மாகாண சபைக்கான ஆட்சிப் பொறுப்பினை யார் கையில் கொடுக்க வேண்டுமோ அவர்கள் கையில் கொடுத்தனர்.

### தலையடி பதில்

முப்பது உறுப்பினர்கள் வேண்டும் என தனது பரப்புரைகள் மூலம் தமிழ் மக்களிடம் முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதனையும் தமிழ் மக்கள் அள்ளிக் கொடுத்தனர்.

1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் எப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணை வழங்கினரோ அதைப் போல் தமிழ் மக்கள் கூட்டமைப்பை ஆதரித்தனர். அடிமையாக வாழமாட்டார்கள் தமிழர்கள் என்பதை நிரூபித்தார்கள்.

சொந்த தாயகத்தில் தங்களைத் தாம் ஆள வேண்டும், மாவீரர்கள் கனவு நனவாகவேண்டும் என்ற சிந்தனையுடன் இந்த மண் எங்களின் சொந்த மண் என்பதை நிலைநிறுத்தி செப்ரெம்பர் மாதம் 21ஆம் நாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கினர் தமிழ் மக்கள்.

சிங்கள இனவாதிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் அரசினது அடி வருடிக் கும்பல்களுக்கும் சரியானதொரு பதிலடியை வழங்கி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்கின்றனர்.

சிங்கள ஆட்சியாளருக்கு என்றுமே அடிபணியாதவன் தமிழன், அற்ப சலுகைகளுக்கு விலை போகாதவன் தமிழன், இன்னும் சொல்லப் போனால் விட்டெறியும் எலும்புத் துண்டுக்கு வாலாட்டும் நாய்களல்லர் தமிழர்கள் என்பதை திமிர்த்தனத்துடன் எடுத்துக் காட்டிவிட்டனர். வலி சுமந்து நிற்கும் மக்கள் தமது வலிமையை ஒற்றுமையுடன் எடுத்துக் காட்டினர். வடக்கு மாகாணத் தமிழ் மக்கள் போர்க் களமுனையைச் சந்தித்தது போல் தான் இந்தத் தேர்தலை சந்தித்தனர். இந்தியா உட்பட சர்வதேசமும் முழு அளவில் இந்தத் தேர்தலை வெகுவாக உற்று நோக்கியவாறு இருந்தது. ஜனாதிபதி உட்பட இடதுசாரி அமைச்சர்கள் வரை வடபகுதியில் முகாமிட்டு தேர்தல் பரப்புரைகளைத் தீவிரமாக முடுக்கிவிட்டிருந்தனர். இராணுவமும் அரச தரப்பு வேட்பாளர்களும் ஈ.பி.டி.பியும் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை அச்சுறுத்தின.

### பயன்தராத அடாவடிகள்

தீவுப் பகுதி உட்பட வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பலர் தாக்கப்பட்டிருந்தனர். வீட்டுக்கு கழிவு ஒயில் வீசப்பட்டது. மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் படையினரால் பறித்தெறியப்பட்டன. ஒரு சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டனர். குறிப்பாக பெண் வேட்பாளரான அனந்தி சசிதரன் படையினரால் பல தடவை குறிவைக்கப்பட்டுத் தாக்கப்பட்டார், பலகோணங்களில் அச்சுறுத்தப்பட்டார். வன்னியில் நிலைமை இன்னும் எழுச்சியாக இருந்தது. மக்களின் இன உணர்வு, விடுதலை வேட்கை தன்மான உணர்வு போர்க் காலத்தில் இருந்தது போல் மீண்டும் வீறு கொண்டெழுந்தது. தங்களது ஆத்திரத்தினையும், அரசு மீது வைத்துள்ள கோபத்தினையும் அதீத வெறுப்பையும் வாக்குச் சீட்டுகளில் வெளிக்காட்டினர். வடக்கு மாகாணத் தேர்தல் முடிவானது தமிழர்கள் தன்மானம் உள்ளவர்கள். தமிழர்கள் இழந்த உரிமைகள் மீட்கப்படும்வரை உரிமைக்கான போராட்டம் ஓயாது. சிங்கள அரசு தமிழர்கள் மீது அடக்குமுறைகளைத் தொடர்ந்தும் கட்டவிழ்த்து விட்டால் தமிழர்கள் அடங்கமாட்டார்கள். தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை தமிழர்கள் ஏற்கமாட்டார்கள். இந்த மண் தமிழர்களின் சொந்த மண் என்பதையெல்லாம் இந்தியாவுக்கும், சர்வதேசத்துக்கும் தெளிவாக உணர்த்தியுள்ளது.

### தெளிவான விடை கிடைத்தது

தமிழ் மக்கள் எவ்வாறு வாக்களிப்பார்கள்? தமிழ் மக்களின் முடிவு எப்படி அமையும்? அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற மேம்பாட்டுத் திட்டங்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்றனரா..? உரிமையே உயிர் மூச்சு என்ற நிலையில் இருந்து மாறவில்லையா? என்ற கேள்விகளுக்கான விடைகள் சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் தேவையாக இருந்தன. தமிழ் மக்களின் பதில் முடிந்த முடிவாக வாக்குகள் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

உலகத்தமிழர்களுக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது இந்த வெற்றி. தமிழகத்தமிழ் மக்கள் தேர்தல் வெற்றிச் செய்தியினை கொண்டாடி மகிழ்ந்தது மட்டுமன்றி தமிழகத்தலைவர்களும் இதனால் சந்தோசமடைந்துள்ளனர்.

போருக்குப் பின் இலங்கைத் தீவில் தமிழர்களை தோற்கடித்துவிட்டோம், இது எங்கள் நாடு, பௌத்தநாடு, சிங்கள நாடு, சிங்கள மக்களுக்கு மட்டும்தான் இந்த நாடு சொந்தம் என்று சிங்கள இனவாதிகளும் ஏன் ...ங்கள அரசிலிருப்பவர்களும் கூறி ...தனர். சிங்கள மக்களும் இதனை ...க் கொண்டு, போர் முடிந்த ...ம் தொடக்கம் இந்த நாட்டில் ...பெற்ற சகல தேர்தல்களிலும் ...மோக வெற்றியை மகிந்த ராஜபக்ஷ அரச...த வழங்கி வருகின்றனர்.

### இதற்கான பதிலைத் தேர்தல் முடிவு வழங்கி விட்டது

போர் முடிந்த பின்னர் தமிழர்கள் நாம் போரில் தோற்றுவிட்டோமே...! நாங்கள் இந்த மண்ணில் அடிமை களாகி விட்டோமே...! தமிழினம் என்ன சாபக்கேடு பிடித்த இனமா...? தமிழர்களுக்கு மீட்சியே இல்லையா...? என்று மனதுக்குள் வேதனைப்பட்டனர். தலைகுனிந்து நடந்த தமிழர்கள், பெருபான்மை மக்களால் கேலி செய்யப்பட்ட தமிழர்கள். எல்லோருக்கும் வடக்கு மாகாணத் தமிழர்களின் தேர்தல் வெற்றிச் செய்தியானது புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று அடித்துக் கூறிய பெரும் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கருத்து மெய்யாகி விட்டமை கண்டு எல்லோரும் மகிழ்கிறார்கள்.

### கிழக்கிலும் அதிர்வு

அரசுடன் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபை ஆட்சியைக் கைப்பற்றியிருந்த நிலையில் வடக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றி அவர்களுக்குப் புதிய நம்பிக்கையை உண்டாக்கியுள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களும் கிழக்கு மாகாண சபை ஆட்சி நிர்வாகத்தினை ஏற்றுக் கொள்ளாத சூழ்நிலை தற்போது காணப்படுகிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பலம் கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் மாற்றத்தையும் கொண்டு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்புக்களையும் அது ஏற்படுத்தியுள்ளது.

வடபகுதித் தேர்தலில் அரசுக்கு தமிழர்கள் தெளிவாகச் சொல்லிய செய்தியை ஏற்றுக்கொண்டு தமிழர் பிரச்சினையை அரசு விரைவில் தீர்க்க வேண்டும். சமஷ்டியையோ அல்லது சுயாட்சியையோ வழங்க வேண்டும். இல்லையெனில் மஹிந்த அரசு சர்வதேசத்தின் பிடிக்குள் சிக்குப்பட்டு குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியிருக்கும்.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதல் தமிழ் மக்கள் இன்றைய தேர்தல்கள் வரையில் சுயாட்சி, சமஷ்டி போன்ற கோரிக்கைகளுக்கே வாக்களித்து வந்தனர். தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகள் எது என்பதை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுத் தலைவர்களுக்குப் போருக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி தெட்டத் தெளிவாகவே விளங்கப்படுத்தி வந்திருக்கின்றனர்.

தமிழ் மக்களின் ஜனநாயக உள்ளக் கிடக்கினைப் புரிந்து கொள்ளாத, உணர்ந்து கொள்ளாத அரசுகளும், தென் இலங்கை இனவாதச் சக்திகளும் பிரச்சினையைத் தீர்க்காமலேயே உள்ளன. இலங்கை இறமையுள்ள நாடு பிரிவினைக்கோ, தனிநாடு அமைக்கவோ இடமில்லை என்று கூறி போராட்டத்தை நசுக்குகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் சூடான், கொசோவா போன்ற நாடுகளில் காணப்பட்ட நிலைமையை நோக்கி சிங்கள அரசு போய்க் கொண்டிருக்கின்றது என்பதை உணரக் கூடியதாகவும் இருக்கின்றது. அத்தகைய நிலையில் தமிழ் மக்களின் விருப்பம் என்ன என்பதை உலகுக்கு உணர்த்தும் முடிவாக வடபகுதித் தேர்தல் முடிவு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணமும் உதைபடும் நேபாளிகளும்



2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் கட்டார் நாட்டில்.

கட்டாரில் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கான கட்டுமாணப் பணிகளுக்காக வந்துள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்கள் குறிப்பாக நேபாளிகள் கொத்தடிமைகள் போல நடத்தப்படுகின்றனர் என்று பல்வேறு மட்டங்களில் இருந்து குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

2022 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் கட்டாரில் நடைபெறவுள்ள நிலையில், அந்தப் போட்டிகள் தொடர்பான பிரம்மாண்டமான கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்களின் நிலை குறித்து வெளியாகியுள்ள ஒரு புலனாய்வு அறிக்கை பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது என்று அந்தத் தொடரின் ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

லண்டனிலிருந்து வெளியாகும் 'தி கார்டியன்' நாளிதழ் வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள நேபாளத் தொழிலாளர்கள் பெருமளவுக்கு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அங்கு நடைபெற்று வரும் துஷ்பிரயோகம் 'நவீன கால அடிமைத்துவம்' என்றும் அந்த நாளிதழ் வர்ணித்துள்ளது.



உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான ஒரு விளையாட்டு அரங்கத்தின் வரைவு.

இதுகுறித்து உலகக் கிண்ணத் தொடரின் ஏற்பாட்டாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். நேபாளத்திலிருந்து பணிகளுக்காக கட்டாருக்கு வந்துள்ளவர்கள் மிகவும் மோசமான வகையில் நடத்தப்படுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் அவர்கள் கூறுகின்றனர். எனினும் கட்டார் அரசோ, இதுகுறித்து நாம் ஆராய்வோம் என்று சாதாரணமாகக் கூறிவிட்டு அமைதியாகியுள்ளது.



மேலும் ஒரு விளையாட்டு அரங்கத்தின் மாதிரி

இந்த ஆண்டு ஜூன் 4ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் மட்டும் 44 நேபாள பணியாளர்கள் தமது பணியிடங்களில் இதய நோய்களால் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் தொடர்பான கட்டுமான இடங்களில் பணி புரியும் பணியாளர்களின் உடல் நிலை, அவர்களது நலன், பாதுகாப்பு மற்றும் கௌரவம் ஆகியவை தமக்கு மிகவும் முக்கியமான ஒன்று. அவை 2022 ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரை வெற்றிகரமாக நடத்துவதற்கு அவசியமானது என்று தொடரின் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாக ஊடகங்களில் வந்துள்ள தகவல்கள் குறித்து தாங்கள் மிகவும் கவலையடைந்துள்ளோம். ஜுரிக் நகரில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி மற்றும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள பிபாவின் உயர்மட்டக் கூட்டத்தில் இந்த விடயம் விவாதிக்கப்படும் என்று சர்வதேச கால்பந்து சம்மேளனமான பிபா கூறியுள்ளது.

# இவங்களுக்கு என்னாச்சு?

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு திடீரென என்னாயிற்று என்று தெரியவில்லை. வரிசையாக ஆளாளுக்கு முடியலங்காரத்தை மாற்ற ஆரம்பித்துள்ளனர்.

அணித்தலைவர் டோனியைத் தொடர்ந்து தற்போது வீராட் கோஹ்லியும் தனது தலைமுடியைக் குதறி புது முடியலங்காரத்துடன் உலவ ஆரம்பித்துள்ளனர்.




இதுவும் கிட்டத்தட்ட டோனியின் 'மோஹாக்' முடியலங்காரம் போலத்தான் உள்ளது. ஆனால் புருவத்தையும் சேர்த்து வெட்டி கோடு கிழித்து வித்தியாசப்படுத்தியுள்ளார் கோஹ்லி.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணித்தலைவராக தற்போது சம்பியன்ஸ் லீக் தொடரில் பரபரப்பாக உள்ள டோனி தனது முடியலங்காரத்தை படு வித்தியாசமாக மாற்றி நூதனமாக தலைகாட்டியபோது பலரும் அசந்து போயினர்.

அதாவது தலையின் நடுவே மட்டும் முடிவைத்துக் கொண்டு சுற்றிலும் மொட்டை அடித்தாற் போல விநோதமாகக் காட்சி தருகிறார் டோனி.

இந்நிலையில் தற்போது வீராட் கோஹ்லியும் தலைமுடியை மாற்றியுள்ளார். டோனி மாதிரியே இவரும் 'மோஹாக்' முடியலங்காரத்துக்கு மாறியுள்ளார்.

ஆனால் அத்தோடு நில்லாமல் தலையின் இரு பக்கமும் கோடு கிழித்தாற் போல வாய்க்கால் வெட்டியுள்ளார். கூடவே புருவத்திலும் கோடு கிழித்தாற் போல வெட்டியுள்ளார்.



திடீரென அவர் இவ்வாறு தலைகாட்டியதும் அதிர்ந்து போனவர்கள் ஏதேனும் விபத்தில் சிக்கி விட்டாரோ என்று படபடத்துப் போய் அவரிடம் விசாரித்துள்ளார்.

அதற்கு கோஹ்லி, "இதுதான் எனது புதிய முடியலங்காரம். 2 நாளைக்கு முன்னாடிதான் மாத்தினேன். 'ஸ்போர்ட் பிராண்ட்' விளம்பரத்திற்காக இந்த அலங்காரத்துக்கு மாறினேன், நன்றாகத்தானே இருக்கிறது" என்கிறார்.

முடியலங்காரம் குறித்து டோனியிடம் கேட்டால் வெக்கப்படுகின்றார். " இப்படி வெட்ட வேண்டும் என்பது எனது முடிவல்ல. எனக்கு முடியலங்காரம் செய்பவர் முன்பு போய் உட்கார்ந்த போது வித்தியாசமாக வெட்டப் போவதாக கூறினார். அவர் வெட்டி முடிக்கும் வரை என்னைக் கண்ணாடியைப் பார்க்க விடவில்லை. எல்லாம் முடிந்த பின்புதான் தலையைப் பார்த்தேன். அது இப்படி இருக்கிறது" என்றார் அப்பாவியாக.

இந்திய கிரிக்கெட் அணியில் இப்போது முடிக்கு கிரகம் சரியில்லை போல, ஷிகர் தவான் முறுக்கு மீசையுடன் சிறுத்தை பட கார்த்தி போல எப்ப் பார்த்தாலும் மீசையை முறுக்கி விட்டபடி இருக்கிறார். அவரைப் பார்த்து ரவீந்திர ஜடேஜாவும் மீசையை முறுக்கி விட்டு வருகிறார்.

இப்ப டோனியும், கோஹ்லியும் தலையில் கை வைத்துள்ளனர். அடுத்து யார் என்ன செய்யப் போறாங்க என்றே தெரியலையேப்பா...!



எங்களுக்கு ஒன்னுமே ஆகல பாஸ்.. எங்கள பார்த்து உங்களுக்குத்தான் ஏதாவது ஆயிடும் பாஸ் கவனம்....."

# வெளுத்து வாங்குகின்றார் யுவராஜ்

அண்மைக்காலமாக ஆட்டத்திறன் காணாது என்று இந்திய அணியில் இருந்து ஒதுக்கப்பட்ட யுவராஜ் சிங் மீண்டும் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றார்.



நடைபெற்றுவரும் என்கேபி சலஞ்சர்ஸ் தொடரில் வெளுத்து வாங்குகின்றார் யுவராஜ் சிங். என்கேபி சலஞ்சர்ஸ் தொடரில் இந்தியா புளூ அணிக்கு தலைமை வகிக்கும் யுவராஜ் அண்மையில் நடத்த இந்திய ரெட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தனது பழைய அதிரடியைக் காட்டியிருக்கின்றார்.

5 இமாலய சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் என 53 பந்துகளில் 84 ஓட்டங்களைப் பெற்று மிரட்டியிருக்கின்றார்.

இந்திய அணியில் இடம்பிடித்தே தீருவேன் என்ற வைராக்கியத்துடன் அயராத பயிற்சியில் ஈடுபட்டு வரும் யுவராஜ் விரைவில் இந்திய அணியில் இடம்பெற்று எதிரணியை மிரட்டுவார். நம்பலாமா? ஏனெனில் விடாமுயற்சி விஸ்வரூப வெற்றியைத் தருமல்லவா?....

# '3' காத்திருக்கும் ரெய்னா



இந்திய அணியின் வளரும் சிறந்த, ஆக்ரோஷமான இடதுகை ஆட்டக்காரர். சிறந்த களத்தடுப்பாளரும் கூட. துடுப்பாட்டத்திலும் சரி, களத்தடுப்பிலும் சரி இந்திய அணியின் வீரரான யுவராஜ் சிங்கை ஞாபகப்படுத்துபவர் என்று பலராலும் கூறப்படுபவர் இவர்.

"3 ஆவது வீரராகக் களமிறங்கினால் அதிக பந்துப் பரிமாற்றங்கள் கிடைக்கும். அப்போதுதான் எனது திறமையைக் காட்டுவதற்கு வசதியாக இருக்கும். இந்திய அணியில் களமிறங்கும் போது 3ஆவது வீரராகவே களமிறங்க வேண்டும். அதற்காகக் காத்திருக்கின்றேன்" என்று கூறுகின்றார் இந்திய அணியின் ஆக்ரோஷ துடுப்பாட்டக்காரரான சுரேஷ் ரெய்னா.

சம்பியன் லீக் '20/20' தொடரில் சண் றைசர்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய ரெய்னா 84 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டநாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கான களமிறங்கும் போது 3 ஆவது இடத்தில் துடுப்பெடுத்தாடும் ரெய்னா, இந்திய அணிக்காகக் களமிறங்கும்போது 5ஆவது அல்லது 6 ஆவது இடத்தில் களமிறங்குகின்றார்.

என்னதான் அந்த இரகசியம் என்று அவரிடமே கேட்டோம். "அப்படி ஒரு பெரும் இரகசியமும் இல்லை. 3ஆவதாகக் களமிறங்கும் போது அதிக பந்துப்பரிமாற்றங்கள் கிடைக்கும். அப்போதுதான் நாம் எமது ஆட்டத்தைப் பற்றித் திட்டமிட முடியும். ஒருநாள் ஆட்டத்தில் 45 பந்துப்பரி மாற்றங்களும், '20/20' பந்துப்பரி மாற்றத்தில் 20 பந்துப் பரி மாற்றங்களும் கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்றது.

அதனால் 3 ஆவதாகக் களமிறங்குவது எனக்குப் பிடிக்கும். அதனால் தான் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் களமிறங்கும் போது 3 ஆவது வீரராகக் களமிறங்குகின்றேன். இந்திய அணியில் 3 ஆவது வீரராகக் களமிறங்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருக் கின்றேன். எனினும் அந்த வாய்ப்பு இன்னமும் கிட்டவில்லை. வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்று ஆவலாக இருக்கின்றேன்." என்று சிரித்துக் கொண்டே கூறுகின்றார் ரெய்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீ.பீ.சீ தமிழ்ச் செய்தி

NEWS 1st

BBC WORLD SERVICE

BBC සිංහල

BBC தமிழ்

சிரச FM — திங்கள் - வெள்ளி இரவு 10.10க்கு

சக்தி FM — திங்கள் - வெள்ளி இரவு 8.55க்கு

YES FM — தினமும் 6 தடவைகள் மு.ப.7, மதியம் 12, பி.ப 6 உட்பட

# இப்போது சக்தி FM ஊடாக

# உங்களுடைய உலகம் உயிர்பெறும்...

Micromax — nothing like anything




The Micromax Canvas HD is the phone that CAN make everything you dreamed possible. The Quad Core processor can make technology look stunning, the 16.7 million colours can make the world look more colourful and the 8 MP camera can make photos look more fabulous.
It's the phone that can. It's the Micromax Canvas HD.

12.7 cms (5) Screen TRU-HD IPS Screen · 16.7 Million Colour Depth · 1.2 GHz Quad Core Processor · Android 4.2 (Jelly Bean) · 8 MP Auto Focus Camera with LED Flash · Burst Mode upto 99 Shots · Expandable Memory up to 32 GB · Dual Sim Dual Standby




Immerse yourself in the world of music, only with the new Micromax Canvas Music. Enhanced with JBL headphones, the phone creates the ultimate music experience like never before, whether it's ambient or rock. Feel the beats reverberate through your very core and make music your passion, with the Micromax Canvas Music.

11.4 cms (4.5) Mega Screen · 1 GHz Dual Core Processor · Android 4.1.1 (Jelly Bean) · Expandable Memory up to 32 GB · Dual Sim Dual Standby

CAN
DOODLE
Canvas DOODLE




Let your imagination run riot and let the artist in you come to the fore. Armed with the Evernote apps, only on the Micromax Canvas Doodle.

EVERNOTE · Sketch

அதிகாரம் அளிக்கப்பட்ட விற்பனைப் பிரதிநிதி

metropolitan

பத்தரமுல்லை-071 681 3910 | நுகேகொட- 0779 940 483
கண்டி-077 755 5180 | கொழும்பு 03-077 079 9181 | கொழும்பு 02-0113 301 948 | மொரட்டுவை-077 955 9770


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fonterra™

Dairy for life

# ∴பொன்ரேரா பிரான்ட்ஸ் லங்கா - பொது அறிவித்தல்

சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற அங்கர் பக்கட்டுக்கள் அனைத்தும், சுகாதார அமைச்சின் கட்டாய நடைமுறைக்கு அமைவாக உற்பத்தியில் DCD கிடையாது என்பதை உறுதிப்படுத்தும் ஸ்டிக்கர் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

இது 2013 ஆகஸ்ட் 24 அன்று சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டு, 2013 செப்ரெம்பர் 4 அன்று திருத்தம் செய்யப்பட்ட PA/EOH/FCAU/42/2013 என்ற சுற்றுநிருபத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

அங்கர் பால்மா பக்கட்டுக்கள் அனைத்திலும் கீழ்க்காணும் ஸ்டிக்கர்களில் ஒன்று பொறிக்கப்பட்டிருப்பதை நீங்கள் அவதானிக்க முடியும்:




*




*குறிப்பு - மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பக்கட்டுக்களில் அரச முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். இவை அனைத்தும் 2013 ஆகஸ்ட் 24 திகதியிடப்பட்ட பணிப்புரையானது 2013 செப்டெம்பர் 4 அன்று திருத்தம் செய்யப்படுவதற்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான கையிருப்பாகும்.

மேலதிக விரங்களுக்கு அங்கரைக் கேளுங்கள். 0112 468 468 என்ற தொடர்பு சேவை இலக்கத்திற்கு தயவுசெய்து அழைப்பை ஏற்படுத்துங்கள்.

கேளுங்கள்

அங்கர் இடம்

(011) 2 468 468

(C1265)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளைந்த திரை கொண்ட கைத்தொலைபேசியை வெளியிட சம்சுங் நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. இந்தக் கைத்தொலைபேசி அடுத்த மாதம் வெளியாகும் என்று அந்த நிறுவனம் அறிவித்திருக்கிறது. அவற்றில் பயன்படுத்தப்படும் திரை, பிளாஸ்டிக்கால் ஆனதாக இருக்கும் என்றும் சம்சுங் கூறியுள்ளது. சியோல் நகரில் நடந்த 'கலக்ஸி நோட் - 3 டேப்லெட் வெளியிடும் நிகழ்வில் இந்தத் தகவலை சம்சுங் நிறுவனம் தெரிவித்தது. ஏற்கெனவே, வளைந்த திரை கொண்ட தொலைக்காட்சிகளை அந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

# தூங்கினால் படிக்கலாம்



மதிய உணவுக்குப் பிறகு குழந்தைகள் தூங்குவதால் அவர்களது படிக்கும் திறன் ஊக்குவிக்கப்படுகின்றது என்று ஆராய்ச்சி ஒன்றில் தெரிய வந்துள்ளது. மதிய வேளையில் 3 தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கிடைக்கும் தூக்கம் அவர்களது தொடக்கப் பள்ளிப் பாடங்களை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள உதவுகின்றது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலேயே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

BRITISH COUNCIL

Education UK
Innovative. Individual. Inspirational.



உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்கு...

9 பிரபல பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களைச் சந்திக்க ஒக்ரோபர் மாதத்தில் St John's College இங்கு வாருங்கள்

- Anglia Ruskin University
- City University London
- University of Greenwich
- London South Bank University
- The University of Northampton
- University of Salford
- Sheffield Hallam University
- University of Sussex
- UWE, Bristol

யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்காட்சி:
திகதி: 2013 ஒக்ரோபர் 12, சனிக்கிழமை | நேரம்: மு.ப. 9.00 முதல் மு.ப. 11.00 வரை
இடம்: St John's College, பிரதான வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்
பிரவேசம்: முன்பதிவு மூலம் மட்டும்

தொழில் நிலையை மேம்படுத்த அல்லது தனிப்பட்ட கல்வித் தகைமைகளை விருத்திசெய்ய விரும்பும் அனைவருக்கும் இணையற்ற பெறுமதியை பிரிட்டிஷ் கல்வி வழங்குகின்றது. தொழில் தேடும் மாணவர்களுக்கும் அவர்களை வேலைக்கமர்த்துவோருக்கும் இது ஒரு நித்திய முதலீடாகும்.

மாணவர்கள் தமது கல்விக்கான ஒரு சிறந்த இடமாக பிரிட்டனை கருதுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இதோ, அவற்றுட் சில:

- பிரிட்டிஷ் கல்வி நிலையங்களினால் பேணப்படும் உயர்ந்த கல்வித் தராதரங்கள்
- கல்வித் தகைமைகளுக்குச் சர்வதேச அங்கீகாரம்
- பட்டம் பெற்ற பின் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு
- பிரிட்டிஷ் கல்வி நிலையங்களினால் வழங்கப்படும் பல்வேறு வகையான கற்கை நெறிகளும் பாடத் துறைகளும்
- பிரிட்டிஷ் தகைமை பெற்ற பட்டதாரிகளுக்குத் தமது சொந்த நாட்டில் சிறந்த தொழில் வாய்ப்புக்கள்
- பிரிட்டனின் பல்லினக் கலாசார அமைப்பு உங்களுக்குப் பரிச்சயமான சூழலை வழங்கும்
- ஆராய்ச்சிக்கான வாய்ப்புக்களையும் புலமைப்பரிசில்களையும் பிரிட்டிஷ் கல்வி நிலையங்கள் வழங்குகின்றன

மேலதிக விவரங்களுக்கும் பதிவு செய்வதற்கும் 0114521521, 0114521576, 0114521577 ஆகிய தொலைபேசி இலங்கங்களினூடாக எடியுகேஷன் யு.கே. அணியுடன் தொடர்புகொள்ளுங்கள்

www.educationuk.org/srilanka

# ஆச்சரியம் தரும் தோல் திசு சிகிச்சை

தோல் திசுச் சிகிக்சை மூலம் புதிய சாதனை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சீனாவைச் சேர்ந்த ஜியோலியன் (வயது -22) என்பவருக்கு கடந்த ஆண்டு ஏற்பட்ட வீதி விபத்தில் மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டது. அந்தக் காயத்துக்கு அவர் சரியான சிகிச்சை எடுத்துக் கொள்ளாததால் குருத்தெலும்பு முற்றிலும் சேதமடைந்து மூக்கு உருக்குலைந்தது. மருத்துவர்கள் எடுத்த முயற்சியும் பயனளிக்காத நிலையில் தோல் திசு வளர்ப்பு சிகிச்சை முறையில் புதிய மூக்கை உருவாக்க முடிவு செய்தனர். அதன்படி ஜியோலியனின் இடுப்பெலும்பில் இருந்து எடுக்கப்பட்ட குருத்தெலும்பை பயன்படுத்தி, ஜியோலியனின் நெற்றி பகுதியில் புதிய மூக்கு வளர்க்கப்பட்டது. தற்போது அந்த மூக்கு முழு வளர்ச்சியடைந்துள்ளது. அந்த மூக்கு விரைவில் நெற்றியில் இருந்து அகற்றப்பட்டு உரிய இடத்தில் பொருத்தப்பட வுள்ளது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.



# 17 ஆம் நூற்றாண்டு பொங்கிஷங்கள்



பிரேஸிலின் முக்கிய நகரமான ரியோ டி ஜெனிரோவில் புதிய சுரங்கப் பாதை தோண்டும்பணியின்போது பல நூற்றாண்டுகால பழைமைவாய்ந்த அரச குடும்பத்தினரின் பொருள்கள் கிடைத் துள்ளன. 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள இடத்துக்கு ரியோ நகரத்தை இணைக்க இந்த சுரங்கம் தோண்டப்பட்டது. அங்கு கிடைத்துள்ள பொருள்கள் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என கூறப்படுகிறது. மொத்தம் 2 லட்சம் பொருள் கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதில் சில சிறப்பு வாய்ந்த மருந்துகளை ஊர் விட்டு ஊர் அனுப்ப பயன்பட்ட குடுவைகள் கவனத்தை ஈர்த்துள்ளன. பிரேசிலின் கடைசி மன்னரான இரண்டாம் டாம் பெத்ரோ பயன் படுத்திய தந்தத்தாலான பற்தூரிகையும் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையை நிலைநாட்ட வயது ஒரு தடையல்ல



சாதனை முயற்சிக்கு வயது ஒரு தடையல்ல என்பதை நிரூபித்திருக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த 90 வயதான பெர்த் பிளெவன்ஸ். சைக்கிள் பந்தயத்தில் அதிக ஈடுபாடு கொண்ட பிளெவன்ஸ், கென்சுக்சியில் இருந்து புளோரிடா வரையான 1497 கிலோமீற்றர் தூரம் சைக்கிள் பயணம் செய்யத் திட்டமிட் டார். அதுபற்றி தனது குடும்பத்தினரிடம் தெரிவித்தபோது குடும்ப உறுப்பினர்கள் அவருக்கு ஊக்கம் அளித்தனர்.

அதையடுத்து தனது சாதனைப் பயணத் துக்காக பிரத்தியேகமாக 3 சக்கர சைக்கிளைத் தயாரித்தார் பிளெவன்ஸ். சாய்ந்து கொண்டு ஓட்டக்கூடிய வகையில் தயாரிக் கப்பட்ட அந்த சைக்கிளில் கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி தனது சாதனைப் பயணத்தை ஆரம்பித்த பிளெவன்ஸ் கடந்த வெள்ளிக் கிழமை பயணத்தை நிறைவு செய்தார். 21 நாள்களில் பயணத்தை வெற்றிகரமாக முடித்துள்ளார் பிளெவன்ஸ். நெடுஞ்சாலைகளில் அவரது மூன்று சக்கர சைக்கிளுக்கு அனுமதி கிடைக்காததால் கூடுதல் நாள்கள் ஆனது என்று கூறுகின்றார் பிளெவன்ஸ்.

பிளெவன்ஸின் இந்தப் பயணத்தின்போது பாதி தூரம் வரையில் அவ்ரது மகனும், அடுத்த பாதித் தூரம் மகளும் பாதுகாப்புக்கு சென்றனர். வழியில் விடுதிகளில் தங்கி சிறிது நேரம் ஓய்வெடுத்தார். அத்தோடு அவரது சாதனைப் பயணத்துக்குப் பாராட்டு தெரிவித்த பார்வையாளர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

தனது பயணத்தை நிறைவு செய்த உற்சாகத்தில் இருந்த பிளெவன்ஸ், "என்னால் முடியும் என்று நினைத்தேன். அதனால் சோர்வே தெரியவில்லை" என்று தெரிவித்துள்ளார்.



## Join us and Inspire Confidence

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் இலங்கையில் ஏனைய காப்புறுதி நிறுவனங்களுக்கிடையே மிகக் கூடுதலான ரூ.1.49 பில்லியன் மூலதனத்தையும் இதுவரை ரூ.20 பில்லியன் வரையான காப்புறுதி கொடுப்பனவு சாதனையையும் கொண்ட மிகவும் இலாபகரமானதும் நிதி உறுதிப்பாடு உடையதுமான நிறுவனமாகும். மேலும் அதிசிறந்த செயற்பாடுகளுக்காக மனிதவள மூலதனமாக வருடம் ரூ.60 மில்லியனுக்கு மேல் ஜனசக்தி செலவிடுகிறது. வாடிக்கையாளர்களுக்கு அதி சிறந்ததும் உயர் தரமான பெறுமதி வாய்ந்ததுமான சேவைகளை வழங்குவதில் ஜனசக்தி அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் காப்புறுதிச் சந்தை வழங்கல் மற்றும் சந்தை நவீனத்துவம் ஆகியவற்றில் விசேடமான சாதனை உடையதாகும்.

### நாடு முழுவதிலும் – வாகன சேத மதிப்பீட்டாளர்கள் (MOTOR ASSESSORS)

உடனடி வேலைவாய்ப்புக்கள் கீழ்காணும் பிரதேசங்களில் காணப்படுகின்றது :

அழுத்கம, விசாவளை, பதுளை, சாவகச்சேரி, தலைமைக் காரியாலயம், எஹெலியகொட, ஹற்றன், கல்முனை, கந்தளாய், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, நாவலப்பிட்டி, இரத்தினபுரி, மற்றும் தம்புத்தேகம.

### (Job Ref : HRM - 011 / 2013)

தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் கீழ்காணும் தகைமைகள் உடையவராக இருத்தல் வேண்டும்

- 45 க்கும் குறைந்த வயது
- ஆங்கிலம், கணிதம், சாதாரண சித்தியுடன் க.பொ.த. சா/தரம்
- குறைந்தது 2 சித்திகளுடன் க.பொ.த உ/தரம்
- ஆங்கிலம், தமிழில் உரையாடும், எழுதும் மற்றும் தொடர்பாடல் திறமை, சிங்களம் பேசத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.
- ஜேர்மன் தொழில்நுட்பம் / யப்பான் தொழில்நுட்ப மோட்டார் வாகனப் பொறியியல் நெறி
- NAITA அங்கீகாரம் பெற்ற அடிப்படை. மோட்டார் வாகனப் பொறியியல் பயிற்சி (National Apprentice and Industrial Training Authority)
- அங்கீகாரம் பெற்ற ஒரு தொழில்தளத்தில் / நிறுவனத்தில் குறைந்தது 2 வருடங்கள் அனுபவம்
- வாகன எலெக்றிக்கல் திருத்த வேலைகளில் நல்ல திறமை
- செல்லுபடியான மோட்டார் வாகனத்தின் / வேன் சாரதி அனுமதிப்பத்திரம்

உங்களுடைய விண்ணப்பத்தை கல்வி தகைமை விவரங்களுடன் *(Curriculum Vitae)* உறவினரில்லாத இரண்டு நபர்களின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்களுடனும் இந்த விளம்பர திகதியிலிருந்து 07 வேலைநாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

தயவுசெய்து தொழிலின் தொடர்பு இலக்கம் அல்லது தொழிலை கடித உறையில் / மின்னஞ்சலின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

சிரேஷ்ட முகாமையாளர் - மனிதவளங்கள் முகாமைப் பிரிவு
ஜனசக்தி காப்புறுதி PLC
இல.55/72, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு-2.
careers@janashakthi.com

JANASHAKTHI INSURANCE
Inspiring confidence

# எட்குரோ

நீரில் அமிழ்த்தி இயங்கும் நீர்பம்பிகள்



பின்வரும் பாவனைக்கு உகந்தது
- குளங்கள்
- வீடுப்பாவனை
- குழாய்கிணறு
- சகதி நிலம்
- கட்டிட நிர்மாணம்



1 வருட உத்தரவாதம்

விலை 7,250/ரூபாவிலிருந்து.

EDNA GROUP

எட்னா எஞ்ஜினிரிங் (பிரைவேட்) லிமிட்டட்

இல. 257, கிராண்பாஸ் வீதி, கொழும்பு-14 தொலைபேசி: 0112 493 200
பெக்ஸ்: 0112 472 628 மொபைல்: 0777 416 812
E-mail: agro@edna.lk web: www.ednagroup.com

## விஸ்தரிக்கப்பட்டுள்ள எமது சேவை வலையமைப்பு

பஜாஜ் வாடிக்கையாளர்களின் வசதிக்காக எமது சேவை வலையமைப்பை மேலும் விஸ்தரிப்பதுடன் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் "டீலர்கள் மற்றும் கீழ் உள்ள இடங்களில் பஜாஜ் வாகனம் திருத்துமிடங்கள்" திறக்கப்பட்டுள்ளன.

- பரந்தன்
- மன்னார்
- கிளிநொச்சி
- இலகடி
- யாழ்ப்பாணம்
- தோலில்
- புதுக்குடியிருப்பு
- மாணிப்பாய்
- சுன்னாகம்
- கைதடி
- அளவெட்டி
- கொக்குவில்
- கரவெட்டி
- வட்டுக்கோட்டை
- பூநகரி
- முருகண்டி
- முல்லைத்தீவு
- சங்கானை
- நெல்லியடி
- விஸ்வமடு
- முல்லியவளை





DPMC
டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி லிமிட்டட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டார்ட்டிக்காவுக்கு விமானம்: நியூஸிலாந்து நிறுவனம் புதுமுயற்சி

நியூசிலாந்து நாட்டிலுள்ள பிளாக்ஷிப் விமான நிறுவனம் தனது ஜெட் விமானங்களை அண்டார்டிகா கண்டத்தின் பனிப்பாறை ஓடுதளத்தில் தரையிறக்க திட்டமிட்டு வருகின்றது. இந்தப் பனிப் பாறையில் அமைந்துள்ள ஓடுதளமா னது உறுதியான கெட்டியான பனியால் உலகில் உள்ள மற்ற விமானத் தளங்களைப்போல் உள்ளது என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது.

இதற்கான சோதனை ஓட்டம் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் தொடங்குகிறது. இது வெற்றி பெறுமானால் தொடர்ந்து வரும் கோடை காலத்தில் மேலும் இரண்டு முறை



அங்குசென்றுவரதிட்டமிட்டுள்ளது அந்த நிறுவனம். இதற்கான ஜெட் விமானமானது நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் விமானத் தளத்திலிருந்து புறப்பட்டு அண்டார்டிகாவின் ராஸ் பனித்தட்டிலிலுள்ள பனிப்பாறையின் மீதுள்ள விமான ஓடுதளத்தில் சென்று இறங்கும் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.

ஆனால், இந்தப் பனி உறைந்த பிரதேசத்துக்கு செல்ல விரும்பும் சுற்றுலாப் பயணிகள் அவர்களுக்கான சோதனை யின் போது மிகவும் நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் இருக்கவேண்டும். இந்த பிளாக்ஷிப் விமான நிறுவனம் ஜெட் விமானங்களை தனது நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்காக பயன்படுத்த திட்டமிட்டு வருகிறது.

"விஞ்ஞானிகள் மற்றும் அவர்களது குழுவினர் மட்டுமே இதற்கென உள்ள பிரத்தியேக விமானங்கள் மூலம் அண்டார்டிகாவிற்கு சென்று வருகின்றனர். ஆனால், நாங்கள் திட்டமிடுகிற இந்தப் பயணம் வியாபார ரீதியில் தொடங்குவதாக இருக்காது" என்று அந்த நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் கூறினார்.

அண்டார்டிகாவை கடந்த வருடம் 35 ஆயிரம் பேர் சுற்றிப்பார்த்துள்ளனர். அனேக நாடுகள் அண்டார்டிகாவிற்கு விஞ்ஞானிகளை பிரத்யேக விமானத்தின் மூலம் அனுப்பிவைத்திருக்கிறது. 1979ஆம் ஆண்டு ஏர் நியூசிலாந்து விமான நிறுவனத்தின் விமானம் ஒன்று அண்டார்டிகா எரெபஸ் மலையின் மீது மோதி 257 பயணிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.




## நகம் வளர்த்து சாதனை படைத்த இந்தியர்



உலகின் அதி நீளமாக நகங்களை கொண்ட பெண் குறித்த செய்தியை நீங்கள் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அதற்கு முன்னர் உலகின் அதிநீளமாக விரலில் நகம் வளர்த்து சாதனை படைத்த இந்தியரை உங்களுக்கு தெரியுமா?

இந்தியாவின் புனே மாநிலத்தில் உள்ள ஹீதர் சிலால் என்பவரே இச்சாதனைக்கு சொந்தக்காரர். இவர் தனது இடது கையின் ஐந்து விரல்களிலும் 1952ஆம் ஆண்டு தொடக்கம் நகங்களை வளர்க்க தொடங்கினார். காலப்போக்கில் பல சவால்களுக்கு மத்தியில் இவரது கைவிரல்களில் ஆலம் விழுது போன்று நகங்கள் வளர்ந்து பிரம்மிப்பை ஏற்படுத்துகின்றன.

2008ஆம் ஆண்டு ஜுலை மாதம் 8ஆம் திகதி இவரது நகங்கள் அளவிடப்பட்டு உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டது.

அப்போது உலகின் மிக நீளமாக கைவிரல் நகங்களுக்கு சொந்தக்காரர் என்ற சாதனையை இவர் நிலைநாட்டியிருந்தார். 2000 ஆண்டில்தான் இவர் அதாவது வெட்டிக் கொண்டார் என கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களை தடுக்க ஓவியர்களின் புதிய முயற்சி

கொலம்பியா நாட்டு தலைநகர் போகோட்டாவின் வீதிகளில் உள்ள குண்டு குழிக ளை மக்களுக்கு அடையாளம் காட்டும் வித மாக அந்நாட்டு ஓவியர்கள் பல பளிச்சிடும் வண்ணங்களைகொண்டு அவற்றை சுற்றி ஓவியம் தீட்டி வருகின்ற னர்.

அதனால் அரசநிர்வாகத்திற்கும் வீதிகளின் நிலைமையை புரியவைக்க இயலும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். இந்தப் பகுதியில் தொடர்ந்து வீதி விபத்துகள் ஏற்படுவதால் ஓவியர்கள் இந்தப் புதிய முயற்சியில் இறங்கியுள்ளனர்.




இதில் சிறப்பு என்னவென்றால், வீதியில் இருக்கும் குழிகளுக் கேற்ப ஓவியங்கள் அர்த்தமுள்ளதாக வரையப்பட்டுள்ளன. போகோட்டா நகரில் 37 சதவீத வீதிகள் நல்ல நிலையிலும், 44 சதவீத வீதிகள் மோசமான நிலையிலும், 19 சதவீதம் உப யோகிக்கும் நிலையிலும் உள்ளன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

Green City Apartments

உங்கள் கனவுகள் நனவாகுமா???...

தற்போது கொழும்புக்கு நடந்து வரும் தூரத்தில்
தொடர்மாடி வீடமைப்புத் திட்டம்
ரூபா. 1,285,000/=
(ரூபா. பன்னிரண்டு இலச்சத்து எண்பத்தையாயிரம்)

- கொழும்பு 15 மட்டக்குளியவிற்கு நடந்துவரும் தூரத்தில்
- பெட்டாவுக்கு 30 நிமிடத்தில் செல்லலாம்
- நீர்கொழும்பு வீதிக்கு 10 நிமிடத்தில் செல்லலாம்
- லைசியம் சர்வதேச பாடசாலை. காகில்ஸ் பூட்சிற்றி, கீல்ஸ் சுபர் மற்றும் கோவில் என்பன தெரியும் தூரத்தில்
- மேல்மாடியிலிருந்து கொழும்பு நகர் மற்றும் கடற்கரையை பார்வையிடலாம்.

*Housing Unit consists of Living, Dinning with Pantry, Bedroom with attached toilet (Commode fitted), Balcony and servant's toilet.*



விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்திற்கு இன்றே வருகைதந்து Housing Unit ஐ ரூபா. 5,000/-ம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளுங்கள் தாமதத்திற்கு வருந்தாதீர்கள..

இடத்திற்கு செல்லும் மார்க்கம்: அலகந்தவிற்கு வந்து பள்ளியாவத்த வீதியில் இடதுபக்கம் திரும்பி காமில் மாவத்தையில் இடத்திற்கு செல்லலாம்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள

| | | |
|---|---|---|
| தமிழில் | : | 0776 959197 ராஜாவுடன் தொடர்பு கொள்ளுங்கள் |
| ஆங்கிலத்தில் | : | 0776 147065 ஜெரியுடன் தொடர்பு கொள்ளுங்கள் |
| சிங்களத்தில் | : | 0776 216016 குமாரவுடன் தொடர்பு கொள்ளுங்கள் |

Nimavin Developers (Pvt) Ltd
187, Ward Place, Colombo 07.
Tel : (011) 2695714 / (011) 2695728
Visit our Web Site : www.nimavingreenpark.com

(C12309)

SINGER FINANCE இடமிருந்து

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
கடனாக ரூ .350,000/- வரை
அதிககடன் முதலுக்கு




தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| தனு | 077 9 357 124 |
| பிருந்தன் | 078 5 000 917 |

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்



செய்ற வேலைய முடிச்சுட்டே வாங்க,
மாலை 6 மணி வரைக்கும்
Full Service Banking

இப்பொழுது உங்கள் வேலையை பாதியில் நிறுத்திவிட்டு வங்கிக்கு வருவதற்கு அவசியம் இல்லை. எமது அனைத்து NDB வங்கிக் கிளைகளும் உங்களது எந்தவொரு வங்கித் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பொருட்டு வார நாட்களில் மாலை 6 மணி வரை Full Service Banking. அதனால் உங்கள் வேலைகளை முடித்துவிட்டே வாருங்கள்.

NDB 9 to 6 FULL SERVICE

அழையுங்கள் 011 244 8888

NDB வங்கி

AA- (lka) Fitch Rating - நெஷனல் டிவலெப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

(C12310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org